

# திருக்கோயில்





மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று திரும்பியதை முன்னிட்டு, ஷ்டி திருக்கோயிலின் பணி யாளர்கள் சார்பாக, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு இராம. வீரப்பன் அவர்களின் தலைமையில், பாராட்டுவிழா நடத்தப் பெற்றது. அவ்விழாவின் போது, அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்கள், திருக்கோயிலின் பணியாளர்களுக்கு ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வழங்கியதுடன், புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயிலின் திருப்பணிக்கும் ரூ. 5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்), ஷ்டி கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவரிடம் நன்கொடையாக அளித்தார்கள். ஏழைகளுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் விழாவிற் கலந்து கொண்டு, சிறப்பித்தார்கள்.



முகப்பு

புதுக்கோட்டையைச் சார்ந்த
திருக்கோகர்ணம்
அருள்மிகு பிரகதாம்பாள்
திருக்கோயிலின் அழகிய காட்சி.

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு-கார்த்திகை & மார்கழி [நவம்பர் & டிசம்பர் 1981] ரூ. 2-50 | மணி : 2 & 3 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 விதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

கம்பரும், பாரதியாரும்
—டாக்டர் ம.பொ.சிவஞானம்,எம்.எல்.சி
கணக்கும் வழக்கும்
—டாக்டர் இரா.கோபாலகிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்.டி.
சிவஞானபோதத் தெளிபொருட் பதவுரை
திரு ந.ரா.முருகவேள்,எம்.ஏ.,எம்.ஓ.எல்
சண்டேசுவரர் ,, ,,
திருமால் திருவுருவங்கள்
—திரு என். எஸ்.தாத்தாசாரியார்
திருவாய்மொழி
—புலவர் மதுரகவி இராமானுசம்.
துன்பம் துடைக்கும் வழி
—திருமுருக கிருபானந்தவாரியார்
கோயில், சமுதாய நிலைக்களன்
—பேராசிரியர் திரு அ.மு.பரமசிவானந்தம் எம்.ஏ.,எம்.லிட்.
நம்மாழ்வாரும், மணவாள மாமுனிகளும்
—திரு இராமகிருஷ்ணய்யங்கார்
பெண்ணாளன் —திருஉ.வே.ஆர்.கண்ணன்
திருக்கோவையார்-மெய்ப்பொருள் நோக்கு..
—டாக்டர் வ.ஆ.தேவசேனாபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் நூல்களில் திருமணச் காட்சிகள்
—புலவர் கி. கோதண்டபாணி, எம்.ஏ.
வள்ளியம்மை திருமணத் தத்துவ நுட்பம்
—திரு பொன்.அ.கனகசபை
மருதம் உகந்த முருகன்
—திரு சி. நமசிவாயம் பிள்ளை
நாதன் கோயில் நந்திபுர விண்ணகரம்
—திரு தம்பு.ப.கிருஷ்ணசாமி
ஆவணி மூலநாளில் ஆண்டவனின் அருள்வெள்ளம்
—திரு கி.வேங்கடசாமிரெட்டியார்
ஆயர்பாடி அணிவிளக்கு
—திருந. சுப்புரெட்டியார், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவ சமய நோக்கில் தாமரை
—திரு இராசபவுன்துரை,எம்.ஏ.,பிஎச்.டி.
திருமூலநாதர் —டாக்டர் இரா.மாணிக்கவாசகம் எம்.ஏ.எம்.லிட்.,பிஎச் டி.
இராமபிரான் கண்ட நீலகண்ட சிகண்டியர்
—திரு அ.நடேசனார், பி.ஏ., ஜே.பி.
ஒன்பது நகரக் கோயில்கள்
—திரு சி. வீர.நடராசன் செட்டியார்.
ஐம்பெரும் வாதங்கள்
—திரு. ம. நாராயணன், எம்.ஏ.
மாமல்லேச்சுரம் —திரு ஙா.ப. தங்கவேலனார்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# கம்பரும், பாரதியாரும்

*'சிலம்புச் செல்வர்'*

டாக்டர் திரு. ம. பொ. சிவஞானம், M.L.C., அவர்கள்,

*தலைவர், சட்டமன்ற மேலவை.*

கம்பர், மகாகவி. பன்னீராயிரம் கவிதைகளால் ஒரு காப்பியத்தைப் பாடியவர். வழிநூல் தான் என்றாலும், மூல நூலான வான்மீகத்தையும் வென்று நிற்கின்றது கம்பராமாயணம். இந்து மத - அதிலும், வைணவ சமயக் காப்பியந்தான் என்றாலும், சமயங்கடந்த நிலையில், இந்துக்கள் - இசுலாமியர் - கிறித்துவர் ஆகிய எல்லோராலும் போற்றப்படும் பொதுக் காப்பியமாகிவிட்டது கம்பராமாயணம்.

வேறு எந்தக் காப்பியத்திற்கும் தோன்றாத அளவில் பயங்கரமான எதிர்ப்பு கம்பராமாயணத்திற்கு ஏற்பட்டது என்றாலும், அந்த எதிர்ப்பை முறியடித்து, எதிர்த்தவர்களாலும் போற்றத் தக்க வகையில், வெற்றி வாகை சூடியிருக்கிறார் கம்பர். ஆம். இப்போது கம்பரை எதிர்ப்பாரில்லை. தன்னை எதிர்த்தவர்களின் ஆட்சியும் தனக்கு சிலை நிறுத்தி விழாக் கொண்டாடுமளவிற்குக் கம்பர் பெருமை பெற்றுவிட்டார்.

''கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்'' - இது, படித்தறியாப் பாமரரும் பட்டி தொட்டி தோறும் சொல்லிவரும் பழமொழி.

''கம்பனோடு கவிதை போயிற்று'' என்று நாட்டில் ஒரு பழமொழியுண்டு. அதை சுப்பராம தீட்சிதர் மீது பாடிய இரங்கற்பாவிலே ''உயர் கம்ப நாடனுடன் கவிதை போயிற்று''-என்ற வாசகத்தைச் சேர்த்து, அந்தப் பழமொழிக்கு இலக்கிய மெருகேற்றினார் பாரதியார்.

'கம்ப நாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கிதயம் களிக்காதே!' - இது, பண்டிதர் போற்றும் பாடல் மொழி.

''விருத்தப் பாவுக்குத் திருத்தக்கதேவர்'' என்பது பழமொழியாயினும், அந்தத் திருத்தக்க தேவரையும் வென்று ''விருத்தப் பாவின் வேந்தன்'' என்று சொல்லத்தக்க பெருமையைக் கம்பர் பெற்றுவிட்டார்.

இவ்வளவு புகழ்பெற்ற கம்பருக்கும் ஒரு [illegible] அக்கம்பருக்குப் பின் வழிவழியே தோன்றிய கவிஞர் பெரு மக்களில், எவரும் கம்பரை மக்களின் மனதைக் கவரும் அளவுக்குப் புகழ்ந்து பாடாததாகும். உரையாசிரியர்களும் அதிக அளவுக்குக் கம்பர் செய்யுட்களை உவமை காட்டவில்லை. உரையாசிரியர்கள் கூட, நாம் மனநிறைவு கொள்ளுமளவுக்குக் கம்பர் கவிதைகளைக் கையாளவில்லை.

இந்தக்குறையகலப் பாவேந்தர் பாரதியார், கம்பரைப் புகழ்ந்து புகழ்ந்து பாடியுள்ளார். 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்கிறார். ஆம், கம்பன் பிறந்ததால் தமிழ்த்திரு நாடு தனிப்பெருமை பெற்றுவிட்டதாம்!

பாரதப் பெருநாட்டின் பெருமைக்கு வட புலத்தில் பிறந்த காளிதாசனையும், பாணினியையும், பாஸ்கரனையும் சான்றுகாட்டும் பாரதியார், அந்த பட்டியலிலே கம்பரையும் சேர்த்து மகிழ்கிறார்.

''கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணங் கண்டதும்''

என்பது பாரதியாரின் வாக்கு. ''கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்'' என்ற வரியிலே, கம்பனை மானிடனாகக் கூறியிருப்பினும், அது, கம்பனுடைய தெய்வத் தன்மையைக் குறைத்ததாகாது. ''கம்பன் இசைத்த கவியெலாம் நான்'' என்று தெய்வமே சான்று புகன்றதாகச் சாதித்தவ ரல்லவா? அவர் ''கம்பனென்றொரு மானிடன்'' என்று கூறியது, அவன் பிறந்ததால், மனித சமுதாயம் பெருமை பெற்றுவிட்டதென்பதனை உணர்த்தத்தான்! திருமால் மானிட வடிவில் இராமனாக வந்து மண்ணில் பிறந்ததால், தேவ குலத்தையும் வென்றுவிட்டது மானிட சமுதாயம், என்பதனைச் சுக்ரீவனைக் கொண்டு கம்பர் கூறுகிறார். ஆம்; ''அரி அரன், அயன், மற்றுமுள்ள தெய்வங்கள் ஆகியோரை மானுடம் வென்றது'' என்பது கம்பர்

கருத்து. அதையே கம்பருக்கும் பொருத்திக் ''கம்பன் என்றொரு மானிடன் பிறந்ததால் தேவகுலத்தைத் தமிழ் இனம் வென்றுவிட்டது'' என்கிறார் பாரதியார்.

கம்பர் தோன்றி, தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் மரணத்திலிருந்து மீட்டு விட்டாராம். இதனை, ''தமிழச்சாதி'' என்னும் பாட்டிலே

''எல்லையொன் றின்மை எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்
சாதியை ''அமரத் தன்மை' வாய்ந்தது
என்று உறுதிகொண் டிருந்தேன்''.

என்ற வரிகளில் பாரதியார் கூறுகின்றார்.

''நான்'' என்னும் தலைப்புடைய பாட்டிலே, கண்ணபெருமான் கூற்றாக, ''கம்பன் இசைத்த கவியெலாம் நான்'' என்கிறார் பாரதியார். தெய்வமானது கம்பன் இசைக் கவி தோறும் உறைந்து வாழ்கின்றதாம். இதைவிடவும் பெருமை கம்பருக்கு வேறு வேண்டுமோ?

''கம்பன், பூமிதனில் எங்கனுமே பிறந்திராத புதுமைக் கவி - புரட்சிக் கவி'' என்பது பாரதியாரின் கொள்கை.

கம்பர், கோசல நாட்டின் இளவரசனான இராமனை வானுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் வாழ்த்தி வழிபடும் தெய்வமாக்கி விட்டார் என்பர் புலவோர். அது உண்மை ஆயினும் இராமனை மனிதப் பண்புகள் நிறைந்த மானிடனாக வைத்தே, கம்பர் தமது காப்பியத்தைப் படைத்திருக்கிறார். இதனைக் கம்பர்,

''தேறினன் அமரர்க் கெல்லாம்
தேவர்ஆம் தேவர் என்றே,
மாறி இப் பிறப்பில் வந்தார்
மானுடர் ஆகி மன்னர்;
ஆறுகொள் சடிலத் தானும்
அயனும் என்றிவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்ற தன்றே.''

என்ற செய்யுளில் வெளிப்படக் கூறுகிறார்.

பாரதியார், தெய்வ நம்பிக்கையுடையவர். தெய்வ வழிபாட்டையும் கடைப்பிடித்தவர். ''தெய்வம் ஒன்று'' என்பதிலே உறுதியுடையவர். 'தெய்வம் பல' என்று நம்புவோரை எள்ளி நகையாடியவர் என்றாலும், சம்பிரதாயமாகப் பல தெய்வங்கள் மீது பாடல்கள் புனைந்தார்.

அப்படிப்பட்டவர், இராமனைத் தெய்வத்தின் நிலையில் வைத்துக் கவிதை புனையவில்லை. இராமன் மீது பாரதி பாடியது ஒரே பாடல் தான். ''சாகா வரமருள்வாய் ராமா!'' என்ற அந்தப் பாடலிலும், இராமனை ஒரு சுத்த வீரனாகவே வருணிக்கிறார். கண்ணனைத் தெய்வமாகக் கருதி அவன் மீது எண்ணற்ற கவிதைகள் பாடினார். கண்ணனைத் தெய்வமாக மட்டுமின்றி, தாயாக, தந்தையாக, அரசனாக, அமைச்சனாக, காதலியாக, காதலனாக, சேவகனாக, எசமானாக, குழந்தையாக எல்லாம் கற்பனை செய்து எண்ணற்ற பாடல்களை இயற்றியுள்ளார்.

மகாபாரதக் காப்பியப் புருஷனான கண்ணனைத் தெய்வமாகக் கொண்டு பக்திப் பாடல்கள் புனைந்த பாரதியார், இராமனை வெறுங் காப்பிய நாயகனாக மட்டும் கொண்டது ஆராயத்தக்கதாகும்.

இராமாயணப்பாத்திரங்களான இராமன், சீதை, இராவணன், இந்திரஜித்து, அனுமன் ஆகியபாத்திரங்களைத் தான் புனைந்த கவிதைகளில் எத்தனை எத்தனையோ இடங்களில் எடுத்துக் காட்டாகக் கூறுகிறார்.

தம் உரைநடைக் கட்டுரைகளில் கம்பனுடைய புலமையை எத்தனை எத்தனையோ இடங்களில் புகழ்கிறார். கம்பனுக்குச் சிலை எடுக்க வேண்டும், ஆண்டுதோறும் அந்த மகா கவியின் நினைவு நாளைக் கொண்டாட வேண்டும்-என்றெல்லாம் பாரதியார் கூறுகின்றார்.

கம்பனுக்குப் பின் வந்த தமிழ்க் கவிஞர்களிலே, வேறு யாரையும்விடப் பாரதியாரே கம்பனுடைய புகழ் பரப்பப் பாடினார்-பாடுபட்டார்.

பண்டிதர் மட்டுமே உணர்ந்திருந்த கம்பரை, பாமரரும் நன்கு அறிந்துகொள்ளச் செய்த பெருமை, தேசியக்கவி பாரதியாருக்கே உரிமையாகும். கம்பரைத் தமது ஆசானாகவே கொண்டு பாரதியார் வழிபட்டு, வாழ்த்துகிறார் எனலாம்.

**

## கம்பன் பொழிந்த பாற்கடல்

*பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து*—**கம்பன்**
*பாரிற் பொழிந்த தீம் பாற்கடலை,*
*நாவின் இனிக்கப் பருகுவமே!—நூலின்*
*நன்னயம் முற்றும் தெளிகுவமே!*

**—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.**

# கணக்கும் வழக்கும்

திரு. டாக்டர் இரா. கோபாலகிருட்டிணன்,
எம்.ஏ., பிஎச்.டி.,
இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.

### ஆன்மாவின் அவலநிலை :

உலகில் பாரொடு விண்ணாய்ப் பரந்துள்ள பரம்பொருளை மற்றுப் பற்றின்றி உருவ வழிபாடு செய்து மக்கள் வணங்கினர். கற்பனை கடந்தசோதி கருணையேவடிவாக எழுந்தருளிக் கணக்கில்லாத் திருக்கோலம் காட்டித் தன் அடியார்களை அருள்பாலித்துக் காத்தருள்வான். அடியார்கள் அவனருளை முழுமையாகப் பெற்று அனுபவித்துப், பின்னர் அதைப் பெற வேண்டி அலமந்து போவார்க்கும் வழிகாட்டுகின்றனர். அவ்வழிமுறைகளில் ஒன்றுதான் 'பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்' என்ற முறையில், இறைவனைச் சமமாகக் கருதி உரையாடுதலாகும். இந்நிகழ்ச்சியில் அவனைக் குறை கூறியும், தன்னைப் பற்றி உயர்த்திக் கூறியும், மாறிலா மகிழ்ச்சி மலர, இறைவன் திருவருள் புரியாமையால் ஆன்மா படும் அவலச் சுவையைக் கூறியும், ஆன்ம நெறிக்கும், ஆன்மீக இலக்கியத்திற்கும் சுவையூட்டுகின்றனர் அருளாளர்கள். தாயுமானார் புலம்புகின்றார் :

''சேராமற் சிற்றினத்தைப் பிரிந்தெந் நாளுந்
திருவடிப்பே ரினத்துடனே சேரும் வண்ணம்
ஆராக நான்அலைந்தேன் அரசே நீதான்
அறிந்திருந்தும் மாயையிலேன் அழுத்த
வைத்தாய்?''

அருணகிரிநாதரும் அநுபூதி வழிநின்று,

''ஆதா ரமிலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற் றும்நினைந் திலையே''

என முருகப்பெருமானை நொந்து பாடுகின்றார்.

### யார் பெரியவர் ?

எம்பெருமான் நம்மை ஆட்கொண்டு அருள வேண்டுமாயின், உயர்ந்தபெயர்கொண்ட அவனைப் பல நாட்கள் நினைந்து நினைந்து நெக்கு நெக்கு உருகி அழைத்தால், 'இவனெனைப் பன்னாள் அழைப்பொழியான் என்று எதிர்ப்படுமே' என்பது, அப்பரது அமுதவாக்கு. அடியவர்கள் ஆண்டவனிடம் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் பலப்பல. பொருள் வேண்டிப் பாடுதல், அருள்வேட்டல், நல்லோரோடிணங்கல், நோயற்ற வாழ்வில் நிலைத்தல், பொய்ம்மை பேசாதிருத்தல் போன்றவைதான், அவர்தம் வேண்டுகோள்கள். நம்மாழ்வார் வினாத் தொடுத்து விண்ணப்பமாகவும் தெரிவிக்கின்றார்.

இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை
என்னுள் வைத்தான்,
அன்றென்னைப் புறம்போகப் புணர்த்தது
என் செய்வான்?
குன்றென்னத் திகழ் மாடங்கள்
சூழ் திருப்பேரான்
ஒன்றெனக்கு அருள் செய்ய
உணர்த்த லுற்றேனே

''பொன்னை நிறம் பார்ப்பதற்காக உரைகல்லில் இட்டு உரைப்பது போல, உன்னை என்னுடைய நாவில் உட்கொண்டு மாற்று அழியும்படி உரைத்துக் கொண்டேன். அறிவதற்கு அரியவனை என் நெஞ்சினுக்குள் அமைத்தேன். என்னையும் உன்னிடம் வைத்தேன். என் தந்தையே! எனது இந்திரியங்களுக்குப் பாதுகாவலனே! எனது ஆன்மாவைக் காக்க வல்லவனே!'' என்று பெரியாழ்வார் திருமொழி பேசுகின்றது. ஆண்டவனும் ஆன்மாவும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு அன்புசெலுத்த ஆரம்பிக்கும்போது இதில் யார் பெரியவர் என்ற கேள்வி எழுகிறது.

'தந்ததுன் தன்னைக் கொண்ட தென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்'

என்று, தாம் அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றதாயும், இறைவன் பெற்ற பயன் யாது என்றும், தம் சிந்தையில் கோயில்கொண்டசிவ பெருமானிடம் ஆர்வத்துடன் வினாவுகின்றார் மணிவாசகப் பெருமான்.

என்னுளம்நீ கலந்துகொண்டா
யுன்னுளம்நான் கலந்தேன்
என்செயலுன் செயலுன்ற
னிருஞ் செயலென் செயலே
பின்னுளநான் பிதற்றலெலாம்
வேறுகுறித் தெனைநீ

பிழையேற்ற நினைத்திடிலோ
பெருவழக்கிட்டிடுவேன்
அன்னையினுந் தயவுடையாய்
அப்பனெனக் காணாய்
அன்றியுமென் னாருயிருக்
காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ்செய்
மன்னவனே கருணை
மாநிதியே யெனக்கருள்வாய்
மனக்கலக்கந் தவிர்த்தே

என இராமலிங்க சுவாமிகள்வேண்டுவதிலிருந்து எல்லோர்க்கும் பொதுவில் நடம்புரிகின்ற கூத்தப்பிரான் அருள்புரியாது போனால், அவரை வம்புக்கிழுத்துப் பெருவழக்கிட்டுப் பயமுறுத்துவதாக அமைந்துள்ள விதம் வியத்தற்குரியதாகும்.

**இறைவனிடம் பிணக்கு :**

ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் மானிடர்கள் ஆண்டவனைச் சோதிப்பதால் ஏற்படுவதுதான் கணக்கு வழக்குகளும் பிணக்குகளும். எம்பெருமானும், 'அர்ச்சனைபாட்டே யாகும், என்ற விருப்பமுடன் அடியார்களைச் சோதனை செய்து அவர்தம் உள்ள உறுதிப் பாங்கினை உலகோர்க்கு எடுத்துக்காட்டுவான். ஊடலும் கூடலும் ஆன்மீகத்துறையிலும்உண்டு என்பதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுக்கள் கூறலாம். அருணகிரிநாதர்.

''பாழ்வாழ் வெனும்இப் படுமா யையிலே
வீழ்வாய் எனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வா கனனே''

என்று கந்தர்அனுபூதிப் பாடலில் முருகனையே வாழ்ந்துகொள் என்று மனம் நொந்து உருகிப் பாடுகின்றார். திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில், 'காசி னொளியில் திகழும் வண்ணம் காட்டீர் எம்பெருமான் வாசி வல்லீர் இந்தளூரீர் வாழ்ந்துபோம் நீரே' என்று வாழ்த்துகின்றார். ஆலாலசுந்தரனாரும்,தான் குற்றம் ஒன்றும் செய்தில்லை; அவ்வாறிருக்க அடியார் தங்கள் துயரங்களை எடுத்துக் கூறும்போது, வாளாவிருந்தால் 'திருவாரூர் ஈசனே வாழ்ந்து போதீரே' என்று கோபிக்கின்றார். இறைவனையே பல்லாண்டு வாழவேண்டும் என்று, அன்பர்கள் வாழ்த்துவதும் அடியவர்களின் இறைகளோடு இசைந்த இன்பவாழ்வைத் தெளிவாக்குகின்றதல்லவா?

**வேண்டாம் பிறவி :**

பெற்ற தாயும் உடல் சலித்தாள்; வினையின் வலிமையால் யானும் கால் ஓய்ந்தேன்; வேதாவுங் கைசலித்து விட்டான்; இன்னமும் ஓர் அன்னையின் கருப்பையில் புகுந்து மீண்டும் பிறப்பெடுக்காமல் மற்றீண்டு வாரா நெறிக்கு வழிகாட்ட வேண்டும் என்பது பட்டினத்தாரின் பேரவா. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் பெருமக்கள் இறைவனிடம் முறையிட்டு வேண்டிக் கொள்வது 'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு! துயரம்மனைவாழ்க்கை' என்ற மரண பயத்தைப் போக்கித் தன்னருள் வெளிக்குள்ளே வைத்துப் பிறப்பையறுக்க வேண்டுமென்பதுதான். ஏனெனில், பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தான் அவ்வாறு செய்ய இயலும்.

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்
இனியான் பிறக்கில்
நின்குறையே அன்றி யார்குறை காண்?
இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற
நேர்இடை மெல்லியலாய்!
தன்குறை தீரஎம் கோன்சடை
மேல்வைத்த தாமரையே

என்று அபிராமி அன்னையைத் தனக்கு மீண்டும் பிறப்புண்டேல் அது அன்னையின் குறைதான் என்று சாடுகின்றார் அபிராமிபட்டர்.

**கணக்கு வழக்கு :**

தன்னைப் பித்தனென்று பேசி ஏசினாலும் 'வித்தகம் பேச வேண்டாம் பணி செய்ய வேண்டும்' என்று திருநாவலூர் வன்தொண்டரை ஓலைகாட்டி வழக்குத் தொடர்ந்து அடிமை கொண்டான் வலிய ஆட்கொண்டருளும் வள்ளலான சிவபெருமான். திருநாவலூரில்,

தன்மை யினாலடி யேனைத்தாம்
ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்டன்
என்பதோர் வாழ்வு தந்தார்

என்ற சுந்தரர் தேவாரம் அகச்சான்றாக இருக்கிறது. அப்போது தொடங்கி இருவருக்கும் தோழமையின் வலிமை காரணமாகக் கணக்கு வழக்குகள் அதிகம் தொடர்ந்து சுந்தரரைப் பல்வகையானும்சோதனை செய்து அவர் வாயிலாகத் தெய்வத் தமிழ்ப் பனுவல்கள் பெற்றுத் தீதிலாத் தென்திசை உய்ந்திட வழிவகை செய்தார். திருவெண்பாக்கத்தில் கோவிலை வலம் வந்து இறைவனை வணங்கிக் 'குழை விரவு வடிகாதா கோயில் உளாயோ' என்று வினவ, சிவபெருமான் திருநாவலூரர்க்கு ஊன்றுகோல் அளித்து, 'உளோம் போகீர்' என்றருள, அயலாரைப்போல் அவ்வாறு சொல்லவே ஒரு பதிகம் முழுவதிலும் இகழ்ச்சி தோன்ற'உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர் என்றானே' என்று பாடுகின்றார். மேலும் சேரமான் பெருமாள் அளித்த பரிசுப் பொருட்களைக் கொண்டு வரும்போது பூதங்கள் வேடுவர்கள் உருவில்வந்து அவற்றைக் கவர்ந்து போக, கோபமுடன், திருமுருகன் பூண்டியில் எழுந்தருளியிருக்கக் கூடிய இறைவனை இங்கு 'இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே' என்று கேட்கின்றார். 'ஏசின அல்லஇகழ்ந்தன அல்ல' என்ற நிலையில் திருப்பாச்சிலாச் சிராமத்தில் உறைகின்ற 'பொன்னார் மேனியனை'ப்

பொருள்கேட்க, அவர் அருளாதொழியவும் 'இவரலா தில்லையோ பிரானார்' என்று தோழமையுறவால் முறையிடுகின்றார். அழுக்கு மெய்கொண்டு, ஆண்டவனின் திருவடியை அடைந்து செய்த சபதத்தை மீறித் திருவொற்றியூரை விட்டுச் செல்கையில், தம் பார்வையை இழந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் மனம் நொந்து பாடுகின்றார் :

ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்றால்
யாவ ராகிலென் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித் திட்டாற்
சொல்லு வாரைஅல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வ தேகணக் குவழக் காகில்
ஊன்று கோல்எனக் காவதொன் றருளாய்
ஒற்றி யூர்எனும் ஊருறை வானே

பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை ஒவ்வொரு மதத்தினரும் தமக்குச் சொந்தம் கொண்டாடி எதிர் வழக்கிட்டு நிற்கின்றனர்.

''.......சமயகோடி களெலாந்
தந்தெய்வம் எந்தெய்வம் என்று
எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும்
நின்றதெது?''

என்று தாயுமானசுவாமிகள் எம்பெருமானின் அரூப நிலையையும் அதனுடைய உருவப் பிரதிபலிப்பால் எற்படும் விளைவுகளையும் கணக்கு வழக்கினையும் படம்பிடித்துக் காட்டுகின்றார். கரணங்களெல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றனை,

கணக்குவழக் கதுகடந்த பெருவெளிக்கு நடுவே
கதிர்பரப்பி விளங்குகின்ற கண்ணிறைந்த
சுடரே
இணக்கமுறு மன்பர்கள்தம் இதயவெளிமுழுதும்
இனிதுவிளங் குறநடுவே யிலங்குமொளி
விளக்கே
மணக்குநறு மணமேசின் மயமாயென்
னுளத்தே
வயங்குதனிப் பொருளேயென் வாழ்வே
யென் மருந்தே
பிணக்கறியாப் பெருந்தவர்கள் சூழமணி
மன்றிற்
பெருநடஞ்செய் யரசேயென் பிதற்று
மணிந் தருளே

என்று வடலூர் வள்ளலார்பெருமான் வாழ்த்தி வணங்குகின்றார்.

முடிவுரை :

'ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை' என்று கூறும் திருமூலர், 'தீயினும்வெய்யன், புனலினும் தண்ணியன்' என்றும், 'தன்னையொப்பாயொன்றும் இல்லாத் தலைமகன்' 'தன்னையப்பா எனில் அப்பனுமாய் உளன்' என்றும் கூறுகின்றார். அதாவது, இறைவனை எவ்வாறு நின்று அழைப்பினும், ஏத்தினும் பலன்கிட்டும் என்பது நிச்சயம். சமயவாழ்வில் கணக்கு வழக்குப் பார்க்கும் மேன்மக்கள் சுட்டாலும் வெண்மைதரும் சங்கேபோன்று, தமக்கு இடர்வரினும், தளர்வு எய்தினும், நோய்தொடரினும் அவன் கழலிணை தொழுது எழுவதால் அவனிடம் உரிமையுடன் வாதம் புரிந்து தமது பக்தியின் மேன்மையைப் போற்றிக் காக்கின்றனர். சமய இலக்கியத்தில் இத்தகு நெறி இன்பம் பயப்பதாகும்.

---

## உலக வாழ்க்கை !

உலக வாழ்க்கை என்பதுதான், உலவித் திரியும் வெறும்நிழலே!
நலம்இல் வறிய நடிகன்அவன், நடந்து குலுங்கி மேடையினில்,
சிலவே நேரம் இருந்தொழிவான்; பின்னர்ச் சிறிதும் செவிக்கணுகான்!
இலகு சுவையின் றறிவிலிசொல் கதைபோற், பொருள்இல் வெற்றொலியே!

தமிழாக்கம் : ந. ரா. முருகவேள்

"Life is but a walking shadow; a poor player
That struts and frets his hour upon the stage,
And then is heard no more; it is a tale
Told by an idiot, full of sound and fury signifying nothing..."

—**William Shakespeare, Macbeth**

# சிவஞானபோதத் தெளிபொருட் பதவுரை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

## 2. நான்காம் அதிகரணம்

*''இனி, அவன் ஏகம் அநேகம் இரண்டும் இன்றிச் சர்வ வியாபியாய் நிற்றலான், ஆணை (சிவசத்தி)யின் நீக்கமின்றி நிற்கும் என்றது.''*

(வெண்பா)

**எங்கும்உளன் என்றளவை, ஒன்றன்று இரண்**
**டென்னில்,**
**எங்கும் உளன்அன்று; எவற்றெவனும்-அங்கண்**
**அவைஅவன் அன்றில்லை; பொன்ஒளிபோல் ஈசன்;**
**அவ்வயுடைமை; ஆளாம்நாம் அங்கு.**

**பதவுரை :**

எங்கும் உளன்—இறைவன் ('அவையே தானேயாய்') எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கின்றான்,

என்ற அளவை (ஆல்)—என்று மேலே கூறிய பிரமாணத்தினால்,

ஒன்றுஅன்று—இறைவன் ஒருபொருள் ஆதல் கூடாது (ஏனெனில் கங்கைக் கரையில் இருக்கும் ஒருவனே, காவிரிக்கரையிலும் அதே நேரத்தில் இருக்க மாட்டான்);

இரண்டு எனில்—இறைவன் இருபொருளாய் (வேறாய்) இருப்பன் என்று கூறினால்,

எங்கும் உளன் அன்று—(தன்னிலேயே வேற்றுமை உடையவன் பிற பொருள்களின்பால் வேற்றுமை இன்றி வியாபித்து நிற்றல் இயலாது. ஆதலின்), இறைவன் எல்லா இடங்களிலும் தானேயாய் வியாபித்திருப்பவன் ஆகான். (அற்றேல், அவன் எங்கும் உளன் அல்லன் என்று கூறலாமோ? எனில்),

எவற்று எவனும் — எவ்வெவ்விடத்தில் உள்ள எவ்வெப் பொருள்களும் ஆகிய,

அங்கண் அவை — அவ்வவ்விடத்து அவ்வப் பொருள்கள் எல்லாம்,

அவன் அன்றி இல்லை—(அகர உயிர்இல்லையேல் அக்கரங்கள் இல்லையாமாறு போல) அவ்விறைவனை அல்லாமல் எதுவும் இருத்தல் இயலாது.

ஈசன்—இறைவன்

பொன் ஒளி போல்—சூரியனும் ஒளியும் போல, (ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தால்) சிவனும் சக்தியுமாக இயைந்து நிற்பன்.

அவை உடைமை ஆம்—(அற்றேல், பசுபாசங்களுக்கும் வியாபகம் உண்டு ஆதலின், அவைகளும் தத்தம் சத்திகளோடு நீக்கமின்றி நின்று, சிவசத்துக்குச் சமம் ஆகுமோ எனில், இறைவன்பால் வியாப்பியமாய் அடங்கி நிற்பன ஆதலின்), பாசங்கள் இறைவனுக்கு உடைமை ஆகும்.

நாம்—உயிர்கள் (பசுக்கள்) ஆகிய நாம்,

அங்கு—அவ் இறைவனிடத்தில்,

ஆள் ஆம்—அடிமைகள் ஆவோம்.

**கருத்து :**

முதல்வன் எங்கும் நீக்கம்அற நிறைந்து நிற்கும் வியாபகன் ஆதலின், ஒன்றாய் நிற்றல் இயலாது; இரண்டாய் நிற்பன் எனில், வியாபகன் ஆதல் முடியாது; வியாபகன் அல்லன் எனில், பசுபாசங்கள் அவனை இன்றி அமையமாட்டா. ஆதலின் இறைவன் ஆகிய ஒருவனே, சூரியனும் ஒளியும் போல இருதிறப்பட்டுச் சிவமும் சக்தியுமாய் நிற்பன் என்பது கருத்து.

புறப்பொருளை நோக்காமல், ஒன்றிலும் தோயாமல், ஒளிமயமாய் அறிவுமாத்திரமாய் நிற்கும் நிலையில், இறைவன் 'சிவம்' எனப்படுவன். புறப்பொருளை நோக்கி உலகெலாம் ஆகியும்வேறாகியும் உடனாகியும் நின்று, உயிர்களுக்குப் பொருள்களை உணர்த்தி நிற்கும் நிலையில், 'சக்தி' எனப்படுவன்.

சிவசக்தியாகிய ஒன்றே, பல்வேறு செயல் வேறுபாடுகளால் பராசக்தி ஆதிசக்தி இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி என்று எண்ணிறந்த பல சக்திகளாக விரிந்து செயற்படும். அச்சத்திகளுடன் கூடிய சிவமும், பல்வேறு பெயர்களைப் பெறுவர்.

சத்தியாய், விந்து சத்தியாய்,
மனோன்மனி தான் ஆகி,
ஒத்துறும் மகேசை ஆகி,
உமைதிரு வாணி ஆகி,
வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன்
வரும்சத்தி ஒருத்தி ஆகும் ;
எத்திறம் நின்றான் ஈசன்,
அத்திறம் அவளும் நிற்பள். (1)

சத்திதான் நாதம் ஆதி
தான்ஆகும்; சிவமும் அந்தச்
சத்திதான் ஆதி யாகும் ;
தரும்வடி வான எல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும்;
சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம்; சத்தன் வேண்டிற்று
எல்லாம்ஆம் சத்தி தானே ! (2)

—சித்தியார்.

குறிப்பு :

பொன்ஒளிபோல்-சூரியனும் அவனது ஒளிக்கதிர்களும் போல; உம்மைத் தொகை. வியாபகம்—மேலிடும் நிறைவு; வியாப்பியம்—வியாபகத்தில் அடங்கிய நிறைவு. வியாத்தி—வியாபகத்திற் சம நிறைவு. அஃதாவது வியாபகம், கடலாகிய இடம். வியாத்தி, கடல்நீர் வியாப்பியம், அக்கடல் நீரிற் கலந்துள்ள உப்புத் தன்மை. சிவம்-வியாபகம் ; உயிர்கள்-வியாத்தி. உயிர்களிற் கலந்துள்ள மலங்கள்-வியாப்பியம்; ஒன்று-ஒருபொருளாதல். உளன்-உளனாதல். 'எவற்று எவனும்' ஏழன் தொகை. எவனும்-எல்லாப் பொருள்களும்; வினாவினைக் குறிப்புச் சொல்; எஞ்சாமைப் பொருள் குறித்து வந்தது. அன்று இல்லை-அன்றி இல்லை. அன்மை-கூடாமை, இயலாமை. இன்மை-அமையாமை. பொன்-சூரியன். வாள்-ஒளி, ஒளிக்கதிர்கள். (20)

மூன்றாம் சூத்திரம் : பசுவுண்மை

**உளதுஇலது என்றலின், எனதுடல் என்றலின்,**
**ஐம்புலன்-ஒடுக்கம் அறிதலின், கண்படில்**
**உண்டிவினை யின்மையின், உணர்த்த வுணர்தலின்,**
**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா**

(இச்சூத்திரம் ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று)

பதவுரை :

ஆன்மா—உயிரானது,

(1) ''இலது என்றலின்உளது''—சூனியஆன்மவாதி ஆன்மா என ஒன்று இல்லை என்பன். இல்லை என்று அறியும் அறிவு ஒன்று உண்டு அல்லவா? அதுவே ஆன்மாவாம். ஆதலின் இல்லை என்பதனாலேயே ஆன்மா உண்டு.

(2) எனது உடல் என்றலின் உளது—உலகத்தார் தம்மின் வேறாகிய பொருள்களை ''என்பதி என்மனை'' என்று கூறுவது போல், என்கை என்கால் என்னுடம்பு என்றும் வேறாகவே கூறுவதால், தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்று உண்டு.

(3) ஐம்புலன் அறிதலின் உளது—ஐம்பொறிகள், ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை அறிவது உண்மையேனும், ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையறிவது கூடுமே அன்றி, ஒரு பொறியே எல்லாவற்றையும் அறிவதில்லை. இவ்வைம்பொறிகளைக் கொண்டு, புலன்களால் வரும் ஐந்து பயன்களையும் அறிகின்ற ஆன்மா, அவற்றைத் தனித்தனியே அறியும் ஐம்பொறிகளுக்கு வேறாக உள்ளது.

(4) ஒடுக்கம் அறிதலின் உளது—ஐம்பொறிகளும் ஒடுங்கி நின்ற கனவு நிலையில், நிகழ்ந்த காரியங்களை அறிகின்ற தொன்றுளதாதலின், கனவில் இயங்கும் சூக்கும தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்று உண்டு.

(5) கண்படில் உண்டிவினையின்மையின் உளது—(உறக்கம் விழிப்பு என்னும் இருநிலையிலும் பிராணவாயு ஒரு தன்மையாக இயங்கிக்கொண்டு இருப்பினும்), உறக்கத்தின்கண் இன்ப துன்ப நுகர்ச்சியும், தொழிற்பாடும் உடம்புக்கு இல்லாமையினால், (விழிப்பு நிலையில் உண்டியும் வினையும் உண்மைக்கும், உறக்க நிலையில் அவை இன்மைக்கும் காரணமாகப் பிராண வாயுவின் வேறாக) ஆன்மா என்பது ஒன்று உண்டு.

(6) உணர்த்த உணர்தலின் உளது—கருவிகளோடு கூடிய விடத்தும் தன் தன்மை இது என்று உணராது, உணர்த்த உணருகின்ற சிற்றறிவுடைய ஆன்மாவைப் போல் மறந்து மறந்து அறிதலின்றி மல், பிரமம் எனப்படும் முதல்வன், அறிந்த வாறே முழுவதும் அறிந்து நிற்கும் பேரறிவுடையவனாதலால், பேரறிவுடைய பிரமமாகிய முதல்வனுக்குவேறாகச் சிற்றறிவே யுடையதாய், உணர்த்த உணரும் தன்மையுடைய ஆன்மா தனியே உண்டு.

(7) மாயா இயந்திர தனுவினுள் உளது—மாயையின் காரியங்களால் கட்டப்பட்டு, அசைகின்ற சூத்திரப்பாவை போலும் உடம்பினிடத்தே அதனினின்று வேறாகத் தனியே ஆன்மா என்பதொருபொருள் உண்டு. (உடம்பில் உள்ள கருவிகளின் சேர்க்கையே ஆன்மா என்னும் கொள்கை தவறானதாகும். ஏனெனில் அக்கருவிகள் ஒன்றன் காரியங்களாய்த் தோற்றக் கேடுகளையுடைய அழியும் பொருள்களாகும்; ஆன்மாவோ என்றும் அழிவில்லாதது).

குறிப்பு :

இச்சூத்திரத்தின் இறுதியில் உள்ள 'ஆன்மா' என்பதும், முதலில் உள்ள 'உளது' என்பதும் சேர்ந்து, 'ஆன்மா உளது' எனப் பொருள் கொள்ளக் கிடப்பதால், இது 'பூட்டுவிற் பொருள்கோள்' எனப்படும்.

ஒடுக்கம்—ஐம்பொறிகள் ஒடுங்கிநிற்கும் கனவு நிலை. கண்படுதல்—உறங்குதல். உண்டி—இன்ப துன்ப நுகர்ச்சி. வினை—உடம்பினுடைய தொழிற்பாடு.

இதன்கண் சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரிய ஆன்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, பிரமான்மவாதி, சமூகான்ம வாதி என்னும் எழுவரையும் மறுத்து; உடலின் வேறாக உடலுக்குள் உயிர் என்பதொரு பொருள் உண்டு எனப் பசு உண்மைக்குப் பிரமாணம் காட்டப் பெற்றது. ஆன்மாவின் இலக்கணம் கூறும் நான்காம் சூத்திரத்தில், அந்தக் கரண ஆன்ம வாதிகள் மறுக்கப்படுவர்.

## 3. முதல் அதிகரணம்

''எவற்றினையும் அன்றுஅன்று என விட்டு, ஆன்மா இலது என்று நிற்பது உளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது''.

(வெண்பா)

**அன்றன்றெனநின்று அனைத்தும்விட் டஞ்செழுத்தாய்**
**நின்றொன் றுளது; அதுவே நீ; அனைத்தும்-நின்றின்று**
**தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீ அல்லை;**
**தற்பரமும் அல்லை தனி.**

பதவுரை :

அனைத்தும்—உடல் பொறி விடயம் முதலிய அனைத்தினிலும்,
நின்று—அது அது தானாக நின்று,
அன்று அன்றுஎன—இது நான் அன்று, இது நான் அன்று என்று,
விட்டு—(ஒவ்வொன்றாக உணர்ந்து) நீங்கிய இடத்து,
அஞ்செழுத்தாய்—அகரம் உகரம் மகரம் விந்து நாதம் என்னும் சூக்கும பஞ்சாக்கர வடிவமாய்,
ஒன்று—அறிந்து வருவதாகிய ஓர் அறிவு,
நின்று உளது—நிலைபெற்று நிற்கின்றது;
அதுவே—(அதுவும் நான் அன்று என்று கழிப்பின், அங்ஙனம் கழித்த உணர்வானது, வேறொன்று உண்டு எனப்பட்டு மேன்மேலும் வரம்பின்றிச் செல்லும் ஆதலின்), அந்த அறிவு தானே,
நீ—பசு எனப்படும் நீ ஆவாய்;
அனைத்தும் நின்று—நிலம் முதலிய காரியம் அனைத்துமாய் நின்னோடு விரவி நின்று,
தர்ப்பணம்போல்—கண்ணுக்குக் கண்ணாடிபோல,
காட்டலால்—உனக்கு அறிவை விளக்குவதனால்,
சார்மாயை—நின்னால் சாரப்பட்ட மாயை(தானே அறிவதன்று ஆதலின்),
நீ—அம்மாயையால் விளங்கி அறியும் நீ,
அல்லை—அம் மாயை ஆகமாட்டாய்;
தற்பரமும் அல்லை—அம்மாயைக்கு அதீதம் ஆகிய சிவமும், நீ ஆகமாட்டாய் ;
தனி—நீ அவற்றின் வேறே ஆவாய்.

குறிப்பு :

ஆன்மா இலது என்னும் சூனியவாதிகளும், இல்லை என வாளா கூறுதல் அமையாது. உடல் பொறி விடயம் அனைத்தினையும், முறையேஇஃது ஆன்மா அன்று, இஃது ஆன்மா அன்று என ஒவ்வொன்றாகக் கழித்து, இங்ஙனம் ஆதலான் ஆன்மா என்பது சூனியம் என்று, சூனியான்ம வாதிகள் கூறுவர். ஆயினும், இவற்றை இங்ஙனம் கழித்துக் கொண்டு நிற்கும் அறிவு என்பது தனியே ஒன்று இருக்கக்காண்டலின், அவ் அறிவே ஆன்மாவாகும் என்பது கருத்து. அங்ஙனம் அறியும் அறிவும் சூனியமேயெனில், அஃது 'என்னை ஈன்றவள் மலடி' என்பதனோடு ஒக்கும் பொருந்தா உரையேயாகும். விட்டு-விட்டவழி. 'அனைத்தும் நின்று'—அனைத்துமாய் விரவி நின்று.

## 3. இரண்டாம் அதிகரணம்

''என்பதி என்மனை என்றாற்போல, என்கை என்கால் என நிற்பது உளதாதலின், அதுவே அவ் வான்மாவாம் என்றது''.

(வெண்பா)

**எனதென்ற மாட்டின் எனதலா தென்னாது**
**உனதலா துன்கைகால் யாக்கை-எனதென்றும்**
**என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்**
**உன்னில்அவை வேறாம் உணர்**

பதவுரை :

எனது—(வீடு நிலம் பொருள் முதலிய பிற பொருள்களை) என்னுடையது
அலாது—அல்லாதது
என்னாது—என்று வேறாகக் கூறாமல்,
எனது என்ற மாட்டின்—தனித்தனியே என்துவீடு எனதுநிலம் எனதுபொருள் என்று முன்பு நீ தற்கிழமைப் பொருளாகக் கூறிக் கொண்டிருந்தாற்போல,
உனது அலாத—உன்னுடையது அல்லாத
உன் கை கால் யாக்கை—உன்னுடைய கையையும் காலையும் உடம்பினையும்,
எனது என்றும்—என்னுடையது என்றும்;
என் அறிவது என்றும்—(பாச அறிவை) என்னுடைய அறிவு என்றும்;
உரைத்து—தற்கிழமைப் பொருளாகக் கூறிக் கொண்டு,
நீ நிற்றிகாண்—நீ ஒருவன் தனியே இருந்து வருகின்றாய்!
உன்னின்—ஆராய்ந்து பார்த்தால்,
அவை—அக் கை கால் உடம்பு முதலியவை,
வேறு ஆம்—உனக்கு வேறுபட்டனவே ஆகும்;
உணர்—இவ்வுண்மையை நீ அறிந்து கொள்க.

குறிப்பு:

என்வீடு என்நிலம் என்பொருள் என்றுஒருவன் கூறும்போது, வீடும் நிலமும் பொருளும் அவனாகாமல், அவனின் வேறுபட்டுத் தனியே இருப்பன வாகும்; அதுபோலவே என்கை என்கால் என் தேகம் என்று சொல்கின்றபோதும், கை கால் தேகம் என்பனவும்கூட, அவனின் வேறாகத் தனியாக இருப்பனவேயாகும். ஆதலின், தேகமே ஆன்மா என்பது பொருந்தாது. தூல தேகத்திற்கு வேறாக ஆன்மா என்பது தனியே உள்ளது. இப் பாடல் தூல தேக ஆன்மவாதியை மறுத்தது. மாட்டு-கூற்று, சொல்.

## 3. மூன்றாம் அதிகரணம்

''ஐம்புலன் ஆகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்று அறியாமையின், இவ்வைந்தினானும் ஐம்பயனும் அறிவது உளதாதலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.''

(வெண்பா)

**ஒன்றறிந்த தொன்றறியா தாகி, உடல்மன்னி**
**அன்றும் புலனாய அஞ்செழுத்தை-ஒன்றறிதல்**
**உள்ளதே ஆகில் அதுநீ; தனித்தனி கண்டு**
**உள்ளல், அவை ஒன்றல்லை ஓர்.**

பதவுரை :

உடல்மன்னி—உடலின்கண் நிலைபெற்று,
ஒன்று அறிந்தது—ஒருபொருளை அறிந்த பொறியானது,
ஒன்று அறியாதாகி—மற்றொரு பொருளை அறியாததாய்,
அன்றும் புலன்—தம்முள் மாறுபடும் சத்தம் பரிசம் ரூடம் ரசம் கந்தம் ஆகிய புலன்களை,
ஆய்—ஆராய்ந்து அறிகின்ற
அவ் அஞ்செழுத்தை—அந்த ஐம்பொறிகளின் தொழிற்பாட்டை,
அறிதல் ஒன்று—உணர்தலை உடையதொரு பொருள்,
உள்ளதே யாகில்—இருக்குமேயானால்,
அதுநீ—அதுவே நீயாகிய ஆன்மா;
அவை—அப்பொறிகள்
தனித்தனி—வேறுவேறு ஆகவே,
கண்டு உள்ளல் (ஆன்)—கண்டு அறிதலால்

ஒன்று இல்லை—(அவ்வைந்து பொறிகளின் தொழிற்பாட்டையும் அறிந்து, அவற்றின் பயனைக் கொள்கின்ற) நீ, அவற்றோடு ஒன்றாக மாட்டாய் ;
ஓர்—இதனை ஆராய்ந்து உணர்க.

குறிப்பு :

உடல் மன்னி—உடலின்கண் நிலைபெற்று. அன்றுதல்—மாறுபடுதல். அன்றும்புலன்—தம்முள் மாறுபடும்புலன்கள். ஆகி என்னும் சிறப்புவினை, ஆய் என்னும் பொதுவினை கொண்டது. ஆய்—ஆய்தல், ஆராய்தல். அவ்வஞ்செழுத்து என்புழி, வகரம் விகாரத்தால் தொக்கது. அஞ்செழுத்தால் செலுத்தப்படும் பொறிகள், ஆகுபெயரால் 'அஞ்செழுத்து' எனச் சுட்டப்பெற்றன. அஃது இருமடி ஆகுபெயராய், ஐம்பொறிகளின் தொழிற்பாட்டை உணர்த்திற்று. இனி 'அஞ்செழுத்தாய புலனை' என மாறி உரைப்பினும் பொருந்தும். அஞ்செழுத்தாய புலன்—அஞ்செழுத்தாலாகிய பொறியின் தொழிற்பாடு. புலன்—பொறி. உள்ளல்-உள்ளுவன ஆகலான். 'ஒன்றல்லை' என்றது, வேறு ஆவாய் என்னும் பொருள் குறித்தது. இம்மூன்று அதிகரணங்களாலும் சாக்கிரத்தில் நிகழும் இயல்பு பற்றி ஆன்மாவின் உண்மை விளக்கப் பெற்றது.

## 3. நான்காம் அதிகரணம்

''நனவின்கண் கனவு கண்டாம் என்றும், கண்டிலம் என்றும் நிற்பது உளதாதலின், அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.''

(வெண்பா)

**அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்,**
**செவ்விதின் அவ்வுடலிற் சென்றடங்கி,-அவ்வுடலின்**
**வேறொன்று கொண்டு விளையாடி, மீண்டதனை**
**மாறல், உடல் நீ அல்லை மற்று.**

பதவுரை :

அ—(மேலே உயிர் அன்று என்று கூறிய) அந்த,
உடலின் நின்று-பரு உடம்பின்கண் இருந்து,
உயிர்ப்ப ஐம்பொறிகள்—உயிர்ப்பனவாகிய ஐந்து பொறிகளும்,
தாம்கிடப்ப—அந்தப் பருவுடம்பின் கண்ணேயே உயிர்ப்பொழிந்து கிடக்க,
அடங்கி—புறத்து நிகழும் தொழிற்பாடெல்லாம் அடங்கி,
அவ்வுடலில்—அந்தப்பரு உடம்பில் இருந்து,
செவ்விதின் சென்று—வருத்தம் இல்லாமற் போய்,
அவ்வுடம்பின்—அந்தப் பருஉடம்பு போல,
வேறுகொண்டு—வேறு ஒரு நுண்ணுடம்பை எடுத்துக் கொண்டு,
விளையாடி—கனவு நிலையை எய்திக் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அனுபவித்து,
மீண்டு—மறுபடியும்,
அதனை மாறல்—அதனைவிட்டு நீங்குதலால்,
நீ உடல் அல்லை—நீ அந்த நுண்ணுடல் ஆக மாட்டாய்;
மற்று—அதனின் வேறாவாய்.

குறிப்பு :

ஐம்பொறியின் தொழிற்பாட்டினைஉணர்ந்து, அவ் ஐந்தாலும் ஐம்புலனும் அறிவது, அவற்றின் வேறாய ஆன்மா என்றது ஒக்கும். அவ்வான்மா புறத்து விளங்காதாயினும், அகத்து நின்று இந்திரியங்களைப் புறத்தில் செலுத்தி அறிகின்ற, சூக்கும தேகமே ஆகும் எனச் சிலர் கூறுவர். ஐம்பொறிகளும் ஒடுங்கிய ஒடுக்கம் என்னும் கனவு நிலையில் நிகழ்ந்தவற்றை, நனவின்கண் மயங்கி அறிவதனால், ஐம்பொறிகளும் ஒடுங்கிய கனவு நிலையில் இயங்கும் நுண்ணுடலின் வேறாக, ஆன்மா என்பதொன்று தனியே உள்ளது.

கனவு கண்ட சூக்கும உடம்பே நனவின்கண் அதனை அறியுமாயின், தான் கண்ட கனவை நிகழ்ந்தவாறே அறியும், மயங்கி அறிதல் கூடாது. ஆதலின் கனவு நிலையில் இயங்கும் நுண்ணுடல் தான், ஆன்மா என்பது பொருந்தாது. ஆன்மாவுக்காயின் அதுபோல ஒரு தன்மைத்தாதலின்றி, அகத்துச் சேறலும் புறத்துச் சேறலும் ஆகிய வேறுபாடு உண்மையான், மயங்கி அறிதல்கூடும் என்பது கருத்து.

உயிர்ப்ப-உயிர்ப்பன ; அன் பெறாத அகர ஈற்று அஃறிணைப் பன்மைப்பெயர். உயிர்த்தல்-தொழிற்படுதல். மீண்டு-மீள, மறுபடியும். மாறல்-மாறுதலால். இவ்வதிகரணத்தால் சொப்பனத் தானத்தில் நிகழும் இயல்பு பற்றி, ஆன்மாவின் உண்மை விளக்கப் பெற்றது.

சூக்கும தேகமாவது, சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் காரண தன்மாத்திரைகள் ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினாலும் உண்டாகும் அருவ உடம்பு. இது நம் கனவு நிலையில் இயங்கும்.

## 3. ஐந்தாம் அதிகரணம்

''ஒடுங்கின இடத்து இன்பத்துன்பம் சீவனம் பிரகிருதிக்கு இன்மையின், ஒடுங்காத இடத்து இன்பத் துன்பம் சீவியா நிற்பது உளதாதலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது''.

(வெண்பா)

**கண்டறியும் இவ்வுடலே காட்டொடுங்கக் காணாதே,**
**உண்டி வினையின்றி உயிர்த்தலால்-கண்டறியும்**
**உள்ளம்வே றுண்டாய் ஒடுங்காது உடல்நண்ணில்,**
**உள்ளதாம் உண்டிவினை ஊன்.**

பதவுரை :

கண்டு அறியும்—கண்டு அறிவதற்கு நிலைக்களமாகிய,
இவ்வுடலே—இவ்வுடம்பின்கண்ணே,
காட்டு—காட்டாகிய கருவிகள்,
காணாதே—தொழிற்படாமல்,
ஒடுங்க—ஒடுங்கவும்,
உண்டி—விடயங்களின் இடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சியும்,
வினை—உடம்பு தொழிற்படுதலும்,
இன்றி—உடம்புக்கு இல்லையாகவும்;
உயிர்த்தலான்—பிராணவாயு தொழிற்படுவதனால்,
கண்டு அறியும் உள்ளம்—பொருள்களைக் கண்டறிந்து நுகரும் உரிமையுடைய உயிர்,
வேறு உண்டு—பிராணவாயுவின் வேறாக உண்டு.
ஒடுங்காது—அவ்வுயிரானது ஒடுங்காமல்,
உடல்நண்ணில்—உடலின்கண் வந்து சேர்ந்ததாயின்,
ஊன்—அவ்வுடம்பானது,
உண்டி வினை—உண்டியும் வினையும்,
உள்ளதாம்—உடையதாகும்;
ஆய்—இதனை ஆராய்ந்து அறிவாயாக.

குறிப்பு :

ஆன்மாவின் சந்நிதியில் கண்டறிவதாகிய இவ்வுடல், உண்டியும் வினையும் இன்றிக் காணாதவாறு, காட்டாய கருவிகள் ஒடுங்கவும், பிராணவாயு இயங்குதலால், கண்டறியும் உரிமையுடைய ஆன்மா, பிராணவாயு அன்று; ஆன்மா அதனின் வேறாக உண்டு; அவ்வான்மா ஒடுங்காமல் கருவிகளோடும் கூடிற்றாயின், உடல் உண்டியும் வினையும் உடையதாகும் என்பது கருத்து. உண்டி—விடயங்களின் இடமாக வரும் இன்பத் துன்ப நுகர்ச்சி. வினை—உடம்பு இயங்குதல். இவற்றையே, 'இன்பத் துன்பம் சீவனம்' என்றார். சீவியா நிற்பது என்பது, சீவியா நிற்றல் என்னும் தொழிற் பெயர் மாத்திரையாய் நின்றது. பிரகிருதி—உடம்பு; துயின்றாலும் விழித்தாலும் திரிபுஇன்றி, ஒரு தன்மைத்தாதல் பற்றி உடம்பு பிரகிருதி எனப்பட்டது. பிரகிருதிக்கு—உடம்பின்கண். காட்டு—காட்டுகின்ற கருவிகள். 'ஒடுங்கவும்' என்புழி உம்மை தொக்கது. 'காணாதே காட்டொடுங்க' என மாறுக. இன்றி-இல்லையாக. உயிர்த்தல்-பிராணவாயு இயங்குதல். ஆய்-ஆராய்க; முன்னிலை ஏவல். ஊன்—உடம்பு. ஆன்மா வேறு உண்டு என்றதனை வலியுறுத்துவார் ''ஒடுங்காது உடல் நண்ணில், உள்ளதாம் உண்டி வினை ஊன்'' என்று உடம்பாட்டு முகத்தானும் ஓதினார். இவ்வைந்தாம் அதிகரணத்தால் சுழுத்தி துரியங்களின் நிகழும் இயல்புபற்றி, ஆன்மாவின் உண்மை விளக்கப் பெற்றது. இதுகாறும் 'சார் மாயை நீ அல்லை' என்றதனை வலியுறுத்தியவாறு.' இஃது அருத்தாபத்தி அளவை.

## 3. ஆறாம் அதிகரணம்

''அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து, உபதேசியாய் நிற்பது உளதாதலின், அதுவே அவ்வான்மாவாம் என்பது''.

(வெண்பா)

**அறிந்தும், அறிவதே யாயும், அறியாது**
**அறிந்ததையும் விட்டங் கடங்கி,-அறிந்தது**
**எது? அறிவும் அன்றாகும்; மெய்கண்டான் ஒன்றின்,**
**அதுஅதுதான் என்னும் அகம்.**

அறிந்தும்—ஒன்றனையே அறிந்தும்,
அறிவதேயாயும்—வேறு ஒன்றனை அறியப் புகுவதாயும்,
அறியாதும்—முன்பு அறிந்ததனை அறியாமல் மறந்தும்,
அறிந்ததையும்—அறியப்பட்ட விடயத்தையும்,
விட்டு—விட்டு நீங்கி,
ஆங்குஅடங்கி—ஐந்தவத்தைகளில் அமிழ்ந்து,
அறிந்தது எது—அறிந்து வந்த பொருள் யாது ? (அது சடம் அன்று);
அறிவும் அன்று—(ஒன்றாக இயல்பாக அனைத்தையும் உணர்கின்ற) பேரறிவாகிய சிவமும் அன்று;
மெய்கண்டான்—மெய்யாகிய சித்தாந்தநிலையினை உணர்ந்தவன்,
ஒன்றின்—மனம் ஒடுங்கி ஆராய்ந்தால்,
அகம்—உயிரானது,
அதுஅதுதான் என்னும்—அதுஅதுவே தான் என்று சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும்.

குறிப்பு :

மேற்கூறிய தூலதேகம், இந்திரியம், அந்தக்கரணம், சூக்குமதேகம், பிராணவாயு முதலியன சடமாகலான், ஆன்மா அல்ல என்பது ஒக்கும். பிரமம் பேரறிவுப் பொருளாகிய சித்துப்பொருளாதலின், பிரமமே ஆன்மா என்பர் சிலர். தொழிற்படும் கருவிகள் ஒன்றுமின்றிக் கேவல நிலையில் ஆன்மா அறிவின்றிக் கிடத்தலானும், பின்னர்ச் சகல நிலையில் கலை முதலிய கருவிகளால் அறிவிக்கவே அறிதலானும், எக்காலத்தும் திரிபின்றி அறிந்தாங்கு அறிந்து நிற்கும் சித்தாகிய பிரம்மத்திற்கு வேறாக, ஆன்மா உண்டு. ஆதலின் பிரமம் ஆன்மா அன்று என்பது கருத்து.

'அறிந்தும் அறிவதேயாயும்' என்புழி, உம்மைகள் எண்ணும்மை. 'அறியாதும்' என வருவதற்குரிய எண்ணும்மை தொக்கது. 'அறிவும் அன்று' என்புழி, உம்மை, சடமும் அன்று என இறந்தது தழுவியது. அங்கு—உணர்த்தும் முறைமைத் தானமாகிய புருவ நடுவைக் குறித்தது. ஒன்றுதல்—மனத்தால் ஒருமைப்பட்டு ஆராய்தல். அகம்—உள்ளம், ஆன்மா. அடங்கி—அடங்கியும். ஓதியதனை ஓதியபொழுதே உணர்தல், பலகால் ஓதி உணர்தல், பலகால் ஓதியும் உணராமை என்று இங்ஙனம் மூவகைப்படுத்திக் கூறவே, 'உணர்த்த உணர்தல்' என்னும் ஏதுவால், அதீதத்தின் நிகழும் இயல்புபற்றியும், சுத்தத்தின் நிகழும் இயல்பு பற்றியும், உணர்த்தும் முறைமைக்கண் நிகழும் இயல்புபற்றியும், மூவகைகளில் ஆன்மாவின் உண்மை விளக்கப்பெற்றது. இவ்வதிகரணம் 'தற்பரமும் அல்லை' என்றதனை வலியுறுத்திற்று.

## 3. ஏழாம் அதிகரணம்

''அவைதாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான், மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது''.

(வெண்பா)

**கலைஆதி மண்அந்தம் காணில், அவை மாயை;**
**நிலையாவாம்; தீபமே போல;-அலையாமல்**
**ஞானத்தை முன்னுணர்ந்து நாடில், அதுதனுவாம்;**
**தான்அத்தின் வேறாகும் தான்.**

பதவுரை :

காணின்—(சமுதாயம் ஆதற்கு உரியவை யாவை என்று) அறியப்புகுந்தால்,
கலை ஆதி—கலைமுதலாக,
மண் அந்தம் ஆம்—நிலம் ஈறாகிய தத்துவங்களே ஆகும்.
அவை—அவைகள் அனைத்தும்,
மாயை—மாயையின் காரியங்கள் ஆதலால்,
நிலையா—சிலகாலமே நின்று அழிந்துபடும் ;
ஞானத்தை—(அவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்த சமுதாயத்தில் விளைந்து தோன்றும்) ஞானத்தின் இயல்பை
அலையாமல்—(கருத்தை ஒரு முகப்படுத்தி) அசையாமல் நிலைபெறுத்தி,
முன்னுணர்ந்து—முன்னதாக உணர்ந்து,
நாடில்—பின்னர் அச்சமுதாயத்தை ஆராய்ந்தால்,
அது—அச்சமுதாயம்,
தீபமே போல—கண்ணுக்கு விளக்கைப்போல,
தனுவாம்—உயிர்க்குத் தூலம் சூக்குமம் பரம் என்னும் உடம்புகளாகும்.
தான் அத்தின் வேறுஆம்—உயிர் அவ்வுடம்பின் வேறுபட்டதே ஆகும்.

குறிப்பு :

தூலதேகம் முதலியவற்றுள் ஒவ்வொன்றை ஆன்மா அன்று என்றது பொருந்தும்; அவற்றுள் ஒன்று குறைந்த வழியும் அறிவு நிகழாமையானும், எல்லாம் கூடியவழி அறிவு நிகழ்தலானும், அனைத்தும் கூடிய சமுதாயமே ஆன்மாவாம் என்னும் சமூகான்மவாதிகள் ஆகிய சவுத்திராந்திகர், வைபாடிகர் கருத்து, இவ்வதிகரணத்தால் மறுக்கப் பெறுகின்றது. உடம்பு முதலிய கருவிகளெல்லாம் மாயையின் காரியங்களாய் நிலைபேறு இன்றி அழிந்துபடும் இயல்பினவாதலின், நிலைபேறுடைய ஆன்மா அல்ல என்பது கருத்து.

கண் விளக்கிற்கு வேறாயினாற்போல, உயிரானது 'கலைஆதி மண்அந்தம்' ஆகிய சமுதாயத்தின், தூலம் சூக்குமம் பரம் என்னும் உடம்புகளுக்கு வேறானது ஆகும். முதற்கண் ஞானத்தை உணர்ந்து, பின்னர் அதனாலேயே கருவிகள் அனைத்தும் ஆகிய சமுதாயத்தை ஆராய்தல் கூடுமாதலின் 'ஞானத்தை அலையாமல் முன்னுணர்ந்து நாடில்' என்றார். சமுதாயம்—கூட்டம்; மூலப்பகுதி குணம் கரணம் புலன் கருவி என்பவற்றின் திரள். தனு-உடம்பு. அது இங்குத் தூல உடம்பு, சூக்கும உடம்பு, பரவுடம்பு எனும் மூன்றையும் குறித்தது. 'நிலையாவாம்' என்பதில் உள்ள ஆம் என்பது, 'மண் அந்தம் ஆம்' என்றும் கூட்டிக் கொள்ளப்பெறும். தான்—உயிர். அத்தின்-அதனின். இவ்வதிகரணத்தால் 'நீ தனி' என்பது வலியுறுத்தப் பெற்றது.

இந்நூற்பாவின்கண் சூனியம், தூலதேகம், இந்திரியம், சூக்குமதேகம், பிராணவாயு, விஞ்ஞானம் (பிரமம்), சமுதாயம் என்பவற்றைஆன்மா என்று கூறுவோர் கூற்றுக்களை மறுத்து, ஆன்மா என்பது இவைகளுக்கெல்லாம் வேறாக, மாயா இயந்திர தனுவின் உள்ளேயுள்ளது என்று நிறுவப் பெற்றது. இச்சூத்திரப் பொருளையே,

**''பாராதி பூதம்நீ அல்லை;-உன்னிப்**
**பார்; இந்திரியம் கரணம் நீ அல்லை;**
**ஆராய் உணர்வுநீ என்றான்;-ஐயன்**
**அன்பாய் உரைத்தசொல் ஆனந்தம் தோழி''**

என்று தாயுமான சுவாமிகள் அருளிச் செய்திருத்தல், இங்கு அறிதற்குரியது.

## பொது அதிகாரம் : இலக்கண இயல்
## நான்காம் சூத்திரம் : பசு இலக்கணம்

**அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று, அவை**
**சந்தித்தது; ஆன்மாச் சகசமலத் துணராது;**
**அமைச்சரசு ஏய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே**

பதவுரை :

ஆன்மா—உயிரானது,
அந்தக்கரணம் அவற்றின்-மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கு அகக்கருவிகளுள்,
ஒன்று அன்று—ஒன்று ஆகாது, (ஆயினும்),
சகச மலத்து—ஆணவ மலத்தினால்
உணராது—(தனக்கு) உணர்வு இல்லாமையினால்,
அமைச்சு அரசு ஏய்ப்ப—அமைச்சரோடு கூடிய அரசன்போல,
அவை—அவ்வந்தக் கரணங்களோடு,
சந்தித்தது நின்று—கூடியதாக நிற்றலான்,
அஞ்சு அவத்தைத்து—நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து அவத்தைகளையுடையதாகும்.

குறிப்பு :

ஐந்தவத்தைகளை முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் எனவும் கூறுவர். உயிர் அரசன் போல்வது; அந்தக் கரணங்கள் அமைச்சர்கள் போல்வன.

ஆன்மாவுக்கு இலக்கணம், அந்தக் கரணங்களோடு கூடி ஐந்து அவத்தைப் படுதல். இஃது உயிர்க்குத் தடத்த இலக்கணம் எனப்படும்பொது இயல்பு ஆகும்.

ஒரு பொருளின் உண்மையை எடுத்துக்காட்டி விளக்க வேண்டுமாயின், பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டாலும் எடுத்துக்காட்ட வேண்டுமாதலால், 'பிரமாண இயல்' எனப்படும் முதல் மூன்று சூத்திரங்களால், பதி பாசம் பசு ஆகிய முப்பொருள்களின் உண்மையைப் பிரமாணத்தால் முறையே எடுத்துக்காட்டினார்.

இங்கு, 'இலக்கண இயல்' எனப்படும் பின் மூன்று சூத்திரங்களில், எதிர் நிரல்நிறையாகவைத்து முப்பொருள்களின் உண்மையை இலக்கணத்தால் எடுத்துக் காட்டுகின்றார். 'மாட்டேறு' என்னும் இலக்கண முறையால், இச்சூத்திரம் மூன்றாம் சூத்

திரத்தோடு தொடர்புடையதாய், ஆன்ம (பசு) இலக்கணம் உணர்த்திற்று.

'ஒன்றன்று' என்புழி 'ஆயினும்' என்பது வருவிக்கப்படும். சகசமலம்—ஆணவமலம்; நெல்லுக்கு உமிபோல உயிருக்கு உடனாகத் தோன்றிய மலம் என்பது பொருள். சகசம்—உடனாகத் தோன்றியது. மலத்து—மலத்தால், உணராது—உணராமையினால் (காரணப்பொருள்), அவை—அவற்றொடு. சந்தித்தது—கூடியது. அமைச்சு அரசு—அமைச்சரோடு கூடிய அரசன். சந்தித்(த)து நின்று—சந்தித்து நின்று; வினைஎச்சமுற்று. 'சந்தித்து நின்று அஞ்சு அவத்தைத்து' என முடியும். 'ஆன்மா' வியாபகம், சித்தசித்து என்னும் இருபொருளுடையது.

## 4. முதல் அதிகரணம்

''சண்டு, இவ்வான்மாவானது அந்தக்கரணங்களாய் உள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்று அன்று; அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான் என்றது''.

(வெண்பா)

**மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கள்;**
**மனமாதி மன்புலனி னல்லன்;—மனமேல்**
**உதித்தொன்றை யுள்ளம் உணர்தல் அதனின்**
**உதிக்குங் கடற்றிரையை யொத்து.**

பதவுரை :

மனம் ஆதியால்—மனம் முதலிய அந்தக் கரணங்களால்
உணர்தல்—உணரப்படுவன,
மன்னு புலன்கள்—ஐம்பொறிகளால் தரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம்;
உள்ளம்—ஆன்மா
உணர்தல்—உணர்வது,
மனமேல் உதித்த ஒன்றை—மனத்துக்குமேல் எனப்படும் புத்தியில் தோன்றியது ஒன்றனையாம்.
கடல்திரையை ஒத்துஉதிக்கும்—(மனவுணர்வும் உயிருணர்வும் ஆகிய இருவேறுஉணர்வும்), கடல் அலையைப் போலப் பரம்பரையின் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து ஆன்மாவின்பால் வந்து தோன்றும்;
அதனின்—அதனால்
மனம்ஆதி—மனம் முதலியன,
புலனின்—அவ்விடயங்களின் வேறானாற் போல,
அல்லன்—ஆன்மாவும் அம்மனம் முதலியவற்றின் ஒன்றல்லன்; வேறாவன்.

குறிப்பு :

'மன்புலனின்' என்புழி, மன் அசை. புத்தியில் தோன்றிய தொன்றாவது, சுக துக்க மோக வடிவமாகிய விடயம். கடல் ஐம்பொறிக்கும் புத்திக்கும், திரை இருவேறு உணர்வுக்கும், கரை ஆன்மாவுக்கும் உவமிக்கப் பெற்றன. பரம்பரையில் தோன்றுதலாவது, முன்னர் வாயிற்காட்சியுணர்வும், அதன்பின் மானதக் காட்சியுணர்வும், அதன்பின் தன்வேதனைக் காட்சி யுணர்வும், உயிரினிடத்தே வந்து தோன்றுதல். வாயிற் காட்சியாவது புறத்தேயுள்ள சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்என்பவைகள் ஐம்பொறிகளால் அறியப்படுதல். மானதக் காட்சியாவது, ஐம்பொறிகளால் அறியப்படும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்கள், மனம் முதலிய அந்தக் கரணங்களால் அறியப்படுதல். தன் வேதனைக் காட்சியாவது, அந்தக்கரணங்களுள் மனத்துக்கு மேலாய்ப் புத்தியில் தோன்றியவைகள் ஆன்மாவினால் உணரப்படுதல்.

இதனால் அந்தக்கரணங்கள் தமக்குக் கீழ் உள்ளவற்றை நோக்கிச் சித்தாய் நிற்குமாறும், தமக்குமேல் உள்ளவற்றை நோக்கி அசித்தாய் நிற்குமாறும், ஆன்மா அவ்வாறன்றி யாண்டும் சித்தாய் நிற்குமாறும் தெளியப்படும். 'மனம்ஆதி மன்புலனின் அல்லன்'—மனம் முதலியன அப்புலன்கள் அல்லவாயினாற் போல, ஆன்மாவும் மனம் ஆதியல்லன், அவற்றின் வேறு. 'மனமேல் உதித்த ஒன்றை' மனத்துக்கு மேல் எனப்படும் புத்தியின் கண்ணே தோன்றிய தொன்றனை. உள்ளம்—ஆன்மா. அதனின்-அதனால், ஆதலால்.

(வெண்பா)

**சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதாய், ஆங்காரம்**
**புந்தியாய் ஆய்ந்து, மனம்ஆகிப்-பந்தித்து,**
**வெவ்வேறு தானே துணிந்து உள்ளம் இவ்வேறாம்;**
**அவ்வேறாம் போதுபோல் ஆங்கு.**

பதவுரை :

உள்ளம்—புருடதத்துவம் என நின்ற உயிர்,
ஆங்கு—மானதக் காட்சியின் கண்ணும் (ஒரு தன்மைத்தாக இராமல்),
சித்தமாய்ச் சிந்தித்தும்—சித்தமாய் இஃது எது என்று சிந்தனை செய்தும்,
மனம் ஆகிப் பந்தித்து—மனமாக நின்று இஃது இன்னது என்று பற்றியும்,
ஆங்காரமாய்த் தெளியாது—அகங்காரமாக நின்று இதனை இன்னதென்று தெளிவேன் என்று தெளியாமல் முனைந்தும்,
புந்தியாய் ஆய்ந்து—புத்தியாக நின்று இஃது இன்னதென்று ஆராய்ந்தும்,
வெவ்வேறு தானே துணிந்து—வெவ்வேறாக உணர்ந்து துணிதலால், (புருடன் ஆகிய உயிர்),
இவ்—இந்த அந்தக் கரணங்களின்,
வேறு ஆம்—வேறு பட்டதே ஆகும். (எதுபோல எனில்),
போது—(ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலியவற்றோடு கூடி, நாழிகை நாள் திங்கள் ஆண்டு முதலிய பாகுபாடுகளைச் செய்கின்ற) காலதத்துவமானது,
அவ்வேறு ஆம்—அந்த ஞாயிறு திங்கள் விண்மீன் முதலியவற்றிற்கு வேறுபட்டது ஆதல்போல.

குறிப்பு :

சித்தம், மனம், அகங்காரம் புத்தி என்ற முறையிற் கூறற்பாலனவற்றைச் செய்யுளமைப்பு நோக்கிச் 'சித்தம் ஆங்காரம் புத்தி மனம்' என்று முறை பிறழக் கூறினார்.

சித்தம், இஃது யாதாகற் பாற்று என்று சிந்திக்கும்; மனம், இஃது இன்னதாகற்பாற்று என்று பற்றும்; அகங்காரம், இஃது ஆமோ அன்றோ, இதனை இன்னதென்று தெளிவேன் என்று முனைந்து எழும்; புத்தி, இஃது இன்னதென்று ஆராய்ந்து தெளியும்.

ஆய்தல்—நிச்சயித்தல், துணிந்து—துணிதலால். ஆங்கு—ஆங்கும்; மானதக் காட்சியின் கண்ணும். வெவ்வேறு—வேறு வேறு. இவற்றின் வேறாம், அவற்றின் வேறாம் எனற்பாலவை, 'இவ் வேறும் அவ்வேறாம்' என வந்தன.

உயிர் மாயாகாரியங்களின் உள்ளே நடுவில் இருப்பது ஆதலின் 'உள்ளம்' எனப்பட்டது.

(வெண்பா)

**அகாரம் உகாரம், அகங்காரம் புத்தி;**
**மகாரம் மனம்; சித்தம் விந்துப்;–பகாதிவற்றை**
**நாதம் உளவடிவாம்; நாடிற் பிரணவமாம்;**
**போதம் கடற்றிரையே போன்று.**

பதவுரை :

*அகாரம் அகங்காரம்*—அகரம் அகங்காரத்தினையும்,
*உகாரம் புத்தி*—உகரம் புத்தியினையும்,
*மகாரம் மனம்*—மகரம் மனத்தினையும்,
*விந்து சித்தம்*—விந்து சித்தத்தினையும்,
*நாதம் உளவடிவு*—நாதம் உயிரினையும் செலுத்தும். (அங்ஙனம் செலுத்துதல்பற்றி),
*கடல்திரையே போன்று*—கடலின்கண் அலைகள் புதியபுதியவாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போல,
*போதம்*—(மகாசகலத்தின்கண் கணம்தோறும்) உயிரின்கண் உணர்வு,
*ஆம்*—உதித்தும் ஒடுங்கியும் வரும்.
*பகாது*—பகுத்துப் பிரிக்காமல்,
*இவற்றை நாடில்*—இந்த எழுத்துக்களை ஆராய்ந்தால்,
*பிரணவம் ஆம்*—பிரணவம் எனப்படும்.

குறிப்பு :

பிரணவத்தில், அகரம் அகங்காரத்தினையும், உகரம் புத்தியினையும், மகரம் மனத்தினையும், விந்து சித்தத்தினையும், நாதம் உயிரினையும் செலுத்தும் என்பது கருத்து.

'பிரணவம் ஆம்' என்றும், 'கடற்றிரையே போன்று ஆம்' என்றும் இயைக்க. அந்தக் கரணங்களைச் செலுத்தும் எழுத்துக்களைக் கூறுவார், புருடனைச் செலுத்தும் எழுத்தினையும், இனம் பற்றி உடன் கூறுவராய், 'நாதம் உளவடிவு ஆம்' என்றார்.

முன்பு 'அதனில் உதிக்கும் கடல்திரையை ஒத்து' என்றது, உணர்வுகள் பரம்பரையாய் உதித்தலை உணர்த்துவதற்கு. இங்கு 'உதிக்கும் கடற்றிரையே போன்று' என்றது, உணர்வுகள் புதியன புதியனவாக உதித்தலை விளக்குவதற்கு.

உயிரின்கண் கணந்தோறும், புதியபுதியவாக உணர்வுகள் உதிக்கும் என்பதனை 'ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப கோடியும் அல்ல பல' என்னும் திருக்குறளால் அறியலாம்.

(வெண்பா)

**எண்நிலவு ஓங்காரத்து ஈசர் சதாசிவம் ஆம்;**
**நண்ணிய விந்துவொடு நாதத்துக்-கண்ணிற்**
**பகர்அயன் மாலோடு பரமன்அதி தெய்வம்;**
**மகரஉக ரம்அகரத் தாம்.**

பதவுரை :

*எண் நிலவு*—மானதக் காட்சியின்கண் நிலவுகின்ற
*ஓங்காரத்து*—பிரணவத்தின் உள்ளே
*நண்ணிய*—பொருந்திய
*விந்துவொடு*—விந்துவிற்கும்,
*நாதத்து*—நாதத்திற்கும்,
*அதிதெய்வம்*—உரிய அதிட்டிக்கும் தெய்வங்களை,
*கண்ணில்*—கருதுவோம் ஆயின்,
*ஈசர்*—மகேசுவரரும்
*சதாசிவம் ஆம்*—சதாசிவரும் ஆவர்.
*மகர உகர அகரத்து*—மகரம் உகரம் அகரம் ஆகிய எழுத்துக்களுக்கு,
*அதிதெய்வம்*—உரிய அதிட்டிக்கும் தெய்வங்களை
*கண்ணில்*—கருதுவோம் ஆயின்,
*பரமன் மாலோடு பகர் அயன்ஆம்*—(முறையே சுத்த வித்தையின் வைகுவோர் ஆகிய) உருத்திரனும் மாலும் சொல்லப்படும் அயனும் ஆவர்.

குறிப்பு :

நாதத்திற்குச் சதாசிவன், விந்துவுக்கு மகேசுவரன், மகரத்திற்கு உருத்திரன், உகரத்திற்குத் திருமால், அகரத்திற்கு அயன் என்போர், முறையே அதிதெய்வங்கள் ஆவர்.

எண், எண்ணம்—மானதக் காட்சி, பரமன்—உருத்திரன். 'மகரஉக ரம்அகரத் தாம்' என்புழி மகரஒற்று ஒற்றில்வழி ஒற்றாய் வந்தது.

இவ்விரண்டு வெண்பாக்களும், அகங்காரம் புத்தி மனம் சித்தம் என்னும் இவ்வைந்தும் சடம் ஆதலால் இவைகளைக் கருவியாகக் கொண்டு ஆன்மா எவ்வாறு அறிதலைச் செய்யும்? எனின்; அக்கருவிகளுள் அகங்காரத்திற்கு அகரமும், புத்திக்கு உகரமும், மனத்திற்கு மகரமும், சித்தத்திற்கு விந்துவும், உயிர்க்கு நாதமும் ஆகிய எழுத்துக்கள் உடன் நின்று செலுத்துவதனால் அறிதலைச் செய்யும் என்றும்;

அவ்வெழுத்துக்களும் கூடச் சடமேயாதலால், அவைகள் அந்தக்கரணங்களை எவ்வாறு செலுத்தும் எனின், அவைகளை முறையே அயன் மால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் ஐவரும் அதிதெய்வங்களாக நின்று செலுத்துவர் என்றும்;

இவ்வாறு புருடனொடு அந்தக்கரணங்களும் எழுத்துக்களும் அதிதெய்வங்களும் ஆகிய முத்திறத்துப் பதினைந்தோடும், ஆன்மாவானது பொருந்தியக்கால், அறிதற்றொழிலைச் செய்யும் என்றும்; செவ்விதின் விளக்கிக் கூறின.

இவ்வுண்மை யோகப் பயிற்சியில் தேர்ந்தவர்களுக்கே இனிது விளங்கும். இதனை 'வளியிரண்டும் தவிர்த்துறில் தானும் தோன்றும்' (194)எனச் சிவஞான சித்தியார் கூறுதல் காணலாம்.

## 4. இரண்டாம் அதிகரணம்

''இனி இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வு இன்று; அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றலான் என்றது.''

(வெண்பா)

**மாயா தனுவிளக்கா, மற்றுஉள்ளம் காணாதேல்,**
**ஆயாதாம் ஒன்றை; அதுவதுவாய்-வீயாத**
**வள்ளிதனைத் தன்னுள் மறைத்து ஒன்றாம் காட்டம் போல்,**
**தன்னைமலம் அன்றணைதல் தான்.**

பதவுரை :

உள்ளம்—உயிரானது
மாயாதநு—மாயாமலகாரியமாகிய உடம்பை,
விளக்கு ஆ—பொருள்களை விளக்குகின்ற துணையாகக் கொண்டு,
காணாதேல்—காணாதாயின்
ஒன்றை (யும்)—ஒரு பொருளையும்
ஆயாது ஆகும்—அறிவதில்லை ஆகும்.
மலம்—ஆவணமலம்
தன்னை—உயிராகிய தன்னை
அன்று அணைதல்—அநாதியே பற்றி நிற்றல் (எது போலும் எனில்),
அதுவதுவாய்(உம்)—(விறகு சூரியகாந்தம் முதலியவற்றுள்) அதுவதுவேயாய் நின்றும்,
வீயாத—தனக்குக் கேடு இல்லாத
வன்னிதனை—நெருப்பை
தன்னுள் மறைத்து—தனக்குள்ளே மறைத்து வைத்துப் பொதிந்து கொண்டு
ஒன்றாம்—ஒன்றேயாய் நிற்கின்ற
காட்டம்போலும்—விறகைப்போலும்.

குறிப்பு :

உயிர்க்கு அறிவை விளக்கும் துணையாக நிற்றல் மாயையின் செய்தி; உயிர்க்கு அறிவு நிகழவொட்டாமல் தடை செய்து கொண்டு நிற்றல் ஆணவமலத்தின் செய்தி. இவ்விரண்டும் இருளும் ஒளியும் போலத் தம்முள் முரண்பட்டு நிற்பன. ஆதலின், மாயை ஆகிய ஆகந்துகமலம், ஆணவம் ஆகிய சகசமலம் ஆதல் இல்லை என்பது கருத்து.

ஆகந்துகம்—இடையில் வந்து சேர்ந்தது. சகசம்—முன்பே உடன் தோன்றிப் பொருந்தியது. மாயை விளக்கு ஆகும் எனவே, 'மற்று' என்னும் வினைமாற்றால், ஆணவமலம் இருளாதல் சுட்டப் பெற்றது. ஆணவமலம் அன்று அணைதல் கூறப் படவே, மாயாமலம் இடையிற்போந்தது என்பது வினை மாற்றால் உணரப்படும். ஒன்றையும், அதுவதுவாயும் என்று வரற்பால, முற்றும்மை சிறப்பும்மைகள் தொக்கன. ஆம், தாம் என்பன, அசைகள்.

ஒன்றாம் காட்டம் — ஒன்றேபோல் அத்து விதமாகக் கலந்து நிற்கும் விறகு. ''விறகில் தீயினன், பாலிற் படும்நெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்'' என வரும் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை, ஈண்டுச் சிந்தித்து உணரற்பாலது. விறகு ஆன்மா, நெருப்பு ஆணவமலம். நெருப்பு விறகில் ஒன்றேபோல் அத்துவிதமாகக் கலந்து நிற்பதுபோல, ஆணவமலம் அநாதியே, உயிரின்கண் ஒன்றேபோல் அத்துவிதமாகக் கலந்து உயிரைப் பற்றி நிற்கும் என்பது கருத்து. ''ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத், தாணுவினாடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ'' என்பது தாயுமானவர் பாடல்.

## 4. மூன்றாம் அதிகரணம்

''இனி இவ்வான்மாச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாய் உள்ள பஞ்சாவத்திதனாய் நிற்கும்; அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்என்றது''.

(வெண்பா)

**ஒன்று,அணையா மூலத்து; உயிர்அணையும் நாபியினில்;**
**சென்றணையும் சித்தம் இதயத்து;-மன்றஏய்**
**ஐயைந்தாம் நன்னுதலில்; கண்டத்தின் வாக்காதி**
**மெய்யாதி விட்டகன்று; வேறு**

பதவுரை:

நன்னுதலில்—சாக்கிரத்தானம் எனப்படும் நல்ல புருவ நடுவில்,
வாக்காதிமெய்யாதி—வாக்கு பாணி பாதம் பாயுரு உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியம் ஐந்தும்,
மன்றஏய்—தேற்றமாகப் பொருந்திய
ஐயைந்துஆம்—சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் சத்தாதி ஐந்து, வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் வசனாதி ஐந்து, பிராணன் அபானன் வியானன் சமானன் உதானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்செயன் என்னும் வாயுக்கள் பத்து, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கு, புருடன் ஒன்று ஆகிய இருபத்தைந்தும் சேர்ந்து, 35 கருவிகள் தொழிற்படும்;
கண்டத்தின்—கனவுத்தானம் எனப்படும் கழுத்தில், (வாக்காதி, மெய்யாதி ஆகிய கன்மேந்திரியம் ஞானேந்திரியம் ஆகிய பத்தினையும்),
விட்டு அகன்று—விடுத்து நீங்கி
வேறு ஐயைந்துஆம்—வேறாகிய (சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, கரணம் நான்கு, புருடன் ஒன்று, வாயுக்கள் பத்து, ஆகிய) இருபத்தைந்து கருவிகள் மட்டும் தொழிற்படும்;
இதயத்தில்—சுழுத்தித்தானம் எனப்படும் இருதயத்துள்,
சித்தம் சென்றணையும்—(முற்கூறிய இருபத்தைந்தில் இருபத்திரண்டை விட்டு நீங்கி), புருடன் பிராணன் என்பவற்றோடு மட்டும் கூடிச் சென்று, சித்தம் தொழிற்படும்.
நாபியினில்—துரியத்தானம் எனப்படும் உந்தியில்,
உயிர்அணையும்—(சித்தத்தையும் விட்டு நீங்கி), புருட தத்துவத்தோடு, பிராண வாயு கூடித் தொழிற்படும் ;
அணையா—இக்கருவிகள் ஒன்றும் அணையாத
மூலத்து—துரியாதீதத்தானம் எனப்படும் மூலாதாரத்தில்,
ஒன்று—புருடன் ஒன்றே நிலைபெறும்.

குறிப்பு :

உயிரானது மலவடிவில் மறைப்புற்றவழி, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் (நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம்) என்னும் ஐந்து வகையான அவத்தை நிலைகளை அடையும். சாக்கிரத்திற்கு இடம் புருவ நடு, கருவிகள் 35; சொப்பனத்திற்கு இடம் கழுத்து, கருவிகள் 25; சுழுத்திக்கு இடம் இருதயம், கருவிகள் 3 ; துரியத்திற்கு இடம் கொப்பூழ், கருவிகள் 2 ;

துரியாதீதத்திற்கு இடம், மூலாதாரம்; அங்குப் புருடன் ஒன்று மட்டுமே நிலைபெறும்.

''சாக்கிரம் முப்பத் தைந்து
 நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து
 களத்தினில்; சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்;
 துரியத்தில் இரண்டு நாபி;
நோக்கிய துரியா தீதம்
 நுவலின் மூலத்தின் ஒன்றே.''

என்னும் சிவஞானசித்தியார் செய்யுள், இவ் வெண்பாவின் பொருளையே அடியொற்றித் தழுவி அமைந்திருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

(வெண்பா)

**இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்,**
**இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்;-இலாடத்தே**
**அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டு, அதுவே**
**அவ்வவற்றின் நீங்கல், அது ஆங்கு.**

**பதவுரை :**

இலாடத்தே—புருவ நடுவின்கண்
சாக்கிரத்தை எய்திய—நனவு நிலையைத் தலைப்பட்ட
உள்ளம்—புருடன்,
இலாடத்தே—புருவ நடுவில்
ஐந்தவத்தை எய்தும்—சாக்கிரச் சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளை அடையும்;
இலாடத்தே—அப்புருவ நடுவின்கண்
அவ்வவ இந்திரியத்து—அந்த அந்தப்பொறிகளால்
(அவ்) அத்துறைகள் கண்டு—அந்த அந்தப் பொருள்களை உணர்ந்து,
(அது) அதுவே—அப்போது அப்போதே
அவ்வவற்றின் நீங்கல்(ஆல்)—அந்த அந்தப்பொருள்களில் இருந்து நீங்குவதனால்,
அது—(இனிக் கூறப்பெறும்) அந்தச் சுத்தாவத்தையும்,
ஆங்கு—இவைகளைப் போன்று நின்மல சாக்கிரம் முதலிய ஐவகைப்படும்.

**குறிப்பு :**

இலாடம்—புருவ நடு. புருவ நடுவில், சாக்கிரத்தில் சாக்கிரம்—சாக்கிரத்தில் சொப்பனம்—சாக்கிரத்தில் சுழுத்தி—சாக்கிரத்தில் துரியம்—சாக்கிரத்தில் துரியாதீதம் என்னும் அவத்தைகளைப் புருடன் அடையும்.

''நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம் ;
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலம்என்று தேர்ந்துகொண் டேனே.''

என வரும் திருமூலர் திருமந்திரச் செய்யுள், புருவ நடுவின் சிறப்பை விளக்குதல் காணலாம். எனவே அதனை 'நன்னுதல்' என்று புகழ்ந்தார். அவ்வவ இந்திரியம்-அவ்வத்தானத்தில் விடயித்தற்குரிய இந்திரியம். அவ்வவ்விடயம்—அங்கு அங்குப் புலன் ஆதற்குரிய விடயம். இந்திரியத்து - இந்திரியத்தால். கண்டுநீங்கல் எனக் கூட்டுக. அதுவே-அப்பொழுதே. அவ்வவ இந்திரியத்து எனவும், அவ்வவற்று எனவும் சுட்டு அடுக்கிக் கூறியதனால், அத்துறைகள் என்பதனை அவ்வத்துறைகள் என்றும், அதுவே என்பதனை அதுஅதுவே என்றும், அடுக்கிக்கூறிப், பொருள் கொள்ளுக. அதுவே என்பதில், ஏகாரம் ஏழாம் வேற்றுமை இடப் பொருளில் வந்தது.

ஆன்மாக்களுக்குக் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று மூல அவத்தைகள் உண்டு. இவற்றுள் கேவலாவத்தையாவது—ஆன்மாக்கள் சர்வ சங்கார காலத்தில், சுத்தமாயா காரணத்தில் ஒடுங்கிச், சிருட்டிக்காலம் அளவும் ஆணவ மலத்தால் மறைப்புண்டு, கலையாதி தத்துவங்களுடன் கூடாமல், அறிவும் செயலும் இழந்துகிடக்கும் நிலை.

சகலாவத்தை ஆவது—சிருட்டி தொடங்கிச் சர்வ சங்கார காலம் அளவும், ஆன்மாக்கள் 36 தத்துவங்களுடன் கூடி, 84 லட்சம் உயிர் இனங்களில் பிறந்து இறந்து உழலும் நிலை.

சுத்தாவத்தை ஆவது—கேவலம் சகலம் என்னும் அவத்தைகளை அடைந்து, பிறந்து இறந்து உழலும் நிலையில், இருவினையொப்பும் மலபரிபாகமும் அடைந்து, ஆன்மா திருவருளுடன் கூடி நிற்கும் நிலை.

ஆன்மா கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூலாவத்தைகள் ஒவ்வொன்றிலும், சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளையும் அடையும். இந்த முத்திறத்து ஐந்து அவத்தைகளுள், ஆன்மா புருவநடு முதல் மூலாதாரம் வரையிலும் தங்கி, சாக்கிரம் முதல் துரியாதீதம் ஈறான ஐந்து அவத்தைகளைப் பொருந்தும் நிலை, சகலத்திற் கேவலம் எனப்படும். புருவ நடுவில் இருந்து, சாக்கிரத்தில் சாக்கிரம் முதல், சாக்கிரத்தில் துரியாதீதம் வரையிலும் உள்ள ஐந்து அவத்தைகளை அடையும் நிலை சகலத்திற் சகலம் எனப்படும். நின்மல சாக்கிரம் முதல் நின்மல துரியாதீதம் வரையிலும் உள்ள ஐந்து அவத்தைகளை அடையும் நிலை, சகலத்திற் சுத்தம் எனப்படும். இவை முறையே கீழாலவத்தை, மத்தியாலவத்தை, நின்மலாவத்தை எனவும் வழங்கப்பெறும். கீழாலவத்தையில் ஆன்மாவைக் கூடி நிற்கும் கருவிகள் பற்றி, முன்னைய வெண்பாவில் கூறப்பட்டது.

மத்தியாலவத்தையில் சாக்கிரசாக்கிரத்தில், சிவதத்துவம் முதல் சுத்தவித்தியாதத்துவம் இறுதியாகிய ஐந்து கருவிகளும்; சாக்கிர சொப்பனத்தில் சிவதத்துவம் முதல் ஈசுவரதத்துவம் இறுதியாக நான்கு கருவிகளும்; சாக்கிரசுழுத்தியில் சிவதத்துவம் முதல் சாதாக்கிய தத்துவம் இறுதியாகமூன்று கருவிகளும்; சாக்கிர துரியத்தில் சிவதத்துவம் சத்தி தத்துவம் என்னும் இரண்டு கருவிகளும்; சாக்கிர துரியாதீதத்தில் சிவதத்துவம் என்னும் ஒரு கருவியும், கலாதிகளைச் செலுத்தி நிற்கும்.

நின்மலாவத்தையில், நின்மல சாக்கிரம்ஆவது, ஆசிரியராலே ஞானதீக்கை பெற்று முப்பொருள் உண்மை அறிந்து, சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்கும்படி, ஆராய்ந்து நிற்பது. நின்மல சொப்பனம் ஆவது, கருவிகள் நீங்கியும் நீங்காமலும்நடுவே சற்றுப் பதைப்பு ஏற்படுதல். நின்மல சுழுத்தி ஆவது தத்துவங்கள் நீங்கிமேலான கேவலம் தானாய் நிற்பது. நின்மல துரியம் ஆவது, கேவலம் நீங்கி அருளினாலே தன்னையும் கண்டு, அருளையும்கண்டு அதன் வயமாய் நிற்பது. நின்மல துரியாதீதம் ஆவது, சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத்தில் அழுந்துதல்.

இந்நூற்பாவால், ஆன்மா அந்தக்கரணங்களுள் ஒன்றன்று என்பதும், சகச மலம் ஆகிய ஆணவமலத்தினால் உணர்வின்றி நின்று, அந்தக் கரணங்களோடு கூடி அறியும் என்பதும், அதனால் ஐந்து அவத்தைப்படும் என்பதும் விளக்கப் பெற்றன.

(நான்காம் சூத்திரம் முடிவுற்றது)

# சண்டேசுவரர்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

சிவாலயங்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு அல்லது திருவீதி உலா நிகழும்போது, அவர்களுள் ஒருவராக விளங்குபவர் சண்டேசர் என்பது யாவரும் அறிந்ததொன்று. சண்டேசர், சண்டீசர், சண்டேசுவரர், சண்டிகேசர், சண்டேசுவர நாயனார் எனப் பல வகைகளில் இவருக்குப் பெயர்கள் வழங்கும்.

எல்லாச் சிவாலயங்களிலும் இவருக்குத் தனியே ஒரு சிறு சந்நிதி உண்டு. அது கருவறைக்குப் புறம்பே, அபிடேகத்தீர்த்தம்விழும் கோமுகியை அடுத்து, அருகில் அமைக்கப்பட்டிருக்கும். கோயில்களுக்குச் சென்று நாம் செய்யும் சிவதரிசனமும், வழிபாடும், அவற்றின் இறுதியில் நாம் செய்தற்குரிய சண்டேசுவரர் தரிசனத்துடனும், பிரார்த்தனையுடனுமே நிறைவு பெறுகின்றன. சண்டேசுவரரைத் தரிசனம் செய்து முடிக்காதபோது, சிவதரிசனம் நிறைவு பெறாமையோடு, அதன் பயனும் நமக்குச் சித்திப்பதில்லை என்பது பெரியோர்கள் துணிபு.

திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை வழிபடும் அன்பர்கள், கோயிலைமுறையேவலம் வந்து, ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கி முடித்துக் கொண்ட பிறகு, சண்டேசுவரர் கோயிலை அடைதல் வேண்டும். கோயிலில் வழிபாட்டின்போது பெற்ற பூமாலை பரிவட்டம் முதலிய சிவ நின்மாலியப் பொருள்களைச் சண்டேசுவரர் சந்நிதியிற் சேர்த்து, சிவ தரிசனப் பலன் அளித்தருளல் வேண்டும் என்று, அவரைப் பிரார்த்தித்து, அங்குப் பெற்ற திருநீற்றை அணிந்து கொள்ளல் வேண்டும் என்பது, சமய நூல்களின் விதி.

சிவபிரானுக்குச் சாத்தியமலர் மாலைகள், ஆடை, அணிகலன்கள்முதலியனவும், நிவேதனம் செய்த பிரசாதங்கள்ஆகிய உணவு வகைகளும், சிவநின்மாலியங்கள் என வழங்கப்படும் சிவபிரானால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நின்மலம் (அழுக்கின்மை, தூய்மை) அடைந்தபொருள்கள் சிவ நின்மாலியங்கள் ஆகும்.

சிவ நின்மாலியங்களைச் சண்டேசுவரர்பால் சேர்ப்பித்தல் வேண்டும் என்று பெரியவர்கள் கூறும் நுட்பம் அறியாமையால், ஒரு சிலமக்கள் கோயில்களில் சண்டேச மூர்த்தியின் முன்பு, நமது ஆடைகளில் நூல் இழைகளை எடுத்துப் போடும் சிவாபராதச் செயல் புரிகின்றனர். அது பெரும் தவறு. சிவபிரானுக்கு அணிவித்து நின்மாலியமான ஆடைகளையும், மாலைகளையும் மட்டுமே, சண்டேசர்க்குச் சாத்துதல் வேண்டும். சண்டேசர் இடையறாத சிவத்தியானத்தில் ஈடுபட்டிருப்பவராதலின், அவருக்கு நம் வருகையையும், வேண்டுகோளையும் தெரிவிக்கும் வகையில் ஓர் அறிகுறியாகவே, நாம் அவர்தம் திருமுன் சென்று, நம் கைகளை மெல்லெனத் தட்டுகின்றோம்.

திருவானைக்காப் புராணம்:

சிவபூசையின் இறுதியில் நம்மாற் பூசிக்கப் பெற்று, சிவபிரானால் ஏற்றுக்கொள்ளப் பட்ட அன்னம் (உணவு), பானம் (நீர்) முதலியவற்றையும், தாம்பூலம், மாலை, சந்தனம் ஆகிய நின்மாலியங்களையும் ஏற்றுக்கொண்டு, நமக்குச் சிவபூசையின் பயனைக் கொடுக்கும் அதிகாரமுடையவர் சண்டேசுவரரேயாவார். இவ்வுண்மையினைக் கச்சியப்ப முனிவர்,

''பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதர்க் கமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன் ஆடைகள் பிறவும்
வேறு தனக்கென் றமையாமே
மன்னும் தலைவன் பூசனையில்
மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
தூயோன் அடித்தா மரைதொழுவாம்''

எனவரும்திருவானைக்காப்புராணத்துதிப்பாடலிற் குறிப்பிட்டிருத்தல் கொண்டு உணரலாம். சண்டேசர் பூசை செய்யாதவழி, சிவபூசை செய்தும், அதன் பயனை நாம் எய்துதல் இயலாது. இது,

''சண்டனை அர்ச்சித்தவரே
சம்புவை அர்ச்சித்த பயன்,
கொண்டிடுவர் மற்றையர்
கொள்ளார்''

எனவரும் சைவசமய நெறித் திருமொழியால் உணரப்படும். அதுபற்றியே சைவ சித்தாந்தத்தில் 'சண்டேசுவரரை எவ்விடத்தும் எப்போதும் பூசிக்க' என்னும் நியமம் உள்ளது.

கல்வெட்டுச் செய்யுள்:

சிவாலயங்களின் வரவு செலவுக் கணக்குகளைச் சண்டேசுவரர் பெயரினாலேயே எழுதுவதுதான், பண்டைக் காலத்து மரபுமுறையாக

இருந்து வந்தது. இம்மரபுநெறிச் செய்தியினைப் பின்வரும் கல்வெட்டு வெண்பாப் பாடல் விளக்குதல் காணலாம்.

''சண்டீச் சுரன்ஓலை சாகரஞ்சூழ் வையத்தீர்
சண்டீச் சுரன்கருமம் ஆராய்க!-பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து''

''கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களே! நமக்கு முற்பட்டுப் பண்டைக்காலத்தில் அறத்தைச் செய்தவன், செய்வித்தவன், செய்த அறத்தைப் பாதுகாத்தவன், முதலியவர்களுடைய பாதங்களைப் பிறழ்வின்றி, உங்கள் தலைமேற்கொண்டு போற்றி, இறைவனின் திருப்பணிகளை முறைப்படி ஆராய்ந்து செய்து வருவீர்களாக ! இது சண்டேசுவரரின் ஆணை ஓலை (கட்டளை)'' என்பது, மேற்குறித்த கல்வெட்டுப் பாடலின் பொருள்.

இக்கல்வெட்டுப் பாடல், மதுராந்தகம் வட்டம், பெரும்பேறு கிராமம் தான்தோன்றி ஈசுவரர் கோயிலின் முன்மண்டபத்துத் தெற்குச் சுவரிலும் (1) ; தஞ்சை மாவட்டம் தஞ்சாவூர் வட்டம் திருக்களாவுடைய மகாதேவர் கோயிலின் வடபுறச்சுவரிலும் (2) ; தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம்வட்டம் திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயிலின் முன் பிராகாரம் தென்புறச் சுவரிலும் (3) ; புதுக்கோட்டை திருமெய்யம் வட்டம் கள்ளம் பட்டி மதீசுவரர் கோயிலின் முன்புள்ள ஒரு கல்லிலுமாகப் பல தலங்களில் செதுக்கப்பெற்றுள்ளது.

**அரனார் மகனார்:**

சண்டேசுவரர் சிவபிரானுக்கு மகன் முறைமையினராக ஆட்கொள்ளப் பெற்றவர் என்பதனை,

''வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்''

எனவரும் பெரிய புராணச் செய்யுள் விளக்கும். சிவபிரானுக்குப் பிள்ளையாகும் பெருமை பெற்றமை பற்றியே, மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்), காழிப்பிள்ளையார் (சம்பந்தர்) என வழங்கும் வரிசை முறையில் வைத்து, சேய்ஞலூர்ப் பிள்ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப் பெறுகின்றார்.

**தொண்டர் நாயகர்:**

சண்டேசுவரரே சிவனடியார்கள் அனைவருக்கும் தலைமை உடையவர் ஆவர். தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் சிறப்புடைமை பற்றிச் சண்டேசுவரர்க்குத் 'தொண்டர் நாயகம்' என்னும் ஒரு பெயரும் உண்டு.

''தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
அண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்
பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.''

என்பது திருவிசைப்பாத் திருப்பல்லாண்டுப் பாடல். இங்ஙனம் அடியார்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்தல் பற்றியே, அடியார்களின் சார்பாளர் (பிரதிநிதி) முறையில், இறைவனின் திருவீதியுலாவில் சண்டேசுவரரும் கலந்து எழுந்தருளிச் சிறப்பிக்கின்றார்.

**சண்டேசர் வரலாறு:**

சோழ நாட்டில் மண்ணியாற்றின் தென் கரையில் சேய்ஞலூர் என்ற ஒரு சிவத்தலம் உள்ளது. சேய் ஆகிய முருகன், சிவபிரானை வழிபட்ட நல்லஊர் ஆதலின், சேய்ஞலூர் (சேய்நல் ஊர்) எனப் பெயர் அமைந்தது.

அது அந்தணர்கள் நிறைந்து வாழும் ஊர்! சோழ அரசர்கள் முடிசூடிக்கொள்ளும் ஐந்து (காவிரிப்பூம்பட்டினம், உறையூர், திருவாரூர், சேய்ஞலூர், கருவூர்) தலைநகரங்களுள், ஒன்றாகத் திகழ்வது அது. அதன்கண் காசிப கோத்திரத்தில் எச்சதத்தன் என்ற மறையவன் ஒருவன் இருந்தான். ''அருமை மணியை அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்,'' இருமை வினைக்கும் ஒரு வடிவாகியவன் அவன். அவனுடைய மனைவி பவித்திரை என்பவள். இவ்விருவருக்கும் விசாரசருமர் என்னும் மைந்தர் ஒருவர் வந்து உதயஞ் செய்தார். 'முந்தையறிவின் தொடர்ச்சியினால் முகைக்கு மலரின் வாசம்போல்' ஐந்தாண்டு நிரம்பும் முன்னரே, அவர் சந்தமறைகளும் ஆகமங்களும் தகவுற உணர்ந்து தெளிந்தார்.

ஒருநாள் அச்சிறிய பெருந்தகையார், தாம் பள்ளிக்குச் செல்லுங்கால், வழியில் ஓர் இடையன் பசு நிரைகளை அடித்துக் கொடுமை செய்ததனைக் கண்டார். உள்ளம் வருந்தினார். பசுக்களின் அருமை பெருமைகளை அவனுக்கு எடுத்து அறிவுறுத்தி, 'யானே இனி இந்நிரை மேய்ப்பேன்' என்று கூறி, அப்பசுநிரைகளை மேய்த்துவரத் தலைப்பட்டார்.

பசுக்கள் நன்கு புல் மேய்ந்து, மடி பெருகி முலைசுரந்து பால் கறந்து வந்தன. சேய்ஞலூர் மறையவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். சில நாட்கள் சென்றன. பசுக்களுக்கு விசாரசருமர்பால் மிகவும் அன்பும் ஈடுபாடும் பெருகின. அவரைக் கண்டாலே, அவைகள் மிகவும் களிகொண்டு அவர்தம் அருகு சார்ந்து, உருகி நின்றன. அன்பின் மிகுதியால் கனைத்துச் சுரந்து, கறவாமே பால் பெருகிப் பொழிந்து நின்றன. பசுக்கள் பால் பொழிவது கண்ட விசாரசருமர்க்கு, அஃது இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யப்பயன்படுமே என்னும்குறிப்பு தோன்றியது. 'முன்னை அர்ச்சனையின் அளவில் தொடர்ச்சியால்' மூளும் அன்பு பெருகிய விசாரசருமர், மண்ணி ஆற்று மணலில் சிவலிங்கமும், சிவாலயமும், கோபுரமும், திருச்சுற்றாலயம் முதலியனவும் வகுத்து, விளையாட்டே போலச் சிவாகம முறைப்படி சிவபூசையில் ஈடுபடத்துவங்கிவிட்டார். சண்டேசர்

ஆன்நிரை மேய்த்து, ஆத்திமரத்தின் கீழ் சிவ லிங்கம் தாபித்துப் பூசை செய்த தலமே, திரு வாப்பாடி என இன்றும் விளங்கி வருகின்றது.

சிவபூசை செய்யுங்கால், இவர் திருமஞ்ச னம் ஆட்டும் செயலின் இயல்புணராத சேய்ஞ லூர் மறையவர்கள்,இவர் பசும்பாலைக்கறந்து வறிதே மண்ணிற் கவிழ்ந்து வீண் ஆக்குகின் றார் என, எச்சதத்தன்பாற் சென்று பெரிதும் குறை கூறினர். எச்சதத்தன் அது கேட்டுச் சினந்து வந்து, அங்கு இருந்த ஒரு குரா மரத் தின் மீது ஏறி ஒளிந்திருந்து யாவற்றையும் கண்டான். விசாரசருமர் சிவபூசை செய்யும் போது, திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தினான். அது கண்ணுற்ற விசார சருமர் சிவத்தியானத்தில் அழுந்தித் தம்மை மறந்திருந்த நிலையில், அருகே கிடந்த ஒரு கோலை எடுத்து எறிந்தார். அக்கோலே அரு ளால் மழுவாக மாறி, எச்சதத்தனுடைய இரு கால்களையும் வெட்டி அவனைக் கீழே விழும் படிச் செய்தது. விசாரசருமர் பின்னரும் சிவ வழிபாட்டிலேயே மனம் ஒன்றி நின்றார்.

அந்நிலையில் சிவபெருமான்வெளிப்பட்டு, பக்தி முதிர்ந்த பாலகனார் ஆகிய விசார சருமர்க்குக் காட்சி கொடுத்தார்.''நம் பொருட் டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய். அடுத்த தாதை இனி உனக்கு நாம்'' என்று அருளிச் செய்தார்.கருணையினால் அவரை அணைத்துத் தழுவி உச்சி மோந்து மகிழ்ந்தார். சிவபிரானின் திருமலர்க் கைகளால் தீண்டப் பெற்றமையால் விசாரசருமரின் மாயாமலயாக்கை,சிவமயமாகி ஒளி வடிவம் பெற்றது. அவர் திருவருளில் மூழ்கித் திளைத்தார்.

சிவபிரான் அவரைத் தம் தொண்டர்களுக் கெல்லாம் தலைவராக ஆக்கினார். ''எமக்கு நிவேதனம் செய்த பொருள்களும், யாம் உடுத் தும் ஆடைகளும், சூடிய மாலை முதலிய அணி கலன்களும் ஆகிய அனைத்தும், இனிநினக்கே உரிமையுடையன. யாம் நினக்குச் சண்டீசன் என்னும் பதம் தந்தோம்'' என்று கூறி, அதற்கு அடையாளமாகத் தமது சடைமுடியினின்று கொன்றை மாலையினை எடுத்து விசாரசரு மர்க்குச் சூட்டித் திருவருள் புரிந்தார். அங் ஙனம் விசாரசருமர்க்குச் சிவபிரான் சண் டேசப் பதம் அளித்து அனுக்கிரகம் புரிந்த நிலையே 'சண்டேச அனுக்கிரக மூர்த்தம்' எனப்படும்.

**காவியமும், ஓவியமும்:**

இம்மூர்த்தத்தின் இயல்பினை விளக்கும் அழகிய சிற்பங்கள், கங்கைகொண்ட சோழ புரம் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் முதலிய பல இடங்களில் காணப்படுகின்றன. இவற்று ளெல்லாம் கங்கை கொண்ட சோழபுரம்கோயிற் சிற்பமே, கண்கவர் வனப்பும் கவர்ச்சியும் மிக் குடையதாகத் திகழ்கின்றது.

காவியமும் ஓவியமும் தம்முள் இணைந்து திகழும் தொடர்புடையன. 'கவிஞனும் ஓவி யனும் தமக்குள் ஒருவருக்கொருவர்உள்ளுணர்ச் சிப் பெருக்கம் ஊட்டிக் கொள்ளுகின்றனர்' ("The poet and the painter influence and inspire one another") என்று அறிஞர்கள் கூறுவ துண்டு. கவிஞர்களின் கவிதைக் கருத்துக் களை ஓவியர்கள் சித்திரம் தீட்டுதலும், ஓவி யர்கள் தீட்டிய சித்திரங்களை வியந்து கவி ஞர்கள் கவிதை இயற்றுதலும் இயல்பேயாம். மேலை நாட்டு இலக்கியங்களில் மைக்கேல் ஏஞ்சலோ, ரஃபேல் என்னும் புகழ் மிகுந்த ஓவியர்களின் விளைவைக் காணலாம். அம் முறையில் கங்கை கொண்டசோழபுரம்கோயிற் சிற்பங்களைச் சேக்கிழார் சுவாமிகள் பலகாற் கண்டு மகிழ்ந்து வியந்திருத்தல் கூடும். அதன் பயனாகவே,

''அண்டர் பிரானும் தொண்டர்தமக்கு
அதிபன், ஆக்கி அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதம்தந்தோம்,
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்''

என்னும் பெரிய புராணச் செய்யுளைச் சேக் கிழார் அருளிச் செய்தனராதல் கூடும்.

**முடிவுரை:**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய முத லாம் இராசராச சோழனின் (கி. பி. 985-1014) புதல்வன் ஆகிய முதலாம் இராசேந்திரசோழன் (கி. பி. 1012-1014), தன் வட நாட்டுப் போர் களின் வெற்றிக்கு அறிகுறியாகப் புதிதாக அமைத்தஅழகியதலைநகரமே'கங்கைகொண்ட சோழபுரம்' ஆகும். இராசேந்திர சோழனுக்குப் பின்னர், முதலாம் இராசாதிராசன் (கி. பி. 1044-1952), இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1052-1063), முதலாம் வீரராசேந்தி ரன் (கி. பி. 1063-1069), அதிராசேந்திரன் (கி. பி. 1069-1070) முதலாம் குலோத்துங்கன் (கி. பி. 1070-1120), விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135) என்னும் அரசர்கள், வரிசை முறையே ஆட்சி நடத்தினர். அதன் பின்னர்ப் பட்டத்திற்கு வந்து முடிசூடிக்கொண்டு ஆட்சி செலுத்திய அரசனே இரண்டாம் குலோத் துங்க சோழன், அவன் காலத்தில்தான் (கி.பி. 1135-1150) சேக்கிழார் பெருமான் வாழ்ந்தார் என்பது வரலாறு.

ஆதலின் சேக்கிழார் சுவாமிகள், கங்கை கொண்ட சோழபுரத்திற்குப் பற்பல முறைகள் சென்று தங்கியிருந்திருப்பார்; அங்குள்ள கங்கை கொண்ட சோழேச்சுரர் கோயிலுக்குச் சென்று பலகால் வழிபட்டிருப்பார்; அப்போ தெல்லாம் அக்கோயிலில் அமைக்கப்பெற்றுத் திகழும் அழகின் மிகுந்த சண்டேசானுக்கிரக மூர்த்தச் சிற்பம், அவர்தம் கண்ணையும் கருத் தையும் பெரிதும் கவர்ந்திருக்கும், அதனை அவர் கண்டு வியந்து பெரிதும் மகிழ்ந்திருப் பார் என்று, நாம் எண்ணி இன்புறலாம். நாம் சேக்கிழார் பெருமானைக் காணும் பேறு பெறா விடினும், அவர் கண்டுமகிழ்ந்தகங்கைகொண்ட சோழபுரத்து அழகிய சிற்பம் ஆகிய சண்டே சானுக்கிரக மூர்த்தியின் திருவுருவினையாதல், இன்றும் நாம் கண்டு மகிழலாம்.

***

# திருமால் திருவுருவங்கள்

'' திருமால்நெறிச்செல்வர் ''

திரு *என். எஸ். தாத்தாசாரியார்,* தஞ்சை.

*''தமர்உகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே*
*தமர்உகந்த தெப்பேர் மற்றப்பேர்-தமருகந்து*
*எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே*
*அவ்வண்ணம் ஆழியான் ஆம்''*

## முன்னுரை :

பக்தர்கள் தன்னைத் தத்தம் நிலைக்கு ஏற்ப வழிபட்டு உய்வதற்காகத் திருமால் ஐந்து நிலையில் நின்று தரிசனம் தருகிறார் என வைணவ ஆகமநூல்கள் கூறுகின்றன. அந்த ஐவகை நிலையினுள், ''அர்ச்சாவதாரம்'' என்ற வழிபாட்டுக்குரிய உருவ நிலையும் ஒன்றாகும். இந்நிலைக்கே ஏற்றமும் அதிகம் என்பர். அந்த உருவநிலைகளின் அமைப்புக்களைப் பற்றிப் பழைய நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன. சிலவற்றை ஈண்டுக் காணலாம்.

சிவபெருமானின் உருவங்களைப் பற்றிக் கூறும் நூல்கள் பல உள்ளமைபோல, திருமாலின் உருவங்களைப் பற்றிய விளக்கம் உரைக்கும் நூல்கள் அவ்வளவு இல்லை. ஆயினும், மிகவும், பழைய வைகானச ஆகமநூல்களில் சிறப்பாகவும், பாஞ்சராத்திர ஆகமநூல்களில் குறிப்பாகவும், உருவவிளக்கம் கூறப்பட்டுள்ளது. தென்னிந்தியத் திருமால் வடிவங்கள் பெரும்பாலும் ஆகம நூல் வழியில் அமைந்தவைகளே யாகும். ஆகம முறைப்படிக்குத் திருமால் ஆலயங்களில் நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களில் அமைய வேண்டும். இவைகள் யோகம் போகம் வீரம் ஆபிசாரிகம் என நான்கு விதமாக அமையலாம். யோகிகள் யோகமூர்த்திகளையும், குடும்பத்தில் உள்ளவர்கள் போக மூர்த்திகளையும், வீரர்கள் வீரமூர்த்திகளையும், பகைவர்களுக்குத் துன்பம் இழைக்க விரும்புகிறவர்கள் ஆபிசாரிக மூர்த்தியையும் வணங்குவார்கள். ஆக இவை மொத்தம் பன்னிரண்டு பிரிவுகள் கொண்டவை. மேலும் இப் பன்னிரண்டு மூர்த்திகள், உபமூர்த்திகளுடன் முதல் இடை கடை என்று மூன்று பிரிவுகளாக முப்பத்தாறு மூர்த்தங்களாக அமையும். இன்று பழக்கத்தில் திருமால் வடிவங்கள் போக மூர்த்திகளாகவே தான் காணப்படுகின்றன. வீரமூர்த்திகள் அருமை. ஆபிசாரிக மூர்த்தங்கள் இன்று இல்லவே இல்லை எனலாம். இதனை வேண்டும்பொழுது அமைத்து அழித்து விடுவதும் உண்டு.

## அயல்நாட்டில் விஷ்ணு வடிவம் :

விஷ்ணு என்ற சொல்லுக்கு, எங்கும் பரந்தவர், நன்மை தருகிறவர், மாயையிலிருந்து அகற்றுபவர், எல்லாப் பொருள்களின் உயிர் நாடியாய் இருப்பவர் என நான்கு வகைப் பொருள் உண்டு. இந்த விஷ்ணுவின் சிறப்பும், அவரது வடிவங்களும்அயல்நாடுகளிலும்உண்டு. சிறப்பாகச் சீனா, ஜப்பான் என்ற இடங்களில் திருமால் புத்தர் பெருமானாக வடிவக் காட்சி தருகிறார். சம்பா, காம்போஜம், சயாம், சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளில் நாராயணன், அரி, கோவிந்தன் என்ற பெயர்களால் திருமாலே முழுமுதற் கடவுளாக முன்பு வழிபட்டிருக்கவேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர்களின் உறுதி.

## பலவகையான வடிவங்கள் :

தமிழ்நாட்டில் இன்று உள்ள திருமால் உருவங்கள் எல்லாம் பெரும்பாலும் 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிறபட்டவைகளே. பிருகத் சம்மிதை என்ற பழைய வடமொழி நூலில் (கி.பி. 400) உருவ இலக்கணங்கள் ஐந்து செய்யுள்களிலே கூறப்பட்டுள்ளன. அவைகளாவன திருமாலின் திருமேனியில் கைகள் எட்டு அல்லது நான்கு அல்லது இரண்டு இருக்கலாம். எட்டுக் கைகளானால், வலக் கைகளில் கத்தி, கதை அம்பும், இடக்கைகளில் வில் கேடயம் சங்கு சக்கரமும், ஒரு வலக்கை அபய முத்திரையுடனும் இருக்கும். நான்கு கைகளானால், வலக்கை அபயமுத்திரையுடனும், கதையுடனும், இடக்கைகளில் சங்கு சக்கரமும் இருக்கும். இரண்டு கைகளானால், வலக்கை அபய முத்திரையுடனும், இடக்கை சங்கேந்தியும் இருக்கும். இந்த வடிவங்கள் மார்பில் ஸ்ரீவத்சம் என்ற மருவுடனும், கௌஸ்துபம் என்ற ஆபரணத்துடனும், காதுகளில் கடுக்கன்களும்,

தலைமேல் முடியும் (கிரீடம்) துலங்க இருக்க வேண்டும். திருமுக மண்டலம் கம்பீரமாக வும், புன்சிரிப்புடனும் இருக்கவேண்டும் என் பதேயாகும்.

பழைய விஷ்ணு சிற்பங்களுக்குச் சீதேவி பூதேவி என்ற இரு பிராட்டியர்கள் மருங்கே இருப்பதில்லை. ஆயசீர்ஷம் என்னும் பாஞ்ச ராத்திர நூலில் நான்கு கைகளுடன் கூடிய விஷ்ணுவின் வடிவம் கீழ்வருமாறு அமைக்கப் படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

வலப்பக்கத்து மேல்கையில் சக்கரம், கீழ்க் கையில் தாமரைப்பூ. இடப்பக்கத்து மேல்கை யில் கதை, கீழ்க்கையில் சங்கு. இருபக்கமும் ஸ்ரீயும் புஷ்டியும். கையில் தாமரைப்பூவும் வீணையும் பிடித்து விஷ்ணுவின் தொடை அள விற்குச் சற்றுச் சாய்ந்திருக்கும் என்பதாகும். மற்றும் இதைப்பற்றிய சிறப்புகளும் இயல்பு களும், மந்தனாவின் ரூபமந்தனம், ஹேமாத்ரி யின் விரதகாண்டம் போன்ற நூல்களில்காணப் படும். சில இடங்களில் நிற்கும் விஷ்ணுமூர்த்தி கள் நான்கு முகங்களுடன் காணப்படும். முக் கியமாக இந்தியாவின் வடகோடிப் பகுதிகளி லும், கீழ் மத்தியப் பகுதிகளிலும் ஓரளவிற்கு அவைகள் காணப்படும். அவைகளில் சிலநான்கு எட்டுபன்னிரண்டுகைகள் கொண்டவை. இவை கள் குசான் காலத்திற்குப் பிறகு பல மாறுதல் களைப்பெற்றுவிட்டன என்பர். விஷ்ணு தர் மோத்திரம் என்ற நூலின் கருத்துப்படிக்கு, விஷ்ணு கருடன்மேல் நான்கு முகங்களுட னும், எட்டுக் கைகளுடனும் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் அமையலாம். கிழக்கு முகம் சாந்தம் உள்ளதாகவும், தெற்குமுகம் நர சிங்கமுகமாகவும், மேற்கு அதாவது பின்பக்க முகம் கபில முகமாகவும், வடக்கு முகம் வராக முகமாகவும் (வராக அவதாரம் என்பதற்குப் பன்றி அல்ல காண்டாமிருக வடிவம் என்று சிலர் கூறுவதுண்டு), காணப்படுகின்றன. அடுத்தபடியாக உட்கார்ந்த விஷ்ணு சிற்பங்கள் நிற்கும்கோலங்களை விடக்குறைவாகஉள்ளன. அவைகள் ஆதிசேஷன் மீதோ, கருடன்மேலோ, பத்மாசனத்திலோ தனித்தோ அல்லது தேவி மார்களுடனோ காணப்படும்.

வடநாட்டில் சில இடங்களில் அமர்ந்த விஷ்ணுவின் வகைகளில் பலப்பல தென்படு கின்றன. சிவபெருமான் வடிவமான உமாமகேசு வர மூர்த்தியைப்போல லட்சுமிநாராயணமூர்த் தங்களை அமைப்பதுண்டு. அவைகள் வலக் காலைத் தொங்கவிட்டு இடக்காலை மடித்து ஆசனத்தின்மேல் வைத்துக்கொண்டு, அந்தத் திருவடியில் இலக்குமியை உட்காரவைத்திருக் கும் வகையில் இருக்கும். அல்லது இலக்குமி இல்லாமலும் மேலே குறித்தபடிக்கு வடிவம் இருக்கும். பெரும்பாலும் திருமாலின் அமர்ந்த அழகான வடிவங்களே அதிகம். சய னத்திருக்கோலம் அதிகம் இல்லை. சயனத் திருக்கோலங்கள் அரிதாயினும் அவை எட்டு வகைப்படும். அவை உத்தியோகம் தருப்ப சயனம் புஜங்கசயனம் போகசயனம் மாணிக்க சயனம் வடபத்திரசயனம் வீரசயனம் நலசய னம் என்பவையாகும். இவைகளின் தோற்றங் களில் சிலநுணுக்கமான மாறுபாடுகள் உண்டு. பள்ளிகொண்ட அரங்கநாதர் வடிவம் சில உண்டு. அந்த மூர்த்திகள் பிரளய காலத்தில் உண்டாகும் சக்திகள் யாவும், பரம்பொரு ளான ஸ்ரீமந் நாராயணனை அடைந்து, மறு படியும் அவன் சங்கல்பத்தால் இந்தச் சக்தி கள் யாவும் தோன்றுகின்றன என்பதைக்குறிக் கும்.

## திருமாலின் இருபத்துநான்கு வடிவங்கள்:

விஷ்ணு தர்மோத்திரத்தில் கூறியுள்ளபடி, சங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் வாசு தேவன் ஆகிய நால்வரையும் திருமாலின்நான்கு தனித்தனிப் பிரிவுகளாகக் கொள்ளலாம். இவைகளை வியூக மூர்த்திகள் என அழைப் பார்கள். இந்த நான்கு மூர்த்திகளையும் நான்கு முகங்கள் எட்டுகைகள் கொண்ட ஒரே மூர்த்தியான அமைப்பில் கருதலாம். இந்த வடிவில் உள்ள கிழக்குப் பக்கமுகம் சிரிப்புடன் கூடிய வாசுதேவனாகும். தெற்கு நோக்கிய சிங்கமுகம் சங்கர்ஷணன். வடக்குமுகமான வராகம் பிரத்யும்நன், பின்பக்கமாய் மேற்கு பார்த்திருக்கும் ருத்திரமுகம் அநிருத்தன் என்ப தாம். இந்த வியூக வடிவத்தில் நான்கு நான்கு பிரிவுகளுடன் மொத்தம் இருபத்துநான்கு அமைப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன. இதன் விபரம் மகாபாரதம் அநுசாசன பர்வத்தில் கூறப்பட்டுள்ளது. பொதுவாகத்திருமாலின் ஆயிர நாமங்களில் 24 நாமங்களின் விளக்கமே மேலே கூறப்பட்டுள்ளது. அந்த 24 நாமங் களின் விளக்கமே மேலே கூறப்பட்ட 24 முகங் களின் அமைப்பாகும். இந்த 24 முகங்களுக்குத் தக்கவாறு ஆயுதங்களும் 24 உண்டு என்கிறது பழைய ஆகமநூல்.

## தசாவதார உருவ அமைப்புகள் :

அவதாரம் என்ற சொல்லிற்குப் பரம் பொருள் மக்களுடன் இணைந்து கலந்திருக்கத் தாழ வந்து அருள் பாலிப்பது எனப்பொருள். அவைகள் பூரணம் ஆவேசம் அமிசம் என்று மூன்றுவகைப்படும். பத்து அவதாரங்களில் இராமரும் கிருஷ்ணனும் பூரண அவதாரங் கள். சில காலத்திற்குச் சில குறித்த செயலைச் செய்யத் திருமால் தனது சக்தியின் ஒரு சிறு பகுதியைத் தான் விரும்பிய வஸ்துவிற் செலுத் தலாம். இதற்கு ஆவேசம் எனப்பெயர். பரசுராம அவதாரமே இதற்குச் சான்று. அமி சாவதாரங்களே ஆழ்வார்கள் போன்று மகான் களின் தோற்றங்களாகும். திருமாலின் அவ தாரங்கள் எண்ணற்றவைகளே யாயினும், பத்து அவதாரங்கள் மிக முக்கியமாகும். இந்த பத்து அவதாரங்களின் அமைப்புகள் பலமுறை யில் இருக்கின்றன. அவைகள் எப்படி என்ப தைச் சிறிது பார்ப்போம்.

மச்சம்-மீன், கூர்மம்-ஆமை. இந்த இரண்டு அவதார உருவங்கள் முழுவதும் மீனாகவோ, ஆமையாகவோ காட்டப்படலாம். அல்லது மேல் பகுதி கிரீடத்துடனும் நான்கு வகைகள் கொண்ட மனிதன் போலவும், கீழ்ப்

பகுதி மீன் ஆமை ஆகியவற்றின் அமைப்பிலோ இருக்கலாம். வராக அவதாரத்தின் அமைப்போ பலவிதம். பன்றித் தலையுடன் நான்கு கைகளுடன், மனித உடலுடன் இருக்கலாம். ஸ்ரீமுஷ்ணத்தில் எம்பெருமான் இந்தமாதிரி தான் சேவை தருவார். திருவிடவெந்தையில் பெருமான் வராகத் திருமுக மண்டலத்துடன், பூமிப்பிராட்டியை இடது பக்கத்தின் தொடையில் அமர்த்திக்கொண்டும், அணைத்துக்கொண்டும் சேவைதருவார். இவருக்குப் பூவராகன் என்ற திருநாமம். வங்காளத்தில் வராகப்பெருமாள் ஒரு பக்கமாகப் பார்த்துக்கொண்டு சங்கம் போன்ற முகத்துடன் முற்கால வடிவங்களில் அமைப்பில் தென்படுகிறாராம். சில சமயம் பரமபதநாதன்போல் அமர்ந்துதேவியை மடியிலோ, அருகிலோ வைத்துக் கொண்டிருப்பது போலும் அமைக்கலாம். இவருக்கு யக்ஞ வராகன் என்று திருநாமமாகும். நரசிங்க அவதாரத்தின் சிறப்பினையும் அமைப்பையும்பற்றி விஷ்ணு தருமோத்திரம் என்னும் நூல் நன்கு உடலுடனும் இரணியனை மடியில்இட்டுக் கிழிப்பது போன்ற தோற்றத்துடன், 4,6,8 கைகள் கொண்ட தோற்றமும் கொண்டதாகும். 12, 16 திருக்கைகள் கொண்ட வடிவங்களும் உள.

யோகநரசிம்மன், கிரிஜா, தாணு (லட்சுமி நரசிம்மன்) போன்றவர்கள் யோகாசனத்தில் இருப்பதாகவும், குகையிலிருந்து வருவது போலவும், தூணில் இருந்து வருவது போலவும், சிங்க முகத்துடன் அமைக்கப்பெற்றிருக்கலாம். கருடன் மேலும் ஆதிசேடன் மேலும் அமர்ந்திருக்கும் நரசிம்ம வடிவங்களும் உண்டாம். வாமன அவதார வடிவம் இரண்டு வகைகளில் இருக்கலாம். குள்ளமானபிரம்மச் சாரி ஒன்று. ஓங்கி உலகளந்த வடிவம் ஒன்று. வைகானச ஆகமப்படி திரிவிக்கிரமன் திருவடிகளில் தூக்கி இருப்பது ஊன்றிய திருவடியான முட்டு வரையிலோ, நாபி வரையிலோ, திருமுடிவரையிலோ இருக்கலாம். 4,8, திருக்கைகள் அமைக்கப்படலாம். பரசுராம அவதாரத்தில் 2,4 கைகள் இருக்கும். கோடரியே இவருடைய ஆயுதம். இராம அவதாரத்தில் வில்லும் அம்பும் ஏந்திய கைகளே அடையாளமாகும். இராமனுடைய வடிவங்களில் நான்கு திருக்கைகளும் உண்டு.

பலராம அவதாரத்தில் இவருடைய முக்கிய ஆயுதம் கலப்பை. உலக்கையும் ஆயுதமாக இருக்கலாம். சிலசமயம் கருடன்மேல் அமர்ந் திருப்பதாகப் பலராம வடிவத்தைக் காட்டுவதுண்டு. நான்கு திருக்கைகள் இவருக்கு அமைக்கப்பட்டால், அப்பொழுது கலப்பை, உலக்கை, சங்கு, சக்கரங்கள் அத்திருக்கைகளில் ஆயுதங்களாகும். தசாவதார வரிசையில் இவர் எழுந்தருளி இருக்கும்பொழுது ஒருகையில் கலப்பையும், மற்றொரு கையில் அபய அல்லது வரத முத்திரையுடன் இருப்பர். இவருக்கு மூத்தபிரான் பலதேவர் பலபத்திரர் சங்கர்ஷணன் என்றெல்லாம் திருநாமங்கள் ஆகும்.

கிருஷ்ணன், பத்து அவதாரங்களில் இவரே மிகவும் புகழ்பெற்றவர். இவரது அருச்சை வடிவங்களின் தோற்றங்கள் எண்ணணற்றவை. கல்கி அவதாரம். இதுவே கடைசி அவதாரம். இந்த அவதாரத் தோற்றத்தைப் பலபடியில் காட்டலாம். முகம் குதிரையின் முகம்போல் அல்லது மனிதனது போல் இருக்க, திருக்கைகள் 2, 4 கொண்டவைகளாக அமைக்கலாம். குதிரைமேல் அமர்ந்து பட்டாக்கத்தியுடன் வருவது போலும் அமைப்பார்கள். ஒரு கையில் கத்தியும், மற்றொரு கையில் குதிரையின் கடிவாளமும் இருக்கும். அல்லது வில்லும் அம்பும் இருக்கும். இவ்வாறு திருமாலின் பிம்பஉருவ அமைப்பில் மேலும் பற்பல அமைப்புகளும் உண்டு.

***

# முருகன் பெருமை

தமிழ்க்கடவுள்; செய்ய தமிழ்வடிவன்; மேலாம்
தமிழ்க்குரவன்; நல்ல தமிழ்ச்சான்றோன்; - தமிழ்ப்புலவன்
செந்தமிழில் வைதாலும் தீங்கொழித்துக் காத்தருள்வோன்;
நந்தம் முருகன்என்றே நாடு. (1)

அருட்குரவன்; யோகி; ஆன்றபெரு வீரன்;
தெருட்பெருகு தேவர்கள் தம்தேவன்; - இருட்டெறூஉம்
செம்மைத் தவநிலையோர் தெய்வம்; கலைஞர்இறை;
மெய்ம்மை முருகன் மிக. (2)

—ந. ரா. முருகவேள்

# திருவாய்மொழி

புலவர் திரு. மதுரகவி இராமானுஜம், பழநி.

தென் பாண்டிநாட்டில், திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரியில் தீதகன்று உலகம் உய்யத் திருவவதாரம் செய்தவர் ஆழ்வார். இறைவனது குணங்களில் ஆழ்ந்திருந்தவர் ஆதலால், ஆழ்வார் எனக் கூறப்பெற்றார்.

சீரும் சிறப்பும் மேன்மையும் பெருமையும் அன்பும் கருதி 'நம்' என்ற அடைமொழி சேர்த்து நம்மாழ்வார் எனப் போற்றப்பெறுகிறார். இவருக்கு மாறன், சடகோபன், வகுளாபரணர், குருகூர்நம்பி என்ற பிறபெயர்களும் உண்டு. இவர் வைணவசமயத்தில் முதலிடம் பெற்று விளங்குகிறார். இவர் வடமொழி வேதங்கள் நான்கையும் தமிழில் இயற்றியவர். ''வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்'' என்பதனால் அறியலாம். அவை திருவிருத்தம் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன. இறைவன் அருளால் இளமைப் பருவத்திலேயே ஞானமும், பக்தியும் நிரம்பப் பெற்றார்.

இவரது சீடர் மதுரகவிகள்; அந்தணர் மரபில் தோன்றியவர். மதுரகவிகள், நம்மாழ்வாரையே தமது ஞானாசிரியராக ஏற்றுக்கொண்டார். நம்மாழ்வார் அருளிய நான்கு பிரபந்தங்களையும் ஏட்டில் எழுதி, நாட்டு மக்களுக்கு நல்கினார்.

(1) திருவாய்மொழி 'உயர்வற உயர்நலம்' எனத் தொடங்கும் முதற் பதிகத்தில் இறைவனது குணங்களைக் கூறிப் பரத்துவ நிர்ணயம் செய்கிறார். (2) 'வீடுமின் முற்றவும்' எனத் தொடங்கும் இரண்டாம் பதிகத்தில், நிலையில்லாத வற்றை விடுத்து, நிலையான பரம்பொருளைப்பற்றி உய்யுங்கள் என்கிறார். 'தனக்கும் தன்தன்மை அறிவறியான்', 'கொள்ளமாளா இன்பவெள்ளம்' 'அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆராவமுதம்' என அவன் பெருமையைக் கூறுகிறார். (3) மூன்றாம் பதிகம் 'பத்துடையடியவர்க்கு எளியவன்' எனத் தொடங்குகிறது.

இரண்டாம் பதிகத்தில் இறைவனைப் பற்றி உய்யுங்கள் என்றார். இஃது இருகை முடவனை, யானையின்மீது ஏறு என்றால் எப்படி ஏறுவான். ''அம்மான் ஆழிப்பிரான், அவன் எவ்விடத்தான், யான் யார்? என்னும்படி, சம்சார சாகரத்தில் கிடந்துழலும் சம்சாரிகளல்லவா? என்ற இடத்து, அவ் யானைதானே அவ்விருகை முடவனும் ஏறும்படிப் படிந்து கொடுக்கும். கொடுத்தால், ஏறத் தடையில்லையே என்கிறார். 'பத்துடையடியவர்க்கு எளியவன்' அரியனாய் இருந்தால் யாரும் அடைந்து உய்ய முடியாதென்று எளியனாயினான். எளியவனென்று சம்சாரிகள் விடுவதற்கும் உமக்கு அடைவதற்கும் பொதுவாக நின்றான்! இவ்வாறு எம்பாரைப் பார்த்து உடையவர் உரைத்தாராம். அடியார்க்கு எளியனாம் தன்மையைச் 'சௌலப்பியம்' என்பர். இக்குணத்தைநினைத்து, ஆழ்வார் ஆறுமாதம் மோகித்துக் கிடந்தாராம்.

(4) நான்காம் பதிகம் ''அஞ்சிறையமட நாராய்!'' எனத் தொடங்குகிறது. தாமான தன்மையிழந்து தலைவி நிலையடைந்து கூறும் பாசுரம். இறைவனை நாயகனாகவும், தன்னை நாயகியாகவும் (பிராட்டியாகவும்) பேசுவதேன் என்ற இடத்து, தாமரை திருவடிகட்குப் போலியாயிருக்க 'வியங்கொள் தடந் தாமரை' எனத் தாமரையாகவே திருவடியைப் பேசுவதுபோல, இங்கும் பிராட்டியாகவே பேசப்படுகிறது. 'இராஜரிஷி பிரம்மரிஷியான பின்பு, அரசத்துவம் தோன்றாது; எதிர்நிலை ஆண்மை நீங்கிப் பெண்மைநிலை அடையும்படி, அவனது புருடோத்தமத்துவம் இருப்பது. இராமன் பேரழகைக்கண்ட மிதிலைநகர மாந்தர் பெண்மையாக இல்லையே என அவாவுற்றனராம். 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்' என்பர் கம்பர்.

அம் முறையில் பெண்மை நிலையையடைந்த நம்மாழ்வார், பெருமாள் ஆகிய நாயகனிடம் நாரையைத் தூது விடுகிறார். தாயினுடைய அவயவங்கள் பல இருந்தாலும், குழந்தை தாய் முலையிலே வாய்வைப்பதுபோல, அழகிய சிறகுகளையும், இளமைப் பருவமும் உடைய நாராய் எனவும், ஏவிக் காரியங்கொள்ளும்படி அடக்க உணர்வுடையதாக இருந்தது. நாணம் முதலான குணங்களையும், பிரிவின் துன்பம் உணரும் தன்மையும் உள்ள பெண் நாரையைப் பார்த்துச் சொல்கின்றார்.

நாயகன் கைவிட்டுப்போன சமயத்தில் பிரிவை அறிவிக்கும்படி வந்து முகங் காட்டின அருள்தான் என்னே! நீ அருள் செய்யத் தகுதியுடையையாக இருக்கின்றாய். வழிபறிப்பார் கையிலே அகப்பட்டு நிற்கத் தாய்முகத்திலே விழித்தாற்போல, நீயும், நின் அஞ்சிறையசேவலுமாக, ஐயோ! ஐயோ! என இரக்கங்கொண்டு அருள் செய்வாய். விரக வேதனைப்

படும் உடலின் நிலையைக் காட்டுகிறாள். நீங்கள் இணைந்திருப்பது எனது பிரிவை நீக்கி, என்னை என் நாயகனோடு சேர்ப்பதற்குக் காரணமாக அமையும் என்கிறாள். உங்களை இரக்கிறேன் என்றெண்ணாமல், உங்கள் பேறாகச் செய்யுங்கள்! கருணை செய்யக் குறைவொன்றுமில்லாதவனாக உள்ளான் அவன். நீங்களும் கருணை செய்யக் குறைவொன்றுமில்லாதவராக இருக்கிறீர்கள் என்கிறாள். எங்களை இவ்வாறு கொண்டாடுவதென்? உன்னைவிட்டுப் பிரிந்து சென்றவன், எங்கள் வார்த்தையைக் கேட்பானோ? என்றபோது, அவன் அருள் செய்ய இடையூற்றை நீக்கிக் கொண்டு வருவதற்கு, நமக்கு வேண்டியவர் அங்கிருக்கிறார். அவர்தான் பெரியதிருவடி (கருடாழ்வார்). அவர் அந்நாயகனைத்தோளின் மீது அமரும்படி செய்யத்தக்கவர். அவரையே கொடியாக உடையவன். வெப்பமுள்ள சிறகின் காற்றுப்பட்ட மாத்திரத்தில் விரோதிகள் எல்லாம் நைந்து போவர்.

பெருமிடுக்கரான பாண்டவர்கள் கண்ணனைத் தூதுவிட்டாற் போலவா? வலியும்தகுதியும் இல்லாத நானோ ஏவமுடியும். பிறர் துன்பங்கண்டு நீக்க அல்லவா? நீங்கள் போகவேண்டுவது. உங்கள் செல்கை சிறப்பிக்கத் தக்கதல்லவா? இங்கிருந்து சென்றவற்றைச் சிறைவைப்பானோ? முகங்காட்டாமல்பராமுகமாக இருப்பானோ? அரச குமாரர்கள் உணவுண்டபின், உரிய வேளையில் வெற்றிலை முதலியன வழங்காதிருப்பின் வருந்துவர். நீங்களும் உரிய வேளையில் தூது சென்றால், அநுமனைவாலி பிரம்மாஸ்திரத்தால் கட்டியது போலவும், சிங்க விளக்கு அமைத்துத் தலையில் எரித்தல் போன்றவுமான இழிசெயல் செய்யான் எம் நாயகன். நீங்கள் அவனுக்குத் தூது போகிறீர்களா? எனக்கன்றோ தூது செல்கின்றீர்கள். கண்டவுடனே மார்பில் அணைத்துக் கொள்வான். நான் அணைய ஆசைப்படும் மார்பல்லவா? அதனை உங்களுக்குப் பரிசாக வழங்குவான்.

இலங்கையில் இருந்த சீதைக்கு, அனுமன் இராமனிடம் இருந்து கணையாழியைக்காட்ட அதனைக் கண்ட மாத்திரத்தில் அவள் மகிழ்ந்தாற்போல, உங்களை மகிழச் செய்வான். ஒரு வேளை பொல்லாததாகக் கிடைக்குமாகில் பிறர் துன்பம் போக்கச் சிறைப்படுதல் கிடைக்கத்தக்க அரியதொன்றன்றோ? இராவணன் தேவமகளிரைச் சிறைவைக்க அவர்களின் விலங்கைத் தன் காலில் கோத்துக்கொண்டு சிறைமீட்டாள் சீதாபிராட்டியன்றோ! உள்ளுறை: பகவானை அடையப்பிராட்டி அருள் வேண்டுவதுபோல, ஆசாரியனை அடையச் சீடன் அருளும் வேண்டத்தக்கது. அஞ்சிறைய மடநாராய்! சிறை-சிறகு. மடம்-கருணை முதலான குணங்கள். நாரை-வெண்மை நிறமுடையது. தூயகுணமுடையவன் ஆசாரியன் என்பது ஆசாரியன் மூலமாக இறைவனை அடைய வேண்டுமென்பது வைணவசமயக் கொள்கை.

அஞ்சிறைய மடநாராய்!
அளியத்தாய், நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய்
ஆ, ஆ என் றெனக்கருளி,
வெஞ்சிறைப் புள்ளுயர்த்தார்க் கென்
விடு தாய்ச் சென்றக்கால்
வன்சிறையில் அவன் வைக்கில்
வைப்புண்டால் என்செய்புமோ!

**

## பாரதியாரும், இந்துமதமும்

மண்ணுலகின் மீதினிலே எக்காலும்
அமரரைப்போல் மடிவில் லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலாம், அதற்குரிய
உபாயமிங்கு செப்பக் கேளீர்!
நண்ணியெலாப் பொருளினிலும் உட்பொருளாய்ச்
செய்கையெலாம் நடத்தும் வீறாய்த்
திண்ணியநல் லறிவொளியாய்த் திகழும்ஒரு
பரம்பொருளை அகத்தில் சேர்த்து (1)

செய்கையெலாம் அதன்செய்கை, நினைவெல்லாம்
அதன்நினைவு, தெய்வ மேநாம்
உய்கையுற நாமாகி நமக்குள்ளே
யொளிர்வதென உறுதி கொண்டு,
பொய்கயமை சினம்சோம்பர் கவலைமயல்
வீண்விருப்பம் புழுக்கம் அச்சம்,
ஐயமெனும் பேயயெலாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி (2)

எப்போதும் ஆனந்தச் சுடர்நிலையில்
வாழ்ந்துயிர்கட் கினிது செய்வோர்,
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை
பெற்றிடுவார்; சதுர்வே தங்கள்
மெய்ப்பான சாத்திரங்கள் எனுமிவற்றால்
இவ்வுண்மை விளங்கக் கூறும்
துப்பான மதத்தினையே இந்துமதம்
எனப்புவியோர் சொல்லி வாரே (3)

—பாரதியார்

# துன்பம் துடைக்கும் வழி

'அருள்மொழியரசு'

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

உலகிலே பிறந்த உயிர்கள் அனைத்தும் பலப்பல எண்ணங்களுடன் வாழ்கின்றன. ஒரு தந்தைக்கு ஒரு தாய்வயிற்றில் இரு மக்கள் பிறந்தன. ஒன்று தாய் தந்தையருக்கு அடங்குகின்றது; ஒன்று அடக்குகின்றது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் குணம் வேறு. நடை வேறு, திறம்வேறு. இவ்வாறு எல்லாவற்றிலுமே மாறுபாடுகளுடன் இருக்கின்றார்கள்.

தாய் கேகசி; தந்தை விச்சிரவசு. இவர்கட்குப் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை என்பவர்கள். இந்நால்வரும் வெவ்வேறு இயல்புகளை உடையவர்கள். இராவணன் மூர்க்கன்; கும்பகர்ணன் நல்லவன். ஆனால் முரடன்; விபீஷணர் பரம சாது. விபீஷணர் என்ற பேர் சிவபெருமானுடைய ஆயிரம் நாமங்களில் ஒன்று. ''பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை' என்கின்றார் அப்பர் பெருமான். விபீஷணன் பயம் இல்லாதவன். எல்லோருக்கும் மரண பயம் உண்டு. சிவபெருமான் காலனை யுதைத்த காலகாலன். அவர் ஒருவர் தான் பயம் இல்லாதவர். சிவ சகஸ்ரநாமங்கள் மகாபாரதத்தில் அநுசாசன பர்வதத்திலே உமபந்யு முனிவர் கண்ணபிரானுக்கு உபதேசித்தார் என வருகின்றது.

அடுத்து சூர்ப்பணகை, சூர்ப்பம்-முறம். முறம்போன்ற நகங்களையுடையவள். இவள் கணவனைத் தொட்டால் எத்துணை இங்கிதமாக இருக்கும்? கணவனைத் தொட்டால் அவன் உடம்பில் உதிரம் ஒழுகும். இன்னும் ஒருமுறை மனைவி தன்னைத் தொடுவாளா என்று அவன் எதிர்பார்ப்பானா? எப்போது தொட்டு விடுவாளோ? என்று நடுங்கிக் கொண்டேயிருப்பான். சூர்ப்பணகையின் கணவன் வித்யுத் ஜிஹ்வா. வித்தையை நாவினால் யுத்தம் செய்து வென்றவன்.

சூர்ப்பநகை மிகவும் பொல்லாதவள். ஒரு வயிற்றில் பிறந்தவர்கள் இவ்வாறு குணங்களால் வேறுபடுகின்றார்கள். புகழ் பெற்ற இதிகாசத்தில் வரும் பாத்திரங்கள் இவர்கள். எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்களைப் பற்றிக் கூறினால் உங்களுக்கு நன்கு புரியும் என்று இதனைக் கூறினேன். ஆதலால், ஒருவர் குணம் போல், ஒருவர் குணம் அமையாது. ஆன்மாக்கள் வெவ்வேறு இயல்புகளுடன் இருக்கின்றன. ஆனால், இப்போது நான் சொல்லப் போகும் ஒன்றில் மட்டும் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. ''துன்பம் இன்றி இன்பத்துடன் வாழ வேண்டும்'' என்றுதான் கருத்து வேற்றுமையின்றி எல்லோரும் எண்ணுகின்றார்கள்.

ஆணோ, பெண்ணோ, முதியவரோ இளைஞரோ, முந்தியிருந்தவரோ, இப்போது இருக்கின்றவரோ, இனி இருக்கப் போகின்றவரோ எல்லோரும் துன்பமின்றி இன்பத்துடன் வாழ வேண்டும் என்றுதான் எண்ணுகின்றார்கள். ஆனால் யாராவது துன்பமின்றி இன்பத்துடன் வாழ்கின்றார்களா? இல்லை, நமக்கு வரும் துன்பங்கள் ஒன்றா? இரண்டா? பலப்பல.

> ''பவ துன்ப முழன்று கலங்கிய
> சிறியன் புலையன் கொலையன் புரி
> பலமின்று கழிந்திட வந்தருள் புரியாயே''

என்கின்றார் அருணகிரிநாதர். எள்வேண்டும் என்று கொள் விதைப்பது போலும், திருச்சி ரயில்வே நிலையத்தில் மதுரைக்கு டிக்கட்டு எடுத்து விழுப்புரம் போகும் ரயிலில் ஏறுவது போலும், இன்பம் வேண்டும் என்று எண்ணுகின்ற நாம், துன்பவிதை தூவுகின்றோம். துன்ப விதை தூவினால் இன்பம் எப்படி விளையும்.

ஒரு தாய்க்கு நான்கு புதல்வர்கள். ஆரோக்கியமான மூத்த புதல்வனுக்கு 3 இட்டிலி, 2 தோசை, ஒரு மலைப்பழம், ஒரு குவளை நிரம்பப் பால் தந்தாள். இரண்டாவது மகனுக்கு அரை உப்புப் போட்ட பார்லி கஞ்சி தந்தாள். அவனுக்கு ரத்த சீதபேதி. மூன்றாவது மகனுக்குப் புனல்பாகக் கஞ்சி தந்தாள். அவனுக்கு மாந்தம். நான்காவது கடைக்குட்டி மகனுக்கு ஒன்றுமே தரவில்லை; சட்டினிகூட இல்லை, பட்டினி. அவன் தாய்மீது சினந்து 'அம்மா ஒழிக!' என்றான். கருணை வடிவான தாய், அவனுக்கு ஏன் உணவு தரவில்லை? அவனுக்கு வயிற்றில் சிக்கல்! நேர்வாளமும் விளக்கெண்ணெயும் தந்துள்ளது. 4, 5 முறை பேதியான பிறகுதான் ரசமும்சோறும் தரவேண்டும்.

பாரபட்சமில்லாத அன்னை மக்களின் உடல் நிலைக்கு ஏற்ப உணவு தருகின்றாள். தாயின் கருணைமீது குறை கூறலாமா ?

பள்ளியில் முதல்வர், மாணாக்கர்கள் எல்லோருக்கும் பாரபட்சமின்றி ஒரே மாதிரியாகவா மதிப்பெண் தருகின்றார்? அந்தந்த மாணவன் எழுதிய எழுத்துக்கு ஏற்ப மதிப்பெண் தருகின்றார். அதுதானே முறை. 'திருச்சிக்கு அருகிலே ஓடுகின்ற நதியின் பெயர் யாது?' என்று கேள்வித்தாளில் இருந்தது. அதற்கு ஒரு மாணவன் ''திருச்சிக்கு அருகில் ஓடுகின்ற நதி கூவம்'' என்று எழுதினான். அவனுக்கு என்ன தருவார் ? பூஜ்யம்தானே தருவார்.

இதுபோல் ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பச் சுக துக்கங்களை இறைவன் தருகின்றான். ஆதலால் துன்பத்தைநுகர்கின்றவர்கள்இறைவனை நோகலாமா? இறைவன் நடுநிலை வழுவாதவன். நாம் நுகர்கின்ற இன்ப துன்பத்திற்கு இறைவன் காரணம் அல்லன். நாம் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். இந்தக் கருத்தைப் பிரமதேவர், மற்றைத் தேவர்கட்கு அறிவிக்கின்றார்.

''இவறலும் இகலும் இன்றி
யார்க்குமோர் பெற்றித் தாகி
அவரவர் வினைகள் நாடி
அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம் ;
சிறந்தநோன் பியற்றி டாதே
தவறுசெய் தனம்என் றெம்மை
நோவதே தக்க தென்றார்''

—கந்தபுராணம்

ஆதலால் நாம் அனுபவிக்கின்ற துன்பங்களுக்குக் காரணம் இறைவன் அல்லன். நாம் முன்செய்த தீவினையே காரணமாகும் ; நாம் முற்பிறப்பில் செய்த பாவங்களின்பயனை இப்போது நுகர்கின்றோம் என்று கருதிச் சமாதானமாக வினைப்பயனை அனுபவிக்க வேண்டும்.

''உற்றநோய் நோன்றல்;
உயிர்க் குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

என்கின்றார் திருவள்ளுவர். நோய்-துன்பம் ; நோற்றல்-தாங்கிக் கொள்ளுதல். துன்பத்தைக் கண்டு துடிக்காமலும் துள்ளாமலும் அமைதியாக அனுபவிக்க வேண்டும்.

ஒருவர் நமக்குத் துன்பஞ் செய்வாராயின் அவர்கள் மீது சீற்றம் அடைதல் கூடாது. அவர்களை வெறுக்கவும் கூடாது. நான் செய்த வினை ''ஆத்யான்மிகம்'' என்ற நியதியின்படி இவர்கள் மூலம் துன்பம் வருகின்றது என எண்ணி மனம் சாந்தியடையவேண்டும்.

இதற்கு ஒரு உதாரணம் உரைக்கின்றேன். சீதாதேவியை அசோகவனத்தில் கொடிய அரக்கியர்கள் அல்லும் பகலும் அல்லல் படுத்தினார்கள். இராவணனை இராவணஞ் செய்து இராமர் வெற்றி மாலை சூடினார். அநுமார், சீதையிடம் வந்து வணங்கி, 'அம்மா! இராமஜெயம்! இராவணன் மாண்டு விட்டான்' என்று இயம்பினான். சீதாபிராட்டியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. 'மகனே! ஆஞ்சநேயா! உனக்கு முன்னே சிரஞ்சீவியாக இருக்க வரம் உதவினேன். இப்போது என்ன வரம் வேணுமோ கேள்'' என்றாள். அநுமர், 'தாயே! நான் மூவாசையும் இல்லாதவன். எனக்கென்று ஒன்றுந் தேவையில்லை. இந்தப் பத்து மாதங்களாகத் தேவரீரை வாட்டி வதைத்த இந்தக் கொடிய அரக்கியரைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். ஆதலால் இவர்களை எரியிட்டு எரிக்கும் வரத்தை வழங்குமாறு வேண்டுகின்றேன்' என்று வரம் கேட்டார். மற்றவர்களாயின் 'நல்லது' மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்து' என்று கூறியிருப்பார்கள். பரம ஞானியாகிய ஜனகர் பெற்ற அந்தச் சீதாதேவி அப்போது என்னகூறினாள்.

''அப்பா! அநுமானே! இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தவில்லை. நான் துன்பத்தைத் துய்ப்பதற்குக் காரணம் இவர்கள் அல்லர். என் வினைதான் காரணம். தவநெறியில் நின்ற என் கணவனாரை மான் பிடித்துக்கொடுங்கள் என்று மான்பின் அனுப்பினேன்: அது பிழையல்லவா? என் அருகில் காவலாக இருந்த இலக்குவனை நிந்தனை செய்து போகச் செய்தேன். என் அருகில் இலக்குவன் இருந்திருந்தால், ஈராயிரம் இராவணர்கள் ஒருங்கே வந்தாலும் என்னைக் கவர முடியுமா? முடியாது. உணவும் உறக்கமும் துறந்து, சுகத்தை மறந்து என்னைக் காத்து நின்ற பரம பக்தனாகிய இலக்குவனை நான் கொடுஞ் சொற்களால் மனத்தைநோகவைத்து அனுப்பினேன். அந்த வினைப்பயனால் இந்த இடர் வந்தது.

செய்வான், செய்வினை, வினைப்பயன், சேர்ப்பான் என்ற இந்த நான்குதன்மைகளை உணர்வதுவே உத்தம ஞானம். இராவணனுடைய ஏவலர்களாகிய இந்த அரக்கியர் தங்கள் எஜமான் இட்ட கட்டளைப்படி என்னை இடர்ப்படுத்தினார்கள். ஆதலால் இவர்களை நோவலாமா? என்னுடைய இல்லத்தில்இருந்த என்னுடைய உடையை உடுத்தி, என்னுடைய உணவை உண்ட கூனி எனக்குப் பெருந்துயர் விளைவைத் தந்தாள். அதனையே நான் பொறுத்து வந்தேன். அக்கூனியைவிட இவர்கள் கொடியவர்களா? இல்லை. ஆகவே நடந்ததை இனி சிந்திக்கக் கூடாது' என்று அன்பும் அருளும் ஒழுக அறவுரை பகர்ந்தாள்.

''யானிழைத்த வினையினால் இவ்விடர்
தானடுத்தது தாயினும் அன்பினோய்
கூனியில் கொடியா ரலரே யிவர்
போனகாரியம் எண்ணலை புந்தியோய்''

—கம்பராமாயணம்

ஆதலால் துன்பத்தை நுகர்கின்றவர்கள், கடவுளையோ மற்றவர்களையோ நோகக் கூடாது; நம் வினையைத்தான் நோவவேண்டும். நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால் மற்றவர்க்கு மனவாக்குக் காயங்களால் துன்பம் செய்யக் கூடாது; நன்மையே செய்ய வேண்டும். இதுதான் பண்பாடு. துன்பம் வினையினால் விளைகின்றது; விதையில்லையேல் செடி கொடிகள் இல்லை; வேரின்றி மரம் இல்லை; பால் இல்லையேல் நெய்யில்லை. இதுபோல் வினையில்லையேல் துன்பம் இல்லை. துன்பங்கட்குக் காரணங்கள் வினைகள்தாம் என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும்.

வினை மூன்று வகைப்படும். ஒன்று செய்வினை. இது ஆகாமியம் எனப் பெயர்பெறும்; மற்றொன்று நுகர்வினை. இது பிராரப்தம் எனப் பெயர்பெறும்; மூன்றாவது தொல்வினை. இது சஞ்சிதம் எனப் பெயர்பெறும்; பாவம் செய்யக் கூடாது; புண்ணியம் நிஷ்காம்யமாகச் செய்தல் வேண்டும். இதனால் செய்வினை மேலைக்கு வித்தாக வாராது. நுகர்வினை இந்த உடம்பு நுகர முடிந்து விடும். தொல்வினை ஞானத் தீயால் எரிந்து விடும். அன்றியும் நம்மை அகாரணமாக நிந்திக்கின்றவர்கள் பங்கிட்டுக் கொள்ளுகின்றார்கள். இந்த வகையில் ஆகாமியம் பிராரப்தம் சஞ்சிதம் என்ற வினைகளும் தொலையும். இதனால் பிறப்பு முடியும், துன்பம் தொடராது.

நாம் இறவாமல் இருக்க வேண்டும் என்றால், அதற்கு ஒரு வழியுண்டு. அது யாது? இறவாமல் இருக்க வேண்டும் என்றால் பிறவாமல் இருக்க வேண்டும். நாம் எங்குச் சென்றாலும் நம் நிழல் நம்மைத் தொடர்ந்து வருகின்றது. நம் நிழலை நிறுத்த ஒரு வழியுண்டு. அது என்ன வழி? நாம் இன்னொரு நிழலுக்குச் செல்ல வேண்டும். நிழலுக்குச் சென்றால் நம் நிழல் நின்றுவிடும். இதுபோல் வினையில்லையானால் துன்பமேயில்லா தொழியும்.

''அல்லல் என்செயும்? அருவினை என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான்
என்செயும்?
தில்லைமா நகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லையில்லா தோர் அடிமைபூண் டேனுக்கே!'

''நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திருவேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே'
—அப்பர்.

இந்தத் தெய்வத் திருமறைஅமுதவாக்குகளை ஓர்க; உணர்க; உய்க. ஆதலால், அன்பர்கள் துன்பந்தொலைத்து, இன்பம் ஓங்கவேண்டும் என்று கருதுவீர்களானால், வினைபுரியாது, தினையளவேனும் இறைவனை மறவாது, அன்புநெறி நின்று, அருள்மயமாகிச் சிவசிந்தையுடன் இருங்கள்; அவநெறி அகன்று சிவநெறியில் செல்லுங்கள்.

---

## வள்ளியம்மை திருமணத் தத்துவ நுட்பம்

(வெண்பா)

ஐம்புல வேடரிடை ஆழ்ந்துழலும் ஆருயிரை
எம்பெருமான் ஆட்கொண் டினிதருளும் - செம்பொருளே
வள்ளித் திருமணமாம் மாண்பார் வரலாறுஎன்று
உள்ளியுணர்ந் துய்க! உவந்து (1)

களவுநெறி கற்புநெறி என்றிரண்டு காதல்
உளநெறியும் மக்கட் குணர்த்த - வளம்அமையும்
வள்ளிதெய்வ யானை மணம்புணர்ந்தான்! இச்சைதொழில்
கொள்சத்தி என்றும்அவர்க் கூறு (2)

அடியார்க் கெளியனாம் தன்மை அதனைப்
படியார்க் குணர்த்தும் படிக்கே - கொடியார்க்கும்
மெல்லிடைநல் வள்ளியின்பால் மிக்க விநோதம்எலாம்
பல்வகையிற் செய்தான் பரன்! (3)

—ந. ரா. முருகவேள்

# கோயில், சமுதாய நிலைக்களன்

பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம், M.A., M.Litt.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது தமிழர்தம் வாழ்க்கைநெறி. எந்த ஊரிலும் கோயில் இருக்கும்; அதைச் சுற்றிக் குடிமக்கள் இல்லங்கள் - தோப்பு-தோட்டம் முதலியன சிறக்கும். ஒவ்வொரு ஊரிலும் கோயில் சமூகக் கூடமாக-மக்கள் நல்வாழ்வினை விளக்கும் நிலைக்களனாக-அமைந்துள்ளமையினை தமிழ் நாடெங்கும் காணலாம். எந்நாட்டவரும் வியக்கும் வண்ணம் விண்ணளாவிய கோபுரங்களுடன் ஊர் நடுவே உயர்ந்த நிலையில் காட்சிதரும் கோயில், வெறும் வழிபாட்டிடமாக மட்டுமின்றி, மக்கள் வாழ்வின் நிலைக்களனாவே உள்ள தன்மையினை உலகோர் அறிந்துபோற்றுகின்றனர்.

தமிழ் நாட்டில் உள்ளமை போன்று வேறு எந்த நாட்டிலும் இத்தனைக் கோயில்கள்-பெருங் கோயில்கள் கிடையா. இதன் அடிப்படை தமிழர்தம் வாழ்வேயாகும். பிணைந்த சமுதாய வாழ்வு தரணியின் வாழ்வெனக்கண்ட தமிழன், அந்த இணைப்பினுக்குக் கோயிலைக் கண்டான். கோயிலில் எந்த வேறுபாடும் தலைகாட்டலாகாது. சாதியில் உண்டான சில வேறுபாடுகள் இடைக்காலத்தில் புகுந்து இன்னும் வாழ்கின்றன என்றாலும் அவை பண்டைத் தமிழகத்தில் இல்லை என்று வரலாறு காட்டுகிறது. சம்பந்தர் எந்த வகையிலே இறைவனை வழிபட்டாரோ அதே வகையிலேதான் நாவுக்கரசரும் வழிபட்டார். 'சலம்பூவொடு தூபமறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்று தானே இறைவனை நீராட்டி மலரிட்டுத் தூபமிட்டுத் தூய தமிழில் பாடி அப்பர் வழிபட்டார். எனவே எந்த வேறுபாட்டினையும் நீக்கி, மக்களை இணைந்து வாழவைக்கும் நிலைக்களனாக அமைந்தவை தமிழகத் திருக்கோயில்களாகும்.

தமிழகத் திருக்கோயில்கள் தமிழர்தம் கலைகளைக் காட்டிக்காக்கும் பெட்டகங்களாகும். 'குலவு சித்திரம் கோபுரம் கோயில் ஈதனத்தின் எழிலிடையுற்றாள்' என்று பாரதி பாடினான் என்றால் அது மிகப்பொருத்தமான ஒன்றாகும். திருக்கோயில்களின் பெருங்கோபுரங்களின் பெருங்கோபுரங்களிலும் சுற்றுச்சுவர்களிலும் பிற இடங்களிலும் எத்தனை எத்தனை வகையான சித்திரங்கள் - வண்ணக் கோலங்கள் - வகை பெறு விளக்கங்கள் அமைந்துள்ளன. ஆயிரம் ஆண்டுகளாயினும் அழியாத அக்கலைப் பெட்டகங்கள் தாம், தமிழர் தம் உயிர் நாடியாய் இன்றும் வாழ்கின்றன.

கோயில்களில் பலவகையான மண்டபங்கள் உள்ளன அறிவோம். ஒருகால் மண்டபம் தொடங்கி ஆயிரங்கால் மண்டபம் வரை கோயில்களில் இடம் பெற்றுள்ளன. மேலும் நான்கு பக்கங்களிலுமுள்ள சுற்றுப் பிராகாரங்கள் அமைப்பும் பிறவும் எண்ணத்தக்கன. அங்கெல்லாம் கல்வியும் கலையும் களி நடம் புரிந்தன. இன்று அவை காணமுடியவில்லை என்றாலும், அவை அன்று கலை வளர்த்த பெருமையினை வரலாறு காட்டுகின்றது. தமிழ், வடமொழிக் கல்லூரிகள் பல இப்பெருமண்டபங்களில் நடைபெற்றன. நாட்டியக் கலை நடக்கும் அரங்கங்களாக அவை பயன்பட்டன. அங்குள்ள சுவர்களெல்லாம் சித்திர சாலைகளாக அமைந்தன. சில கோயில்களின் வெளிப் பிரகார மண்டபங்கள் மருந்தகங்களாகவும் பயன்பட்டன என அறிகிறோம். இன்று அவற்றையெல்லாம் அவ்விடங்களில் அமைத்துச்செயல்படுத்தாது, எருக்கும் முள்ளும் வளரவிட்டு, அவையெல்லாம் வீணாகக் கட்டப்பெற்றவை என்று வீண்வாதமும் பேசுகிறோம்.

கிராமங்களில் இன்னும் கோயில்கள் சமுதாயத்துக்கு முக்கிய இடமாக அமைந்துள்ளமை அறிவோம். சில கிராமங்களில் ஊரில் உள்ள கிணற்று நீரெல்லாம் உப்பாயிருக்க, கோயில் கிணற்று நீர்மட்டும் உண்ணத்தக்கதாக இருக்கும். அவ்வூர் மக்கள் அனைவரும் அந்தக் கிணற்று நீரையே கொண்டு சென்று தாம் வாழ்வை நடத்துகின்றனர். நாகரிகம் வளர்ந்ததாகக் கூறிக்கொள்ளும் சென்னையைச் சேர்ந்த 'திருவலிதாயம்' எனும் பாடல்பெற்ற 'பாடி'யில் இன்று நாள்தோறும் கோயில் கிணற்றிலிருந்து, சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் - மகளிர்-நீர் எடுத்துச் செல்லுவதைக் காணலாம். இவ்வாறே எத்தனையோ கிராமங்கள் இன்றும் உள்ளன.

கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் வந்து தங்கும் வெளியூர் மக்களுக்குத் தங்கும் இடமாகவும் திருக்கோயில்கள் அமைகின்றன. 'லாட்ஜ்'உம் விடுதியும்' மிக்குள்ள இந்நாளில் கோயிலின் அருமை தெரியாதிருக்கலாம். பல கோயில்களும் இன்று 'விடுதி'கள் கட்டத் தொடங்கிவிட்டன. ஆனால் கோயில்அமைப்பே மக்கள் தங்கிச் செல்வதற்கென அமைந்ததெனக் கொள்ளவேண்டும். அத்துடன் திருக்கோயில்களில் அறுகால பூசையில் இறைவனுக்குப் படைக்கும் 'நைவேத்தியம்' அத்தயை வெளியூர் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பயன்பட்டன. 'தேசாந்திரம்' எந்த ஒரு படித்தரமே தனியாக இருந்து, 'தேசாந்திரியாக' யாத்திரை வருபவர்களுக்குக் கொடுக்க ஒதுக்கியிருந்த நிலையினைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். அந்த உணவும் தூயதாம் மிளகுகலந்து உடலுக்கு நலம் தருவதாய் அமைந்ததாகும். இவ்வாறு ஊரில் வாழ்வோருக்கு மட்டுமின்றி வருவோருக்கும் தங்குவோருக்கும் கூட, இருக்க இடமும் உண்ண உணவும் தந்து போற்றிய சமுதாயக் கூடங்கள் திருக்கோயில்களேயாகும்.

திருக்கோயில்கள் பெரும்பாலான ஊர்களில் உயர்ந்த இடத்திலே அமைக்கப்பெறும். வெள்ளம் முதலியன பெருகிய காலத்தில் மக்களுக்குப் பாதுகாப்பான இடமாகத் திருக்கோயில் மேடுகளே அமைந்துள்ளன. மேலும் கோயில் மேல் தளத்திலும் அத்தகைய வெள்ளம் முதலிய பெருகிய காலத்தில் மக்கள் தங்கிக் தங்களைக்|காப்பாற்றிக்கொண்டார்கள் என்பதைத் திருவரங்கம் முதலிய இடங்களில் அண்மையிலும் கண்டோம்.

திருக்கோயில் கோபுரங்களின் உச்சியே ஊர்தோறும் உயர்ந்த இடமாகும். (கிராமங்களில் இன்னும் கோயில் மதிலுக்கு உயரமாக-மேலாகத் தங்கள் மாளிகைகளை அமைக்கக் கூடாது என்று நம்புகிறவர்கள் உண்டு). அதற்குக் காரணம் உண்டு. அந்த உயர்ந்த கோபுரங்களின் உச்சியில் செப்புக்கலசம் அமைப்பர். அவை செப்பாலேதான் அமைய வேண்டும். என்பது நியதி. (பொன்மெருகிடுவது பின்னால் உண்டானது). அவையே இடி தாங்கிகளாகப் பயன்படுத்தப்பெற்றன. மிக உயர்ந்த நிலையில் உள்ள கோபுரக் கலசங்கள் இடிதாங்கி ஊருக்கு இடியால் ஆபத்து நேராமல் காப்பாற்றப்பயன்பட்டன. இவ்வாறு திருக்கோயில்கள் ஊர்தொறும் அமைந்தது ஊருக்கு வரும் அல்லல்களை அகற்றிச் சமூகத்தைவாழ வைத்தன என்பதை உணர்தல் வேண்டும்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் எண்ணற்ற பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது. ஒவ்வொரு கோயிலிலும் உள்ள நிரந்தரப் பணியாளர் பலர். விழாக் காலங்களில் தேவையான பணியாளர் பலர். பெருவிழாப் பந்தல் அமைப்பு, தோரண வாயில் அமைப்பு, சாலைச் செப்பனிடல் போன்றவற்றிற்கும் வாகனங்கள் செப்பனிடல் அவை உலாப்பெறச் செய்தல் முதலியவற்றிற்கும் அவற்றோடு தொடர்புடை பல்வேறு தொழில்களுக்கும் ஆயிரக் கணக்கான மக்கள் ஈர்க்கப் பெறுவதை இன்றும் காணலாம். மயிலைக் கபாலி விழாவில் எத்தனை எத்தனை வியாபாரிகள், தொழிலாளர் வாழ்வு அமைத்துக் கொள்ளுகிறார்கள். திருக்கோயில்களைச் செம்மையாக்கி, நன்கு ஓம்பி, நாட்டுக்கு ஏற்ற வகையில் அவற்றை இயக்கினால் நாட்டில் வேலை இல்லாத்தன்மை பாதிக்கு மேல் குறையும் என்பது உறுதி.

திருக்கோயில் வரலாற்றுப் பெட்டகங்களாகவும் அமைகின்றன. கோயில்களின் சுற்றுச் சுவர்களிலும் பிறவிடங்களிலும் அமைந்த கல்வெட்டுகள் முற்றும் இன்னும் படி எடுக்கப்பெறவில்லை. எடுத்தவை பல; எடுக்க வேண்டியவை மிகப்பல. அவை அனைத்தும் இடைக்காலத்தில் தமிழ்ச் சமுதாயம் வாழ்ந்த வாழ்வை அப்படியே படம் பிடித்துக்காட்டுகின்றன அல்லவோ! கோயிலைச் செப்பனிடுவோர் அவற்றைப் போக்காது கட்டிக்காத்து ஓம்புதல் வேண்டும். அக்கல்வெட்டுக்களில் வழங்கப்பெற்ற பல தமிழ்ச் சொற்கள் மரபு கெட்டு மறக்கப் பெறுகின்றன. அவற்றை வழக்கில் கொண்டு வருவதன் மூலம் திருக்கோயில் தமிழ்ச் சமுதாய நிலைக்களனாக நின்ற முறையை நன்கு காட்ட இயலும்.

தமிழ்நாட்டுக் கோயில்களைக் காண்பார் தம்மை மறந்து நிற்கின்றனர். விஞ்ஞானம் மிஞ்சிச் செயலாற்றும் இன்றைய பெரும்பெரும் பொறியாளர்கள்கூட, தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தையும் பிறவற்றையும் கண்டு வியந்து, அவற்றை அமைத்த முறையினை எண்ணி எண்ணி வியக்கின்றனர். அந்தக் காலத்தில் - விஞ்ஞான வளர்ச்சியைப் பெற்ற பல கருவிகள் இல்லாத அந்த காலத்தில் - அமைத்த இப்பெருங்கோயில்கள் தமிழரின் அறிவின் நுட்பத்தினையும் செயல்திறனையும் பிற மதிக்கத்தக்க உயர்நிலைகளையும் உலகுக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கின்றன வன்றோ!



# நம்மாழ்வாரும், மணவாள மாமுனிகளும்

திருமலைநல்லான் இராமகிருஷ்ணய்யங்கார்

## தந்தையும் ஆசாரியனும:

உடலுக்குப் பிறப்பை அளிப்பவன் தந்தை. உயிருக்கு அறிவுப் பிறப்பை அளிப்பவன் ஆசாரியன். முதலில் சொன்னது அழிவுறும் பிறப்பு. பின்னர்ச் சொன்னது அழிவுறாதது. அத்தகைய சிறந்த பிறப்பைத் தருமவனான ஆசாரியன் தந்தையினும் சீரியனாவான். தந்தை உடலுக்கான பொருளை மகனுக்குச் சேமித்தளிப்பது போல, ஆசாரியன் உயிருக்கான நற்பொருள் களைச் சேமித்தளிக்கின்றான். அந்திம சமயத்தில் மைந்தருக்குத் தனது அருமந்த பொருளை ஒப்படையாது தந்தையினால்இருக்க முடியுமா ? ஆசாரியனும் தனது அரும்பெரும் பொருளை அந்திம சமயத்தில் அந்தரங்கச் சீடருக்கு ஒப்படைத்தே செல்கின்றனர். 'தகுந்த சீடனிடம் ஆத்மவித்தையை ஒப் படைத்து உடலைவிடல் வேண்டும்' என்கிறான் எம்பெருமானும். 'பீஷ்மன் என்னும் சூரியன் அஸ்தமித்துவிட்டால் அறிவென்னும் வெளிச்சம் அற்பமாகிவிடும்' என்று, பீஷ்மனிடம் விரைவில் உபதேசத்தைப் பெறும்படிகண்ணன் தர்மபுத்திரனைத் தூண்டியதும் இங்கு அறியத் தக்கது.

## ஆசாரியன் அளித்த நற்பொருள்:

வைணவ மரபில் முதல் ஆசாரியர் நம் மாழ்வார். இறுதி ஆசாரியர் மணவாள மாமுனிகள். அவ்விருவருமே நமக்கு நற் பொருளை அந்திம காலத்தில் கொடுத்து உய் யும் வழிகாட்டியுள்ளனர். நன்றி மறவாது அவர்களைப் போற்றுவது நமது கடமை. நம் மாழ்வார் 'நாள்களும் நணியவான்' என்று இறுதி வேளை நெருங்கியதும்'அடிமைசெய்ய, வினைகள் தாமே மாய்ந்தறும்' என்பதாக உப தேசித்தருள்கிறார். மணவாளமாமுனிகள் இறுதிவேளை அணுகியவாறே ஆசார்ய இரு தய வியாக்கியாநம் என்னும் அரும்பெரும் பொருளை நமக்குத் திரட்டிக் கொடுத்திருக் கிறார். முதுமைப் பருவத்தில் திருமேனி வலு விழந்து திருவணையில் சாய்ந்தருளின நிலை யில், திருக்கழுத்து நோவத் திருவெழுத்துச் சாத்தியருளும்படியைக் கண்டு கந்தாடை யண்ணன் 'தேவரீர் ஏதுக்காக இப்படி பிர யாசைப் படுகின்றீர்' என்று கேட்க, மணவாள மாமுனிகள் 'உம்முடைய புத்திர பௌத்தி ராதிகளுக்காக' என்று அருளிச் செய்தாராம். ஆசார்ய இருதய வியாக்கியாநம் அவ்வளவு அரும்பாடுபட்டு முதுமைப் பருவத்திலே மண வாளமாமுனிகள் நமக்கு அள்ளிக்கொடுத்த அரும்பொருள்! அஃது இன்றேல் ஆசார்யர் (நம்மாழ்வா)ருடைய திருவுள்ளத்தை நாம் அறிவது எங்ஙனம்?

நம்மாழ்வார் மணவாளமாமுனிகள் இரு வரும் நமக்கு வழங்கி இருந்தாலும், முன்னவர் கொடுத்த பொருளை முடிப்பவிழ்த்து நமக்கு அனுபவிக்க முடியவில்லை. பின்னவர் தந்த தோ எளிதில் தானும் அனுபவிக்கத்தக்கதாய், முன்னவர் கொடுத்ததை முடிப்பவிழ்த்து அனு பவிப்பிக்கவும் வல்லதாய் அமைந்துள்ளது. இத னால் நமது நன்றிக்கு நம்மாழ்வாரிலும் மண வாளமாமுனிகளே மிகவும் உரியவராதலை அறியலாம்.

## ஆசாரியத்வ பூர்த்தி:

வைணவ மரபில் நம்மாழ்வாருக்கும், எம் பெருமானாருக்கும், மணவாள மாமுனிகளுக் குமே, ஆசார்யத்வ பூர்த்தி உண்டு. மணவாள மாமுனிகள் எம்பெருமானாரில் வேறுபடாதவ ராதலானும், எம்பெருமானார் நம்மாழ்வாரு டைய திருவடியிலடங்கி நிற்பவராதலானும், நம் வழிபாட்டிற்கு மிகவும் உரிய நம்மாழ்வார் திருவடி நிலையான இராமாநுஜரே குரு, மற்றவரல்லர் என்பதும் பொருந்தும்.

சரணாகதி மந்திரத்தைத் திருவாய்மொழி யால் விவரணம் செய்து, 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்று, தானும் சரணாகதிபண்ணி மற்றவர்களையும் சரணாகதி செய்யும்படிஉப தேசித்தலின், மந்திரத்திற்கு வியாக்கியாநம் இயற்றல், ஒழுக்கத்தில்நிலைநிற்றல் அதனின் நிலைநிறுத்தல், இம்மூன்றும் அமைந்து ஆசார் யராய் விளங்குகிறார் நம்மாழ்வார். மண வாளமாமுனிகள் தாமும், இம்மூன்று நிலை யும் வாய்க்கப் பெற்று ஆசார்யராய் விளங்குவ தோடு, மந்திரவியாக்கியாநம் இயற்றுவதில் நம்மாழ்வாரினும் சிறந்து விளங்குகின்றார்.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழி, மந்திர வியாக்கியாநம் என்பது, நமக்கு நேரே தெரிவதில்லை. இங்ஙனம் வியாக்கியானமாகிறது என்று விளக்கிக் காட்ட வேண்டியிருக்கிறது. மணவாளமாமுனிகளின் நூல்களோ, அங்ஙனம் விளக்கிக் காட்ட வேண்டாதவாறு மந்திரங்களுக்கு நேரிடை வியாக்கியானமாகவே அமைந்துள்ளன. ஏனையோருடைய நூல்களும் இங்ஙனம் மந்திரங்களுக்கு வியாக்கியானமேயாக யமைந்திருந்தாலும், அவைமணவாளமாமுனிகளின் வியாக்கியானம் போலச் சிறந்து விளங்கவில்லை. மிக்க விரிவோ அன்றி மிக்க சுருக்கமோ இன்றி, வேண்டிய அளவில் அமைந்து தெளிவுள்ளனவாய், மணவாள மாமுனிகளின் நூல்களே அமைந்து சிறந்து விளங்குகின்றன என்பது, அனுபவத்திற் காண்கின்ற உண்மையாகும். இருவருக்கும் மோட்சம் அளிக்கும் உத்தாரகாசார்யத்வம். முன்பே 'பொன்னுலகாளீரோ' என்று தூதுவர்க்குப் பொன்னுலகை ஆளக்கொடுத்தலாலும், புளிய மரத்துக்கு வீடளித்தலாலும் வெளிப்படை.

**சரமபர்வோபதேசம்:**

பிரதம பர்வ நிஷ்டை வெளிப்பொருளாகவும், சரமபர்வ நிஷ்டை உட்பொருளாகவும் காணப்படும் நம்மாழ்வார் உபதேசத்திலே. இறைவனுக்கு ஆட்பட்டு நிற்றல் பிரதமபர்வ நிஷ்டை என்றும், அதில் முதிர்ந்து அவன் அடியார்க்கு ஆட்பட்டு அதில்நிலைநிற்றல்சரம பர்வ நிஷ்டை என்றும் வழங்கப்பெறும். மணவாளமாமுனிகளோ அருமைப்படுத்தாதுபேச்சு வாக்கிலேயே ஐந்தாவது உபாயமாகக் கூறப்பெறும் சரமபர்வ நிஷ்டையை எளிதில் நம் போல்வார்க்கும் புலனாம்படி செய்து விடுவதாக அவர் காலத்திலேயே நேரே இருந்து அனுபவித்த எறும்பியப்பா அருளிச் செய்கின்றார்.

**தாய்மையருள்:**

தாய்மைக்குள்ள மிக்க கிருபை நம்மாழ்வார்க்கும், இவரடி பணிந்தவர்க்கும் (எம்பெருமானாருக்கும்) உள்ளதுபோல, நம் மணவாள மாமுனிகளுக்கும் உண்டு. பகைவனுக்கு இதம் தேடின சீதைபோலத்தான் குடியிருக்கும் மடத்துக்குத் தீயிட்டாரைப் பொறுத்து, அவர் தம் தமரையும் மணவாள மாமுனிகள் ஆட்கொண்ட ஐதிகம் காண்க. ''தேவீ லக்ஷ்மீர் பவஸி தயயா வத்ஸவத் வேநசத்வம்'' என்று எறும்பியப்பா மணவாளமாமுனிகளைப் பிராட்டியின் கருணை வாய்ந்தவராக அருளிச் செய்திருப்பதும் அறியத்தக்கது.

**தெளிவு:**

நம்மாழ்வாரின் திருவாக்குகள் தெளிவு வாய்ந்தவை. வடமொழி வேதாந்தத்திலுள்ள கலக்கங்கள் இவற்றால் தீர்கின்றன. தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றன. 'பாஷ்யகாரர் நம்மாழ்வார் திருவாக்குக் கொண்டு சூத்திரவாக்கியங்கள் ஒருங்கவிடுவர்'. பாஷ்யக்காரர் பாஷ்யம் பண்ணியருளும்போது, சூத்திர வாக்கியங்களில் எற்படும் ஐயப்பாடுகளை நம்மாழ்வார் திருவாக்குகளால் தீர்த்துக் கொண்டாராம். அவ்வளவு தெளிவு நம்மாழ்வார் திருவாக்குகளில்.

வடமொழி வேதாந்தத்தில் நம்மாழ்வார் திருவாக்குகள் தெளிவு பிறப்பித்ததுபோலவே, தென்மொழி மறையிலும் ரகஸ்யத்ரயப் பிரஸ்தானத்திலும் மணவாளமாமுனிகளின் திருவாக்குக்களே தெளிவு பிறப்பிக்க வல்லனவாயுள்ளன. ''விசதவாக்சிகாமணி' என்று அநுபவித்தறிந்தவர்கள் கொண்டாடுவது முற்றிலும் பொருந்துகின்றதன்றோ? 'இரகசியத்திரயம்' ஆசார்ய பரம்பரைக்கிரமமாக வந்து விவரிக்கப்பட்ட வேண்டியிருந்தாலும், உபதேசிக்கும் ஒப்பற்ற தனது வைபவம் வெளிப்பட அதன்பொருளைப் பிரகாசப்படுத்துகிறவர் மணவாளமாமுனிகளே என்று எறும்பியப்பா அருளிச் செய்கிறார். வரவர முனிசதகம் 65 ஆம் சுலோகம் காண்க. நமக்குத் தற்காலம் ஆசார்யர் மந்த்ரோபதேசம் செய்தாலும் 'கரீயான அர்த்தோ குரு:' என்றபடி வியாக்கியாந கிரந்தங்கள் மூலமாக அர்த்தத்தில் தெளிவு பிறப்பிக்கும் மணவாளமாமுனிகளையே சீரிய ஆசாரியராகக் கருதுவதே முறை.

**நாவீறு:**

'மலக்கு நாவுடையேற்கு மாறுளதோ இம்மண்ணின்மிசையே' என்றபடி சர்வேச்வரனையும் மலங்க அடிக்கும்நாவீறுபடைத்தவர் நம்மாழ்வார். இவருடைய திருவாயாலே திருவாய்மொழி கேட்க விரும்பினான் எம்பெருமான். நம்மாழ்வாரோடே கலந்து, அவர் வாயாலே தன்னைத்தானே அவன் பாடிக் கொண்டான். அப்பாடல்கள் பண்ணார் பாடலாய் அமைந்தன. இன்கவிகளாய் இனித்தன. தானே பாடிய பகவத் கீதைபோல வறண்டிருக்கவில்லை. பிரீதி உள்ளடங்காது அவ்வெம் பெருமானுக்கும் பெருகிற்று. ஆநந்தித்துஅவன் நின்றான். வடமொழியில் வான்மீகி, வியாசர் போல்வாரும், தென்மொழியில் இன்கவிபாடும் பரம கவிகளான முதலாழ்வார்கள் போல்வாரும் இருக்க, அவர்களைவிட்டு நம்மாழ்வாரின் திருவாய்மொழியையே கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆலாபநம் பண்ணுகிறான், திருமாலிருஞ்சோலைமலை அழகராம் அவ்வெம்பெருமான்.

மணவாளமாமுனிகளும் சிறிதும் தங்கு தடங்கலின்றிக் கங்காப்பிரவாகம் போலப் பேசும் ஆற்றல் பெற்றவரே. இறைவனும் கண்டு வியப்புறும் வித்தகம் வாய்ந்தது இவருடைய நாவீறுடைமை. நம்மாழ்வாரிடமிருந்து கேட்ட இன்கவிகளின் பொருளை இவருடைய திருவாயாலே கேட்க விரும்பினான் எம்பெருமான். மணவாளமாமுனிகளுக்கு அருளிப் பாடிட்டு, ஓலக்கமாக இருந்து ஓராண்டு திருவாய்மொழிக்கு வியாக்கியாநம் மணவாள மாமுனிகளிடம்கேட்டருளினான் அரங்கநாதன். ஆராவமுதக் கவியாயிரத்தின் வியாக்கியானமான ஈடு முப்பத்தாறாயிரத்தையும், இன்ப ஆறான அரங்கனது ஆனந்தத்தையும் பெருக்கிற்று, மணவாளமாமுனிகளின் திருவாக்கு.

நஞ்ஜீயர் நம் பிள்ளை போன்ற எத்தனையோ ஆசார்யார்களிருக்க, அவர்களைவிட்டு மணவாளமாமுனிகளின் விரிவுயையே பரிவுடன் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றான் மதிளரங்கன்.

### மகிழ்வூட்டல்:

மட்டற்ற மகிழ்ச்சி பொங்கித் 'தென்னா தெனா' எனப் பொருளற்ற ஆலாபநம் செய்தார், இன்கவிகளை நம்மாழ்வாரிடம் கேட்ட மலையழகர். அவ்வின் கவிகளின் பொருளை மணவாளமாமுனிகளிடம் கேட்ட அரங்க மாநகருளானே பொங்கியெழும் உவகையுணர்ச்சி சொல் வடிவமாய் வழிய ''சைலேச தயாபாத்ரம்'' எனத் துவங்கும் சுலோகத்தை நன்றி அறிவுடன் சமர்ப்பித்தான்.

### புதுமந்திரம்:

முதல் ஆசார்யரிடம் மூலத்தையும், இறுதி ஆசார்யரிடம் வியாக்கியானத்தையும் கேட்ட ஆரம்பாசார்யனனான லட்சுமிநாதன் 'சைலேச என்னும் புது மந்திரத்தை வழங்கித் தான் இறுதி ஆசார்யனாகவும் ஆகிவிடுகின்றான். ஆரம்ப ஆசார்யத்வம் தான் தோன்றியானது. இறுதியான ஆசார்யத்வமோ சிறப்பு வாய்ந்த மணவாள மாமுனிகளுக்குச் சீடனாமை பற்றி அடியுடையது; தான் தோன்றியன்று. ஈசுவரனுக்கும் மணவாளமாமுனிகளின் சம்பந்தம் பெற்று, சீரிய ஆசார்யனாக விளங்குவதற்கு விருப்பம் ஏற்படுகின்றதென்றால், மாமுனிகளின் பெருமையை என்னென்பது.

### பிறந்தகம்:

இறைவனுக்கும் உபதேசிக்கும் ஏற்றம், நம்மாழ்வாருக்கும் மணவாளமாமுனிகளுக்கும், அவதாரம் செய்தருளிய ஊரின் மண்வாசியாலே வந்தது. இருவரும் அவதரித்தது ஆழ்வார் திருநகரியிலே. இருவருக்கும் பிறந்தகம் ஆழ்வார்திருநகரி. புக்ககம் திருவரங்கம். எம்பெருமானார் ஆசார்யனாய் இறைவனான திருக்குறுங்குடி நம்பிக்கு உபதேசித்திருப்பது நகரியின் மண்வாசியினாலேயே என்பதும், இங்கு அறியத் தக்கது. விபவத்திருமேனி திருப்பெரும்பூதூரில் அவதரித்தாலும், அர்ச்சைத் திருமேனி பவிஷ்யதாசார்ய விக்கிரகம் விபவாவதாரத்துக்கு முன்பே தோன்றியது திருநகரிலேயே என்பதை மறந்து விடலாகாது. ஆக நம்மாழ்வாரும் அர்ச்சையுருவில் எம்பெருமானாரும் மணவாளமாமுனிகளும் தோன்றியருளிய புனிதத்தலம் திருநகரி என்க. முதல், இடை, கடையிலுள்ள சம்பிரதாயப்பிரவர்த்தகர் மூவரும் அவரித்த தென்குருகைக்கு ஒப்புண்டோ?

### உணவு:

திருநகரியிலுள்ளார் ஏனையோர் போலச் சோறு முதலியவைகளை உணவாகக் கொள்வர் அல்லர். அவர்களுக்கு ஜீவனம் திருவாய்மொழியே. இது நம்மாழ்வார் கருத்து. 'குழாங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் தெரிந்துரைத்த குழாங்கொள் ஆயிரத்துள்இவைபதுத்முடன் பாடிக்குழாங்களாய் அடியாருடன் கூடி நின்றாடுமினே' என்னுமிடத்து, 'வாயுந்திரையுகளும்' என்னும் திருவாய் மொழியிற் கூறப்பட்டதைக் காணவேணும் என்ற திரண்ட ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு, ஆயிரக்கணக்கான திருவாய்மொழியைக் குழாமாயிருந்து பாடுவதையே ஜீவநமாக நம்மாழ்வார் கருதுகிறார். 'தொண்டர்க்கு அமுதுண்ண' என்று, தொண்டர் உண்ணும் அமுதாகத் திருவாய்மொழியை நம்மாழ்வாரே அருளிச் செய்திருப்பதையும் காண்க. ஆக சாத்விகர்களான அடியார்களுக்கு சாத்விக ஆகாரமான திருவாய்மொழியைக்கொண்டு ததியாராதனம் (அடியவர்கட்கு உணவிட்டு உபசரித்தல்) நடத்துவது தக்கதே என்க. திருநகரியில் அவதரித்த மணவாளமாமுனிகள், நம்மாழ்வார் கருத்துப்படி திருவாய் மொழியையே தமக்கு உணவாகக் கொண்டு பிறருக்கும் அதனையே வழங்கித் ததீயாராதனம் செய்வது மிகவும் பொருந்தியுள்ளது. 'மன்னியசீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்' என்று தம் வாயாலேயே மணவாளமாமுனிகள் பெருமையாக அருளிச் செய்வதைக் காண்க.

### மதுரகவி நிலை:

உணவுக்குத் தக்கபடி உணர்வு அமையும் என்பர். பரம சாத்விகமான திருவாய்மொழியை உணவாகக் கொண்டவர்களுக்கு அகங்காராதிகள் ஏற்பட வழியில்லை. எனவே விடத்தக்க பொருளின்பங்களைப் பற்றி வேறுபட்டுப் பிணங்காது சாதுகோட்டியுட் கொள்ளப் பெற்றுச் சரமபர்வமான பாகவதசேஷத்வத்தில் நிரந்தரமாய் நிற்றல் இயலும். உண்டிகொடுத்தோரே உயிர்கொடுத்தவர் ஆதலின், நமக்கு ஊணிட்டு உயிரளித்த நம்மாழ்வாரே சேஷி; அவரே நம் தெய்வம் என்னும் சீரிய உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். இதுவே திருவாய்மொழி அநுபவத்தின் பயன். இப்பயனை எய்தியவர் மதுரகவிகள். ''தேவுமற்றறியேன்' என்னும் அவரது நிலையை எய்துவதே நமது குறிக்கோள். அந்த மதுரகவி நிலையை எய்தி நிற்பவர், நம் மணவாளமாமுனிகள். 'மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்' என்று அவரே கூறிக்கொள்வது காண்க. மதுரகவி நிலையைப் பெற்றதன் பயனாக எழுந்ததே திருவாய்மொழி நூற்றந்தாதியாகும்.

### திருவாய்மொழியும் இராமாயணமும்:

திருவாய்மொழிக்கு முடிவான பொருள் நம்மாழ்வாரே என்பதைத் திருவாய்மொழி நூற்றந்தாதியாற் காட்டினார், மணவாள மாமுனிகள். இராமாயணத்துக்கு முடிவான பொருள் இலக்குவன் வடிவினரான மணவாள மாமுனிகளே என்பதை, வரவரமுனிசதகத்தால் காட்டினார் எறும்பியப்பா. இதனை விரிப்பிற் பெருகும். ஆக வைணவ மரபிற்கு அரணாய் அமைந்த திருவாய்மொழியாலும், இராமாயணத்தாலும், நாம் வழிபடவேண்டிய தெய்வம் நம்மாழ்வாரும், மணவாளமாமுனிகளுமே என்று உணர்ந்து, நாம் உய்வு பெறுவோமாக!

# "பெண்ணாளன்"

திரு உ. வே. ஆர். கண்ணன் அவர்கள், தஞ்சை.

கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந் திருந்தசிசு பாலன்-தேசழிந்து
அண்ணாந் திருக்கவே ஆங்கவனைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணுமூர் பேரும் அரங்கமே

இந்தப் பாசுரம் கோதை அருளிச் செய்த நாச்சியார் திருமொழியில் 11வது பத்தில் 9-ம் பாசுரமாக அமைந்துள்ளது. கோதைக்கு விபவ அவதாரங்களில் கிருஷ்ணாவதாரமும், அர்ச்சாவதாரத்தில் திருவரங்கனும் மனதுக்கு இசைந்தவர்கள் என்பது பிரசித்தம். அரங்கனின் பெருமையைக் கூறும் பத்துப்பாசுரங்களில் இதுவும் ஒன்று. இதில் கிருஷ்ணாவதார வரலாற்றையும் சேர்த்தே பாடியிருக்கிறாள் என்பதும் ஒரு விசேஷம்.

இதில் ருக்மிணி கல்யாண விஷயம் பேசப்படுகிறது. ருக்மிணியின் தகப்பனாரான பீஷ்ம மகராஜனுக்கு, தன் மகளான ருக்மிணியைக் கிருஷ்ணனுக்கே மணம் முடித்துவைக்க வேண்டும் என்ற ஆவல் உண்டு. ஆனால் ருக்மிணியின் சகோதரரான ருக்மியோ தன்னுடைய நெருங்கிய சிநேகிதனான சிசுபாலனுக்கே தன் தங்கையைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டான். பொல்லாதபிள்ளையின் முன்பு தான் ஒன்றும் சொல்லமுடியாமல் பீஷ்ம மகராஜனும் அவ்விதமே கல்யாண ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி இசைந்து விட்டார். இருந்தபோதிலும் அவருடைய மனதில் பகவத் சங்கல்பத்தால் ருக்மிணிக்குக் கிருஷ்ணனே கணவனாக அமைய வேண்டும் என்ற ஆசை மாத்திரம் இருந்து வந்தது.

ருக்மிணி-சிசுபாலன் கல்யாணத்துக்காக எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. சிசுபாலன் விரதங்களையெல்லாம் முடித்து ருக்மிணியுடன் தன்னுடைய விவாகத்தை மனதில் எண்ணி மகிழ்ந்து கொண்டே இருக்கிறான். இதற்கிடையில் ருக்மிணியினால் அந்தணர் மூலமாகக் கொடுத்தனுப்பப்பட்ட சந்தேசத்தைப் பார்த்துக் கிருஷ்ணன் குண்டின புரத்துக்கு வந்து துர்க்கை பூசை செய்யவந்த ருக்மிணியை அழைத்துக் கொண்டுபோய்த் திருமணம் செய்துகொண்ட கதை பிரசித்தமானவையே.

ஆக ருக்மிணியின் அபிப்பிராயப்படியும் அவளுடைய தகப்பனாரான பீஷ்மக மன்னனின் எண்ணப்படியும் கிருஷ்ணனே ருக்மிணியை விவாகம் செய்துகொண்டான் என்பதும், ருக்மிணியைத்தான் அடையவேண்டும் என்று ஆசைப்பட்ட சிசுபாலன் அவமானப்பட நேர்ந்தது என்பதும் தெரிவிக்கப்பட்டது. இதைக் கொண்டுதான் "காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டுபோனான்'' என்ற பழமொழி ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ருக்மிணியை மணந்துகொண்ட கிருஷ்ணன் நித்தியவாசம் செய்யும் ஊரின் பெயர் தான் திருவரங்கம் என்கிறாள் நாச்சியார். முன் குறிப்பிட்ட பாசுரத்தாலே.

இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், ஆண்டாள், கிருஷ்ணனுக்கு பெண்ணாளன் என்ற ஒரு விருது வழங்குகிறாள். பெண்ணாளன் என்றால் பெண்ணை அல்லது பெண்களை ஆள்பவன், அல்லது ஆளத்தெரிந்தவன் என்றதாயிற்று. இப்படிப் பேசும் ஆண்டாளும் பெண்தானே. ஒரு பெண்ணே தான் விரும்பும் மணாளனைப் பெண்ணாளன் என்று எப்படி குறிப்பிடமுடியும். அப்படிச் சொன்னால் தனக்கு முன்பாகவே அவனுக்குப் பெண்களுடன் தொடர்பு இருந்தது என்று ஆகாதா. உலகியலில் ஒரு பெண் தான் விரும்பும் ஒரு ஆண்மகனுக்கு, வேறு பெண்களிடம் தொடர்பு இருப்பதை விரும்பமாட்டாள். அப்படி இருப்பது தெரிந்தால் அவனையே விலக்கி ஒதுக்கிவிடுவார்கள். தான் விரும்பும் ஆண்மகன் தன் ஒருவளிடமே பற்று உள்ளவனாக இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பாள். இது பெண்களுக்கு இயற்கையான விஷயமே. அப்படி இருக்கும்போது பெண்ணாளன் என்று அவனைக் குறிப்பிட்டுவிட்டு அவனையே விரும்புவது எப்படி.

உலகத்தில் புருஷன் என்ற சொல் நாராயணனையும், ஸ்திரி என்ற சொல் மகாலட்சுமியையும் குறிக்கும் என்பது ஒரு மரபு. ஆக இங்கே பெண்ணாளன் என்றதால் மகாலட்சுமியை ஆண்டவன் என்று, திருவுக்கும் திருவாகிய செல்வனான எம்பெருமானையே குறிக்கும். வைணவ சம்பிரதாயத்தில் பரம்பொருள் என்பது பிராட்டியும் பெருமானுமான ஒரு சேர்த்தியே. இதில் ஒருவரை விட்டு மற்றொருவரை நாடுவது அபாயத்தில் முடியும். பிராட்டியை மாத்திரம் விரும்பிய இராவணனும் கெட்டான். பெருமாளை மாத்திரம் விரும்பிய சூர்ப்பநகையும் கெட்டாள் என்பது இராமாயணம் காட்டிய உண்மை. ஆக ஆண்டாள் குறிப்பிட்டது பிராட்டியுடன் சேர்ந்த பெருமா

னையே. மேலும் உலகியல் காதல் போலன்றி, பக்திக் காதலை விரும்பும் ஆண்டாளுக்கு எம்பெருமானுடன் பெரியபிராட்டியாகிய ஒரு பெண் முன்னமேயே சேர்ந்திருப்பது விரோதமன்று.

பரகால நாயகியாகப் பெண்ணுடை உடுத்துப் பேசிய கலியனும், திருவிடவெந்தை எம்பெருமான் விஷயமாக, தாய்ப் பாசுரமாகப் பேசும்போது, திருவிடவெந்தை எம்பெருமான் பக்கத்தில் திருமகள் இருப்பது தெரிந்தும் தன் மகள் அவனிடம் ஆசையை விடாமல் வைத்திருக்கிறாள் என்கிறார்.

''திவளும் வெண்மதிபோல் திருமுகத்தரிவை
செழுங் கடலமு தினிற்பிறந்த
அவளும் நின்ஆகத் திருப்பது மறிந்தும்
ஆகிலும் ஆசைவிடாளால்
குவளையங் கண்ணி கொல்லியம்பாவை
சொல்லுநின் தாள் நயந்திருந்த
இவளை, உன்மனத்தால் என் நினைந்திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே''
(பெரியதிருமொழி 2.7.1)

இதே மாதிரியே பெரியதிருமடலில் இதே கலியனும்,

''மன்னும் மரகதக் குன்றின் மருங்கே, ஓர் இன்னிள வஞ்சிக் கொடியொன்று நின்றது தான்''

என்று திருநறையூர் நம்பி விஷயமாகவும், அருளிச் செய்திருக்கிறார்.

மேலும் ஆண்டாள் கிருஷ்ணாவதார சரித்திரத்தைக் குறிப்பிட்டு பெண்ணாளன் என்று அருளிச் செய்திருப்பதால் கிருஷ்ணனுக்கும் இந்த வார்த்தை பொருந்தும். அது எப்படி என்று பார்ப்போம். கிருஷ்ணனுக்கு ருக்மிணி முதலான பட்ட மகிஷிகள் எட்டுபேரைத் தவிர, 16000 மனைவிமார்கள் உண்டு. இவர்கள் நரகாசுரனால் சிறையிலடைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த கன்னிகைகள். நரகாசுர வதத்திற்குப் பிறகு கிருஷ்ணன் அவர்களுக்குச் சிறையிலிருந்து விடுதலை அளித்தான். அவர்கள் எல்லோரும் ஒரேமுகமாக கிருஷ்ணனையே மணாளனாக வரித்துவிட்டார்கள். கிருஷ்ணனும் அவர்கள் விருப்பப்படியே அவர்களை மணந்து கொண்டான். இந்தக்காலத்திலும் ஒரு கன்னிகையை யாராவது ஒரு புருஷன் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினால் அந்தக் கன்னிகையின் மனம் தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிய புருஷனிடமே ஈடுபடுவதைப் பார்த்தும் கேட்டும் இருக்கிறோம்.

திருமணம் முடிந்தபிறகு கிருஷ்ணன் அவர்ளுக்குத் தனித்தனியாக அரண்மனைகளை நிர்மாணித்துக் கொடுத்துத் தானும் அவர்களுடன் வாழ்ந்து வந்தான். உலகில் ஒரு மனைவியை உடையவர்களே பலசமயத்தில் அவர்களைத் திருப்திப்படுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். இரண்டு மூன்று மனைவிகள் உள்ளவர்கள் படும்பாட்டைப் பற்றிக் கேட்கவேண்டியதே இல்லை. இந்த நிலையில் நாரதருக்கு, கிருஷ்ணன் பதினாறாயிரம் மனைவிகளோடு எப்படி பூசலில்லாமல் குடித்தனம் நடத்துகிறான் என்று பார்க்க ஆசை ஏற்பட்டது. துவாரகைக்கு வந்து ஒவ்வொரு அரண்மனையாக நுழைந்து வருகிறார். ஒவ்வொரு வீட்டிலும் கிருஷ்ணன் இருந்து கொண்டு ஏதாவது ஒரு குடும்ப வேலையைக் கவனித்துக் கொண்டு வருகிறான். அந்த வீட்டிலுள்ள தலைவியை நாரதர் விசாரிக்கும்போது, கிருஷ்ணன் தன் வீட்டில் எப்போதுமே இருந்து வருகிறார் என்றும், அது தன்னுடைய மனதுக்கு சந்தோஷமாக இருந்தாலும் தன்னை ஒத்தவர்களான மற்ற மனைவிமார்கள் தங்களுடைய வீட்டுக்குக் கிருஷ்ணன் வருவதில்லை என்று குறைப்பட்டுக்கொள்ளப் போகிறார்களே என்று சொன்னாளாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படியே ஒவ்வொரு வீட்டிலுள்ள தலைவியும் சொன்னாளாம். நாரதருக்கு ஒரே ஆச்சர்யமாகப் போய்விட்டது. கிருஷ்ணனைத் தனிமையில் சந்தித்துத் தோத்திரங்கள் செய்துவிட்டுப் போய்விட்டார். இதிலிருந்து என்ன தெரிகிறது? கிருஷ்ணன் தன்னைப் போல் பதினாயிரம் உருவங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் குடும்பம் நடத்தி அவர்களை மகிழ்வித்திருக்கிறான் என்று ஆகிறது. இப்படி ஆயிரக்கணக்கான பெண்களை மனைவிகளாகப் பெற்றும் அவர்களுக்காகத் தனித்தனி உருவத்தை எடுத்துக்கொண்டு அவர்களை ஆண்டிருக்கிறான் என்றால், அவனுக்குப் பெண்ணாளன் என்று பட்டம் கொடுப்பதில் தவறென்ன?

எந்த பிரபந்தத்துக்கும் சுவாபதேச அர்த்தம், அதாவது உட்பொருள் என்று ஒன்று உண்டு. அதாவது தன்னையும் பகவானையும் உறவுபடுத்திப் பொருள் கொள்வது என்று. அப்படிப் பார்த்தாலும் 'பெண்ணாளன்' என்ற பதத்துக்கு ஒரு பொருள் கிடைக்கும். உலகத்தில் சகல சீவராசிகளிலும் புருஷன் என்ற பெயர் திருமகள் கேள்வனாம் நாராயணன் ஒருவனுக்கே பொருந்தும். மற்ற சீவர்கள் தன்னுடைய வினைப்பயனாக ஆண்தன்மையுடைய சரீரத்தில் புகுந்து கொண்டிருந்தாலும் கூட, அவர்கள் பெண்தன்மையுடையவர்களே. ஸ்வதந்தரம் உள்ள ஒருவனுக்கே புருஷன் என்ற பெயர் நிலைக்கும். ஆகையால் சர்வ சுதந்தரனான எம்பெருமான் ஒருவனே புருஷன் என்ற வார்த்தைக்குப் பொருத்தமானவன். மற்ற எல்லாரும் அவனுக்கு அடிமைப்பட்டு நிற்கும் பரதந்த்ரர்களானதாலே அவர்கள் பெண்களாகக் கணக்கிடப்படுகிறார்கள்.

அணுவாக இருக்கும் இந்த சுவதந்தரமற்ற சீவர்களுக்குத் தன்னையறிந்து கொள்ளவும் தனக்கு ஏவல் செய்யவும் கரண களேபரங்களைக் கொடுத்து அவர்களை நல்வழிப் படுத்தக் கட்டளைகளான அநேக சாத்திரங்களையும் கொடுத்து, அவர்களைத் தன்னுடைய தெய்வநிலைக்கு அழைத்துக்கொண்டு போவதால், பெண்களுக்கு சமமான இந்த சீவர்களை ஆண்டவனாகிறான். மேலும் இந்த சீவர்களுக்குப் பரமஇதமான மோட்சத்தைக் கொடுப்பவனும் அவனே ஆகிறான். ஆக, பெண்கணக்கில் உள்ள சீவ கோடிகளை ஆண்டவன் என்ற கணக்கிலும், அவனைப் ''பெண்ணாளன்'' என்று சொல்லத் தட்டில்லை. ***

# திருக்கோவையார்

## —மெய்ப் பொருள் நோக்கு...

'தத்துவநூற் பேரறிஞர்'

திரு. டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி,
M.A., Ph.D.

பன்னிரு திருமுறைகளுள் எட்டாவதைச் சேர்ந்த திருக்கோவையார், பேரின்பச்சார்பான நூல்; அகப்பொருள்துறையில் பாடப்பெற்றது. உரையாலும் உணர்வாலும் அளவிட்டுக் கூற முடியாத பேரின்பத்தை, அநுபூதியை, மெய்ப் பொருள் நோக்கால் வரையறை செய்து காண முடியுமா?

மெய்ப்பொருள் அண்மைக்காலம் வரையில் மேல்நாட்டில் முப்பிரிவுகளில் வளர்ந்து வந்தது. இப்பிரிவுகள் முழுமுதற்கொள்கை (Absolutism), கடவுட்கொள்கை (Theism), மக்கண்மைக்கொள்கை (Humanism), எனப் பெறும். தற்காலத்தில் இருப்புநிலைக் கொள்கை (Existentialism) மொழி வழிப்பகுப்பியல் (Linguistic Analysis) என்பவை பெரு வழக்கில் உள்ளன. மேலைநாட்டு முழு முதற் கொள்கையை ஒத்துள்ளது சங்கரரின் அத்வைதம்; கடவுட்கொள்கையைப்போன்றது சைவசித்தாந்தம். (விசிஷ்டாத் வைதத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்). மனிதனுக்கு அப்பாற்பட்டதாக முழுமுதல் அல்லது கடவுள் என எதையும் ஏற்காத மக்கண்மைக் கொள்கையில் அனுபூதிக்கு இடமில்லை. இயற்கை பற்றிய அனுபூதிநிலையும் (Nature Mysticism) இக்கொள்கையில் இடம் பெற முடியாது. எனவே முழுமுதற்கொள்கை, கடவுட் கொள்கையாகியவற்றில் பேரின்பம் எவ்வாறு கருதப்பெறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

இருவர் ஒன்று சேரும்போதுதான், இன்பம் பிறக்கின்றது. ஒருவரே உள்ள இடத்தில் இன்பம் இல்லையென்பது கடவுட் கொள்கை. இறைவனும் உயிரும் சேரும்போது உண்டாகிற இன்பமே பேரின்பம். இறைவன் மட்டுமோ உயிர் மட்டுமோ இருப்பதானால் அங்கே புணர்ச்சியால் உண்டாகும் இன்பம் எழாது என்று கடவுட்கொள்கையினர் கருதுகின்றனர். முழுமுதற்கொள்கையினர் இதனை மறுத்து, இருவர்-அல்லது இருமை உள்ளவரை நிறைவு அல்லது முழுமை கிடையாது, இருமையைக் கடந்த நிலையே நிறைவான இன்ப நிலை. ஆற்றுநீர் கடல்நீருடன் கலந்துவிட்டால் பிரித்தறிய முடியாதது போல, உயிர் இறைவனுடன் ஒன்றிவிட்டால் உயிர் எனவும் இறைவன் எனவும் பேசுவதற்கில்லை. முடிவான உண்மை, உள்பொருள் ஒன்றே என்பதுதான். அவ்வொன்றினை ஒன்று எனவும் கணக்கிடுவதற்கில்லை. அப்பொருளே இயல் உண்மை அறிவு இன்பமாய் (சச்சிதானந்தமாய்) நிலைத்திருப்பது. எனவே அநுபூதி அல்லது பேரின்பத்தின் முடிந்தநிலை இந்த ஒன்றே நான் என உணர்ந்திருப்பது. கலத்தல் புணர்ச்சி என்றெல்லாம் பேசுவது முழு உண்மையை உணர்வதற்கு உதவியாகத்தான். முழு உண்மையை உணர்ந்தால் கலத்தற்கோ, புணர்ச்சிக்கோ இரு பொருளில்லை என்பது தெளிவாகும் என்பர்.

அநுபூதி அல்லது பேரின்ப நுகர்ச்சியை வரையறுத்துத் திட்டமாக அமைப்பது முறையாகாது. ஆனால் இவ்வாறு அமைப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. எனவே அவரவர் தத்தம் கருத்துக்களுக்கேற்ப அதனை விளக்குவதையும் வரவேற்கலாம். திருவிடைமருதூர் பற்றிய திருப்புகழில் பின்வருமாறு காண்கிறோம்.

''இருவினையும் மும்மலமுமற
இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுகம்
அதனையருள் இடைமருதில்
ஏகநாயகா லோகநாயகா-
இமையவர் பெருமாளே''

இங்கே 'ஏகபோகமாய், நீயும் நானுமாய்' எனவரும் சொற்களை, 'நீயும் நானும் ஏகம் என்பதே போகம்' எனப் பொருள் கொள்வது முழுமுதற்கொள்கைக்கு ஒத்தது. 'நீயுமாய் நானுமாய் (இருப்பு நிலையில் தனித்தே இருக்க) ஏகபோகமாய் (புணர்ச்சி வகையில் பிரியாதிருக்க-பிரிந்தால் இருப்புக்கே கேடு என்றிருக்க)' -எனப் பொருள் கொள்வது கடவுட் கொள்கைக்கு உகந்தது. இவ்வாறே சுவாமி மலைத் திருப்புகழில்,

''நீவே றெனாதிருக்க நான்வே றெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு உன் அருள்கூராய்''

எனவரும் சொற்களை இருவகையிலும் பொருள் கொள்ளலாம். 'வேறு என்பதே இல்லாமல், நீ, நான் என இரண்டு இல்லாமல் இருப்பதே நேரான வாழ்வு' -இது முழுமுதற் கொள்கை. 'நீ இருக்க, நான் இருக்க-ஆனால் வேறு என்னாமல் இருப்பதே நேரான வாழ்வு'. இதற்கு நீ அருள் செய்ய வேண்டும் - இது கடவுட்கொள்கை. அருளைத் தருபவன் அருளை பெறுபவன் - 'அருளும் சித்து, அருளிற்படியும் சித்து'- என இருப்புநிலை வேற்றுமை புணர்ச்சி நிலை வேறின்மை கொள்ளப்படுகிறது.

அருள் பெறுவதற்கு முந்திய நிலைகள் இருளும் மருளும். இறைவனருளால் 'இருளும் மருளும் மாய்ந்தோமே' என்பார் நம்மாழ்வார். இருள், மருள் நிலைகளை இறையருளால் அகற்றி, மலரும் மணமுமென இருப்பதைப் பின்வரும் திருப்புகழ் வரிகளில் காண்கிறோம்.

''இருவினை புனைந்து ஞானவழி முனைதிறந்து நோயி
னிருவினையிடந்து போக மலமூடே
இருளற விளங்கிஆறு முகமொடு கலந்துபேத
மிலையென இரண்டுபேரு மழகான
பரிமள சுகந்தவீத மயமென மகிழ்ந்து''

—திருப்புகழ்

''சொற்பால்அமுது இவள்யான் சுவை
என்னத் துணிந்து இங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று
நான்இவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி
தோட்ட களவகத்தே''

—திருக்கோவையார்

சுவைக்கும் அதனுடைய பொருளுக்கும் வேறுபாடில்லை. அங்ஙனே எனக்கும் இவளுக்கும் வேறுபாடில்லை. எனினும் புணர்ச்சியான் வரும் இன்பம் துய்த்தற்பொருட்டாக, இன்று யானென்றும் இவள் என்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை, யாரறிவார், இதனை யனுபவிக்கின்ற நானே அறியினல்லது.

இங்கே முழுமுதற் கொள்கையின்படி, நான் இவள் (உயிர், இறைவன்) என்னும் பகுதி இல்லாத ஒன்று, புணர்ச்சிக்காக இருப்பது போலத் தோன்றுவது. கடவுட்கொள்கையின் படி நான் இவளாம் பொற்பே - அழகே, தனித்த இருவர், பிரியவொண்ணாதபடி கூடுவதாத ஏற்படுவது. ஏற்படுவது பகுதியன்று, அழகேயாம். இவ்வழகு வளர்வதொன்று. இதனை வற்புறுத்தும்வகையில் 'உணர்ந்தார்க்கு உணர் வரியோன்' என்னும் பிறிதொரு செய்யுளை நினைவு கொள்ளலாம். நுகரப்படும் பொருள், அகல நீளம் என்று அளவு கூறரும் பொருள். எனவே நுகரநுகர-புணர்ந்தாற் புணருந் தோறும் பெரும்போகம் பின்னும் புதிதாய் வளர்கின்றதே என்றார்.

முழு முதற்பொருளை எல்லையற்றது என்று சொல்லும்பொழுது, அதனுடன் வேறொரு பொருள் உண்டென்பது அதற்கு எல்லை ஏற்படுத்துவதாகும் என்பது முழுமுதற் கொள்கை. ஆனால் எல்லையில்லாத ஒன்றனுக்கு எல்லையில்லதோர் அடிமை (அன்பு) பூண்டேன் என்பது, கடவுட் கொள்கை.

இவ்வாறு மரபுவழி மெய்யுணர்வு நோக்கில் திருக்கோவையாருக்கு இருவகையாகப் பொருள் கொள்ளலாம். இனி, இன்றைய மேல் நாட்டு மெய்யுணர்வு நோக்கில்-மொழிவழிப் பகுப்பியல்படிப் பார்த்தால், சமயஇயல், அறஇயல், அடிப்படை மெய்யுணர்வியல் ஆகியவற்றில் வரும் சொற்களும், சொற்றொடர்களும் பொருளற்றவை. கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் வரும் கூற்றுக்களே, வெறும் அறிவு முறைப்படியோ, செய்காட்சிப்படியோ சரி பார்க்கக்கூடியவை. ஆதலின்பொருளுடையவை; சமயஇயல், அடிப்படை மெய்ப்பொருளியல், அறஇயல் ஆகிய இவற்றில் வருபவை, அறிவாலோ செய்காட்சியாலோ சரிபார்க்கக் கூடியவையல்ல. 'நான் இவளாம் பொற்பு'- என்பது பொருளற்ற சொற்கோவை. உணர்ச்சிக்கு உகந்ததாக இருக்கலாம். அறிவுக்குப் புறம்பானது - என்பர் மொழிவழிப் பகுப்பியல் கொள்கையினர்.

கடவுட் கொள்கையில், சிறப்புவகையில் சைவசித்தாந்தக் கண்கொண்டு பார்ப்போர், திருக்கோவையாரில் வரும் நாயகி - பரம் பொருள்; நாயகன்-பக்குவான்மா. தோழி-திருவருள்; தோழன்-ஆன்மபோதம்; நற்றாய்-பரை; திரோதாயி-செவிலித்தாய் என்பர்.

அவரவருடைய மெய்யுணர்வுக் கொள்கைக் கைக்கு ஏற்பவும், நூலுணர்வோடு நுழைவும் வாய்ப்பதாயின், அந்நுழைவுக்கேற்பவும், திருக்கோவையாரைப் பலவகையாகப் படித்து இன்புறலாம்.

''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
பண்புடை யாளர் தொடர்பு''

திருக்கோவையாரின் சிறப்பு நவிலவும் பயிலவும் படுமே!

# தமிழ் நூல்களில்

# திருமணக் காட்சிகள்

பேராசிரியர் புலவர் திரு. கி. கோதண்டபாணி, எம்.ஏ., எம்.லிட்.,
புட்பம் கல்லூரி, பூண்டி, தஞ்சை

**திருமணம்:**

இருமனம் ஒன்றிய திருமணக் காட்சிகள் பலவற்றை நாம் காண்பதற்கு முன்னே, பண்டைத் திருமண மரபு என்னென்ன என்பதனை வரலாற்று அடிப்படையிலும், இலக்கிய அடிப்படையிலும் ஆய்தல் ஏற்புடைத்து, தமிழர்கள் தம் வாழ்வில் மேற்கொள்ளும் திருமண நிகழ்ச்சியை, எளிய செயலாக எண்ணி ஏற்றுக்கொள்ளவில்லை. 'ஆயிரங் காலத்துப் பயிர்' என்று அமைதியுடன் எண்ணி ஆற்றிவந்த ஓர் அரிய செயல். தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் கண்டு உரையாடி உளமொர்த்த பின்னர்க் கற்பின்வழி மணந்து ஒழுகி வந்த வாழ்க்கையினை நம்மிலக்கியங்கள் விளங்க உரைக்கின்றன. மங்கலவாழ்த்து என்றும், மன்றல் என்றும், மணம் என்றும் பெயரிட்டழைப்பது ஒன்றாலேயே எத்துணை உயர்வும், பெருமையும் அந்நிகழ்ச்சிக்கு அளித்துள்ளனர் என அறியலாம். பலரும் அறியும் மணம் ஆகிய மன்றல், பலர் உள்ளத்திலும் உவகையைத் தோற்றி, அவ்விருவரும் மேற்கொள்ளும் இல்லறத்திற்கு வாழ்த்தாய் அமைதல் வேண்டும் என விழைந்தனர். அவ்வாறே மணவிழாவில் வாழ்த்தல் முறையினை மேற்கொண்டனர். ''தமிழர் திருமணத்தில் தீ வளர்த்தல் இல்லை. மணமக்கள் தீ வலம் வருதலில்லை. மணவிழாவில் தட்சிணை பெறப் புரோகிதர் இல்லை. இத்தகைய திருமண முறையே தமிழர் மேற்கொண்ட திருமண முறை'' என்று வரலாற்றாசிரியர் திரு.பி.டி. சீனிவசை ஐயங்கார், தமிழர் வரலாறு என்ற நூலில் கூறும் திறம் குறிப்பிடத்தக்கது. சங்ககாலம் முதல் இன்றைய நாள் வரை திருமண நிகழ்ச்சியை வரையறுத்துக் காண்போம்.

**அகநானூறு:**

தமிழர் திருமண முறையைப் பற்றிச் சங்க நூலாகிய அகநானூற்றில் இரண்டு பாடல்கள் விளங்க உரைக்கின்றன. பழங்காலத் திருமணம் ''பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு உருவு நிறுத்த காம வாயில், நிறையே அருளே உணர்வொடு திருவெனக்'' கூறப்பட்ட பத்துப் பண்புகளாலும், ஒத்த தலைவனும், தலைவியும் தம்முள் எதிர்ப்பட்டுச் செம்புலப் பெய்நீர் போல் அன்பால் ஒன்றிக் களவின்வழி ஒழுகிப் பின்னர்க் கற்பில் மலர்வதேயாகும். மண விழா தொடங்குவதற்கு முன்னரே உழுந்து பெய்த உணவை விருந்தினர் உண்ண அளிக்கின்றனர். கால்பல பரப்பி அமைத்த காவணம் குளிர்பூங்காவைப் போல் தோற்ற மளிக்கிறது. பந்தரின் கீழ்ப் புதுமணல் பரப்பி நந்தா விளக்கேற்றி மாலைநாற்றி இருளகன்ற வைகறைப் போதில் மணவிழா அமைக்கின்றனர். உரோகிணி நாளில் வளர்பிறைப் பருவத்தில் மணத்தினுக்கு நாளைக் குறிக்கின்றனர். முதுமையான பெண்கள் பலர் குழுமி நிறைகுடந் தாங்கியவராய், முன்னும் பின்னும் முறையேயளிக்க, அக்குடங்களை வாழ்வரசியர் நால்வர் வாங்கி நெல்லும் மலரும் தூவி நீராட்டி, 'யாவரும் விரும்புமாறு நின் கணவனோடு கூடி வாழ்க!' என வாழ்த்திப் பின் மணம் நிகழ்த்துவர். வதுவை முடிந்தபின் 'பேரிற் கிழத்தியாக' என வாழ்த்தொலி யெழுப்புவர். இது அகநானூறு கூறும் திருமண நிகழ்ச்சி. 'உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை' என்ற அகப்பாடல் இதனை வலியுறுத்துகின்றது. நெடுந்தொகைப் பாடல் மற்றொன்றும் இதே கருத்தை உரைப்பதை ஆராய்வோம். ஊனும், நெய்யும் பெய்த சோற்றினை வந்தோர்க்கு வாரி வழங்கியளித்து விருந்தாற்றி விடியற் காலத்தே வானூர் மதியம் சகடணையும் உரோகிணி நாளில், மங்கல முழவம் ஒலிக்க வதுவை நிகழும். அவ்வமயம் மணல் பரப்பிய பந்தரில் மகளிர் ஒருங்குகூடி வாழ்த்துரை வழங்குவர். இது சங்க இலக்கியம் கூறும் திருமண நிகழ்ச்சி. இதில் எத்தகைய சடங்கு முறைகளும், பிறவும் இடம்பெறவில்லை.

**சிலப்பதிகாரம்:**

மேற்குறிப்பிட்ட திருமணக் குறிப்புக்களேயன்றிப் பிற விளக்கமான திருமணமுறைகள் எவ்விலக்கியத்தும் இடம் பெறவில்லை. சங்க காலத்திற்குச் சில நூற்றாண்டுகட்குப் பின் எழுந்த சிலப்பதிகார மணக்காட்சியில் நிலைமை முற்றிலும் மாறுபட்டுவிட்டது. முன்நிகழ்ந்த

நிகழ்ச்சிக்கு முற்றிலும் மாறான நிகழ்ச்சி காலச் சுழலின் வேகத்தால் கடிது ஏற்பட்டது. பன்னீராண்டுப் பருவத்தாளாய கண்ணகியைப் பதினாறு ஆட்டைப் பருவத்தானாகிய கோவலனுக்கு மணம் முடிக்க இருமுது குரவரும் ஒரு முகமாக இணங்கினர். இருவரும் குன்றத் தனைய நிதியைப் பெற்றவர். இவ்வாறுமணம் முடிக்க இணங்கிய பின், யானை யெருத்தத்து அணியிழையார் மேலிரீஇ, மாநகர்க்கு மணம் அறிவித்தனர். புதுமணல் பரப்பி, வயிரத் தூண்கள் நாற்றி, நீலவிதானம் அமைத்து நித்திலம் இழைக்கப்பட்ட அழகிய பந்தரின்கீழ் உரோகிணி நாளில் அருந்ததியன்னஅரும்பெறற் கற்பினாளை, அங்கி சான்றாக அருமறையோர் வழிகாட்டத் திருமணம் ஏற்றான் கோவலன். அங்கு மகளிர் பலர் மலரேந்தியும், மணப் பொருள் ஏந்தியும் குழுமினர். சிலர் உரை நிகழ்த்தியும் பலர் பண்ணிசைத்தும் கூடினர். சாந்தும், புகையும் ஏந்தியோராய்ச் சிலர் சூழ்ந்தனர். வண்ணமும் சுண்ணமும் வான்முளைப் பாலிகையும் தாங்கியவராய்ப் பலர்குழுமி மண மகளை நோக்கி 'நீ காதலனைப் பிரியாது அன்புக் கரங்களை நெகிழ்க்காது தீமை நீங்கி வாழ்க' என வாழ்த்துகின்றனர். இதுவே சிலம்பு கூறும் திருமண நிகழ்ச்சியாகும்.

சிலப்பதிகார காலத்தில் பழம்முறை நீங்கித் தமிழர் திருமணத்தில் அந்தணர் இடம் பெறுகின்றனர். தீ வளர்த்தலும், அத்தீயை வலம் வருதலும் ஆகிய முறைகள் இடம்பெற்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் இந் நிலையில் தமிழர் திருமண முறை முற்றிலும் மாறிவிட்டது. முன் களவின் வழியொழுகிக் கற்பில் வாழ்ந்த மக்கள் களவொழுக்கத்தில் அன்பால் ஒன்றி, ஒருவரையொருவர் பின்னர் விடவும் நேர்ந்துழி, கற்புத் திருமணம் கட்டாயம் வேண்டியதாயிற்று ''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப''என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்தும் நெறிமாறிப் புதிய வேற்று நெறி உருவாகியது. அப்போது இயற்றப்பட்ட காவியமாகிய சிலம்பு அந்நெறியைப் பின்பற்றிய திருமணத்தை அமைத்துவிட்டது. இந்நிலையினை 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீ வலஞ் செய்து காண்பார்கள் நோன் பென்னை' என்று விளக்குகின்றார். மேலும் திருமண வாழ்த்து 'காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுகென ஏத்திச் சின் மலர் கொடு தூவி, அங்கண் உலகின் அருந்ததி யன்னாளை, மங்கல நல்லமளி ஏற்றினார்' என மொழிகின்றது.

**சீவகசிந்தாமணி:**

அடுத்து ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிந்தாமணி கூறும் சச்சந்தன் விசயை திருமண விழாவையும், நிகழ்ந்த முறையினையும் நோக்குவோம். சச்சந்தன் உள்ளக்கருத்தினை யோர்ந்த அமைச்சர்கள் விசயை ஆக்கம் பெற வேண்டி அவளை மன்னனோடு சேர்த்தனர். பொற்கொடி போன்ற விசயையும் பொற்கோடு போன்ற சச்சந்தனும் அனங்கனின் அம்புகட்கு இலக்காகி இருவரும் ஒன்றாயினார். இந்நிலை சினமிக்க சிவனும், சிந்தைமிக்க செல்வியும் (உமை) சேர்ந்தது போலிருந்தது. அன்பு ஒன்றிய செல்வனும், செல்வியும் மணந்த போழ்து விசயை அமிழ்தமாக, மன்னன் பரிதியாக ஆகி விரைவில் பருகிவிட்டான். விசயையின் அன்பில் தோய்ந்த சச்சந்தன் களிறு போன்றும், விசயை கரும்பு போன்றும் ஆயினர். மேலும் அணங்கு தாமரை மலரைப் போன்றும் வீரன் வண்டைப் போலவும் ஒன்றிவிட்டனர். விசயை முறையாக முற்றிய கனிபோலக் காதலால் கனிய, அக்கனியை உண்ணும் பறவையை யொத்தான் பாராள் வேந்தன். இத்தகு எழில் நலஞ் சான்ற இருவரையும் ஏற்ற கோலஞ் செய்து வதுவை புணர்த்தும் நாளை வையகத் திற் குணர்த்தினர். அங்கி வளர்த்து ஆகுதி யோம்பினர். மங்கல முரசு எங்கணும் ஒலித்தது.

**கம்பர் :**

கம்பன் காவியம் கூறும் காதல் மணம், தமிழரது முன்னாள் திருமணத்தை நன்கு நினைவூட்டிநிற்கிறது. இராமனும், சீதையும் ஒருவரையொருவர் முன்னரே, கண்டு காதலுணர்வு கொண்டனர் எனத் தமிழ்முறைமாறாது முன்னோர் நூலொடு பொருந்தக் கவிதை செய்தார் கம்பர். அண்ணல் நோக்கும் அணங்கின் நோக்கும் வாய்ச் சொல்லின் துணையின்றியே ஒன்றிவிட்டன. இருவர் கண்களும் பிணைந்து இணைந்தமையால் இருவர் உள்ளமும் ஒன்றை யொன்று பற்றி ஈர்த்தன. ஆகையால் இருவரும் மாறிமாறி மற்றவர் உள்ளத்தில் இடம் பெற்றனர். பின்னர்க் கருநிறத் திருமேனியைக் கண்டு அவனது முகம் தன் அகத்தில் நிலைக்குமாறு ஆழ்ந்த பேரன்பு கொண்டாள். பின்னர் வில்லை எடுத்து நிறுத்தி ஒடித்த வீரச் செய்தியினைக் கேள்வியுற்று ஒடித்த வீரன் தன்னுள்ளங் கவர்ந்த வீரன்தானா எனக் காண விழைந்தாள். தன் உள்ளத்தே நீங்காதிருக்கும் அவனுருத்தானோ இவ்வுருவம் என வளையல் திருத்துவாளைப் போன்று பார்த்தும் பாராததுமாகக் கடைக் கண்ணால் நோக்கினாள்.

''ஐயனை அகத்தும் வடிவேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின்
உணர்ந்தாள்.''

முன்னர் நோக்கிய வீரனே என அறிந்தவுடன் கண் ஒளியாகிய ஆறானது கண்ணனாகிய பெரிய கடலில் கலக்கக் கடலில் தோன்றிய அமுதனைத்தையும் ஒருங்கு உண்டவள் போல் உடல் பூரித்திருந்தாள். திருமண மண்டபத்தில் நுழைந்து மனையில் ஏறி வெற்றி வீரனாகிய இராமனும், அவன் துணையாகிய அன்னமென்னடைச் சீதையும் அமர்ந்தனர். இக்காட்சி போகமும், யோகமும்கூடியிருந்தது போன்றிருந்தது. உடனே மிதிலை மன்னன் இராமனின் முன்னே தோன்றிக் குளிர்ந்த நீரிலேயுள்ள தாமரைச் செல்வியாகிய திருமகளுடன் உடன் உறையும் திருமாலைப்போல

'நீ என் சிறந்த மகளாகிய சீதையோடு பொலிந்து வாழ்க' என்று, அவனது தாமரையன்ன தடங் கைகளில் சீதையைப் பிடித்துக் கொடுத்தான். இதனைக் கரம்பிடித்தல் எனவும் ''பாணிக்கிரகணம்'' எனவும் சொல்லுதல் மரபு. இம்மரபு புகுந்த காலமாகையால் இம் மணம் கைப்பிடித்தல் அடிப்படையில் நிகழ்ந்தது.

''கோமகன் முன் சனகன் குளிர் நன்னீர்ப்
பூமகளும் பொருளும் என நீ என்
மாமகள் தன்னொடு மன்னுதி என்றான்''

இவ்வாறு மன்றல் நிகழ்ந்தபோது அந்தணர் ஆசியொலியும் அணங்குகளின் இசையொலியும், மணிமுடி மன்னர் வணங்கி எழும் பேரொலியும் வானவரின் வாழ்த்தொலியும் சங்கத்தின் இடியொலியும் எங்கும் நிறைந்தன.

பெரிய புராணம்:

திருமுறை வரிசையுள் சிறந்ததான பன்னிரண்டாம் திருமுறையாம் திருத்தொண்டர் புராணம் கூறும் திருமணம் காண்போம். இதில் புனிதவதியார்—பரமதத்தன் புகழ் மணம் சிறப்பாகச் சிந்திப்பதற்குரியது. மணம் நிகழ்த்தும் நாள் வந்ததும் மன்றலுக்குரிய யாவும் முடித்துப் பரமதத்தனுக்கு மணமகன் கோலம் புனைவித்து, இயங்கள் ஒலிக்கக் காரைக்காலுக்கு நாகையிலிருந்து மணமகன் வீட்டார் புறப்பட்டனர். அறமே இயற்றும் ஆன்றோனாகிய பெருவணிகன் தனதத்தனின் அணிமாடம் அடைந்தனர். மணநூல் விதிப்படி மணச் செயல் யாவும் முடிந்த பின்னர், மயில் போன்ற சாயலுடைய புனிதவதியை, மாலையணிந்த காளை போன்ற பரமதத்தனுக்குக் களிக்கும் சுற்றம் குழுமியிருக்கத் திருமணம் முடித்தனர். இதனை மிக அழகாக,

''அளிமிடைதார்த் தனதத்தன்
அணிமாடத்துள் புகுந்து
தெளிதருநூல் விதிவழியே
செயல்முறைமை செய்தமைத்துத்
தளிர் அடிமெல் நகை மயிலைத்
தாது அவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ் சுற்றம் போற்றக்
கலியாணம் செய்தார்கள்.'

என விளங்க உரைக்கின்றார். மங்கல மணவிழா முடிந்த பின்னர்த் தன் குடிக்குத் தனி மகளாய் விளங்கிய புனிதவதியைத் தனதத்தன் நாகைக்கனுப்பாது, தன் பார்வையிலே என்றும் இருக்க அணிமாடம் அமைத்தளித்தான். மகளைக் கொடுத்ததுடன் நில்லாது வரம்பில்லாப் பெரும்பொருளையும்தன் மகளும் மருமகனும் வாழ அளித்தான். பெற்ற நிதிபதியின் மகனாகிய பரமதத்தன் மனையறங் கொண்டு மனைவளம் பெருக்க உளங்கொண்டான். அம்மையாரும் அரனடி மறவாச் சிந்தையராய் அறத்தைப் போற்றி மனையறம் ஆற்றினர். இவர்கள் எதிர்கால வாழ்வு சிறப்புறாது நலிநிலையுற்றது. இதை முன்னுணர்ந்த கவிஞர் பெருமானாகிய சேக்கிழார், இப்பொருந்தா மணத்தை 'நகை மயிலைத் தாதுஅவிழ்தார்க் காளைக்கு முடித்தனர்' என்ற வரியால் விளக்கினார்.

பெரியபுராணம் கூறும் சுந்தரர்-சங்கிலியார் மணத்தைக் காதல் மணமாகவே கருத இடமுண்டு. சிவனுக்கு ஆளாகிய சுந்தரர் தன் உள்ளத்தினை மலர்ப்பிணையலோடு ஒன்றாய்ச் சேர்த்துப் பிணித்த சுந்தரியாம் சங்கிலியாரை அடைய இறைவனை அணுகுகின்றார். உமையை ஒரு பக்கத்தே வைத்ததுடனில்லாமல், கங்கையினை நீள் முடியிலேயும் கரந்து வைக்கும் காதலனே, மாலை தொடுக்கும் இவ் வணங்கை எனக்கீந்து மன மாலகற்றும் என வேண்டி நின்றார். 'மங்கை' யொருபால் மகிழ்ந்ததுவும், அன்றிமணிநீள் முடியின்கண் கங்கை தன்னைக் கரந்தருளும் காதல் உடையீர்!'' என விளித்துத் திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும் என வேண்டுகின்றார். அவ் வேண்டுதலுக்கு இணங்கிய விண்ணவன் சுந்தரர்பால் சென்று ''இவ்வுலகில் யாரும் எய்தவியலாத தவக் கொம்பைநுமக்குத் தருகின்றேன். நும் கவலை யொழிக'' எனக் கூறினார். பின்னர்ச் சங்கிலியின் பால்சென்று ''என் அடியான் நினை விழைந்தான், வெண்ணெய் நல்லூரான், என் பரம்பரை அடியான், மேம்பட்ட தவச் செல்வன், அவனை நீ மணத்தால் அணைவாய்'' எனக் கூறினர். இவ்விருவரிடமும் மட்டும் கூறினால் இந்நல் மணம் எங்ஙனம் முடிவுறும்? ஆகலின் இன்னோர்க்கு மணம் நிகழ்த்தி உலகறியச் செய்யுங்கள் எனத் தம் தொண்டர்க்கு அருளினர். தொண்டர்கள் விரைந்து குழுமி ஒற்றியூரில் உம்பர் பூமழை பொழியுமாறு கண் நிறைந்த கடிமணத்தைக் கடிது ஆற்றினர். பின்னர் அவள் நலம் பருகி ஐம்புலனுணர்வினை ஆரத்துய்த்து அவளோடு வாழ்ந்து வரலானார். அவளைப் பிரிந்து வாழ்வதோ அல்லது அவளோடு புலவி கொள்வதோ ஒருகணமாயினும் ஒரு ஊழிக்காலமாயும், அவளோடு இணைந்திருக்குங்கால் ஒரு ஊழிக் காலம் ஒரு கணமாயும் இருக்கின்றதாம். இதனைச் சேக்கிழார் வாய்மொழி கொண்டு அறியலாம்.

''பண்டு நிகழ் பான்மையினால்
பசுபதி தன் அருளாலே
வண்டு அமர் பூங்குழலாரை
மணம் புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள் வனப்பைப்
புறங்கண்ட தூநலத்தைக்
கண்டு கேட்டுண் டுயிர்த்து உற்று
அமர்ந்திருந்தார் காதலினால்''

பாரதம்:

பாரதம் கூறும் பாஞ்சால மன்னன் மகளாகிய பாஞ்சாலியின் சுயம்வரம் காண்போம். இம் மணமுறை சுயம்வர முறையாகும். இச் சுயம்வரத்திற்குப் பாண்டவர் ஐவரும் பாஞ்சாலநாடு செல்லுகின்றனர். ஐவரகத்தும், அகலாதிருப்பவள் ஆரணங்காகிய திரௌபதை. அவர்கள் செல்லும் நெறிக்கண் கழனிகளும், பூங்காக்களும், அகன்ற வாவிகளும் நிறைந்து

விளங்கின. நெறிக்கண் நிகழ்ந்த நிகழ்ச்சியெல்லாம் அவர்கட்கு நன்னிமித்தமாய் அமைந்து அவர்களை மேலும், மேலும் ஊக்கி நின்றன. அகன்ற பொய்கையுள் நிறைந்த தாமரைகள் முகையலரும் நிலையிலிருக்க, அவற்றைச் சூழ்ந்து வண்டுகள் ஒலித்துக் கொண்டு புறத்தே செவ்வி நோக்கி ஏங்க, ஒரு வண்டு விரைந்து தம் இறகால் வீசியடித்து விரைந்து முகையின் உள்ளே புகுந்து மதுவினை நுகர்ந்து மீண்டது. இது அவர்கள் வழியில் கண்ட முதல் நிகழ்ச்சி. பின்னர் அதே பொய்கையுள் ஒரு மாங்கனி மரத்தினின்றும் முறையாக முற்றி வீழ்ந்தது. பழுத்த கனியையுண்ண விரைந்து பல மீன்கள் கூடின. ஆனால் அவற்றையெல்லாம் தள்ளி ஒதுக்கி ஒருவாளை மீன் இலைகள் கிழிய ஓடிச் சென்று தன் வாயால் கௌவியுண்டது. இது வழியில் கண்ட இரண்டாம் நிகழ்ச்சி. பூக்களில் கரும்பும், புனலில் புள்ளும் செறிந்திருந்தன. மிருகங்கள் எல்லாம் தம் துணையொடு பொருந்த மான் தன் பிணையைத் தழுவ இருந்தநிலையைக் கண்டு சென்றனர். இது மூன்றாம் நிகழ்ச்சி.

''வெறிபடு முளரி மொக்குள்
விரிபத னோக்கிச் சுற்றும்
பொறிவரி வண்டி னீட்டம்
புறத்திருத் திரங்கக் கண்டொன்று
இறகரால் வீசி யுள்புக்கு
இன்மது நுகர்தல் கண்டு
நெறியின் நன்னிமித் தமாக
நெஞ்சுற நினைந்து சென்றார்.'' (1)

''வண்டுறை மருங்கினாங் கோர்
மாங்கனி வீழ்தல் கண்டே
தண்டுறை மீன்களெல்லாம்
தத்தமக் கிரையென் றெய்த
விண்டுறை கிழிய ஓடி
வென்றொரு வாளை தன்வாய்க்
கொண்டுறை வலிமை நோக்கிக்
குறிப்பி னாலுவகை கூர்ந்தார்'' (2)

இந்நிகழ்ச்சிகள், பின்னர்ப் பார்த்திபன் வில்லை வளைத்து மீன் பொறியை வீழ்த்தித் திருமகளன்ன திரௌபதியை மணந்து, பிறரை வீழ்த்தி வெற்றி எய்த வித்திட்டன.

**அருச்சுனன் திருமணம்:**

இதே இலக்கியம் தமிழ்நாட்டுக் களவு மணம் போன்ற கந்தர்வ மணத்தை விளங்க உரைக்கின்றது. வில் விசயனும், செழியன் மகள் சித்திராங்கதையும் மணந்த திருமணம் கந்தருவ மணம். ஒருவரையொருவர் கண்டு அன்பால் ஒன்றிப் பின்னர் அதன் வழி கற்பு மணம் கொண்டனர். தீர்த்த யாத்திரை புறப்பட்ட பார்த்தன் துறவி வேடந்தாங்கி, உண்மை உருவை மறைத்துச் சென்றான். அவ்வாறு அவன் தன் பணியைச் செய்து கொண்டு ஒரு நாள் வேதியர் குழாம் சூழ வேதனையொழித்து அமர்ந்திருந்தான். அவ்வமயம் மின்னற் கூட்டமே பூமியிற் குழுமியது போலத் தோழியர் சூழச் சித்திராங்கதை காமவேள் வணங்க, சிலம்பு அரற்ற, கண்கள் செவியினைத் தொட, தோளைப்புடைவீசித் திருமகளோ எனவியக்குமாறு ஆண்டுத் தோன்றினாள். பச்சை நிறமும் பவள இதழும், வெள்ளெயிறும் கண்ணம்பும், சொல்லமுதும், நாணமும், நகையும், கச்சினுள் அடங்காது திமிரும் கனத்த தனங்களும் பார்ப்போரைப் பரவசமாக்கக் கூடியன. இவைகளைக் கண்டவீரனோ அப்பெண்கொடியின் நலம் நுகரப் பிச்சன் போலாகிவிட்டான். பெறுதற்கரிய தவம் பல செய்து சித்திர வாகனன் பெற்ற மடநல்லாள் சித்திராங்கதை. இவள் தன் மெய்போல் மென்மையான தளிர்களையும், மலர்களையும் பறித்துச் செய்குன்றின்மீது தோழியர் புடைசூழ ஏறியமர்ந்து இயற்கை இன்பத்தில் திளைத்தாள். பார்த்தன் தன் துறவி வேடந் துறந்து காமனும், சாமனும் போற்றும் முன்னைய எழில் உருவம் கொண்டான். பொன்போற் பூத்த சண்பகத்தின் தண் நிழலில் மின்னலிடையாள் கண்ணிற்படத் தன் னெழில் தோற்றி நின்றான். மயிலும், கிளியும் பாடவும், பூவையும் வண்டும் பொலியவும், தமிழும், குருகும் தவழவும் அமைந்த குன்றில் தன் கண்களால் அக்காளையைக் கண்டாள். திருவனைய அவளும், திருமாலை யனைய அவனும் கண்களால் கலந்து உறவாடிக் கருத்தால் ஒன்றினர். அழிந்தொழிந்த அனங்கன் மீட்டும் உயிர்பெற்று இரதியுடன் வாழ்ந்தாலென இருவரும் கந்தருவ முறையால் ஒன்றிக் கடவுளரும் எய்தாக் காமநீத்தத்தில் நீந்தினர். இயற்கைப் புணர்ச்சி எய்திய பின்னர்த்தன்னை இன்னாரென உரைத்து விரைந்துஅனுப்பினன். அவள் தோழிக்கு உரைக்க, அவளும் நற்றாய்க்கு உரைக்க அறத்தொடு நிற்கும் முறையில் கற்பு மணம் கடிதின் நிகழ்ந்தது. இதற்கிடையில் விரக நோயால் வெந்துருகினாள். மலைபடு பொருளாகிய தண்ணிய சாந்தினைத் தழற் குழம்போ என்றும், கடல்முத்தைக் கண்ணீர் முத்தால் பொடித்தும் குழலிசையை நச்சொலியோ என்றும், கலைமதியைக் கண்டு கனல் தானோ என்றும், தனிமை பொறுக்காது தடுமாறுகின்றாள். பாண்டவர் நடுவண் தோன்றிய தோன்றலாகிய பார்த்தன் பாண்டிய மன்னன் அவையை அடைந்தவுடன், அவனையறிந்த மன்னன் 'யான் பெற்ற அமுதனையாள் நினக்கே உரியள் ஏற்றுக் கொள்' என இசைந்து மொழிந்தான். பின்னர்க் கடிமணத்திற்கு உரியதொரு கனிவான நாள் குறித்தார். மற்ற மன்னர்கட்குச் செய்தியறிவிக்க எண் திசை மன்னரும் ஈண்டினர். அர்ச்சுனனுக்கு அணிகள் புனைந்து அழகிய பலகையில் அமர்த்தினர். நங்கையர்கூடி நலங்கனிந்து அணி செய்து அணங்கையொத்த அம்மடந்தையினை மணமகளின் வலப்பக்கம் சேர்த்தனர். இக்காட்சி இந்திரனும் சசி எனவும், சிவனும் உமையெனவும், மாலும் திருமகளும் எனவும். காமனும் இரதியும் எனவும், பலரும் போற்ற அமைந்தது. மறையோர் சடங்கியற்ற, அங்கி சான்றாக வாத்தியங்கள் முழங்கச் சங்கினம் ஒங்க மணம் புணர்ந்தனர். இதனை வில்லியார்,

''சந்தணிபூண் முலையாளும் சதுர்மறையோர்
சடங்கியற்றத் தழல் சான்றாகத்
துந்துபியின் குலம்முழங்கச் சுரிசங்கின்
குழாம் தழங்கத் துலங்க வேட்டார்''
(வில்லிபாரதம்)

## முருகன் வள்ளி திருமணம் :

அடுத்துக் காண்பது வள்ளி-முருகன் கலப்பு மணமாகும். ஆறுமுகச் செவ்வேள் தன் அருக மர்ந்த குறக்குலச் செவ்வியாகிய வள்ளியை அன்பு நோக்கோடு நோக்கும்போது, பண்டை வினைப் பயனால் தன் முன்னுருப் பெற்ற அமரவடிவம் எய்தினாள். இதனை ஆசிரியர் 'கொல் நவில் குறவர் மாதர் குயிற்றியகோலம் நீங்கி, முன் உறு தெய்வக் கோலம் முழுது ஒருங்கு உற்ற தன்றே' என்று நயம்பட நவில் கின்றார். வள்ளியின் எழில்நல உருவினைக் கண்ட உற்றாரும், பெற்றோரும், செவிலியும் ஏனைப் பணிப்பெண்களும் இவள் நங்குலத்தில் தோன்றியது நம்பேறேயாகும் என வியந்து மகிழ்ந்தனர். அந் நன்னேரத்தில் குறவர் குலத் தோன்றலாகிய வள்ளியின் தந்தை, கந்தவேள் கரத்தில் கன்னி வள்ளியின் கரத்தைப் பிடித்துக் கொடுத்து, எம் தவப்பயனால் தோன்றிய இவளை நயந்தளிக்கிறேன் ஏற்றுக்கொள்க எனக் கூறி நீரைத் தாரை வார்த்து அளித்தான். 'இம்மணத்தில் தாரை வார்த்துக் கொடுக்கும்' கன்னிகாதானமுறை இடம் பெற்றுள்ளது.இவ் வமயத்தே நற்றவம் வல்ல நாரதன் வேலனின் மனக்குறிப் பறிந்து மணவணியோடும், மணத் திற்குரிய பிற ஆடை முதலியவற்றோடும் வந்து, அவற்றையெல்லாம் வள்ளியை அணியச் செய்து, முறையால் தீதிலா வகையில் திரு மணம் முடித்தான். வேலவன் மணத்தில் குற வரும், பிறரும் குழுமித் தம் மருகனும் மகளும் இன்றுபோல், என்றும் வாழியர் என்று மலர் தூவி வாழ்த்தினர். தினைமாவும் தேனும், தீம்பலவின் சுளையும், காயும், கிழங்கும் பிற குறிஞ்சி நிலப் பொருள்களையும் இலையிலிட்டு இதனை நுகர்திர்' எனக் கூறித் தம் பரிசிற் பொருளை உரிமையாக்கினர்.

''செந்தினை இடியும், தேனும்
தீம்பல கனியும் காயும்
கந்தமும் பிறவும் ஆக
இலைபொலி கலத்திலிட்டுப்
பைந்தொடி அணங்கும்,
நீயும்பரிவுடன் நுகர்திர் என்ன
வெந்திறல் எயினர் கூற
வியன்அருள் புரிந்தான் மேலோன்'

## நளன் தமயந்தி :

நளன்-தமயந்தி சுயம்வரம் புகழேந்தியால் சுவைபடக் கூறப்பட்டுள்ளது. பலநாட்டு மன் னர்களும் சுயம்வரம் காண வந்திருந்தனர். எங்கணும் ஒரே மன்னர் கூட்டம். மரந்தொ றும் பிணித்த புரவியும், புலந்தோறும் பரப்பிய தேரும் எங்கணும் நகரை அணி செய்தன. கீழ்த்திசையில் கதிரவன் அன்று தோன்றிய நிலை, தமயந்தியின் திருமணம் காணவருபவன் போலிருந்தது. குமுதம் வாயடங்கி ஒடுங்கவும், நளன் தமயந்தி ஆகிய இருவரது நெஞ்சத்தீ அடங்கவும் சூரியன் தேர் ஏறினான். தமயந்தி யின் புன்முறுவலே போதும் என ஆண்கள் எண்ணும் அழகினை யுடையாளுக்கு அணியும், மணியும் புனைவித்தனர். நாளும் கோளும் அறிந்து நவிலும் கணிகன் கூறிய நாளில் நள னுக்கும்-தமயந்திக்கும் கடிமணம் செய்தனர். திருவனைய தமயந்தியின் மார்பகத்தும், தேர் வேந்தாகிய நளனின் ஆகத்தும் புகுந்துஊடுருவு மாறு தன் கரும்புவில்லை வளைத்து அனங் கன் அம்பைத் தொடுத்தான்.

''செந்திருவின் கொங்கையினும், தேர்வேந்தன் ஆகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து— வெந்தீயும்
நஞ்சும் தொகுத்தனைய நாமமலர் வாளி
அஞ்சும் தொகுத்தான் அவன்''

—நள வெண்பா

திருமணம் முடிந்த பின்னர், நளன் அரச வீதியில் தன் மனையாளை உடன் அழைத் தேகும் தோற்றம், மடநாகு உடனாகச் செல் லும் மழவிடைபோல் செம்மாந்த நிலையில் இருந்ததாம் என அழகு சொட்டக் கூறுகின் றார், புகழேந்திப் புலவர்.

## முடிவுரை :

அன்று முதல் இன்றுவரை திருமணங்கள் பல வேறு வகையில் திரிபுற்று, வழக்கு வேறு பட்டு மாறியுள்ள நிலையைக் கண்டோம். எவ் வாறு திருமணம் நிகழினும், குறிக்கோள் இரு மனம் ஒன்றிய முழுமணமாகவே இருத்தல் வேண்டும். ஈருடல் ஓருயிராகவும், இருதலைப் புள்ளின் ஓருயிராகவும், தளிரும் ஒளியும் போல வும் ஒன்றி வாழ்தல் ஒன்றே, திருமணத்தின் குறிக்கோள். அக்குறிக்கோளுடன் நிகழும் திருமணங்கள் வாழ்க! வளர்க!

***

---

# ஓர் இறைவன் உண்டு

*கடற்காட்சி, வான்காட்சி, கார்வரைசூழ் காட்சி,*
*உடற்காட்சி, அவ்வுடல் ஒண்சூல் - படற்காட்சி,*
*உய்த்துய்த்து உணர்ந்தக்கண் ஓர்இறைவன் உண்டு,என்னும்*
*மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்!*

# வள்ளியம்மை திருமணத் தத்துவ நுட்பம்

வித்துவான் திரு. பொன். அ. கனகசபை,
புங்குடுதீவு.

சச்சிதானந்த மயமான சிவபரம்பொருள், துவாதசாந்தமான கந்தகிரியில் சோதி சொரூப மாயிலங்கும். உயிர்களை உய்யக் கொள்ளுங் கைம்மாறற்ற கருணைமிகுதியாலே தடத்தத் திருவுருவங்கொண்டு, திருத்தணிகையில் தனது இச்சா ஞானக் கிரியைகளோடு வெளிவந்து, அருட் குருவாக வீற்றிருந்தருளுவார், சிவபரம் பொருளே இவ்வாறு ஞானதேசிகனாகி வந்து, உயிர்களது மலபரிபாகம், இருவினையொப்பு நோக்கித் திருவருள் பதித்தருளுவார். உயிர் களது பக்குவம் நோக்கித் தேடிவந்து, தீட்சை மூலம் அநாதியே உயிர்களோடு கூடியுள்ள அசுரத்தன்மைகளை நீக்கி, அமரத்தன்மைகள் விளங்கித் தோன்றுமாறு அருள்புரிவார்.

''தெய்வம் சிவமே; சிவனருள் சமயம்

சைவம்; சிவத்தோடு சம்பந்தம்'

என்று உபதேசித்தருளுவார். ஆன்மகோடி களைப் பிறவுலக விடயங்களிற் செல்லும் ஐம் புல இச்சைகளிலிருந்தும் நீக்கி, தன்வீட்டின்ப நெறிபற்றி ஒழுகும் அகவாழ்வுக்கு உரியவராக் கியருளுவார். சிவபரம்பொருளே, அருட்குரு வாகத் திருவுருவங்கொள்ளும் பொழுது திரு முருகன் என்னுந் திருநாமம் பெறுவார். முருகப் பெருமான் மார்ச்சால சம்பந்தம் பற்றி ஞான சற்குருவாகிவந்து, ஞானதீட்சை விதியை அநு சரித்து அத்துவசோதனை மூலம் மல நீக்கஞ் செய்து, ஞான இயல்பான சாத்துவிக உபதேசத் தால் மெய்ஞ்ஞானம் உதிக்கச் செய்து, தம்மை உணர்த்தித் திருவருள்புரிந்த சிவஞானத் திரு விளையாடலே வள்ளித் திருமணமாகும். பக்கு வான்மா வள்ளி, அருட்குரு முருகன், சுத்தாத்து விதமாக ஆட்கொள்ளுதல் திருமணம்.

உயிர்கள் படிமுறையாகச் சித்தாந்த சைவச் செந்நெறியை அடைந்து, நாற்பாதங் களைக் கடைப்பிடித்து, வீடுபெற்று உய்வடை யும் உண்மையினை வள்ளித் திருமணம் உணர்த்துகின்றது. சுத்தாத்துவித சைவ சித்தாந்தத் திருநெறியைச் சுபக்கநெறியால் நிறுவி நிலை நிறுத்துகின்றது. இதனைத் திரு வுளங்கொண்டே கச்சியப்ப சிவாசாரிய சுவாமி களும், கந்தபுராணத்தின் முடிந்த பயனாக, நூலின் இறுதியிலே வள்ளியம்மை திருமணப் படலத்தை அமைத்தருளினார். கந்தபுராணம் முழுவதையும் படித்துப் பெறும்பயனை,வள்ளி யம்மை திருமணப்படலத்தை மாத்திரம் படிப்ப தால் பெறலாம் என்பர்.

வீட்டின்ப நெறி பற்றிய அகவாழ்விலும் இரண்டு வித ஒழுக்க நெறிகளுண்டு. அவற்றுள் ஒன்று பக்குவான்மாவான வள்ளி ஐம்புலவேட ராகிய பந்தங்களை விடமுடியாமலும், அதே சமயத்தில் முருகனாகிய பதியைத் தொடராதி ருக்க முடியாமலும் அவதியுற்ற களவொழுக்கம். மற்றையது சுயநலத்தை முற்றாகத் துறந்துபர நலவேட்கையுறும் உயர்ந்த பண்பாகுங் கற் பொழுக்கம். களவுநெறி வள்ளி திருமணம், கற்புநெறி தெய்வயானை திருமணம். 'கற் பெனப்படுவது களவின் வழித்தே' என்ற கள வியலை, உயிர்கள் உணர்ந்து உய்ய வழிகாட்டு கின்றது வள்ளி திருமணம்.

இறைவனுடைய ஆணை வழியே, உயிர் வினைப்போகத்தைஅனுபவிக்கும்என்றஉண்மை வள்ளியம்மையாரது பிறப்பிலே வைத்துவிளக் கப்படுகின்றது. முருகன் அருளால் வந்த மான் மூலப்பிரகிருதியாகும். விந்து, மோகினி, மான் என்ற மூவகை மாயையில் மான் என்பது மூலப் மூலப்பிரகிருதியைக்குறிக்கும். முருகன்ஆணைப் படி (சுந்தரவல்லி) உயிர், பிரகிருதி மாயா புவனத்தில் அவதரித்தமைதான், மான் வயிற் றில் வள்ளி பிறந்த கதையாகும். பிரகிருதி மாயையில் பிரதிட்டா கலைக்கு அதிபதியான திருமாலுக்கு, அப் பிரகிருதியில் உதித்த வள்ளி மகளெனப்பட்டாள். மால் மகள் மான்மகள் என்று வரும். 'மாமானிடத்தில் மானாகும் அம்மான் மகள்' என்பது கச்சியப்பர் திருவாக்கு.

ஆணையின்படி மாயாகாரிம் ஆயகிய உடம்பிலே உயிர்புகும் என்பதும், அவ்வுடம்பிற் புகுந்தபின் உயிர் தனது பழைய உணர்ச்சிகள் நீங்கப்பெறும் என்பதும்,

'தழை புனைந்து தனதுணர் வின்றியே

உழைவ யின்வந் துதித்தனள் ஒப்பிலாள்'

என்பதால் உணர்த்தப்படுகின்றன. உயிர் கேவல நிலையிற் காரிட்ட ஆணவக்கருவறையிலே தங்கிக் கிடக்கும் உண்மையைக், குழந்தை வள்ளிக் குழியிற் கிடந்த வரலாறுவிளக்குகின்றது. மனமே நம்பிராஜன், மனத்தின் வல்வழி ஒழுகும் ஐம்புலன்களே வேடர். திரோதான சத்தியே நம்பிராஜன் மனைவி. உலகமே நம்பிராசனது வீடு. சிறிதும் அறிவு விளங்காத நிலையில் உயிரானது உலகாயதம் முதலிய புறப்புறச் சமயங்களில் உழலுந்தன்மையை, நம்பிராசனது வீட்டிலே குழந்தை தொட்டிலிற் கிடந்த செய்தி புலனாக்குகின்றது. உயிர் புறச் சமயங்களில் ஈடுபட்டு உழலுதலைச் சிற்றில் புனைதல், சிறு சோறடுதல் ஆகிய விளையாட்டுகள் உணர்த்தின. பேதை பெதும்பைப் பருவங்கள் உயிர் அகப்புறச் சமயம், அகச் சமயங்களைச் சார்ந்து வந்தமையைத் தெரிவித்தன. அம்மையார் பன்னீராட்டைப் பருவம் எய்தியமை, உயிர் சித்தாந்த சைவச் செந்நெறியைத் தலைப்பட்டு வாழத் தொட்ங்கியமையைக் குறித்தது. சிவஞானசித்தியாரும் 'புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும் புகல் மிகுதி வழியுழன்றும்... சோபானக் கிரமத்தில்சென்றால்சைவத்திறத்தடைவர்' என்றே கூறுகின்றது.

உலகபந்தமே திணைப்புனம்; சிவகதியாகிய விளைவுடன் கூடிய ஞானப் பயிரே கதிர்முற்றி நின்ற திணைப்பயிர். தத்துவ சோபானமான ஏணியில் ஏறித் தத்துவாதீதமான பரண்மீது அமர்ந்தார். மாயாமயக்கமான பறவைகள் சிவகதி விளைவுகளுக்கு இடையூறு செய்யாவண்ணம் பஞ்சாக்கர பேதங்களான கவண்கற்களை வீசி ஓட்டினார், தியான யோக நிட்டையில் ஆழ்ந்தார். சர்வஞ் ஞரான குமரநாயகர் அப்பக்குவான்மாவான வள்ளிநாயகிக்கு அருள்புரியத் திருவுளங் கொண்டார். சூக்கும தியானத்தானமான இலாடத் தானம் எனப்படும் திருத்தணிகையில் வந்தமர்ந்தார். தன்னைநோக்கி ஓரடி வைக்கும் உயிர் இருக்குமிடந்தேடி ஆயிரம் அடிவைத்து ஓடிவந்து அருள்புரிபவரன்றோ நம் இறைவன்.

பிரேரகசத்தி தொழிற்படுதலாலே தான் உலகம் ஈடேற்றமடைகின்றது. பிரேரக சத்தி போன்றவர் நாரதமுனிவர். அவர் அம்மையாரின் அருந்தவத்தைக் கண்டு, தணிகாசலத்திற்குச் சென்று, முருகனிடம் விண்ணப்பித்தலாகப் பிரேகசத்தி தொழிற்படுகின்றது. சகலவர்க்கப் பக்குவான்மா வள்ளியம்மையார். சகலவர்க்கத்தாரின் மும்மலங்களையும் நீக்கி ஆட்கொள்ளுவதற்காக முருகப்பெருமான் மானிடச் சட்டை சாத்திக் குருவாக வந்து அருள்புரிவார். அம்மரபு பற்றியே வள்ளியம்மையாருக்கு அருள் புரிவதற்காக முருகப் பெருமான் வேட்டுவக் குமரனாக வந்தருளினார். உயிர்களுக்கு மலபரிபாகம் இருவினை ஒப்பு வருஞ் சமயம் பார்த்து, உபாசனாமூர்த்தி சற்குரு வடிவாகித் திருவருள் பதிக்கத் தேடி வந்தருளுவதையே, முருகன் வேட்டுவக் குமரனாகி வள்ளியிருக்கும் திணைப்புனத்தைத் தேடிவந்த செய்தி தெரிவிக்கின்றது. சற்குரு வானபதி, சீடனான பக்குவான்மாவுக்குக் காட்சிகொடுத்தலேஇயற்கைப்புணர்ச்சியாகும். தீட்சை கொடுக்கும்பொழுது குரு சீடனுக்கு மிக அண்மையில் இருக்க வேண்டும். ஆதலினாலேயே முருகன் வள்ளியிருந்த பரணுக்கு அதி சமீபமாகச் சென்றருளினார். சற்குரு சீடனுக்கு முதற்கண் செய்வது வாசகதீட்சை. வாசகதீட்சையாக 'அமைந்துள்ள பகுதியே தேவியின் நலம்பாராட்டி, அவள் திருவாயிற் கிளவிவேட்டு உரைத்தவை. சோறூட்டுந்தாய் குழந்தையைக் கெஞ்சியூட்டுவதைப் போல, அருளூட்டுந் தாயாஞ் சற்குருவும் பராமுகந் தவிர்த்தி எனச் சீடனைக் கெஞ்சியூட்டுவார். முருகனும், 'பழியொன்றும் நின்பாற் சூழும் பராமுகந் தவிர்தி' என்று வள்ளிபதம்பணிந்தவாறு காண்க.

ஞானாசாரியனைக் கண்டு நன்நெறி தலைப்படப்புகும் உயிரை, ஆறுகோடி மாயா சக்திகள் வேறுவேறு தம் மாயைகள்தொடங்கி அலைக்க முயலும். அவ்விதமே முருகனது அருள்நெறி பற்ற வள்ளி எத்தனித்த பொழுது, அதற்கு இடையூறாக நம்பிராசனும் வேடரும் வந்தனர். ஐம்பொறிகள் தன்னைச் சித்த மயக்கமுறச் செய்து, நிலை கலக்க முயலும் பொழுது, உயிர் தனது வேதாகம சாத்திர நூலறிவால் மனத்தை ஒருவழிப்படுத்தி நிலையிற்பிரியாது நிற்க முயலும். வேடர் வர முருகன் வேங்கைமரமானான் என்றதன் தாற்பரியம் இதுவேயாகும். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும்.

ஆங்கது காலை தன்னில்
அடிமுதல் மறைகளாக,
ஓங்கிய நடுவண் எல்லாம்
உயர்சிவ நூல தாகப்,
பாங்கமர் கவடு முற்றும்
பலகலை யாகத், தானோர்
வேங்கையின் உருவ மாகி
வேற்படை வீரன் நின்றான்

என்ற பாடலால் இக்குறிப்பை அருளிச் செய்துள்ளார். 'மனமே கல்லால் எனக்கன்றோ' என்றார் தாயுமானவர்.

உயிர் தன்னைத் தானறியாத நிலையிலே முருகன் விருப்புரை பகர்ந்தபொழுது வள்ளி இழிகுலத்தவள் என்று தன்னைத் தாழ்த்திக் கூறினாள். உயிர் புலன்களை அடக்கித் தூய தவநெறியிற் செலுத்த ஞானாசாரியன் முயலு

வான். வேட்டுவர் வந்தபொழுது முருகன் விருத்த சந்நியாசியாக வேடங்கொண்டமை இதனை விளங்கச் செய்கின்றது. சிவதீக்கை யில் முதலிற் செய்யப்படுவது திருநீறு வழங்குத லாம். இதன்படியே விருத்த சந்நியாசி, வேட ராசனுக்குத் திருநீறு கொடுத்து அடக்கி ஆசீர் வதித்தருளினார். ஞானாசிரியனுக்குச் சீடன் தனது உடல் பொருள்ஆவிஅனைத்தையும்ஒப்பு வித்து ஆத்துமநிவேதனம் செய்ய வேண்டியது விதி. அவ்விதியை உணர்த்துவதே வள்ளி, விருத்த சந்நியாசிக்குத் தேனும் பழமும் தினை மாவும் கொடுத்த செயலாகும். இரேசக பூர கங்களை அடைத்து ஏகாக்கிரசித்தத்துடன் சுழு முனை வழியே சென்று ஆதார கமலம் ஆறை யும் ஏழாவதான பிரமரந்திர கமலத்தைக் கடந்தால் சந்திரமண்டலம் மூலக்கனலால் சந்திரனை உருகச் செய்ய அமுதஞ் சுரக்கும். இதுவே அமுதசுனை. வள்ளி கூறிய சுனை இதுவே. இறைவன் உயிரோடு அத்துவித மாகக் கலந்து நிற்கும் பேரருள் நிலையையே 'மோகத்தைத் தணித்தியாயின் முடிந்த தென் குறை' என்ற விருத்தர் கூற்று, வெளிப்படுத்து கின்றது. ஞானாசாரியரின் உபதேசம் முழுவதை யும் ஒப்புக் கொண்ட பூர்ணநிலைமையைவள்ளி விருத்த சந்நியாசியை, 'நாவலோய்' என்று அழைப்பதனால் தெரிய வைத்தாள். 'போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்' உயிரை வாசனாமலம் தாக்கும். இவ்வாசனா மலத்தாக்கம் இருந்தமை, வள்ளி விருத்தசந்நி யாசி கூறியதைக் கேட்டு வெகுண்டு கூறுவதி லிருந்தும் விளக்கமாகிறது. தனுவாதிகளைத் தந்து, அறிவு இச்சை செயல்களைவிளக்கவும், அறியாத உயிரின் தற்போத முனைப்புக்கெட, ஞானாசாரியன் பிரணவமந்திர உபதேசம் செய்வார். வள்ளி வெகுண்டு கூறித் தினைப் புனம் நோக்கிப்போக முதியவராகிய முருகன் விநாயகரை முன்வருவாய் எனத் துதித்ததன் பொருள் இதுவே. பிரணவமந்திர உபதேசத் தாலே தற்போதம் அடங்கிய ஆன்மா, எல்லாம் திருவருளின் செயலே தன் செயலன்று எனத் தெளிந்து கொள்ளும். தெளிந்த ஆன்மா கட வுளை முன்னிட்டுத்தான் அவரில் அடங்கி நிற்கும். பிரணவ மந்திரத்தால் ஆன்மா கடவுள் அருளில் அடங்கி நிற்கும் தத்துவம் இதுவாகும். இதனையே கச்சியப்பர்.

''அன்ன தொருகாலை
ஆறுமா முகக்கடவுள்
முன்னொரு சார்வந்து
முதுகளிற்றின் கோடொற்றப்
பின்னொரு சார்வந்து
பிடியின் மருப்பூன்ற
இந்நடு வேநின்றான்
எறுழ்வயிரத் தூணேபோல்

என்னும் பாடலால் விளக்கியருளினார். உயிர் எய்தப்பெறும் சிவதரிசனநிலை, வள்ளியம்மை யாருக்கு முருகன் காட்சிதருதலாற் பெறப்படு கிறது. சிவதரிசனம் பெற்ற பின்னும் எஞ்சி நின்ற பிராரத்த வினைப்பயனை உயிர் அனுபவிக்கவே சீவன் முத்தனாய் உடலோடு இயங்குவான். வள்ளியம்மையாரும் மீண்டும் தினைப்புனம் காக்கச் சென்றசெயல்இதனையே காட்டுகின்றது. திருவருளே பக்குவான்மா வுக்குத் துணையாவதைவள்ளியம்மையாருக்குத் தோழி துணையாவதால் அறியலாம். விசேட தீக்கையே, பாங்கி மதிஉடன்படு வித்ததாகும். இறை அருள்வழிச் சென்ற ஆன்மாவை மயக்க முயலும் பொறிபுலன்களின் இறுதி மயக்க முயற்சியை உணர்த்துவதே, உடன்போக்கிற் சென்ற அம்மையாரை,வேடர்கள்மீட்கமுயன்ற செயலாகும். ஞானாசிரியர் உயிரைப் பொறி புலச் சேட்டைகளுக்கு அஞ்சாது ஞானநெறி யில் உறைத்து நிற்கச் செய்வார். வேடர் வரவை வள்ளி உணர்த்தச் செவிசாய்த்த முருகன், வேலிருக்கின்றது; அஞ்சாது நம்பின் இரு என்றது இதனையே விளக்குவதாகும். சேவல் நாதத்துவம். இறைவன் 'அஞ்சலோம்பு மதி' யென உயிருக்கு அருளிச் செய்தலாகிய தசநாதத்தைச் சேவல் கூவுதலாகிய செய்தி புலப்படுத்துகின்றது. உயிரோடு அனாதியே கூடியுள்ள மலபந்தங்கள் தசநாதங்கேட்டு வலியழிதலைச்சேவல்கூவக்கேட்டதும், வேடர் மயங்கி வீழ்ந்த செயல் தெரிவிக்கின்றது. அதி தீவிர சத்திநிபாதமுற்ற நிலைமை நாரதர் வர வாற் புலப்படுகின்றது. உயிரின் பசுகரணங்கள் சிவகரணங்களாக மாறப்பெறுதலே வள்ளி யம்மை வேடரை மீண்டும் எழுப்பும் செயலாற் காட்டப்படுகின்றது. மிக மேலான நிருவர்ண தீட்சைநிலையே, முருகன்வள்ளியைமுறைப்படி மணம்புரிந்தமையாகும். இதுவே உயிர் பந்த பாசங்கள் ஒழிந்த நிலையில், இறையருள் இன் பத்திற் கலந்து, ஒன்றித் திளைக்கும் சுத்தாத்து வித சித்தாந்த முத்திநிலை. வெட்சிமாலை சூடிய முருகன் வள்ளியம்மையாருடன் தணிகை மலையைச் சார்தல் தெளிவாக்குகின்றது. உபா சனா தெய்வத்தின் தடத்த ரூபத்தை உயிரு ணரச் செய்ததே தணிகை மலையில் நிகழ்ந்த கர்ம சாதாக்கிய சிவபூசையாகும். சீவன்முத் தர், தம்செயலற்று ஞானமயமாய் இறைபணி நிற்றலை முருகன் வள்ளியோடு தெய்வயானை யிடஞ் சென்ற செய்தி உணர்த்துகின்றது. இவ் வாறு உயிர் ஞானத்தால் இறைவனோடு இரண் டறக் கலந்து நிற்கும் முத்திநிலையே வள்ளி யம்மை திருமணச் சித்தாந்தமாகும்.

''மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்து அவனை அறியாது மயங்கி
நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்று அவரிற்
பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப்
பேணுமாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந்
தொல் லுயிரை
மன்னும்அருட் குருவாகி வந்துஅவரின் நீக்கி
மலம்அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ்
வைப்பன்'

—சிவஞான சித்தியார்.

# "மருதம் உகந்த முருகன்"

'சிவநெறிச் செல்வர்'

திரு. சி. நமசிவாயம் பிள்ளை, திருவானைக்கா.

முருகப்பெருமான் யார்? முருகன் இறைவனது திருமகன் என்னும் சிறப்புக்குரியவன். அவனும் முழுமுதற் பரம்பொருளே ஆவான். அவன் எந்தத் தன்மை உடையவன், இவ்வண்ணம் பெற்றவன் என்று எழுதிக்காட்ட இயலாத நிலைமை உடையவன். ஆனால் அத்தன்மை படைத்தபேரருளாளன்அன்பர்களின்பொருட்டு உருவத்திருமேனி கொண்டு, அருள்வடிவம் தாங்கி, அங்கங்கே கோயில்கொண்டு எழுந்தருளுகிறான். அவ்வாறு கோயில் கொண்டருளும் முருகன் குறிஞ்சி நிலமாகிய மலையும் மலைசார்ந்த இடத்தையுமே உகந்து அன்பர்கட்கு அருள்பாலிப்பதாக அருளாளர்கள் சொல்கின்றனர். திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரும்,

'பழமுதிர்சோலை மலைகிழவோனே' என்றும், 'குறிஞ்சிக்கிழவன்' என்றும் அருணகிரிநாதரும் எடுத்துக் கூறுகின்றனர். முருகனுக்கு உகந்த ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை, பழனி திருத்தணி, .பழமுதிர்சோலை ஆகியவைகளும் குன்றுகளேயாகும்.

மறைகளின் முடிவால், வாக்கால், மனத்தினால் நினைக்கொணாத திருமுருகன், சேலார் வயல் பொழில் சூழ்ந்த மருத நிலத்தையும் உகந்து வந்து குடிகொண்டு அருள்புரிகின்றான். முருகன் எழுந்தருளுமிடங்களைத் திருமுருகாற்றுப்படை கூறும்போது, வெறியாடு களங்களிலும், காடுகளிலும், சோலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், நாற்சந்தி முச்சந்திகளிலும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்திலும், ஊர்நடுவில் உள்ள மரத்தின் அடியிலும், மக்கள்கூடும் அம்பலங்களிலும் பசுக்கள் உராய்ந்துகொள்ளும் நடுதறிகளிலும் எழுந்தருளுகிறான் என்று குறிப்பிடுகிறார். இதில் நாம் குறித்தறிய வேண்டியது சோலைகளிலும், ஆறுகளிலும் எழுந்தருளி இருப்பான் முருகன் என்பதேயாகும். சோலைகளும், ஆறுகளும், நிறைந்த வளமான பகுதிகளே மருத நிலமேயாகும். இத்தகைய தன்மை வாய்ந்த வயல்சூழ்ந்த சோலைகள் மலிந்த இடங்களையும் தனக்கு இடமாகக்கொள்வதை முருகப்பெருமான் உகக்கிறான். தமிழ்க்கடவுள் முருகன் மருதநிலம் உகந்து எழுந்தருளும் திருத்தலங்கள் எண்ணரிய தமிழகத்தில் உண்டு. வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்து வற்றாத வளமளிக்க வரமருள மருதநிலம் வீற்றிருக்கும் முருகனின் திருத்தலங்களுள் ஒன்றுதான் வயல்களாலும், சோலைகளாலும் சூழப்பெற்ற வயலூர் என்பதாகும்.

இது முருகனின் அருளை மக்களுக்கு வழங்கும் திவ்வியத்திருக்கூடம். தொன்றுதொட்டு மக்களைப் புனிதப்படுத்திவரும் புண்ணிய நிலையம். வான்கருணையை மண்ணுக்குத் தேக்கி வழங்கும் கருணசாகரமாகும். ஆறு படைவீடுகள் அமைத்து அடியவரின் அறியாமையையும், அசுரத்தன்மையையும் நீக்கும் அருள்ஞானச் செல்வன், வயலூரில் வந்தமர்ந்து அடியவர்களுக்கு ஞான வைராக்கியப்பேறு வழங்குகின்றான். முத்திதரும் திருத்தலமாக வயலூரைக் காட்டி அழைக்கின்றான்.

பன்னரிய பலமருத நிலங்களிலே எழுந்தருளும் எம்பெருமான் முருகன், ஏன் வயலூர் உகந்தான்? ஆறுபடை வீடமர்ந்த அருள்வள்ளல் முருகன் சுவாமிமலையில் தந்தைக்கு உபதேசம் செய்த சுவாமிநாதனாக, தகப்பன் சாமியாகக் காட்சி தருகின்றான். திருச்செந்தூரிலே தேவசேனாபதியாக, சிவபெருமானை மலர்கொண்டு தனித்து நின்று பூசனை செய்யும் சற்புத்திரனாகக் காட்சிதருகிறான் ஆறுமுகவள்ளல். பழயினிலே தண்டாயுதபாணியாக ஞானப்பழமாகக் காட்சிதருகிறான் பன்னிருகையோன். திருத்தணிகையிலே வள்ளி தெய்வானையோடு சிறப்பாக வாழும் குடும்பியாகக் காட்சியளிக்கிறான் வள்ளிநாயகன்.

பழமுதிர் சோலையிலோ குன்றுதோறாடும் குமரனாக அடியார்கட்குத் தன்னை உயர்த்திக்காட்டிக் காட்சிதருகிறான் முருகன். இவ்வாறு குறிஞ்சி நிலமுகந்த முருகப் பெருமான் ஒவ்வொரு மலையிலும் நின்று ஒவ்வொரு கருத்தினை உயிர்கட்கு உணர்த்தி உன்னதக் கொள்கை உடையவனாய் வீற்றிருக்கிறான். அதுபோல் மருதம் உகந்து வந்த முருகன் வயலூர் வந்தருளிய அழகன் ஓர் உண்மையை நமக்கு உணர்த்தவே எழுந்தருளி இருக்கிறான். அது என்ன? தனக்கு முன்னதாகத் தந்தையையும், தாயையும் முன்னிருந்து 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதனை நமக்குப்புகட்ட நாள்தோறும் தாய்தந்தையர் கழல் பணிந்து அருள்பெற்று, நமக்கு அவ்வருளை நல்கும் பாலராகக் காட்சி தருகிறான் மருதம் சூழ் வயலூர் முருகன்.

முருகப்பெருமான் எத்தனையோ தலங்களில் தாய் தந்தையரை வழிபட்டதாக வரலாறு உண்டே, வயலூருக்கு மட்டும் என்ன சிறப்பு என்று கேட்கலாம். தனிச் சிறப்பு உண்டு. அதாவது மற்ற திருத்தலங்களில் தனித்து நின்று தாய் தந்தையரைப் பூசை செய்யும் முருகப்பெருமான், வள்ளி தெய்வ

யானையோடு சேர்ந்து பூசனை செய்யவேண்டுமென்று திருவுள்ளம்கொண்டு, அதற்காகவே வயலூரை உகந்து வந்து எழுந்தருளினான். இதுவே வயலூர் சிறக்க ஒரு காரணமாகிறது. அதுமட்டுமல்ல. எம்பெருமான் முருகன் அடியார்கள் துயரை அணுகவும் பொறுக்கமாட்டான். அதாவது தன்னுடைய குழந்தை கிணற்றில் விழுந்துவிட்டது என்று கேட்டதாய் தன் குழந்தையைக் காக்கத் தானும் எவ்வாறு கிணற்றில் சிறிதும் யோசிக்காமல் குதித்துவிடுவாளோ, அதுபோல அடியார் அல்லல் தீர்க்க ஆபாசமான சேறுநிறைந்த இந்த உலகில் வந்து அடியாரைக் காக்க அறுமுகன் அணுவளவும் தயங்கமாட்டான்.

முருகன் வயலூர் உகந்தமைக்கு இன்னொரு காரணமும் சொல்லலாம். 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதசுவாமிகள் தனது வாலிபப் பருவத்தில் உலக போகங்களில் தடுமாறி, தனது இளமையைக் கெடுத்துப் பிணியுற்று, மனம் நொந்து, திருவண்ணாமலையிலுள்ள வல்லாளமன்னன் கோபுரத்தின் உச்சியிலிருந்து உயிர்துறக்க வீழ்ந்தபோது, அங்குக் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் தனது திருக்கரங்களில் தாங்கிப் பாதுகாத்து அவர் பிணிபோக்குகிறார்; பிரணவ உபதேசமும் செய்தார். தன்னால் உபதேசிக்கப்பெற்ற அத்தகைய அருணகிரியினால் இவ்வுலகம்உய்ய வேண்டுமென வயலூர் உகந்த பெருமான் வயலூரில் எழுந்தருளிச் சிந்தித்தான். அருணகிரிநாதரை வாவென்று அழைத்தான்; அவரது உள்ளத்தில் நிரம்பிவழியும் தனது அருள் வெள்ளத்தைத் திறந்துவிட்டுப் 'பாடு' என்று அருள் சுரந்தான்.

தன்னுடைய திருக்கரம் பட்ட பொன்னுடல் கொண்ட அருணகிரியின் அடிச்சுவடு வயலூரில் பதியச் செய்தான், மருதம் உகந்த வயலூர் முருகன். கன்றின் பசிகண்டு கனிந்தூட்டும் தாய்ப்பசுவைப்போல முருகப்பெருமான் தமது திருக்கரத்தில் இருக்கும் ஞான வேலால் அருணகிரியார் நாவில் பிரணவத்தை எழுதி ''முத்தை'' என்ற மூன்றெழுத்தினை முன்வைத்துப் பாடு எனப்பணித்தான்.

''முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்துக்கொரு வித்துக்குருபர என
வோதும்''

எனத் தொடங்கிப் பாடிய அருணகிரியாரைத் தானுகந்த மருதத் தலமாகிய வயலூருக்கு, அவரையும் வரும்படி கட்டளை இட்டருளினார் வயலூர் முருகப்பெருமான்.

முருகனுகந்த வயலூரை அருணகிரியாரும் மறவாமல் மற்ற தலங்களைப் பாடும்போதெல்லாம் 'வயலூரார்', 'வயலூரார்' எனப்பாடி வயலூரின் பெருமையை விளக்குகிறார். மருத நிலம் உகந்த முருகனால் தாய்தந்தையாரை மனைவியுடன் வணங்கவேண்டுமென்ற தத்துவம் நமக்கு விளங்கியது. மருதநிலமாகிய வயலூரை உகந்த முருகன் உகந்ததால் அருணகிரி என்னும் அருளாளரின் திருப்புகழ் அமிர்தம் நமக்குக் கிடைத்தது.

வயலூர்ப் பெருமான் நமக்காக வயலூரை உகந்துவந்து எழுந்தருளினார். அவரை நாம் உகந்து பக்தி செய்யத் தீராத வினைதீரும்; தீவினைகள் நாடாமல் தடுக்கும், பாவமகலும், புண்ணியம் சேரும். வாருங்கள் வயலூருக்கு, தரிசியுங்கள் முருகனை. ***

# செயல் அலுவலர்கள் நியமனம்

1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45 (1) பிரிவின்கீழ் கோயில்களில் நல்ல நிர்வாகம் நடைபெறுதல் குறித்துப் பின்வருமாறு செயல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்:—

(1) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் வட்டம் மற்றும் நகரம், மஞ்சகுப்பம், அருள்மிகு பகவதி அம்மன் என்கிற கழுத்து மாரியம்மன் கோயில், தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திருவகீந்திரபுரம் அருள்மிகு தேவநாத சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 31-10-1981.

(2) தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், பி. வில்லியனூர் கிராமம், அருள்மிகு நாராயணப் பெருமாள் கோயில், தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், தும்பூர் கிராமம், அருள்மிகு நாகம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 31-10-1981.

(3) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் வட்டம் மற்றும் நகரம், வில்வராயநத்தம், அருள்மிகு வில்வநாதேசுவரர் கோயில், தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திருவகீந்திரபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 31 10-1981.

(4) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், சாத்தூர் கிராமம், அருள்மிகு காசி விசுவநாதசுவாமி மற்றும் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்கள், வட ஆற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கீழ்மின்னல் மதுரா, இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் 31-10-1981.

# நாதன் கோவில் நந்திபுர விண்ணகரம்

திரு. தம்பு. ப. கிருஷ்ணசாமி, கொட்டையூர்.

தீதறு நிலத்தொடு எரி காலினொடு
நீர்கெழு விசும்பும் அவையாய்,
மாசறு மனத்தினொடு உறக்கமொடு
இறக்கை அவையாய பெருமான்,
தாய்செற உளைந்து, தயிர் உண்டு,
குடம்ஆடு
தடமார்வர், தகைசேர்
நாதன்உறை கின்றநகர், நந்திபுர
விண்ணகரம் நண்ணு மனமே!
—பெரியதிருமொழி

முன்னுரை:

திருமாலை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் வைணவர் ஆவர். திருமாலிடம் ஆராத அன்புபூண்டு, பரவசமாகிப் பக்திப் பாடல்களைப் பாடித் தந்த பன்னிரு அடியார் களை ஆழ்வார்கள் என்று வைணவ உலகம் அழைக்கும். இவர்களால் பாடப்பட்ட திருத் தலங்களே திவ்வியதேசங்கள் என்று கொண் டாடப்படுவன. இவை நூற்றெட்டு என்பர். இவற்றுள் சோழநாட்டில் அமைந்துள்ள திருப் பதிகள் நாற்பதில், நந்திபுர விண்ணகரம் என்ற நாதன்கோயில் இருபத்தொன்றாவது ஆகும்.

இருப்பிடம்:

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் கும்ப கோணத்துக்கு அருகே, அங்கிருந்து தென்பால் மூன்று கல் தொலைவிலுள்ளது. இவ்வூரை அடையக் கும்பகோண நகரிலிருந்து நகரப் பேருந்துகள் உள்ளன. முடிகொண்ட சோழப் பேராற்றிற்கும், திருமலைராசன் ஆற்றுக்கும் இடைப்பட்டு, நீர்வளம் நிலவளம் மிக்குவிளங் குகிறது.

இயற்கைநலம்:

ஒரு காலத்தில் அரசப் பெருமக்கள் வாழ் கின்ற பெருநகரமாகத் திகழ்ந்த இவ்வூர், இன்று அமைதியான சிற்றூராகக் காண்கிறது. ஊரைச்சுற்றிலும் பசுமையான வயல்கள், நிழல் மலிந்து குளிர்ந்து விளங்கும் சோலைகள் ஆங்காங்கே இடைப்பட்டுப் பளிச்சிடும் நீா நிலைகள்! இந்நீர்நிலைகளில் நீலமும் நெய்த லும் தாமரையும் மலர்ந்திருக்கும். கயலின மும், சேலினமும் ஊடே நெளிந்தோடும். பல் வண்ணப் புள்ளினங்கள் சுற்றிப் பறக்கும். இச் சிற்றூரைப் பாடிய திருமங்கையாழ்வார் ''நறைசெய் பொழில் மழை தவழும் நந்திபுர விண்ணகரம்'' என்றும், ''வம்பு மலாகின்ற பொழில் பைம்பொன் வருதும்பி மணி கங்குல் வயல்சூழ் நந்திபுர விண்ணகரம்'' என்றும், ''கொம்பு குதிகொண்டு குயில் கூவ மயில் ஆலும் எழிலார்புறவுசேர் நந்திபுர விண்ண கரம்'' என்றும் புகழ்ந்துள்ளார்.

ஊரைச் சுற்றிச் சூழ்ந்துள்ள சோலை களில், கருங்குயில்களும், வண்ணமயில்களும் மிக அதிகம். மயில்கள் நீண்ட கருமேகத்தைக் கண்டால் தோகை விரித்தாடும். மழையும் புழுக்கமும் இடியும், மின்னலும் மயிலுக்கு இன்பம் தருவன. இவற்றைக் கண்டால் ஆனந் தம் மேலிட்டு ஆடத் தொடங்கும், இத்தலச் சோலைகளில் இவை உரியகால உணர்வின்றி நினைத்து நினைத்து ஆடிக் கொண்டே யிருக்கும். காரணம் மரங்கள் செறிந்து நெடியுயர்ந்து வளர்ந்துள்ளதால் சோலைகள் இருண்டிருக்கும். இருட்டை மயில்கள் கார் மேகமாக மருண்டன, மேலும், நகர்ப்புறத்தில் கலைவல்ல மெல்லியலார் நடமாட, யாழும் மழுவும் நன்கதிர, இவ்வொலியினை மேகங்கள் இடிஇடிப்பதாக மயில்கள் மருண்டன. இரு ளினைக் கார்மேகமாகவும், முழவொலியை இடியாகவும், மருண்ட மயில்கள்கூட்டங்கள், மகிழ்ச்சிபொங்க ஆடாதிருக்குமா?ஆடுகின்றன. இம் மருட்சியைக் கூறுமுகத்தால் நாட்டின் நில வளத்தின் உயர்வையும், அகநகரில் இசை யோடு முழவதிர்தலைக் கூறுமுகத்தால் மக்க ளது கலையுயர்வையும், இன்ப வாழ்வையும் ஆழ்வார் நம் மனக்கண்முன் நிறுத்துகிறார்.

''மந்தமுழ வோசைமழை ஆக,எழு
கார்மயில்கள் ஆடு பொழில்சூழ்
நந்திபணி செய்தநகர் நந்திபுர
விண்ணகரம் நண்ணு மனமே!''

சூரிய குலத்தோன்றலான சிபியும், அவன் வழிவழிவந்த சோழ மரபினரும், பின்னர்ப் பல்லவ அரசர்களும்,இந்நகரை விரும்பி இங்குப் போந்து, திருமாலுக்குக் கோயில்எடுத்து, நீண்டவீதிகளையும், மாளிகைகளையும் கட்டி னர். இவ்வூர் இறைவனது திருப்பெயர், நாதன் என்பது. இத்தலம் தெற்கு ஜகந்நாதம் என்றும் சம்பகாரண்யம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு ஆரம்பமாகும் சண்பகக்காடு, மன்னார் குடிவரையில் பரந்திருந்தது. சண்பகமும், வில் வமும் இவ்வூர்த் தலமரங்கள். இத்தலத்தில் தவமியற்றி அகத்தியரும், அதிகாரநந்தியும்,

சிபியரசனும், மார்க்கண்டேயரும் பேறு பெற்றனர்.

திருமாலுடன் ஊடல்கொண்டு பிரிந்த திருமகள், அவனை அடைதற்பொருட்டு, இத்தலத்தில் நந்திபுஷ்கரிணிக் கரையில் ஓர் சம்பக மரத்தடியில் கிழக்கு நோக்கி வீற்றிருந்து தவம் இயற்றினாள். நாராயணன் அவள்முன் தோன்றி, அவளை அங்கீகரித்துத் தன் திருமார்பில் ஏற்றுக்கொண்டான். தவமியற்றிய நாச்சியார் கிழக்கு முகமாகவும், அருள்வரதனான எம்பெருமான் நாதன் வீற்றிருந்த திருக்கோலத்தில் மேற்குமுகமாகவும், காட்சி தருகின்றனர். நாச்சியார் திருப்பெயர் சம்பகவல்லி. இவள் வரம்தரும் அருளுடைய அன்னை. திருக்குளத்தில் நீராடி, ஒரு மண்டலம் கோயிலை வலம்வந்து, பாயசம் படைத்துப்பூசிப்போர்க்கு எல்லாப் பொருளுடன் மக்கட் செல்வத்தையும் அளிக்கின்றாள். இஃது இத்தலத்தோர் இன்றும் கண்டுவரும் அநுபவம். திருப்பாற்கடல் கடைந்தபோது, தோன்றிய திருமகள், இறைவனிடம் அபசாரப்பட்டுப் பிரிந்து, இத்தலத்தில் தவம் புரிந்து மீண்டும் இறைவனை அடைந்து அவனது திருமார்பினை அலங்கரித்தாள். ஆகையினால் இத்தலம் சீநிவாசத் தலம் என்றும், இறைவன் ஆதிசீநிவாசன் என்றும் அழைக்கப்படுகிறார். சிபியினாலே அமைக்கப் பெற்றது இக்கோயில். சூரியகுலத்தின் குலாராதனம். சூரிய குலத்தின் தோன்றலாய தயரதன், தன் குறைதீரத் தன் குல தெய்வமான இந்த நாதனையே வழிபட்டுப்பேறு பெற்றான். அதனால் பெருமாள் இராமபிரானாய்த் திருவவதாரம் செய்து அருளினான்.

ஆழ்வாரும் ''தம்பியொடு தாமொருவர் தன்துணைவி காதல் துணையாக முன்நாள் வெம்பி எரி கானகம் உலாவுமவர்தாம், இனிது மேவும் நகர்தான்'' என்று, கானகமெல்லாம் முன்னம் நடந்து, திரிந்த களைப்புத்தீர இராமபிரான், தங்கள் மூதாதையர்களின் தலமான இங்குவந்து அமர்ந்துளான்போலும் என்கிறார். இராம பிரானது தந்தையருக்கும், முந்தையருக்கும் முந்தையர்கள் விரும்பிக்கட்டிய நகரல்லவா இது! அவர்கள் கட்டுவதெல்லாம் இரண்டு ஆறுகள் இடைப்பட்ட இடத்திலல்லவா! ஆகையினால் ஆராமஞ் சூழ்ந்த ஓரங்கமான இவ்விடத்தை உகந்து, இராமபிரான் இங்கு வந்தமர்ந்தது ஓர் ஆச்சரியமன்று.

திருவரங்கத் திருப்பதியில் அரங்கநாதனைப்பாடி வழிபட்டிருந்த திருமங்கையாழ்வார், வடதிருக் காவேரிக் கரையினின்றும், கிழக்கேவானத்தில் வெகுதூரத்தில் ஓர் சோதிப் பிழம்பினைக் கண்டார். அஃது அவர் மனத்தைக் கவர்ந்தது. கண்டறியவேணும் என்ற அவாவினால் உந்தப்பட்டு, திருப்பேர்நகர் வழியாய், அச்சோதியே வழிகாட்ட, நடந்தவந்து, நந்திபுரவிண்ணகரம் அடைந்தார். சோதிகாட்டித் திருமங்கையாழ்வாரைத் தன்பால் அழைத்துக் கொண்டு, அவரால் தன்னைப் பாடுவித்துக் கொண்டான். திருமங்கையாழ்வார் பாடியருளிய இத்தலப்பதிகம் ஓசைநயம் மிக்கது. படிப்போர் மனதை ஈர்க்கவல்லது.

இத்தலத்துத் திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்தது. அடக்கமான இராச கோபுரம். எடுப்பாக நிவந்தெழுந்த விமானம். நல்ல நேர்த்தியான சுதைச் சிற்பங்கள் நிறைந்தது. மந்தாரவிமானம் என்று அழைக்கப்படுவது. கோபுரத்தின் வழியே நுழைந்ததும் ஓங்கிநிற்கும் கொடிமரமும், பலிபீடமும் காணப்படுகின்றன. முன் கருடாழ்வாரது சந்நிதியையும், முகப்பு மண்டபத்தையும் கடந்து, படிக்கட்டிலேறி, மகாமண்டபத்தை அடைகிறோம். கருவறையில் நாம் காண்பது கண்கொள்ளாக் காட்சி. பளபளவென்று நீலநிற வண்ணனாய் நாற்றோள்களுடன் பூமிதேவியோடு சுகாசனத்தில் இனிது வீற்றிருக்கும் நாதன் எம்பெருமானைக் காணக் கண்கோடி வேண்டும். ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறைகின்ற மார்வகலமும், தோளிலே சாத்திய திருவாழ்வார்களும், அஞ்சலென்ற கரமும், கவித்த திருமுடியும், திருமுகமும், முறுவலுமாய்ப் பெரிய திருமேனியுடன் மூலவர் காட்சியளிக்கின்றார். பெருமாளுக்கு வலப்புறத்தில் வடக்குச் சுவரில் பிரும்மதேவனும், இடப்புறத்துத் தென்சுவரில் மான் மழு ஏந்திக் கூப்பிய கைகளுடன் அதிகார நந்தியும் காணப்படுகின்றனர். முன்னே அரியணையில் உற்சவ மூர்த்தி பொன்னார்மேனியனாய், ஆசானபதுமத்திலே அழுத்திய திருவடியும், அரையில் சுற்றிய பீதக ஆடையும், சங்கேந்தும் இடக்கரமும், ஆழிதாங்கும் வலக்கரமும், அடியாரது அல்லல் தீர்க்க அஞ்சலென்றுஎடுத்த அயல்கரத்துடன் சேவை சாதிக்கிறார். இருமருங்கிலும் திருமகளும் மண்மகளும் வேயர்குல விளக்கும் காட்சிதருகின்றனர். கற்பூர ஆரத்திகண்டு, வெளியே வருகிறோம்.

இக்கோயில் ஐந்து விண்ணகரங்களில் ஒன்று. இதனை இரண்டாம் நந்திவர்மன் கட்டியதென்பர். சரித்திர ஆராய்ச்சியாளர், விசயநகர அரசர்களும் அவர்களுக்குப் பின் வந்த நாயக்க மன்னர்களும் இத்தலத்துத் திருமாலிடம் பக்தி பூண்டொழுகினர். கோவிலின் மகாமண்டபத்தில் விசயரங்க சொக்கநாதர் குடும்பத்துடன் வழிபாடு செய்கின்றனர். இச்சிலைகள் நேர்த்தியானவை. நின்ற நிலையில் இச்சிலைகள் உள.

இத்தலத்திற்கு அண்மையில் கிழக்கே இருப்பது நந்திவனம். அங்கு நந்திவன நாயகி என்ற திருப்பெயருடன், இப்பெருமானின் நாச்சியார் எழுந்தருளியிருக்கிறாள். கவி காளமேகம் பிறந்ததும், வளர்ந்ததும் இவ்வூரில் தான்.

நறைசெய்பொழில் மழைதவழும் நந்திபுர
  விண்ணகரம் நண்ணி உறையும்
உறைகொள்புகர்ஆழி, சுரி சங்கம்அவை
  அங்கைஉடை யானை, ஒளிசேர்
கறைவளரும் வேல்வல்ல கலியன்ஒலி
  மாலைஇவை ஐந்தும் ஐந்தும்,
முறையில்இவை பயிலவல அடியவர்கள்
  கொடுவினைகள் முழுது அகலுமே!

—பெரியதிருமொழி.

***

# ஆவணி மூலநாளில் ஆண்டவனின் அருள்வெள்ளம்

'திருமால்நெறிச் செல்வர்' 'மகாவித்துவான்'
திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார், வி. பூதூர், (தெ.ஆ.மா.)

(துதி)

மாவணி மிக்க சோலை
வாதவூர் ஆளிக் கேற்ற
ஆவணி மூல நாளில்,
ஆண்டவன் அருள்வெள் ளத்தைப்
பாவணி யாகப் பாடப்
பளகுஅறுத் தாட்கொள் வாளால்,
நாவணி இல்லம் கொண்ட
நற்கலை வல்லி தானே!

(நூல்)

அணிவளர் பாண்டி நாட்டினில் அரசாண்டு
அருள்அரி மர்த்தனன் நாளில்
மணிவளர் நீல கண்டனார் அருளால்
வாதவூர் என்னும் நல்லூரில்,
பிணிவளர் பிறவித் துயர்ஒழித் திடுவான்
பெருவிதுப்பு உறுநர்தம் தலமாய்த்
திணிவளர் மறையோர் குலமணி விளக்காய்த்
திகழ்மணி வாசகர் சிறந்தார்!

வேதியர் தமக்காம் ஒழுக்கமும் நிலையும்
மேம்பட விளங்குதல் கேட்டு
நீதியர் புகழும் நிம்பமா லையினான்
நிறைகுணப் பெரியரை வேண்ட
மாதியல் பாகத் திறைவனார் அருளால்
மந்திரத் தலைமைபூண் டருளி,
ஓதிய வாய்மை உற்றவர் வேந்தற்கு
உறுவிழி கவசமும் ஒத்தார் (2)

மழவிடை யவனார் கருணையால் இவர்க்கு
மலபரி பாகம்எய் திடவே
இழவினை யுறும்இவ் வாழ்வினில் வெறுப்புற்று
இரும்பர கதியினை வேண்டி
அழுதழுது இளைத்தே ஆலயத்து ஏகி
அங்கயற் கண்ணினாள் பாகத்து
எழுதரும் வடிவத்து இறைவனை இறைஞ்சி
இருந்தனர் மந்திரத் தொழிலில் (3)

ஆகமப் பொருள்தான் சத்திநி பாதர்க்கு
அன்றிமற் றொருவர்க்கும் விளங்கா
வேகமற்று ஒழிய ஆண்டருள் வேந்தன்
மெய்யருள் கிடைக்கும்நாள் என்றோ?
தாகம்மிக்கு அடைந்தே என்னைஆண் டருளத்
தக்கஓர் குரவனைக் காணப்
பாகினைப் பொருசொல் மங்கைநா யகனே
அருள்எனப் பணிந்தனர் இருந்தார் (4)

இறந்தன போக எஞ்சிய பரியும்
இன்னலுற் றன,பிணி மூப்பால்
அறந்திகழ் கழற்கால் அரசஎன் றிறைஞ்சி
அந்தமந் துரையினர் உரைப்ப,
நிறந்திகழ் வேலோன் நன்றென நினைந்து
வாதவூர் அடிகளை நோக்கிச்
சிறந்தவாம் பரிகள் வேலையந் துறையிற்
சென்றனிர் கொணர்திர் என்றான் (5)

என்றலும் இறைவன் திருக்குறிப்பு உணர்ந்தவ்
இறைவனது ஏவலின் எண்ணம்
ஒன்றிய கருவூ லம்திறந்து ஆங்கே
உறுபொருள் கைக்கொடு கோயில்
சென்றுதம் மலர்க்கை கூப்பி, அங் கயற்கண்
செல்விநா யகஅருள் என்றே
துன்றுபொற் சிவிகை ஏறினர் படைகள்
சூழ்வரத் தொடர்ந்தனர் சென்றார் (6)

வழியெலாம் ஈசன் திருப்பெயர் ஏத்தி
வாய்குளிர்ந்து உள்ளமும் குளிர்ந்து
கழியெலாம் கொண்ட பிறவிவெங் கடலில்
துயர்உறா வணம்அருள் புரியாய்
பழியெலாம் கடத்தும் பரமநா யகனே
பனிமதிச் சடையனே என்று
விழியெலாம் கொளுத்தும் வெயிற்கடம் பலவும்
கடந்தனர் மேவினர் அண்ணல்! (7)

ஆயிடை அமரர் அஞ்சிய நஞ்சை
அணிமிடற்று அடக்கிய ஐயன்
மேயநற் பசியால் நற்குடல் நோயால்
வியன்மனம் நின்றநற் குறையால்
தூயரை ஆட்கொண்டு அங்குஅரு ளாது
தொல்வினைத் தொகைஒத்த தொடர்பால்
நாயகர் ஆகும் இவரைஆட் கொள்வான்
நண்ணினன் தன்உளக் குறிப்பின் (8)

---

* மகாவித்வான் திரு கி.வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள், மிகச் சிறந்த ஒருபெரும் வைணவச் சான்றோர்! நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களை, அரிய பெரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன், இரண்டு முறை பெரும்பொருட் செலவில், பதிப்பித்து வெளியிட்டுதவிய பெரியவர்! வைணவ சமய நூல்களை மட்டுமே யன்றி, நமது பண்டைப் பெருஞ் சங்க இலக்கியங்களையும், சைவ சாத்திரங்களையும் முறையே நன்கினிது துறைபோகக் கற்றுணர்ந்து தேர்ந்த பேரறிஞர்! இது மட்டுமேயன்றி, முத்தமிழ்த் துறைபோகிய உத்தமக் கவிஞர்! சைவம், வைணவம் என்னும் சமயவேறுபாட்டுணர்வு இல்லாது, சமரச ஞானச் சான்றாண்மையாளராகத் திகழும் பெருந்தகையாளர்! ''திருமால் நெறிச் செல்வர்'' என விளங்கும் இப்பெரும் புலவர்—கவிஞர், மாணிக்கவாசகப் பெருமானின் வரலாறு குறித்துப் பாடியுள்ள, சொற் பொருள் வளங்கள் செறிந்த அற்புதப் பாடல்கள், இங்கு வெளியிடப்பெறுகின்றன. —ஆசிரியர்.

கங்கையும் பிறையும் கரந்தசெஞ் சடையும்
கண்ணிலாது எழில்தரும் நுதலும்
மங்கைஉள் ளொளித்த வடிவமும் மானும்
மழுவொடு சூலமும் மறைந்த
செங்கையும் கடவுள் யாவரும் காணாத்
திருமலர்ப் பாதமும் ஆகி
எங்கணும் உறைவோன் அந்தணர் கோலத்து
எய்தினான் வையம்நன் குறவே (9)

(வேறு)

பெருந்துறை என்னப் பேசு
பெருநகர் அதனுள் ஓங்கும்
குருந்துறை அடியின் முன்னாள்
கோலமாம் கல்லா லின்கீழ்
இருந்துறை வதுவே போல
இன்றும்சங் கிருந்தான்; வேதத்து
அருந்துறை காண மாட்டா
அரிவையோர் பாகன் தானே (10)

வாதவூர் ஆளி யார்தாம்
வைகிய சிவிகை ஆங்குப்
போதலும் அடிக ளார்தம்
புந்தியிற் குறிப்புத் தோன்ற
ஆதனேன் உய்ந்தேன் என்றே
அதனினின்று இழிந்தார் போந்தார்
போதுறு விழிநீர் வார்ந்தார்
பொற்கரம் தலைமேற் கொண்டார் (11)

இத்தகு செயலுக் கெல்லாம்
காரணம் யாதென்று ஓர்ந்தார்
வித்தக னார்பால் யாம்முன்
வேண்டிய குரவ னார் எம்
பித்தொழித் திடுவான் இங்கே
பெரிதெழுந் தருள்வர் போலும்
உய்த்துணர்ந் திடுவம் என்றே
உற்றனர் வழிமேற் சென்றார் (12)

ஆங்கெதிர் உற்று நின்ற
ஆலயம் கண்டு போற்றித்
தீங்கற வலஞ்செய் போதில்
திகழ்தரும் மறையோர் கோலத்து
ஓங்கிய குருந்தின் நீழல்
உறுகுரு பரனைக் காணாத்,
தாங்கிய நிலையின் நில்லாத்
தருஎன நிலத்து வீழ்ந்தார் (13)

எழுந்தனர் மீண்டும் வீழ்ந்தார்
இயம்பிட ஒன்றும் தோன்றார்
செழுந்தனம் இழந்தார் பெற்ற
செய்கைபோல் உவகை கூர்ந்தார்
விழுந்தன துன்பம் இன்னே
விளங்கின உணர்வும் என்றார்
தொழும்தனது அடியர்க் காகத்
தோன்றுவான் அருளின் வண்ணம் (14)

என்றும் இவ்வடிவம் காணார்
இன்றுகண் டதனால் அம்ம
ஒன்றல பலவும் அல்ல
ஊமர்போற் பித்தர் போலும்
அன்றவர் செய்கை யெல்லாம்
அறைந்திட யானோ வல்லேன்?
நின்றஅவ் அருள்கண் டோர்தாம்
நிகழ்த்திட வல்லர் ஆவர்! (15)

காந்தம்நேர் இரும்பு போலக்
கங்கையஞ் சடையர் தம்பால்
போந்தனர் போகா முன்னம்
பொருப்பருள் பிடியி னோடு
சேர்ந்தொளிர் களிறுஅன் னானும்
தின்றொழித் திட்ட கன்னல்
வாய்ந்ததோர் கனியே என்ன
வயங்கினான் மகிழ்ச்சி கூர (16)

காந்தம்நேர் இரும்பு போலக்
கங்கையஞ் சடையர் தம்பால்
போந்தனர் போகா முன்னம்
பொருப்பருள் பிடியி னோடு
சேர்ந்தொளிர் களிறு அன் னானும்
தின்றொழித் திட்ட கன்னல்
வாய்ந்ததோர் கனியே என்ன
வயங்கினான் மகிழ்ச்சி கூர (17)

எற்புடைத் துளைகள் தோறும்
ஏற்றினன் என்றும் காணா
அற்புதம் ஆன தூய
அழிவிலா அமுத தாரை
உற்றிட உருகும் உள்ளம்
கொண்டுருச் செய்தால் என்னப்
பொற்புறும் அள்ளூறு ஆக்கை
பொருந்தினன் வையம் போற்ற (18)

இந்நிலை முற்றும் யாரும்
அரிதென இயம்பும் வண்ணம்
அந்நிலை தன்னில் நின்றே
அருள்மணி வாச கத்தால்
பொய்ந்நிலை யோரும் கண்டு
புளகிதம் உற்று மேன்மேல்
மெய்ந்நிலை மேவு மாறே
விரித்தரு ளினரால் ஐயர் (19)

இன்பமே முற்றும் ஆகி
எழில்மொழி மணிகள் தம்மை
முன்புறு பத்தி செய்தே
முழுவடம் என்ன மேவும்
அன்பினில் தொடுத்து அரற்றி
அழுதுசாத் துதல்கண்டு அம்மான்
மன்பெரு நன்மா ணிக்க
வாசகன் நாமம் என்றார் (20)

வேறு

இன்ன நிலையிற் சின்னாள்சங்கு,
இவரை இருத்தி இவர்தம்மால்,
தன்னது அருமை அருள்தெரிப்பான்
சடக்கென்று உருவம் கரந்தனனால்;
முன்னும் பின்னும் யாவர்க்கும்
முற்றும் உணர முடியாத
கன்னி ஒருபாற் கலந்துறையும்
கங்கைச் சடைஎம் கண்ணுதலே! (21)

காணா நிலையைக் கண்டாராய்க்
கருத்து அங்கழிந்து வாய்குளறிப்
பேணா ஆக்கை இருந்தென்னே?
பெயர்த்தி லேனே! மற்றிதனை
வீணாக் கிலேனே! மலையேறி
வீழ்ந்தி லேனே! கடல்வீழ்ந்தும்
நாணாது அழிந்தேன் அல்லனே!
நாறும் தலையைப் பிளந்திலனே! (22)

என்நான் செய்கேன் ? அழித்திடவே
எண்ணும் இந்த நல்லுடம்பும்
அன்னாற்கு உரிய பொருள்அன்றோ?
அறியேன் அந்தோ கெட்டொழிந்தேன்!
முன்நான் முகனும் கண்டறியா
முதலே எனக்கோர் செயல்உண்டோ?
நின்னால் அன்றோ எச்செயலும்
நிகழும்? என்றே அழுதனரால் (23)

மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயற்கண்ணாள்
பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ?
பரமா னந்தப் பழங்கடல் சார்ந்து
ஆவி யாக்கை யான்எனதென்று
யாதும் இன்றி அறுதலே (24)
பொற்புறும் அள்ளூறு

என்றிவ் வாறு பலப்பலவாய்
இருப்பு மனமும் கசிந்துருக
நன்று புலம்பி ஒருவாறு
தெளிவு நண்ணிப் பாண்டியனார்
அன்று தந்த பொருள்எல்லாம்
ஆல யத்துத் திருப்பணிக்கும்
துன்று காதல் அடியார்க்கும்
துணிந்து அன்போடு செலவிட்டார்! (25)

அரசன் தானும் தன்ஏவ
லாளர் தம்மால் நிகழ்ந்ததனைப்
பெரிதும் உணர்ந்து மதுரைக்குப்
பெயர்க உடனே என்னும்மொழி
வரையும் ஓலை விடுத்தனனால்;
வந்த ஓலை கண்டுஇவரும்
பரிகள் தமக்குஎன் உரைப்பதுஎனப்
பரமன் பாதம் பணிந்தனரால்! (26)

அடியார்க் குற்ற துயர்எல்லாம்
அகற்றும் தொழிலே தனதொழிலாப்,
படியார் இடத்தும் எவ்விடத்தும்
பயின்று கரந்த பரமசிவன்,
கடிஆ காய வாணியினால்
கரைந்தார் வரும்ஆ வணிமூலத்து
ஓடியா நல்வாம் பரிகளொடும்
உறுவேம் என்னக் கேட்டனரால்! (27)

அதனை உரைத்தே அரசன்பால்
அவர்போந் திடலும், அவ்வரசன்
மதியின் மிகுந்த ஒற்றரால்
வாவும் பரிமா ஒன்றுமில்லை ;
பதியின் மிகுந்த பெருந்துறையிற்
பார்த்தேம் ஐய எனவுணர்ந்து,
விதனம் மிகுந்து சினம்மிகுத்த
வேந்தன் இவரை வெகுண்டனனால்! (28)

யான்ஆ தரித்த பொருளெல்லாம்
இவுளி கொணர்வான் கொடுபோகி
நானா விதத்தும் செலவழித்தாய்!
நயவஞ் சகனே! நாண்இலியே!
மானார் கரத்து மதிச்சடையோன்
மகிழ்ந்த செயல்என்று எண்ணினையோ?
ஆனாது இதனை அறிகஎன்றே,
ஆங்கு ஏவலர்பால் விடுத்தானால்? (29)

கல்லைத் தலையில் முதுகில்வைத்தும்,
கடிநாண் அதனால் இறுக்குற்றும்
ஒல்லைத் தருவாய் நம்அரசர்க்கு
உற்ற பொருள்என்று உறுத்திவைத்தும்,
அல்லற் படாமே அரவணிந்த
அம்மான் தன்பொன் அடியிணையைப்
புல்லப் பெறும் சிந்தையினாரைப்
பொருளில் சிறைக்கூ டத்திட்டார்! (30)

மறந்தே யுந்தான் தன்கழல்நான்
மறவா வண்ணம் நல்கியஅத்
திறந்தான் என்னே என்றென்று,
சிந்தை செய்தாங் கினிதிருந்தார்:
அறந்தான் வளர்க்கும் மலைச்செல்வி
அமரும் பாகத்து எம்பெருமான்
சிறந்தாங்கு அடியர் மனங்களிக்கத்
திருவுள் ளத்துக் கொண்டனனே! (31)

(வேறு)

ஒருவ ராலும்நன் குணர்ந்திட இயன்றிடா ஒருவ
பெருவரால் உகள் வைகைசூழ் கூடலம் பெரும!
கருவ ராவணம் அடியரைக் காத்தருள் கதியே!
வெருவ ராதெனை ஆண்டருள் விரைவின் என்
றேத்தி! (32)

பொருவரும் சிறைஇருந்தவர் இறைவனைப்
புனைந்தே
ஒருவருந் துயர்என்னதோ? நின்னதே! உன்னை
மருவி னோர்க்கும்ஓர் துயரம் மருவுமோ? மதிசேர்
அரவ வேணியனே அரனே என அழுதார்! (33)

ஆவணித்திரு மூலமும் அடுத்தது; இவ்வடிகள்
ஓவிலாத் துயர் ஒழிந்திடு மாறும், வேந்துள்ளம்
மாவியப் பினில் ஆழவும், வல்லவர் மனங்கள்
தாவி இன்பினில் மூழ்கவும், நினைந்தனன் சதுரன்
(34)

சம்பு வாய்உலகு அளிப்பவன், கானிடஞ் சார்ந்த
சம்பு வாகிய யாவையும் கூட்டியே, சதுரால்
நம்பு வாம்பரிந்து இற்றது நம் துயர்என்ன!
நம்பு வாம்பரி ஆக்கினன் கூடல்நன் நகரில் (35)

இகல னார்மகிழ்ந்து ஏறுதற் கரியவை எனுமாறு
இகல னார்எனும் இவுளிகண்டு இன்பம்எய்தினரால்
பகலனார் எனும் பாண்டியன் பக்கலிற் பணிந்தே
பகலனாய் இவண் வாசிகள் பரந்தன என்றார்(36)

கண்ணினுக் கின்பம் அளிப்பன; கருத்துக்கும்
அஃதே!
பண்அமைத்தன; எழில்எலாம் படைத்தன;பரந்த
மண்ணில் மிக்கன; மனம்எனத் தாவுவ; வானோர்
எண்ணிடத் தகும் உருவின, பாய்பரி இவுளி! (37)

வெள்ளை வெண்மதிக் குலத்தவன்
கண்டனன் வியந்தான்
வள்ளல் மாதொரு பாதியன்
அருட்செயல் வாழ்த்தி
உள்ள வாறுணர்ந் திடும்அரசு
அல்லனோ? உலகில்
கள்ளம் இல்லவர் உணர்குவர்;
பிறர்உணர் கிலரே (38)

எண்ணி லாப்பெரு வீரர்கள்
இலங்குஉளைப் பரியோடு
எண்ணி லாமதி வேந்தன்முன்
உற்றனர் இயைந்தே
பண்ணி லாமறைப் பாய்பரி
ஏறிநம் பரமன்,
பண்ணி லாமிசை எங்கணும்
பரந்திடப் பரந்தான் (39)

என்னது யான்எனும் செருக்கினை
ஒழித்தவர் ஏத்தும்
மன்ன வன்மறைப் பாய்பரி
இவர்ந்துமுன் வரலும்,
தென்னவன் விரைந்தெழுந்தனன்
இறைஞ்சினன் திகைத்தான்
நன்னர் நம்செயல் யாதென
நாணினன் நயந்தான் (40)

உலகெலாம் விளையாட் டிடம்
எனக் கொளும் ஒருவன்
மலம்மிகுத்த நம் முன்வரின்
வணக்கமும் வராதோ!
புலவர் கண்டவாற் றால் தனது
உலகெனப் பொருந்த
இலகும் ஈசனார் நம்பவ
நாசனார் இயல்பே (41)

தொடரும்

# ஆயர்பாடி அணிவிளக்கு

திரு. ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

"கண்ணன் கழல் இணை
நண்ணும் மனம்உடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே"

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில், எம்பெருமான் கழலிணை என்று சொல்லவேண்டிய இடத்து, அவனுடைய வேறு திருநாமங்களைக் கூறாமல், கண்ணன் என்ற திருநாமத்தை எடுத்துக்காட்டினமைக்குக் காரணம் என்ன? அடியார்கட்காகத் தூது சென்றும், திருத்தேர் கடவியும் எளியனாந் தன்மையைக் காட்டினவன் கண்ணன் அன்றோ? "சார்வே தவ நெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்று இவர் சொன்னதையே நினைந்து 'கண்ணன் கழலிணை' என்கின்றார். இவ்விடத்தில்,

"பிராட்டியும் அவனும் விடினும் திரு
வடிகள் விடாது திண்கழலாயிருக்கும்"

என்ற முமுட்சுப்படியின் வாசகம் நினைவு கூர்தற்பாலது. சேதனன் உபாயமாய்ப் பற்றுதற்கு இன்றியமையாதனவான எம்பெருமான் திருவடிகள்-கழல்இணைகள்-அவனிலும் பிராட்டியாரிலும் சிறந்தனவாகும். அவர்கள் கைவிடினும் இவை என்றும் விடாமல் உறுதியுடையயனவாக இருக்கும். இதனைத் தம் திருவுள்ளத்தில் கொண்டே ஆழ்வாரும்,

"வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே"

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். சேஷபூதனுடைய சொருபத்தை நோக்கினும்அவன் இறங்குந்துறை இறைவனின் திருவடிகளேயாகும். இதனைப் பிள்ளை உலகஆசிரியர் ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவர்.

"சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை,
ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப்
போலே"

என்பது முமுட்சுப்படி வாசகம். பாலுண்ணும் பச்சைக் குழவி எங்ஙனம் தாயினுடைய மற்ற உறுப்புகள் யாவையும் விட்டு, தான் உயிர் வாழ்தற்கிடனாய் உள்ள அவள் கொங்கையிலே வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே சேஷியாகிய ஈசுவரனைப் பற்றப் புகும் சேஷபூதனும், எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டு, தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முற்கூறிய செயல் எவ்வாறு குழந்தைக்கு இயல்போ, அவ்வாறே பிற்கூறிய செயலும் சேதனன் செயலுக்கு இயல்பாய் அமைந்ததாகும்.

இறைவனுடைய திருப்பெயரைச் சொல்வதற்கு அதிகாரம் தேட வேண்டா; ருசியுடையார் எல்லாரும் அதிகாரிகள் ஆவர். எண்ணும் திருமந்திரம் என்னாமல், நாமம் என்றது இதற்கு ஓர் அதிகாரி நியமம், அங்கநியமம் வேண்டா; குழந்தை தாய் பேரைச் சொல்லுமாப்போலே சொல்ல அமையும் என்கைக்காக. 'அம்மே' என்கைக்கு எல்லாரும் அதிகாரிகளன்றோ? இடறிவிழும் நிலையிலுள்ளவன் 'அம்மே' என்று சொல்வதைப் போலவே இதுவும். இவ்விடத்தில் ஒரு வரலாறு: "நஞ்சீயர் பராசர பட்டரை நோக்கித் திருநாமம் சொல்லும்போது பக்தியுடையனனாய்க் கொண்டு சொல்ல வேணுமோ?' என்று கேட்க, அதற்கு அவர் 'கங்கையிலே முழுகப் போனவனுக்கு வேறு ஓர் உவர்க்குழியிலே முழுகிப் போக வேணுமோ?' என்று அருளிச் செய்தனராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்.

கனத்த பேற்றுக்கு இவ்வளவு போதுமோ? என்று சிலர் ஐயுறக் கூடும் என்று நினைத்துத் 'திண்ணம்' என்கின்றார். நாராயண என்றுகூட சொல்லாமல், நாரணமே என்ற ஏகாரத்தாலே பிரணவம், ந்மஸ்ஸு சதுர்த்தி (நான்காம் வேற்றுமை) ஒழியவும் இத்துணையே போதும் என்கின்றார். இவ்விடத்தில் நம்பிள்ளை ஈடு; "நாரணம் என்று இல்லாத மகாரத்தைக் கூட்டி உள்ளவற்றைக் குறைத்துச் சொல்லுகையாலே, அளத்தில் பட்டதெல்லாம் உப்பாமாப் போல இத்தோடே கூடினதெல்லாம் உத்தேசியம் என்றும், குறைந்தாலும் 'அங்கம் தப்பிற்று ஸ்வரம் தப்பிற்று' என்று ப்ரம்ம ராட்சசப்

பேய்நிலைக்குப் போக வேண்டுமவற்றைக் காட்டிலும் இதுக்குண்டான வாசி (பெருமை) சொல்லுகிறதாயிற்று

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழிட்டவண்ணம் திருவாய்ப்பாடி போகச் சித்தமாகின்றோம். திருவாய்ப்பாடி கண்ணன் நந்தகோபன் வீட்டில் வளர்ந்த இடமாகும். இத்திருத்தலம் யமுனையின் வடகரையிலுள்ளது. சுமார் இரண்டு கிலோமீட்டர் அகலமுள்ள ஆற்றைக் கடந்துதான் செல்லவேண்டும். இவ்வாறு சென்றால் 6 கி.மீ. தொலைவு. பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டுமாயின் சுமார் 9 கி.மீ. தொலைவு செல்ல வேண்டும். இங்ஙனம் செல்லுவதற்குப் பேருந்து வசதிகள் உண்டு. தோங்காவிலும் போகலாம். ஆயர்பாடி(கோகுலம்) ஒரு சிறிய ஊர்; வடமதுரையில் தென்கிழக்கில் உள்ளது. கிருஷ்ணன் தன் பிள்ளைப் பிராயத்தைக் கழித்த இடம்தான் இது என்பதற்கு யாதொரு விதமான அறிகுறியும் தென்படவில்லை. பண்டாக்கள் பழங்காலம் தொட்டே உள்ள இடங்கள் என்று காட்டுபவை நம்பத்தக்கவை அல்ல. இங்ஙனம் அடையாளங்களே இன்றிப் போனமைக்கு முகம்மதியர் படையெடுப்பால் பல இடங்கள் பாழானமையே காரணம் என்று கொள்ளலாம். மேலும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களும் இன்று இங்கு இருப்பனவாகத் தெரியவில்லை.

இங்குள்ள திருக்கோயில்கள் யாவும் வைணவத்தில் வல்லபர்கள் என்ற பிரிவைச் சார்ந்தவர்களால் கட்டப்பெற்றவை. திருக்கோயில்கள் யாவும் பாலகிருஷ்ணனுக்காகவே எழுந்தவை. இந்திக் கவிஞர் துளசிதாசரைப் போலவே, பிறவிக்குருடரான சூர்தாஸ் என்ற கவிஞரும் வல்லபாச்சாரியாரின் சீடர். இது இங்குள்ள நவநீதகிருட்டிணரின் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றபோது, இவர் சந்நிதியில்தான் முதல் பாடலைப் பாடியதாகச் சொல்லப்பெறுகின்றது. இவரும் துளசிதாசரைப் போலவே புகழ்பெற்ற பெருங் கவிஞராவார். ஆயர் பாடியை நினைக்கும்போதே கண்ணன் விளைத்த சிறு குறும்புகளும் அதிமானுட சேஷ்டிதங்களும், அவனுக்குக் கம்சனால் விளைவிக்கப்பெற்ற பேரிடர்களும், அவற்றை வியத்தகு முறையில் அவன் சமாளித்த முறைகளும், இவை ஆழ்வார்கள் மனத்தைக்கவர்ந்த நேர்த்தியும், இவற்றை அவர்கள்தம் பாடல்களில் குறிப்பிட்ட அழகும், நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. எல்லாவற்றையும் எடுத்துக்காட்ட இயலாவிடினும் ஒரு சிலவற்றை மட்டிலுமாவது ஈண்டுக் குறிப்பிடுவோம். அவற்றில் ஆழங்கால்படுவது ஒருவித பகவதநுபவம் ஆகும் அல்லவா?

**வெண்ணெய் உண்ட வரலாறு :** இந்த வரலாறு பல நிகழ்ச்சிகளைக் கொண்டவை. வெண்ணெய் களவு செய்கின்ற தன்னை யசோதைப்பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாள் என்று கண்ணன் இல்லத்திலுள்ள கயிறுகளையெல்லாம் துண்டு துண்டாக அறுத்து வைத்திடுவன். யசோதைப்பிராட்டி அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறு வடிவமாக்கி அதுகொண்டு கண்ணனைக் கட்டுவாள். முடிச்சுகள் உடலை உறுத்தி வருத்துமே என்றும் வருந்துவாள். இதனை மதுர கவிகள்,

''கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன்''

என்று அநுசந்திக்கின்றார். இவர் குருகூர் நம்பி நம்மாழ்வாரைத் தவிர, வேறு தெய்வத்தை அறியாத குருபக்தர்.

பல சிறு துண்டுக் கயிறுகளை முடிபோட்டு ஒரு பெரிய கயிறாக்கினமைபற்றித் தாம்புக்குக் கண்ணி என்ற அடைமொழி வந்தது. 'நுண்சிறு' என்ற அடைமொழிகள் தாம்பின் சுற்றளவிலும் நீட்டளவிலும் உள்ள சிறுமையைக் காட்டும். இப்படிப்பட்ட தாம்பினால் கட்டும்போது தன் உடலுக்கு நீளம் போதாத அச்சிறு கயிற்றினால் தன்னைக் கட்ட முடியாதபடித் தன்னைத் தப்புவித்துக் கொள்ளலாமாயினும் தனது சௌலப்பியம், சௌசீல்யம், ஆச்ரித பாரதந்திரியம் முதலான சீலங்களை வெளியிடுவதற்கென்றே மானுடனாக அவதரித்திருக்கின்றமையினால், உடலோடு கட்டுண்டிருக்கை முதலான இவ்வகைகளால்தான் அத்திருக்குணங்களை விளங்கச் செய்துகொள்ளவேண்டுமென்று, ஒரு சுற்றுக்குப் போதாத தாம்பு இரண்டு மூன்று சுற்றுகளுக்கும் போதுமான உடலைச் சுருக்கிக் கொண்ட அற்புதம் 'கட்டுண்ணப் பண்ணிய' என்ற சொற்றொடர் நயத்தால் போதரும். கட்டுண்ட என்னாது கட்டுண்ணப்பண்ணிய என்றதனால் தன்னைக் கட்டுவதற்குத் தானே இசைந்து போந்தமையை நன்கு விளங்கச் செய்கின்றார். இதற்கு நஞ்சீயர் அருளிச் செயல்: ''ஆச்ரிதர் கையாலே கட்டுண்ணாவிடில் சீலத்துக்குப் போராது. அநாச்ரிதரைக் கட்டாவிடில் (சம்சாரத் தலையில் அழுந்தச் செய்யாவிடில்), பிரபாவத்திற்குப் (பெருமைக்குப்) போராது. ராஜாவானவன் எதிரிகளைக் கட்டி வைக்கையும் பும்ஸ்த்வம்(பெருமை). தன் மகிஷியின் (துணைவியின்) கையில் பூமாலையாலே கட்டுண்டு கிடக்கையும் பும்ஸ்த்வம். பரமபுருடன் கர்மவசியரான நம்போலியரைப்போல் பிறந்தவாறும், பசி உண்டாகி நவநீதம் முதலியவற்றை விரும்பிய வாறும், அவற்றை இடுவார் இல்லாமல் களவு வழியிலே பெறுகையும், அவற்றைச் சடக்கென விழுங்கிவிட்டு மறைதுக்கொள்ளமாட்டாமல் வாயது கையதாக அகப்பட்டுக்கொள்கையும், இடக்கை வலக்கை அறியாதவர்கள் கையாலே கட்டுண்கையும், சம்சார பந்தங்களை யெல்லாம் தவிர்க்க வல்லவனான தான்,இந்தப் பந்தத்தைத்தவிர்த்துக்கொள்ள மாட்டாதவனாகி ஏங்கி ஏங்கி அழுகையுமாகிற இவையெல்லாம் என்ன ஆச்சரியம் என்பார் 'பெருமாயன்' என்கின்றார். இவனுடைய மேன்மைக்கு எல்லை காண முடியுமாயினும், நீர்மைக்கு எல்லை காண முடியாது என்பது இவற்றால் போதரும்.

நம்மாழ்வார் ஏனைய அவதாரங்களை விட, கிருஷ்ணாவதாரத்திலே அதிகமாக ஈடு பட்டவர். அதுவும் வெண்ணெய் களவாடி ஆய்ச்சியர் தாம்பினால் உரலினிடை ஆப்புண்டி ருந்த நிலையை,

''மத்துஉறு கடைவெண்ணெய் களவினில்
உரலிடை யாப்புண்டு
எத்திறம், உரலினோடு இணைந்திருந்து
ஏங்கிய எளிவே''

என்று அநுசந்தித்து, ஆறுமாதம் மோகித் திருந்தவராதலால், அந்தச் செயலை நினைந்து போற்றுகின்றார் மதுரகவிகள். 'அன்னையாய் அத்தனாய்த் தன்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன் நம்பி' என்று உறுதி கொண்டவ ரன்றோ இவர்? திருமங்கையாழ்வாரும் இந்த நிகழ்ச்சியை,

"உறிஆர்ந்த நறுவெண்ணெய்ஒளியாற்சென்றங்கு
உண்டானைக் கண்டு, ஆய்ச்சி உரலோடு
ஆர்க்கத்
தறிஆர்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனிமல்கும் தன்மையானை"

என்று அநுபவித்துச் சிதிலமடைவர். பெரியாழ் வாரும் இந்தச் சிறு சேவகத்தை நினைந்து,

பொத்த உரலைக் கவிழ்த்து அதன்மேல் ஏறித்
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறு ஆர விழுங்கிய அத்தன்''

என்று அனுசந்தித்து அகம் மிக மகிழ்வர்.

வெண்ணெய், தயிர் இவற்றைக் களவாடி யுண்ட நிகழ்ச்சி பல்வேறு விதமாகச் சித்திரிக் கப்பெறுகின்றது. ''தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கிய'' கண்ணன் பிடிபடுகின்றான். தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடித் தயிருண்ட வாய்துடைந்த மைந்தன், அந்தத் தயிரை மறைப்பதாகத் துடைத்துக்கொள்ளத் தொடங்கி, வாய்நிறையச் சுற்றிலும் பூசிக் கொள்வன். பிறகு யசோதையால் அடிபட்டு அழுவன். அஞ்சினாற்போல் நோக்குவன். வாய் துடிக்கும்படி விக்கி விக்கி அழுவன். இறுதியாக அஞ்சலி பண்ணுவன். இந்த நிகழ்ச்சிகளையும் இவைபோன்றவற்றையும் நினைந்து குலசேகரப் பெருமாள், தேவகி புலம்பலாக,

''முழுதும் வெண்ணெய் அளைந்தொட்
டுண்ணும்
முகிழ்இ ளஞ்சிறு தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற்கு
எள்கும்
நிலையும், வெண்தயிர் தோய்ந்தசெவ்
வாயும்
அழுகையும் அஞ்சி நோக்குமந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப்பதுவும்
தொழுகை யும்இவை கண்ட அசோதை
தொல்லை யின்பத் திறுதிகண்டாளே''

ததிபாண்டன் வரலாறு : கண்ணபிரானின் அற்புதச் செயல்களில் ததிபாண்டனுக்கும், அவன் தாழிக்கும் வீடுபேறு அளித்த வரலாறும் ஒன்று. கண்ணன், இளம் பருவத்தில் ஒருநாள் வெண்ணெயைக் களவாடியதை யசோதை நேரில் கண்டுகொண்டாள். பிள்ளையைத் தண் டிக்க எண்ணி அப்பிரானைப் பிடித்தற்கு ஓடி னாள். கண்ணன் அதற்கு அஞ்சியதுபோல் நடித்துத் தாயின் கைக்கு அகப்படாமல் தப்பித் ததிபாண்டன் என்னும் இடையன் வீட்டில் புகுந்துகொண்டான். அவ்விடம்நோக்கி யசோதை விரைந்து வருதலறிந்து, தன்மேல் தயிர்த் தாழியைக் கவிழ்த்துச் சிறிது நேரம் ஒளித்து வைக்குமாறு வேண்டினன் கண்ணன். ததிபாண்டனும் அங்ஙனமே செய்து தாழியின் அருகில் இருந்தான். பிள்ளையைத் தேடிவந்த யசோதைப்பிராட்டி அங்கிருந்த ததிபாண்ட னிடம் கண்ணன் வந்த செய்தியை உசாவ, அவன் ''இங்கே கண்ணன் இலன்'' என மறு மொழி தந்தான். ''வீட்டுக்கு வரட்டும், ஒரு கைபார்க்கிறேன்'' என்று முணுமுணுத்துக் கொண்டுவீடுதிரும்பினள் யசோதைப்பிராட்டி.

அவள் ஏகினதும் ததிபாண்டன் கண் ணனை வெளிவிடாமல் தான் மூடிய தாழியின் மீது சடக்கென ஏறி உட்கார்ந்து கொண்டான். உள்ளிருந்த பெருமான், தாய் சென்றுவிட்டமை யால் தன்னை வெளிவிடுமாறு வேண்டினன். இடையனோ பல பிறவிகளில் செய்த பெருந் தவப்பேற்றால், அவனைச் சர்வேசுவரனேயாகக் கருதி, ''எனக்குத் தேவரீர் வீடுபேற்றை நல்கி னாலன்றி வெளியில் விடேன்'' எனக் கூறித் தாழியை முன்னிலும் பலமாக அழுத்திக்கொண் டான். கண்ணன் அவன்மீது கருணையுடையவ னாய் ''உனக்கு வீடுபேறு தந்தேன்; இனி என்னை வெளிவிடுக'' என்றனன். தனக்கு அருளிய பெறற்கரிய பேற்றுக்கு மகிழ்ந்தன னாயினும், வேறொரு சிந்தையுடையவனாய், மீண்டும் தாழியை அழுத்திக்கொண்டே இருந்த னன். கண்ணன் இடையனை நோக்கி ''ஏன் காலம் தாழ்த்துகின்றாய்? என்று வினவ, இடை யன் தேவரீர் திருவருள் அடைவதற்குக் காரண மாக இருந்த இந்தத் தாழியைத் தனியேவிட்டு நீங்கேன். இதற்கும் யான் பெற்ற பேற்றினை அளித்தருள்க என்றனன். இடையன் தன்னிடம் காரியம்கொள்ளும் திறனுக்கு வியந்து, தாழிக் கும் வீடுபேறு தந்தேன் என்று அருளிச் செய்த னன். ததிபாண்டனும் மூடிய அத்தாழியை நீக்கிக் கண்ணனை வெளியேறவிட்டு, தாழி யுடன் வீடுபேறடைந்தனன். இந்நிகழ்ச்சியைத் திருவுளங்கொண்டு திவ்வியகவி பிள்ளைப்பெரு மாள் அய்யங்கார்,

''சிந்திக்க நெஞ்சில்லை; நாவில்லை
நாமங்கள் செப்ப; நின்னை
வந்திக்க மெய்யில்லை; வந்திருபோது
மொய்ம்மா மலர்ப்பூம்
பந்தித் தடம்பொழில் சூழ்அரங்
கா! ததி பாண்டனுன்னைச்
சந்தித்த நாள்முத்தி பெற்றதென்
னோ? தயிர்த் தாழியு மே''

என்று பாசுரம் அருளிச் செய்தனர். பண்டங் களைக் கொள்ளுதற்கன்றி உன்னைச் சிந்தித் தற்கு உதவாத நெஞ்சையும், உள்ளவற்றை

வெளியில் விடுவதற்கன்றித் திருநாமங்களைச் செப்புவதற்குதவாத வாயையும், நின்னைத் தாழ்ந்து வணங்கத் தகாத மேனியையும் உடையதாய் அசித்தாயிருந்ததொரு பாண்டமும் வீடுபெறச் செய்தது உன் பெருங்கருணை எனின், இவை எல்லாம் உடைய சித்தாய் இருக்கும் எம்போலியர்க்கு அது வாய்க்காதது என்னோ?'' என்று அய்யங்கார் அங்கலாய்க்கின்றார். திருக்கோளூர் பெண்பிள்ளையொருத்தி இராமாநுசரை நோக்கி, ''இங்குண்டு என்றேனோ பிரகலாதாழ்வானைப்போலே; இங்கில்லை என்றேனோ ததிபாண்டனைப்போலே'' என்று கூறிய வார்த்தையையும் நினைக்கின்றோம். ஆசாரிய இருதயத்திலும் அதன் வியாக்கியானத்திலும் இச்செய்தி வருகின்றது.

**மருதமரங்கள் முறித்த வரலாறு :** குழந்தைப் பருவமுள்ள கண்ணன் துன்பத்துக்கு உள்ளாக்கும் பல திருவிளையாடல்களைச் செய்யக் கண்டு சினங்கொண்ட யசோதைப்பிராட்டி அவனைத் திருவயிற்றிற் கயிற்றினால் கட்டி ஓர் உரலில் பிணித்து விட்டாள். கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அவண் இருந்த இரட்டை மருதமரத்தின்நடுவே எழுந்தருள, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பெற்றதனால், அம்மரங்கள் இரண்டும் முறிந்து விழுந்தன. உடனே முன் ஒரு கால் நாரதமுனிவரின் சாபத்தினால்அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்ரீவன் என்னும் குபேரபுத்திரர்கள் இருவரும் சாபந் தீர்ந்து சென்றனர். இதனை, ''இருங்கைமாகரி முனிந்து'' என்ற பாசுரத்தால் திருமங்கையாழ்வார் பல நிகழ்ச்சிகளுடன் சேர்த்து அனுசந்திக்கின்றனர். நம்மாழ்வார் கண்ணனின் சிறுசேவகங்களை அநுபவிப்பதில் எல்லைகடந்த இன்பம் அடைகின்றார்.

**வையம் ஏழும் கண்ட வரலாறு :** ஒருநாள் கண்ணன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனன். கண்ணன் மண்ணைத் தின்றதாகப் பலராமன்மூலம் கேள்வியுற்ற யசோதைப்பிராட்டி ஓடிப்போய்க் கண்ணனை வாரியெடுத்துக் கொண்டு இல்லத்தினுள் ஏகி, ''ஏன் மண்ணைத் தின்றாய்?"என்று அச்சுறுத்தினாள். கண்ணனோ ''அம்மா நான் மண்ணைத் தின்னவில்லை; அண்ணன் வேண்டுமென்றே கோள் சொல்லுகின்றான்; என் வாயைப் பார்'' என்று வாயைத் திறந்து காட்டினன். யசோதை அந்த வாய் வழியாகக் கண்ணனின் திருவயிற்றில் வையம் ஏழினையும் கண்டு வியப்புற்றாள். இவன் ஆயர் மகன் அல்லன்; அருந் தெய்வம்' என்று அறுதியிட்டனள். சிறிது நேரத்தில் அந்தமயக்க நிலை மாறித் தன்னுடைய மகனாகவே எண்ணிக் கொண்டாள். இந்நிகழ்ச்சியைப் பெரியாழ்வார்,

''கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித் தாளுக்கு அங்காந்திவ்
வையம் ஏழும்கண் டாள்பிள்ளைவாயுளே''

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். ஆனால் கண்ணனாகிய குழந்தையை நீராட்டி நாவழிக்க முயலுங்கால் இக்காட்சியைக் கண்டதாக அநுசந்திக்கின்றார். கண்ணன் பார்த்தனுக்கு ஞானக் கண்ணைக் கொடுத்துத் தன் பேருருவத்தைக் காட்டினதைப்போல, யசோதைப் பிராட்டிக்குத் தன்னுடைய தெய்வத் தன்மையைக் காட்ட வேண்டுமென்ற பேரவாவினால் இங்ஙனம் செய்தனன் போலும். கண்ணன் முலைப்பால் உண்ணும்போது கொட்டாவி விடுவதுபோல் வாயைத் திறந்து தன் பேருருவம் காட்டினதாகவும் சில புராணங்கள் கூறும்.

**பூதனை வரலாறு :** ஒருநாள் கம்சனால் ஏவப்பெற்ற பூதனை என்ற ஓர் அரக்கி, அழகிய ஆயர் மகள்போல் வடிவங்கொண்டு வந்து கண்ணனுக்கு நஞ்சு தீட்டிய முலையூட்டினாள். கண்ணன் பாலையுண்டதுடன் பாதகியின் உயிரையும் உண்டான். பூதனை பெரிய அரக்கி உருவத்துடன் மலைபோல் பிணமானாள். இதனைக் கண்ட ஆய்ச்சியர் யாவரும்வெகுண்டு ஓடினர். யசோதைப்பிராட்டி மட்டிலும் கண்ணனை வாரியெடுத்து மூலையூட்டினள்.

''பேய்ச்சிமுலை உண்ணக் கண்டு
பின்னையும் நில்லாது என்நெஞ்சம்
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி
அழைக்கவும் நான்முலை தந்தேன்''

என்று பெரியாழ்வார் இந்நிகழ்ச்சியைத் தம் பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். இன்னொரு பாசுரத்தில்,

''கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கருநிறச் செம்மயிர்ப் பேயை
வஞ்சிப் பதற்கு விடுத்தான்
என்பது ஓர் வார்த்தையும் உண்டு''

என்று இந்நிகழ்ச்சியைப் போற்றி மகிழ்கின்றார். திருமங்கையாழ்வார் ''பேய்த்தாயை முலைஉண்ட பிள்ளை தன்னை'' ''இழை ஆடு கொங்கைத் தலைநஞ்சம் உண்டிட்டு", "வஞ்சம் மேவி வந்த பேயின் உயிரை உண்ட மாயன்'' என்று இந்நிகழ்ச்சியை அநுசந்திக்கின்றார். நம்மாழ்வார் ''பெய்யும் பூங்குழல் பேய்முலை உண்ட பிள்ளைத் தேற்றமும்'', ''வஞ்சப் பெண்ணைச் சாவப் பால் உண்டதும்'' என்று இச்சிறு சேவகத்தில் ஆழங்கால்பட்டுத் தன்னை மறக்கின்றார்.

**பகாசுரன் வரலாறு ;** பகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்லுமாறு கம்சனால் ஏவப்பெற்ற அசுரர்களில் ஒருவன். இவன் பெரியதொரு கொக்கின் வடிவங்கொண்டு வழக்கமாகக் கண்ணனும் அவன் தோழர்களும் மாலையில் கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு வீடு திரும்ப ஓர் ஒற்றையடிப் பாதையருகில் காத்திருந்தான். அவ்வழியாக வரிசையாக வரும் கன்றுகளை ஒவ்வொன்றாக விழுங்கிவிட்டான். கண்ணனின் தோழர்களையும் ஒவ்வொருவராகக் கபளீகரம் பண்ணிவிட்டான். இறுதியாக வந்தவன் கண்ணன். அவனையும் அலகால் கொத்தி விழுங்கினன். உள்ளே சென்ற கண்ணன் அசுரன் வயிற்றில் நெருப்புப்போல் எரித்தான். அசுரன் அதனைப் பொறுக்க மாட்டாமல் கண்

ணனை உமிழவே, அவன் வெளியில் வருங்கால் தன் இரு கைகளாலும் இரண்டு அலகுகளையும் பிடித்துக்கொண்டு வெளியே குதித்துக் கொக்கினை இரு கூறாகக் கிழித்து அனைவரையும் விடுவித்தான். இச் செயலைத் திருமங்கையாழ்வார், ''புள்வாய்ப் பிளந்த புனிதா!'' என்று அநுசந்தித்து அகமகிழ்கின்றார். ''புள்ளின் வாய்க்கீண்டானை'' என்று ஆண்டாள் இந்த நிகழ்ச்சியில் ஆழங்கால்படுகின்றாள். ''இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்'' என்று இதனை அநுபவித்து மகிழ்கின்றார் நம்மாழ்வார்.

''பள்ளத்தில் மேயும் பறவை உருக்கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான்கண்டு
புள்இது என்று பொதுக்கோ வாய்கீண்டிட்ட
பிள்ளை''

என்று பெரியாழ்வார் ஆழங்கால்படுவதையும் எண்ணி மகிழ்கின்றோம்.

**சகடாசுரன் வரலாறு:** ஒருசமயம் யசோதைப்பிராட்டி குழந்தை கிருஷ்ணனை ஒரு வண்டியின் அடியில் கிடத்திவிட்டு யமுனை நதிக்கு நீர் கொண்டுவரச் சென்றார். கம்சனால் ஏவப்பெற்ற ஓர் அசுரன் சமயம் பார்த்திருந்து வண்டிச் சக்கரத்தின்மீது ஆவேசித்திருந்து வண்டியை உருண்டோடச் செய்து கண்ணனைக் கொல்லத் திட்டம்போட்டிருந்தான். கண்ணன் இதனை யறிந்து பாலுக்கு அழுவது போல் பாவனை செய்து காலைத்தூக்கிச்சக்கரத்தை உதைத்து வண்டியைச் சிதைந்தோடச் செய்தான். வண்டிசிதையும்போது அதில் ஆவேசித்திருந்த அசுரனும் - சகடாசுரனும் - மாண்டொழிந்தான். இந்தச் செயலை நினைந்து ஆழ்வார் பெருமக்கள் தம் பாசுரங்களில் கண்ணனை அநுபவித்துள்ளனர். பொய்கையாழ்வார் இத்திருவடியை ''சகடுதைத்த ஒண்மலர்ச் சேவடி'' என்று போற்றி மகிழ்கின்றனர். திருமங்கையாழ்வார் இந்நிகழ்ச்சியுடன் வேறுசில நிகழ்ச்சிகளையும் சேர்த்து அநுபவிக்கின்றார்.

''இருங்கைமா கரிமுனிந்து பரியைக் கீறி
இனவிடைகள் ஏழ்அடர்ந்து மருதம்சாய்த்து
வருசகடம் இறஉதைத்து மல்லை அட்டு
வஞ்சகம்செய் கஞ்சனுக்கு நஞ்சு
ஆனானை''

இதில் சகடாசுரனைக் கொன்ற நிகழ்ச்சியுடன் குவலயாபிடம் என்ற யானையைக்கொன்றது, குதிரை வடிவாக வந்த கேசி என்ற அசுரனை வதைத்தது, நப்பின்னைக்காக ஏழு ஏறுகளின் வலிமை அடக்கியது, இரட்டைமருதமரங்களை வீழ்த்தி நளகூபர மணிக்ரீவர்களின் சாபந் தீர்த்தது, சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லர்களைக் கொன்றது ஆகிய வேறு ஐந்து சிறு சேவகங்களையும் சேர்த்து அநுபவித்து மகிழ்வதைக் காணலாம். கண்ணனின் ஆயர்பாடி நிகழ்ச்சிகள் எண்ணற்றவை. ஆழ்வார்பெருமக்கள் அனைவருமே இந்நிகழ்ச்சிகளில் ஆழங்கால் பட்டு அநுபவிக்கின்றனர். ஆயர்பாடியில் இருக்கும்போது நாமும் இந்த நிகழ்ச்சிகளை அநுபவித்து மயிர்சிலிர்க்கின்றோம். இந்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவுக்கு வர அதில் ஆழங்கால்படுகின்றோம்.

''கலந்தமர ரோடும் கரைகண்டா ரோடும்
பொலிந்துதிரு நாட்டிருக்கப் போவீர்-
மலிந்தபுகழ்
அண்டர்ஆய்ப்பாடி அமலர் அடியார்அடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும்.

என்பது பாசுரம். கண்ணனாகத் திருவவதரித்து விளையாடின இடமாகிய திருவாய்ப்பாடியிலுள்ள அடியாரின் அடியார்க்கு அடியவராகி அவர்தம் திருக்குணங்களைப் பாடித் துதித்தால் அதன் பயனாக நித்தியருடனும், முத்தருடனும் ஒருசேரக் கலந்து பேரானந்தம் அநுபவிப்பதற்கு வாய்ப்பு உண்டாகும் என்று மனம் அழுந்தியநிலையில் நம் இருப்பிடம் திரும்புகின்றோம்.

## மதங்கள் பல: கருத்து ஒன்றே

''பூமியிலே, கண்டம்ஐந்து, மதங்கள் கோடி!
புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்,
சாமியென இயேசுபதம் போற்றும் மார்க்கம்,
சநாதனமாம் இந்துமதம், இஸ்லாம், யூதம்,
நாமமுயர் சீனத்துத் ''தாவு'' மார்க்கம்,
நல்ல ''கன்பூசி'' மதம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவாம் அன்றே?
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே''

—பாரதியார்

# தத்துவ சமய நோக்கில் தாமரை மலர்



**திரு. இராஜ்பவுன்துரை**, M. A., Ph. D.
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20

தாமரை நாடு எனப் புகழப்படுவது நமது நாடாகும். தமிழர் கலைகளில் தாமரைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். படிமம், ஓவியம், சிற்பம், கட்டிடம் என எந்த நிலையிலும் தாமரை மலரைப் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். தாமரை-உவமைப் பொருளாகவும், குறியீடாகவும் அமையும் மலராகும். இதனைத் தெய்விக மலராகப் பாவிப்பர். பழங்காலத்திலிருந்தே சீனா ஜப்பான் எகிப்து ரோம் போன்ற நாடுகளிலும் தாமரையைக் குறியீடாகக் கொண்டுள்ளனர்.

குறியீட்டு இயல் எனப்படுவது அனுபவத்தின் கற்பனைக் கருவியாகப் பயன்படுத்தப் பட்டது எனலாம். மனிதன் கலையை வடிக்கும் முன்பே குறியீடுகளை உருவாக்கிக் கொண்டான் என்பர். இக் குறியீட்டுக் கருவியானது மனிதனுடைய கண்ணுக்குப் புலப்படாத ஒன்றைச் சுட்டிக்காட்ட என்று விரும்பினானோ அல்லது அவ்வுணர்வு ஏற்பட்டதோ, அன்றே இவ்வாயுதத்தைப் பயன்படுத்திக் கொண்டான் எனலாம். இத்தகைய குறியீடுகள் மனிதனுடைய படைப்பில் மிகவும் சக்தி வாய்ந்தனவாகவும், கோயில் கட்டிடக் கலையில் எதனைக் கூற முயற்சி செய்தாலும், அவற்றை ஒரு குறியீட்டின் வழியே சுட்டிக் காட்டுகின்றனர் என்பது சிறப்புமிக்க அம்சமாகும். எனவே மனிதன் அநுபூதி நிலையைக் குறிக்கக் கூடிய குறியீடாகவும் இதனை அமைத்துக் கொண்டான். இந்தியக் கலையில்-தமிழர்கலையில் தாமரைமலர், இத்தகு சிறப்புமிக்க ஒன்றாக உள்ளது.

உவமைப் பொருளாகவும், குறியீடாகவும் அமைந்த அம்மலரே அதனுடைய இதழ்களின் எண்ணிக்கை போன்றவற்றினைப் பொறுத்தும் வேறுபடுகின்றன. இவை குறிக்கோள் நிலையையும், அநுபூதி நிலையையும், குறியீட்டு அமைப்பையும், (உலகியல்) கடந்த நிலையையுமே சாரமாகக் கொண் ள்ளது என்பர் இ. பி. கேவல் (E. B. Havell)

தாமரை மலரை 'ஒளி'யைக் குறிக்கக் கூடிய குறியீடாகவும் படைப்பைக் காட்டும் பாங்காகவும் படைத்துள்ளனர். ஒளியைத் தெய்வமாகப் பாவிப்பதும், அதனைச் சூரியனுடன் இணைத்துக் கூறுவதும் உண்டு. பொதுவாகத் தாமரை மலரை உலகத்தின் படைப்புடன் ஒப்பிட்டுக் காட்டுவதைக் காணலாம். பெண் தெய்வங்களின் சக்தியைக் குறிக்கக்கூடிய குறியீடாகப் பயன்படுத்தியுள்ளனர். இந்து மதத்தில் பெண் தெய்வ வழிபாடு மிக முக்கியத்துவமிக்க ஒன்றாகும்.

தாமரை மலர் ஞானத்திற்கும் எடுத்துக் காட்டாகக் கூறப்படும். இருள் மயமானது தடாகம். அதற்குள்ளிலிருந்து மலர்ந்தது வெண்டாமரை என்பர். உலகமானது பாவம் அல்லது அறியாமை நிறைந்தது என்றும், அறியாமை எனும் இருள் நீங்கி ஒளியாகிய ஞான நிலையை அடையும் நிலையை இக் குறியீடு உணர்த்தும் என்றும் கூறுவர்.

நேபாளத்திலும் திபெத்திலும் தாமரை மலரைப் புனிதமாகக் காண்கின்றனர். அவர்களுடைய சமுதாயத்தில் குழந்தைகள் பிறக்கும் பொழுதும், மனிதர்கள் இறக்கும் பொழுதும். ''ஓம் மணி பத்ம ஊம்'' என்ற புனித மந்திரத்தைச் சொல்லுகின்றனர். இதனால் இறந்தவர்களுக்கு மோட்சமாகிய பிறப்பின் விடுதலை கிடைக்கும் என்று சொல்லுகின்றனர். ''அவலோகித ஈசுவரர்' எனப்படும் தெய்வத்தின் வழிபாட்டு முறையிலும் இம்மந்திரத்தை உரைப்பர்.

கிரேக்கர்களுக்கும் ரோமானியர்களுக்கும் இறந்தவர்களுக்குப் படைக்கும் மலர் தாமரை மலராகும். பூக்களுக்கு இதழ்கள் பெரும்பாலும் ஐந்தாகத்தான் இருக்கும் என்பர். இவ்வைந்து இதழ்கள் பஞ்சபூதம், பஞ்சசீலம், பஞ்சாங்கம் (வானியல் கூறுகள்), மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வாழ்வின் ஐந்து நிலைகள் முதலானவற்றைச் சுட்டுவனவாக அமைகின்றன என்பர்.

பத்து இதழ் கொண்ட தாமரை மலர் மகாபத்மம் என்று அழைக்கப்படுகின்றது. இம் மலரை அதிகமாகக் காணவியலாது. எனவே இதனைத் தேவலோக மலர் என்பர். இரண்டு இதழ் கொண்ட தாமரை 'கஜபத்மம்' என்று அழைக்கப்படுகின்றது. எட்டிதழ் உடைய தாமரை மலர் போன்ற அமைப்பை உடைய

'மானச் சரோவர்' எனும் ஏரி இமயமலையில் உள்ளது. அங்கு உற்பத்தியாகி வருகின்ற அந்த நதிக்குப் 'பிரமபுத்திரா' என்று பெயர். எனவே பிரமனை எட்டிதழ்த் தாமரையில் பொருள் விளக்கத்திற்காக அமைத்துள்ளனர் எனலாம்.

எட்டிதழ் கொண்ட தாமரை, பிரமன் இருக்கும் இடத்தையும், அவனுடைய படைப் பாற்றலையும் குறிப்பிடுவதாக அமைகின்றன. இதைப் போன்றே கிரேக்கர்களும் 'மண்டோ ரள்ா' எனப்படும் மலரைக் குறிப்பிடுகின்றனர். ஆயிரம் இதழ்கொண்ட தாமரையைப் பரம் பொருளைக் குறிப்பதாகக் காண்பர். எங்கும் நிறைந்து காணும் இறைவனை, உருவற்ற வனைக் குறிப்பதாகக் கொள்வர். இதைப் போன்றே கிரேக்கர்களும் 'பேரடைசா' எனும் தாமரையைச் சிறப்பித்துக் கூறுவர். எனவே தொன்மையான குறியீட்டுக் கருவியாக அமைந்துள்ளமை தெளிவு. இங்குஆயிரம் தாமரை இதழ் கொண்ட தாமரை மிக முக்கியத்துவம் மிக்க ஒன்றாகவும், உயர்ந்த நிலைக் குறியீடாகவும் படைக்கப்பட்டுள்ளது.

குண்டலினி யோக முறையில் ஏழுவகைத் தாமரைகள் குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றன சக்கரம் அல்லது தாமரை இங்கு நடுநாயகமாக வைக்கப்படுகின்றது. படைப்பினைச் சுட்டும் குறியீடாகவும் தாமரை இங்குச் சொல்லப்படு கிறது. இது லய-யோகா என்றும் அழைக்கப் படும். இதில் ஏழுவகைத் தாமரைகளுக்கும் ஒரு மனிதனுடைய உடம்பைக் கொண்டு பெயர் கூறப்படுகின்றது.

4 இதழ்கள் மூலாதாரம், 6 இதழ்கள் சுவாதிட்டானம், 12 இதழ்கள் அனாகதம், 10 இதழ்கள் மணிபூரகத்தாமரை, 2 இதழ்கள் ஆக்ஞை, 16 இதழ்கள் விசுத்தி, 1000 இதழ்கள் சகஸ்ராரம்.

இந்த ஏழுவகை மலரில் ஐவகைத் தாம ரைகள் முக்கியமானவை என்று குறிக்கப்படு கின்றன. அவை ஐவகைக் குறியீடாகவும் அமை கின்றன. 16 இதழ்கொண்ட தாமரைஆகாயம், 12 இதழ் காற்று, 10 இதழ் தீ, 6 இதழ் நீர், 4 இதழ் நிலம் எனப் பொருள் கொள்வனவாக அமைகின்றன. எனவே தத்துவக் கருத்துக் களை ஒட்டுமொத்தமாகக் காணும்பொழுது, அவை இறைவனுடன் இணையக்கூடிய அல்லது அடையும்நிலையைச் சுட்டும் தத்துவங்களாக அமைகின்றன.

இயற்கையைக் கடந்த ஆற்றலின் ஆட்சி தமிழ் மக்களின் கற்பனையில் நிரம்ப உள்ளது என்பர். பொதுவாகத் தெய்வங்களுடன் தங்க ளுடைய கற்பனைஉணர்ச்சியைக் குறியீட்டின் வழியே காணுமாறு அமைக்கின்றனர் எனலாம். செல்வங்களுக்கு அதிதேவதையாகிய திரு மகளைச் செந்தாமரை மலரில் அமரச் செய்தி ருக்கிறார்கள். படைப்பின் தத்துவமாகிய பிரம்மதேவனையும், அறிவுத் தெய்வமாகிய கலைமகளையும் வெண்டாமரை மலரில் வீற்றி ருக்கச் செய்துள்ளனர்.

சக்திக் கணபதியைச் செந்தாமரை மலர் மீதும் ஏகாட்சரக் கணபதியையும், மும்முகக் கணபதியையும் பத்மாசனத்தின் மீதும் வீற் றிருக்கக் காணலாம். மன்மதன் தன் கையில் வைத்திருக்கும் ஐந்து மலர்களில் ஒன்று தாமரையாகும்.

எகிப்தியர்களுடைய படைப்பில் தாமரை எவ்வாறு அமைந்ததுவோ அதேபோல் இந்தியக் கட்டிடக் கலையிலும் தெய்விக முக்கியத்துவம் மிக்க இம்மலரைக் கலைவடிவாக்கினர் என்பர். அராஸ் என்ற எகிப்தியக் கடவுள் நம்முடைய புராணக்கதையில் உள்ளதுபோலப் பிரமனைக் குறிக்கின்றது. பிரமனைப் போன்றே தாமரை யில் தோன்றியதாகவும் கூறுகின்றது.

இறைவனுடைய திருவடியைச் செந் தாமரை மலருக்கு ஒப்பிட்டுக் கூறுவது தமிழ் மொழியின் தொன்மையான மரபு. சிவப்பு வெள்ளி நீலம் ஆகிய மூன்று நிறமுடைய மலர்கள் சொல்லப்படுகின்றன. உருத்திரன் சிவன் ஆகி யோரின் மலர் சிவப்பு என்றும், விஷ்ணுவின் மலர் நீலம் என்றும், பிரமனுடைய மலர் வெள்ளை நிறம் என்றும் குறிக்கப்படுகின்றது. வெண்மை நிறம் படைத்தலையும், நீலநிறம் காத்தலையும், சிவப்பு நிறம் அழித்தலையும் சுட்டுவனவாக அமைந்துள்ளன. எனவேதான் தாமரை ஓர் அரிய ஆத்மீக ஒளியின் பிறப்பிட மாகப் போற்றப்படுகிறது.

பௌத்தர்களின் (பவித்திர நூலாகிய) ''தாமரைச் சூத்திரமாகிய நல்லறம்'' என்ற நூல் ஒரு சிறந்த படைப்பாகும். சமணர்கள் அருகக் கடவுளைக் கமலவாகனன், கமலஊர்தி என்று அழைக்கின்றனர். ஆதிபுத்தர் என்ப வரைத் தாமரையிலிருந்து வெளிவரும் சுவாலையாகப் பாவித்துக் கூறுவது புத்த மதத்தின் கருத்தாகும். நீரிலிருந்து படைப்பு ஏற்படுவதையும், தீயின் சுவாலையானது உல கத்தின் படைப்பைக் குறிக்கின்றன. நீரினைச் சுட்டிக்காட்டுவதும் படைப்பின் தத்துவத்தை யும் தாமரை மலர் சுட்டிக் காட்டுகின்றன. இத்தகைய சிறப்புடைய தாமரை மலரின் வேரானது பிரமனையும், தண்டு மாயையையும் (அறியாமை), மலர் பரந்துபட்ட உலகத்தை யும், அதன் கனி வாழ்வின் முக்தியையும் குறிக் கின்றன'' என்பர்.

வழிபாட்டுக்கெனப் படைக்கப்பட்ட படி மங்களின் பீடம் 'பத்மாசனம்' என்று வழங்கப் படுகின்றது. தெய்வங்களின் ஆயுதங்களில் தாமரை மலரும் ஒன்று. இத்தகைய வடிவங் களைச் சிற்பங்களிலும் காணலாம்.

எனவே தாமரை மலரானது பொதுவான தத்துவ சமயக் குறியீடுகளாக அமைந்துள்ளது வெளிப்படை. குறியீட்டு முறையை 'அறிவியல் ஒரு குறியீட்டுமுறை. கலை ஒரு குறியீட்டு முறை, சமயம் ஒரு குறியீட்டு முறை' என டெலிஸ்டோன் கூறுவார். அத்தகைய குறியீடு களைத் தெய்வீகக் கலைப்படைப்பில் வடித் துள்ளனர். ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை என அனைத்து நிலைகளிலும் பரம்பொருளின் தொடர்புபடுத்தியும் உலகியலின் நிலை குறித் தும் அமைத்துள்ளனர் எனலாம். **

# திருமூலநாதர்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம், M.A., M.Litt., Ph.D.,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

திருமூலநாதர் என்னும் பெயரில், திரு-மூலர்-நாதர் என்னும் மூன்று சிறப்புமிக்க சொற்கள் உள்ளன. திரு என்பது சிறப்பினைக் குறிக்கும் அடையாகும். தமிழில் கிடைக்கின்ற நூல்களில் தொன்மையானது எனக் கருதப்படும் தொல்காப்பியத்தில், இத் 'திரு' என்னும்சொல் அதிக வழக்கத்தில் இல்லையாயினும், பின்வந்த சங்க இலக்கியங்களில் மிகப் பரவலாகப் பல்வேறு பொருள்களில் காணலாம். தெய்வத் தன்மை, நல்வினை முதலிய பொருள்களைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. உரையாசிரியர்களில் சிறந்தவரான பேராசிரியர். திருக்கோவையார் என்னும் நூலுக்கு உரை எழுதும் போது, திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் எனக் குறிக்கின்றார். எனவே திரு என்பதற்குத் தெய்வத்தன்மை பொருந்திய அல்லது வணக்கத்திற்குரிய எனப்பொருள் கொள்வது தகும். ஆகவேதான் இறைவனைப் பற்றிப் பாடப்பெற்ற நூல்களை, இத் திரு என்னும் சொல் சேர்த்துக் குறித்தனர். இவை திருமுறைகள் என்றே வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாடிய அடியார்களையும் 'திரு' என்னும் சொல் சேர்த்தே குறிக்கும் மரபையும் தமிழில் காணலாம்.

மூலர்: பழங்காலத்தில் பிறந்த நட்சத்திரத்தின் பெயரைச் சூட்டிக் கொள்வது ஒரு மரபாக இருந்திருக்கலாம். இம்மரபை இப்போதும் காணுகிறோம். கார்த்திகேயன் (கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவன்), ஆதிரையான் (திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன்), ரேவதி (ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவள்) என்பன சில எடுத்துக் காட்டுக்கள். இங்ஙனமே பரணியில் தோன்றியதால் பரணர் என்றும், உத்தரத்தில் தோன்றியதால் உருத்திரனார் என்றும் புலவர்கள் பெயர் பெற்றிருக்கக்கூடும். இதுபோலவே மூலநட்சத்திரத்தில் பிறந்து திருமூலர் என்னும்பெயரை, இவர் பெற்றிருக்கலாம்.

சங்க இலக்கியங்களில் மாமூலன், ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார், மூலங்கீரனார் முதலிய பெயர்கள் 'மூலம்' என்ற சொல்லோடு சேர்ந்து காணப்படுகிறது. மூலன் என்பதைக் காரணப் பெயராகவும் கொள்ள இடம் இருக்கிறது. தமிழில் சமய சாத்திரங்களுக்கு மூலமாகவும், சித்தர் பரம்பரைக்கு மூலமாகவும், தோத்திர சாத்திரங்களுக்கு மூலமாகவும் இருந்தவராதலின் இப்பெயர் பெற்றார் எனவும் கூறலாம்.

மரம் என்பது மரன் என வருவதுபோல, மூலம் என்பது மூலன் எனவருதல் உண்டு. இதனைக் கடைப்போலி என இலக்கணநூலார் குறிப்பர். யோகமார்க்கத்தில் அனைத்து ஆதாரங்களுக்கும் மூலமாகக் கருதப்படுவது மூலாதாரமாகும். இதனை மூலம் எனக் குறிப்பர். மனத்தைப் பேயாக உருவகித்து அதனை அடக்கும்முறையைப் பாடியதால் அகப்பேய்ச் சித்தர் எனப் பெயர் பெற்றது போலவும், பாம்பு வடிவாய குண்டலினியை ஆட்டுவிக்கும் முறையிற் பாடியதால் பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் பெற்றதுபோலவும், அனைத்துச் சமயங்களுக்கும் மூலமாய் அமையும் ஒன்றானவனை, மூலத்தின் வழி நிற்கும் யோகப்பயிற்சியால் அடைதல் ஒல்லும் என யோகமார்க்கம் பாடியதால், இவர் மூலன் எனப் பெயர் பெற்றார் என எண்ணவும் இடம் உண்டு.

பெரிய புராணத்தின் மூலம் கிடைக்கின்ற செய்தியாலும் இவரது இயற்பெயர் தெரியவில்லை. கயிலாயத்திலிருந்து வந்த சிவயோகியார் மூலன் என்னும் இடையனது உடலில் புகுந்து அப்பெயர் பெற்றார் எனத் தெரிகிறது. இங்குப் பெரியபுராணம் கூறும் செய்தியை உண்மை எனக்கொள்ளின் 'மூலன்' என்பது இவரது இயற்பெயரன்று என்பதும், புகுந்த உடலுக்குச் சொந்தமான பெயர் என்பதும் விளங்குகிறது. திருமூலரது வரலாற்றை விரிவாகக் கூறும் சேக்கிழார், இவரது இயற்பெயரைக் கூறாதுவிட்டது வியப்பிற்குரியதாக இருக்கிறது.

'நந்தி அருளாலே மூலனை நாடினோம்'

'நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்'

எனத் திருமந்திரத்தில் இரண்டு இடங்களில் மூலன் பற்றிய குறிப்பு வருகின்றது. இவ் வடிகள் காணப்பெறும் தற்சிறப்புப் பாயிரத் தில் வேறு ஒரு குறிப்பும் உள்ளது.

'தந்திரம் ஒன்பது சார்புமூ வாயிரம்
சுந்தரன் ஆகமச் சொல்மொழிந் தானே'

என வருகிறது. ஒன்பது தந்திரங்களையும், அவை உள்ளிட்ட மூவாயிரம் பாடல்களையும் சுந்தரன் ஆகமமாக மொழிந்தான் என்பது இதன் நேர்பொருள். இவ்வடிகளை வைத்துக் கொண்டு, திருமூலரின் இயற்பெயர் சுந்தர நாதன் என்றும், மூலன் எனும் இடையனது உடம்பில் புகும்முன் சுந்தரநாதன் என்னும் இயற்பெயருடன் விளங்கும் காலத்தில் செய்த தமிழ் நூலாகிய 'மந்திரம் முந்நூறு' என்ற நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளில்,

'மந்திரம் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்'

என்று கூறப்பட்டிருப்பது, அக்கருத்துக்கு வலி மையூட்டுவதுஎன்றும், பேராசிரியர் திரு. லெப. கரு. இராமநாதன் கருதுகிறார். இப்பெயர் இவரது இயற்பெயராக இருந்திருக்குமே யானால் சேக்கிழார் இதனைக் குறிக்காமல் விட்டிருக்கமாட்டார்.

சுந்தரன் ஆகமம் என்பது, சுந்தரஆகமம் என நின்று, அழகிய அல்லது உயர்ந்த ஆகமம் எனப்பொருள் தந்து உயர்ந்த ஆகமத்தை மூலன் மொழிந்தான் எனப்பொருள்படும் என் றும் கூற இடமுண்டு. னகர ஒற்று, பிற்காலத் தில் நேர்ந்த அச்சுப்பிழையாகவும் இருக்கலாம். அவ்வொற்று இல்லையாயின் யாப்பு அமைதி குறைதல் இல்லை.

வேறு ஒரு விளக்கமும் தரலாம். சுந்தரன் என்ற சொல் சிவனுக்கு வழங்குகின்றது. ஆதலின் 'சுந்தரன் ஆகமச் சொல் மொழிந் தானே' என்பதற்குச் சுந்தரனாகிய சிவன் தந்த ஆகமங்களை மொழிந்தான்' எனவும் பொருள் தர நிற்கின்றது. மேலும் இப்பெயரைத் திரு மந்திரத்தில் வேறு இடத்திலோ அல்லது திரு மூலரைக் குறிக்கும் பெயராக வேறு நூல்களி லோ காணப்படவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது.

மேலும் சித்தர்கள் பட்டியலில் சுந்தர நாதர் என்ற பெயர் யாண்டும் காணப்பெற வில்லை. சுந்தரானந்தர் என்னும் பெயர் உள்ளது. இவர் பெயரோடு சேர்ந்து தனியே நூல்கள் உள்ளன. மேலும் இவர் சாதியில் 'ரெட்டி' என்னும் குறிப்பும், திருமூலர் 'கைக் கோளர்' என்னும் குறிப்பும், 'கருவூரர்நொண்டி என்னும் வாதகாவியம் 700' என்னும் நூல் கூறுகிறது. எனவே இருவரும் ஒருவரே எனக் கூறுதற்கில்லை.

மேற்கூறிய பல கருத்துக்களில் இருந்து இவரது இயற்பெயர் இன்னதென்று தெளி வாக்க முடியவில்லை. ஆயினும் இவர் மூலன் என்ற பெயரோடு யாண்டும் குறிக்கப்படுகிறார் என்பதில் கருத்து மாறுபாடு கொள்வதற்கு வாய்ப்பில்லை.

**நாதர்:** 'நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றார்' எனப் பாயிரத்தில் வருவதால், இவ ருக்கு நாதன் என்னும் பெயரும் சேர்ந்து திரு மூலநாதன் என வழங்கி வந்தது எனவும் அறிகிறோம்.

கேகயன் மகள் கைகேயி என்பது போல வும், ஜனகன் மகள் ஜானகி என்பது போலவும், நந்தியருள் பெற்றவர்கள் நாதர் என்பது தத்திதாந்த நாமம் என்னும் வடமொழி இலக்கணமாகக் கொள்ளலாம். நந்தியின்அருள் பெற்றவர்களுக்கெல்லாம் அப்பெயர் உண்டு என்பதையும் ஒரு பாடலில் குறிக்கிறார்.

'நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே'

ஆனால் நாதன் என்னும் இச்சொல்லைச் சேக் கிழார் குறிக்கவில்லை. பின் வந்தோரும்குறிக்க வில்லை. நாயனார் என்ற சொல்லையே குறிக் கின்றனர். இச்சொல் நாயன் ஆர் எனப் பிரிக்க லாம். நாயன் என்பதற்கு நடத்துவோன்என்பது பொருள். ஆர் என்பது சிறப்பு விகுதி. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும் மக்கள் அடைந்து உய்வதற் கான நன்னெறியின்கண் நடத்துவதற்குக் காரணமாயிருப்பவர் என்பது, இதன் பொரு ளாகக் கொள்ளலாம்.

எனவே திருமந்திரம் இயற்றி உய்யும் நெறி வகுத்தவர் திருமூலநாதர் என்னும் பெயருடையவர்என்பதினும், திருமூலநாயனார் என்னும் பெயருடையார் என்பது பொருந்தும்.

# இராமபிரான் கண்ட
# நீலகண்ட சிகஸ்டியர்

'மகாவித்துவான்'

பண்டித வி. நடேசனார், B.A., J.P.

கங்கை இருகரையுடையான்; கணக்கிறந்த நாவாயான் குகன். அவனால் கங்கையைக் கடந்து அதன் தென்கரையை அடைந்த இராமபிரான், சீதாபிராட்டியுடனும் இலக்குமணனுடனும் வனத்திற் புகுந்தான். சூரியன் கதிர்களை நிலவே போல் வீசினான். வானம் பனித்திவலை துளித்தது. கனிதரும் மரங்கள் இனிய நிழலை வழங்கின. இங்ஙனம் இனிய காட்டுப் பாதையிலே பலவகைக் காட்சிகளைச் சீதாதேவிக்குக் காட்டியவண்ணம் நடந்தே செல்லுகையில், நீலகண்ட சிகண்டியாரைக் கண்டான் இராமன்; இராமன் காட்டச் சீதையும் கண்டாள். அவ்விருவர் கண்டதனைக் கம்பர் கலைவல்லுநர்க்குக் காட்டுதலைக் காண்க!

அப்போது இளவேனிற் பருவம்; அது தோற்றத்தில் ஈரமுடைமையும், உண்மையில் ஈரமின்மையுமுடைய பொது மகளிர் மனம் போலத் தனக்கு முந்திய பனிக் காலத்தில் ஈரமுற்றதெனச் சொல்லுதற்குமில்லாமல், பிந்திய முதிர்வேனிற் பருவத்தின் வறட்சியுடையதெனச் சொல்லுதற்கும் இல்லாமல், இரண்டுக்கும் இடைப்பட்ட பொதுத்தன்மை பெற்றிருந்தது. கொன்றை தன் பொன்னிற மலர்களைச் சிந்தியது.

இள வண்டுகள் பாடல் பாடும் பாணனாகவும், பொழிகின்ற மழை பாறையாகவும் அமைய, மனக் கூச்சம் கொண்ட மயில் நடனம் செய்தது. சீதாராமனைப் பரந்த கண்களால் களிமயில் கண்டது. சீதையின் சாயல் தன் கண்ணிற் பட்டதால் நாணமுற்றது. அவளது கூந்தலின் அழகு, தன் தோகைக்கு இன்மையால் தோகையைத் தொடுத்தது. பலமயில்கள், சீதை மேனியிற் சாயல் மிக்கிருந்ததால் தம் இனமெனக் கருதி, அவளிடம் வந்தன. ஆனால் நீலகண்டர் (ஆண் மயில்), பொன்கண்டர் (பெண் மயில்) ஆகிய இருவரும், சிறுபிணக்கால் ஓர் இடத்தில் நின்றனர்; சீதாராமனிடம் வரவில்லை. காரணம் கண்டான் காகுத்தன்; கற்புக்கு அணியாகிய சீதையினிடம் காண்பித்துக் காரணத்தையும் விரித்துரைத்தான்.

''பூ அலர் குரவோடும்
புடை தவழ் பிடவு ஈனும்
மா அலர் சொரி சூழல்
துயில் எழும் மயில் ஒன்றின்
தூவி இன் மணம் நாறத்
துணை பிரி பெடைதான் அச்
சேவலொடு உற வாடித்
திரிவதன் இயல் காணாய்!''

—கம்பர்.

அழகாகப் பூத்த குராவினுடனே பக்கத்தில் தவழ்தல் போல் பரவி வளரும் பிடவமரம் உண்டாக்கிய சிறந்த பூக்கள் சொரிந்து சூழ்ந்த இடங்களில் தூங்கி எழுகின்ற மயில் ஒன்றின் (ஆண்) கலாபம் இனிய மணம் வீச, அதுகண்ட தன் கணவனாகிய துணையைப் பிரிந்திருந்த பெண் மயில், அந்த ஆண் மயிலோடு மிகவும் ஊடல் கொண்டு திரிவதன் தன்மையைக் காணாய்.

குராமலரும் பிடவமலரும் சிந்திய சூழலில் தூங்கி விழித்தெழுந்ததனால் அப்பூக்களின் வாசனை படியப் பெற்ற ஆண் மயிலைக்கண்டு, பிரிந்திருந்த பெண் மயில், தன் கணவன் வேற்றுப் பெண் மயிலோடு (பரத்தை) கலந்ததனால் இவனுக்கு (பரத்தன்) இம்மணம் உண்டாயிற்று எனக் கருதி, அவ்வாண்மயிலோடு ஊடல் கொண்டு அச்சேவலுக்கு முகம் கொடுத்துப் பேசாமல் 'பரத்தமையுடையாய்! நின்னைப் பெண் இயல்பினையுடையார் யாவரும் தம் கண்ணால் பொதுவாக உண்பர்; அதனால் அவர் எச்சிலாகிய நின் மார்பினைப் பொருந்தேன்; 'பரத்தையர் தோய்ந்த மார்பம் பத்தினி மகளிர் தீண்டார்' என்றது.

'பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொது
வுண்பர்
நண்ணேன் பரத்த! நின் மார்பு' (1311)

பிறர் மனை புகுவேன் அல்லன்; பரத்தைபால் நண்ணவில்லை. புறவத்தில் படுத்திருந்

தேன். அயர்ந்து உறங்குகையில் குராமலரும், பிடவமலரும் சிந்திய மகரந்தப் பொடி என் மேல் பொருந்தியது உண்மை; என்னிடம் வாசனை வீசுதலைக் கொண்டு பரத்தையிட மிருந்து பிரிந்து உன்னிடம் வந்தேன் என்று, நீ என்னிடம் ஊடுதல் வீண் பழியாகும். நான் நீலகண்டன்; பொன் மேனியாய்! ஒரு தீமை யும் செய்தேன் இல்லை. வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் திருநீலகண்ட நாயனார். அவர் ஒரு நாள் இரவு பெருமழை காரணமாகச் சன்னலண்டை நின்றார். அவ்வீட்டுப்பரத்தை தான் மென்ற தாம்பூலத்தைச் சன்னல் வழியே துப்பினாள். சிவனடியார் குரல் கொடுத்தார். பரத்தையர் வெளியே ஓடி வந்து பார்த்துச் சிவனடியர்ரைக் குளிப்பாட்டிப் புத்தாடை உடுத்தி வாசனைத் திரவியம் பூசி அவரது வீட்டிற்கு மழை நின்றவுடன் அனுப்பினார்கள். அடியாருடைய நறுமணத்தால் அவர்தம் மனைவியார் நீலகண்டம் சாட்சியாகத் தீண் டற்க எனக்கூறி ஊடினர். முதுமை இளமை யாக்கினார். திருவருளால் ஒன்றாயினர்; அவர் தம் நிலைமையே என் நிலைமை' என்றார் சிகண்டியார். ''எப்பணியில் இன்புறுவர் காத லர்; அக்காதலரை அப்பணியால் அப்பொழுதே அன்பு உறுத்தி–ஒப்ப மனம் குழையும் வண்ணம் மகிழ்விப்பதன்றே கனங் குழையார் தங்கள் கடன்'' எனக் கூறிப் பெண் மயில் ''ஒருங்கு ஒவ்வா நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடது என்னையும் தோய வரும் என்று எண்ணினேன். அது என் பிழையே'' என்று தன்னுட் கூறிக் கொண்டு தன் கணவனை மன் னிக்க வேண்டியது. ''நீலகண்டர்''—நீலக் கழுத்துடையது எனமயிலுக்குக்காரணப்பெயர். இப்பெயர் ஆணையே குறிக்கும். கி. மு. 1000-கும் முன் சாலமன் ராஜாவுக்குச் செங்கடல் மூலம் மயிலும் சந்தன மரமும் அனுப்பப்பட் டன. தூவி, தோகா, டோகா, துகி எனும் வார்த்தைகள் மயிலைக் குறிக்க ஈப்ரு, பாரசீகம், அரேபிய மொழிகளில் இன்னும் உண்டு. கி. பி. 1457 வரை மேனாட்டில் உயி ருள்ள மயில்மேல் சத்தியம் பண்ணும் (நீதித் தலத்திலும் மரத்தடி மன்றிலும்) வழக்கம் வீரரிடம் இருந்தது. யானையும் மயிலும் தமிழகத்துக்கே உரியன என்பது வரலாற்று உண்மை; 'கட்ச்' நாட்டில் மயிலைப் பிடித்தல் இம்சித்தல் சட்ட விரோதமான செயல்கள். வேற்கோட்டம் போல் மயிற்கோட்டம் (ஆமை முதுகுமேல் மயில் நின்ற கோலத்தில் மூலவர்) 'யெஜிடீஸ்' (Yezidis) நாட்டில் இன்னும் உண்டு. அந்நாட்டினர் ஆண்டிற்கு மூன்று முறை மயில் தரிசனம் பண்ண வேண்டும் எனல் அவர்தம் மதக் கொள்கை.

O-O-O-O-O-O-O-O-O-O-O-O

# ஆழ்வார்களும், நாயன்மார்களும்

மிகப் பழங்காலத்தில் திருமால்நெறியும், சிவநெறியும், ஒருகொடியிற் பூத்த இரு மலர்கள் எனும்படி, தமிழகத்தில் வேறுபாடு இன்றி, இணைந்து இயைந்து விளங்கி வந்தன. இடைக்காலத்திற் சில புதிய கொள்கைகளும், அக் கொள்கைகளைச் சார்ந்த பழக்க வழக்கங்களும் கொண்ட, புறச் சம யங்கள் சில, தமிழ்நாட்டில் புகுந்து பரவத் தலைப்பட்டன. அந்நிலையில் தமிழகத்தின் கலை நாக ரிகங்களும் பண்பாடுகளும் வாழ்க்கை நெறிமுறைகளும், பழக்க வழக்க ஒழுகலாறுகளும் சிதைந்து சீர் குலைந்து, தலைதடுமாறி அழியத் தலைப்பட்டன. அத்தகையதொரு சூழ்நிலையில், இறைவனின் திரு வருளால் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றியருளி, அரும்பெரும் செயல்களை ஆற்றி, இறை யருள் உணர்ச்சியினை, நம் தமிழக மக்களிடையில் யாண்டும் பரப்பி, தமிழ்மொழியையும் கலைகளையும் பண்பாடுகளையும் பாதுகாத்துப் போற்றி வளர்த்தனர்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆகிய பெருமக்கள் அருளிச் செய்த, தெய்விக நலம் பொதிந்த திவ்வியபிரபந்தங்கள், தேவார திருவாசகத் திருமுறைகளாகிய தெய்விகத் திருவருட் பாடல்கள், அழியாத அரும்பெரும் கலைச் செல்வக் களஞ்சியங்கள் ஆகும். அத் தெய்விகப் பாடல்களின் வாயிலாக, ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய பெருமக்களின் அருள் அனுபவங்களையும், அறிவுரைகளையும், நாம் அனைவரும் அறிந்து கொண்டு, அளப்பரிய பெருநலங்களை அடையலாம்.

திருவருள் நலம் நிரம்பித் திகழும் திவ்வியப்பிரபந்தங்களும், தேவாரத் திருமுறைகளும் ஆகிய, செந்தமிழ் தெய்விகப்பாடல்கள், நவில்தொறும் நன்னயம் நல்குகின்றன; பயில்தொறும் பரவசப்படுத்தி நம்மை மகிழ்விக்கின்றன. அறிவுக்கு உயர்விருந்தாய், நம் அல்லல்களுக்கெல்லாம் பெருமருந்தாய்ப் பிறங்கு கின்றன. இவற்றை ஓதுவதனால் நம் உள்ளம் மாசகன்று தூய்மையுற்று ஒளிபெறுகின்றது. தீவினைகள் தேய்ந்து சிதைந்து மாய்ந்து அகல்கின்றன. இவற்றின் அரிய பெரிய இலக்கியச் சிறப்புகளையும், சொற் பொருட் சுவைநலங்களையும், உன்னியுன்னி உணருந்தோறும், நாம் வியப்பும் விம்மிதமும் எய்தி இன்புறுகின்றோம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆண்டவனின் அருளைப் பெற்று, அவ்வருளனுபவத்தில் மிக வும் ஆழ்ந்து அழுந்தித் திளைத்து இன்புற்றவர்கள்; வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, தெய்வத் தன்மை பெற்றொளிரும் ஒப்புயர்வற்ற அருட்பெருஞ்சான்றோர்கள். நம்மனோர் ஈடேறி உய்தற்பொருட்டுத் திருவவதாரம் செய்து, செயற்கருஞ் செயல்கள் பலவும் புரிந்து, நமக்கெல்லாம் வாழும் நெறிகாட்டி உணர்த்தப் போந்தருளிய பெருமக்கள் இழுக்கலுடைய இடத்தே ஊன்றுகோல் போல, அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாடல்களே, நமக்கு உலகியல் வாழ்வில் தளர்வுநேரும் பொழுதெல்லாம், பற்றுக் கோடாக அமைந்து துணை புரியும் சிறப்புடையன! புறந்தூய்மை நீரால் அமைவது போல, நம்முடைய அகம்தூய்மை அடைவதற்கு, ஆழ்வார்களும், நாயன்மார்களும் வழங்கியுள்ள அருளிச் செயல்கள், நமக்கு இன்றியமையாத சிறந்த சாதனங்களாக விளங்கி வருகின்றன. ஓதி ஓதி உணருந் தோறும் உணர்ச்சியூட்டி நலம் விளைவிக்கின்ற, ஆழ்வார்கள் நாயன்மார்களின் தெய்விகத் திருப்பாடல் களை, அன்புடன் முறையாக ஓதி, நாம் இன்புற்று வாழ முயல்வோமாக!

—ஆசிரியர்.

# ஒன்பது நகரக் கோயில்கள்

திரு சி. வீர. நடராசன் செட்டியார்,
தேவகோட்டை.

சோழநாட்டின்தலைநகரமாகியகாவிரிப்பூம் பட்டினம், முற்காலத்தில் உலகம் எல்லாம் புகழ் பெற்றிருந்தது. அக்காலத்தில் அங்கே வாழ்ந் திருந்த மகுடதன வைசியர்களாகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் குபேரனும் கூடப் பொறாமை கொள்ளத்தக்க பெருஞ்செல்வ வளத்துடன், அரசாங்க முன்மரியாதைக்கு உரி யவர்களாகிச் சிவபக்தி, சிவனடியார் பக்தியில் சிறந்து, அறத்தின்வழிப் பொருள் ஈட்டிச் சிவ புண்ணியங்களைச்செய்துவாழ்ந்து வந்தார்கள்.

பாண்டிய மன்னன் தனது நாட்டிற்கு நற் குடி மக்கள் வேண்டும் என்று விரும்பிச் சோழ நாட்டில் வாழ்ந்து வந்த நகரத்தார்களை அழைத்துக்கொண்டு வந்து, கடற்கரைக்கு மேற்கு, வையை ஆற்றிற்கு வடக்கு, பிரான் மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு ஆகிய நான்கு எல்லைகட்கு உட்பட்ட ஊர் களில் குடியேற்றியதுடன், அவர்கள் வேண்டு கோளுக்கு ஏற்ப, மிகப் பழைய ஒன்பது சிவா லயங்களைப் பரிபாலன உரிமையோடு அவர் களுக்கு அளித்தான். அத்திருக்கோயில்கள் (1) இளையாற்றக்குடி, (2) மாற்றூர், (3) வயிர வன் கோயில், (4), இரணியூர், (5) பிள்ளையார் பட்டி, (6) நேமம், (7) இலுப்பைக்குடி, (8) சூரைக்குடி, (9) வேலன்குடி என்பவை ஆகும். இவற்றுள், இளையாற்றக்குடிக் கோயில்மரபி னர், ஒக்கூர் உடையார் பட்டணசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசற்குடியார், கிண்கிணிக் கூருடையார், பேரசெந்தூருடை யார், சிறுசேற்றூர் உடையார் என்னும் ஏழு பிரிவினராகவும்-மாற்றூர்க் கோயில் மரபினர், உறையூர் உடையார், அரும்பாக்கூர் உடையார் மணலூர் உடையார், மண்ணூர் உடையார், கண்ணூர் உடையார், கருப்பர் உடையார், குளத்தூர் உடையார் என்னும் ஏழு பிரிவின ராகவும், வயிரவன்கோயில் மரபினர், சிறு குளத்தூருடையார், கழனிவாசல் உடையார், மருகேந்திரபுரம் உடையார் என்னும் மூன்று பிரிவினராகவும்-உள்ளனர். ஒன்பது கோயில் களின் சுவாமி, அம்மை திருப்பெயர்கள் வரு மாறு : (1) இளையாற்றக்குடி: கைலாசநாதர், நித்திய கல்யாணி, (2) மாற்றூர்: ஐந்நூற்றீசர், பெரியநாயகி; (3) வயிரவன் கோயில்; வள ரொளி நாதர், வடிவுடை அம்மை; (4)இரணி யூர்; ஆட்கொண்ட நாதர், சிவபுரம்தேவி; (5) பிள்ளையார்பட்டி: கற்பக விநாயகர், திருவீசர் சிவகாமவல்லி, மருதீசர்-வாடாமலர் மங்கை; (6) நேமம்; செயங்கொண்ட சோழேசர், சௌந்தர நாயகி; (7) இலுப்பைக்குடி: தான் தோன்றியீசர், சவுந்தரநாயகி; (8) சூரைக்குடி, தேசிகநாதர், ஆளுடைநாயகி: (9) வேலன்குடி: கண்டீசர், காமாட்சி.

பிள்ளையார் பட்டிக் கோயிலில் ஆவணித் திங்களில் விநாயக சதுர்த்தித் திருவிழா 10 நாட்களும், இலுப்பைக்குடிக் கோயிலில் சித்திரைத் திங்களில் பிரும்மோத்சவம், தெப்பத் திருவிழாவுடன் 10 நாட்களும் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்று வரு கின்றன.

(1) இளையாற்றக்குடிக் கோயில் மரபினர்,
'கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில்...உடையார்'' என்றும்;

'கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர்நாட்டில் மாற் றூரான வீரபாண்டிய புரத்தில்...
உடையார்' என்றும்;

(3) வயிரவன்கோயில் மரபினர்,
'கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந் தெருவான
வீரபாண்டிய புரத்தில்....உடையார்' என்றும்;

(4) இரணியூர்க் கோயில் மரபினர்,

''கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட்பூர்
உடையார்' என்றும்;

(5) பிள்ளையார் பட்டிக் கோயில் மரபினர்,

'கல்வாச நாட்டில் இளையாற்றக் குடியான குலசேகர புரத்தில் இரணியூர் மருதங்குடி யான இராசநாராயண புரத்தில், பிள்ளை யார் பட்டியான திருவேட்பூர்உடையார்' என்றும்;

(6) நேமங்கோயில் மரபினர்,

'கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில்
தேனாறு பாயும் இளநலமுடையார்' என்றும்;

(7) இலுப்பைக்குடிக்கோயில் மரபினர்,

'கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், இலுப்பைக் குடியான புகழிடம் கொடுத்த பட்டிணத்தில்
சூடாமணி புரம் உடையார்' என்றும்;

(8) சூரைக்குடிக் கோயில் மரபினர்,

'கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிகநாராயண
புரத்தில் புகழ்வேண்டிய பாக்கம் உடையார்' என்றும்;

(9) வேலன்குடிக் கோயில் மரபினர்,

'கேரளசிங்க வள்நாடாகிய பாலையூர்நாட்டில் வேலன்குடியான தேசிக நாராயணபுரத்தில், கழனிநல்லூர் உடையார்' என்றும் ;

திருமணமுறி முதலிய ஆவணங்களில் குறிக்கப் பெறுகின்றனர். ஒன்பது கோயில் நகரத்தார் களும், அவரவர்களுக்கு உரிய கோயில்களில் பாக்கு வைத்து, சுவாமிக்குச் சாத்திய மாலை விபூதிப் பிரசாதம் பெற்றே, தம் வீட்டுத் திருமணங்களை நடத்தி வருகிறார்கள். அரசினர் வைத்துள்ள பதிவு முறையைவிட இது சிறந்ததாக அமைந்துள்ளது. பாரத நாட்டில் பல்வேறு சமூகத்தினர்களாக வாழும் மக்கள், தத்தம் குடிகளை மூலபுருடர்களின் பெயர் களால் அமைந்த கோத்திர முறையில் கொண் டிருக்கின்றார்கள். நாட்டுக்கோட்டை நகரத் தார்கள் மட்டுமே யாவருக்கும் குடி முதல்வ ராகிய சிவபரம்பொருளைத் தம் குடிமுதல்வ ராகக் கொண்டு, தம்மைச் சிவகோத்திரத்தார் என்று குறித்து, மேற்கூறிய ஒன்பது கோயில் களின் மூலத்தானச் சிவலிங்க மூர்த்திகளால், தம் குடிப்பிரிவுகளை விளங்கச் செய்து வாழ்ந்து வருகிறார்கள்.

---

# பாரதியும் தமிழும்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்! (1)

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை,வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! (2)

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்! (3)

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்:
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்! (4)

—பாரதியார்

# ஐம்பெரும் வாதங்கள்

திரு. ம. நாராயணன், M.A. அவர்கள்,

வேலூர்.

பாரதத் தாயின் தவப்புதல்வர்களாகிய நமக்குத் 'தத்துவ ஞானம்' பரம்பரைச் சொத்து. இது ஒன்றே நம் முன்னோர் நமக்கு வைத்துச் சென்ற பெருஞ் செல்வம். தத்துவம் என்றால் உண்மை 'தத்துவ ஞானம்' என்றால் உண்மையை அறிவது என்று பொருளாகும். மேல் நாட்டுத் தத்துவ ஆராய்ச்சியிற் பெரும்பான்மை புறவுலகத்தோடு தொடர்புடையது. ஆனால் இந்தியத் தத்துவ ஞானம் அகவுலகத்தோடு தொடர்புடையது. உள்ளத்தைத் தொட்டுத் தைத்து, நின்று நிலைத்திருக்கக் கூடியது.

நம் தத்துவ ஞானம் நம்மைச் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமின்றி, முறையாக வாழ்வதற்கும் வழிகாட்டுகின்றது. சொல்லிலும், எழுத்திலும் மட்டுமின்றி, வாழ்வினும் இரண்டறக் கலந்து நிற்பதே இந்தியத்தத்துவ ஞானத்தின் சிறப்பு. ஆனால் மேல்நாட்டுத் தத்துவ ஞானம் 'இல்லாத ஒரு கறுப்புப் பூனையை இருட்டறையில் இடைவிடாது தேடுவதில்' தான், பெரிதும் கவனஞ் செலுத்திக் கொண்டிருக்கின்றது.

பல்வேறு கிளைகளாகப் பிரிந்து, முரண்பட்டுக் கிடக்கும் இந்திய மதங்கள் எல்லாமும் ஒரு இடத்தில் ஒற்றுமையாக வந்து கூடுகின்றன. ஆம், உலகாயதம் உட்பட எல்லா மதங்களும் அடிப்படை உண்மைகளை அறிய வேண்டும். துன்பத்தைப் போக்கி இன்பத்தை அடைய வேண்டும் என்பதில், தம்முள் ஒற்றுமை உடையன.

வேத விரோத மதங்களாகிய உலகாயதம் பௌத்தம், சமணம் ஆகியனவும், வைதிக மதங்களுள் சங்ர வேதாந்தம், சாங்யம் ஆகியனவும்; உலகம்—உயிர் இவற்றின் தோற்றம்—நிலைப்பு பற்றி, எங்ஙனம் வெவ்வேறு கோணங்களில் வாதம் புரிகின்றன என்பது இவண் ஆய்வோம்.

இத்தகைய ஆய்வுகளால் நமக்கு என்ன லாபம்! இவற்றாலெல்லாம் உணவும் உடையும் கிடைத்து விடுமா! என்று சிலர் முணுமுணுப்பது நம் காதுகளில் விழாமல் இல்லை. மனம் உடையவன் மனிதன். மனித மனத்தின் வேலையே இடைவிடாது சிந்திப்பதே. மனிதனுக்கு உணவும் உடையும் மட்டுமே பயனுடையவை ஆகிவிடாது. மனிதனுக்குச் சிறப்பாக அமைந்திருப்பது சிந்தனை. அச்சிந்தனைக்கு விருந்தாக அமையக்கூடிய எதுவுமே பயனுடையதே.

இன்றைய இயந்திர உலகிலே அவசர அவசரமாக அன்றாட வாழ்வை ஓட்டிக்கொண்டிருக்கும் நாம், இத்தகைய அடிப்படை ஆராய்ச்சிகளில் நமது அறிவைச் செலுத்துவதினால் நம் மனநிலை மாறவும், உள்ளம் பண்படவும், அமைதி, அன்பு போன்ற நல்லியல்புகள் ஏற்படவும் வாய்ப்புண்டு என்பது உறுதி.

## (1) சுபாவ வாதம்:

நம் அறிவு பல திறப்பட்டது. அவற்றை உணர்த்தும் வாயில்கள் மூன்று. கண்ணால் காண்பது. காதால் கேட்பது, கையால் தொடுவது போன்று, பொறிகள் வாயிலாக நேரடியாகப் பெறும் அறிவு 'பிரத்தியட்சம்' எனப்பெறும்.

தூரத்தில் புகை தெரிகிறது. ஆனால் அங்கு நெருப்பு இருப்பது கண்ணுக்குத் தெரியவில்லை. என்றாலும் நெருப்பைக்காணாமலே புகையை மட்டுமே கண்டு நெருப்பு அங்குள்ளது என்று உறுதியாக நம்புகிறோம். இத்தகைய அறிவிற்கு 'அநுமானம்' என்று பெயர்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டின் முன்னர்க் குமரிக்கண்டத்தை அடுத்துப் பஃறுளி ஆறு இருந்தது உண்மை; ஆனால் இன்றைக்கு அதனைப் பிரத்தியட்சமாகவோ, அநுமானமாகவோ கூட நம்மால் அறிய முடியவில்லை. பழந்தமிழ்ப் புலவர்கள் நேராகக் கண்டு, எழுதி வைத்துச் சென்றுள்ளனர். அதனை நாம் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இங்ஙனம் முன்னோர்கள் தாம் நேரே கண்டும் அனுபவித்தும் கொண்ட அறிவைச் சொல்லியும் எழுதியும் வைத்துள்ளனர். இவற்றிற்கு 'ஆப்த வாக்கியம்' என்று பெயர்.

'உலகாயதம்' என்னும் மதத்தினர் 'பிரத்தியட்சம்' மட்டுமே மெய்; ஏனைய பொய் என்னும் கொள்கையினர். அவர்கள் கண்ணுக்குத் தெரிகின்ற இந்த உலகமும், நம் உடம்பும் மட்டுமே மெய்: கண்ணுக்குத் தெரியாத உயிரும், இறைவனும் பொய் என்று வாதாடுபவர்கள்.

உலகாயதர்களுக்கு உயிரும் உடலும் ஒன்றே. பூதங்களின் சேர்க்கை உடலாகும் போது, அதே சேர்க்கையின் விளைவாக அவ்வுடலுக்கு உணரும் சக்தியோ, சிந்திக்கும் சக்தியோ ஏற்படுகின்றது. பாக்கு வெற்றிலை, சுண்ணாம்பு எதிலும் இல்லாத சிவப்பு நிறம், அவை மூன்றையும் சேர்த்ததும் எங்கிருந்தோ வந்து குதிப்பதைப் போன்றதே, பூதச் சேர்க்கையின் பொழுது தோன்றுகிற இந்த அறிவும் சக்தியும்!

எனவே காட்சிக்குப் புலனாகாத உயிர் என்ற ஒன்று உண்டு. அது முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப உடலொன்றை இறைவன் படைக்கின்றான் என்றெல்லாம் சமயவாதிகள் கூறுவது, மக்களை மயக்குவதற்கே என்பது உலகாயதர் வாதம்.

அங்ஙனமாயின், இயல்பாக ஏற்படுகின்ற பூதச் சேர்க்கையிலே தோன்றுகின்றவற்றுள் ஆண்-பெண் வேறுபாடு ஏன்? விலங்கு-மனிதர் வேறுபாடு ஏன்? ஏழை-பணக்காரன் வேறுபாடு ஏன்? என்றால் அது இயற்கையின் 'சுபாவம்' என்பர் உலகாயதர். இல்லை 'உயிர்கள் முற்பிறப்பில் செய்த கன்ம பயன்' என்பர் வைதிகர்.

அப்படியாயின் ஒரே கையில் தோன்றும் ஐந்து விரல்களும் நாம் முற்பிறப்பில் என்ன கன்மங்கள் செய்து இங்ஙனம் தம்முள் நீண்டும் குறுகியும் தோன்றுகின்றன என்பர் உலகாயதர்.

மயில் ஆடவும், குயில் பாடவும் கடவுள் துணை தேவையில்லை. நீரில் தண்மையும் அனலில் வெம்மையும் அமைக்க ஓர் இறைவன் வேண்டாம். அவையாவும் அவற்றின் 'சுபாவம்' என்பர் உலகாயதர். இதனையே 'சுபாவ வாதம்' என்பர் தத்துவ ஞானிகள்.

வெற்றிலை, பாக்கு சுண்ணாம்பு சேர, அச்சேர்க்கையில் தோன்றும் சிவப்பு நிறம் போலப் பூதங்களின் சேர்க்கையில் உணர்வு தோன்றுமெனக் கூறும் உலகாயதர் கூற்றினை மறுக்க விழையும் வைதிகர், அவை மூன்றும் தாமாகக் கூடுவதில்லை. கூட்டுவான் ஒருவன் உண்டு. அதுபோலவே பூதங்களைக் கூட்டுவானும் ஒருவன் உண்டு; அவனே இறைவன் என்று வாதிடுவர்.

### (2) அநேகாந்த வாதம் :

இந்த உலகத்தைப் படைக்க ஒரு கடவுள் வேண்டாம் என்பர் சமணர். உலகைப் படைக்கக் கடவுள் வேண்டுமென்றால் அக்கடவுளைப் படைக்க இன்னொரு கடவுளும், அவரைப் படைக்க வேறொரு கடவுளுமாகப் பின்னுக்குப் பின்னன்றோ சென்று கொண்டிருக்கும் என்பது சமணர் வாதம்.

சமணர் எழுப்பும் அடுத்த தடை, கடவுள் எதைக்கொண்டு இவ்வுலகைப் படைத்தார் என்பது. 'இது உள்ளது போகாது: இல்லாதது வாராது' என்னும் அடிப்படைக் கொள்கையை ஒட்டியது. அணுக்கள் அல்லது மாயை ஆகிய மூலப் பொருளிலிருந்து உலகம் தோன்றியது என்று வாதிடுபவர்களுக்கு, அணுக்கள் தொழிற்படக் காலம், சுபாவம், நியதி, கன்மம் ஆகிய தத்துவங்களே போதும். இவை தவிர ஓர் இறைவன் வேண்டாம் என்று விடையிறுப்பர்.

மேலும் படைப்புத் தொழிலைக்கொடுத்து இறைவனை மனித நிலைக்குத் தாழ்த்த விரும்பாத சமணர், மனிதனை, அதாவது கேவல ஞானமெய்திய முழு மனிதனைக் கடவுள் நிலைக்கு உயர்த்திக் கடவுளாக்கி, வழிபடுகின்றனர்.

சமணர்களின் தத்துவங்களுள் முக்கியமானது, அநேகாந்த வாதம். இவ்வுலகிலுள்ள பொருள் ஒவ்வொன்றும் அவ்வப்பொருளிலுள்ள குணவியல்புகளினால் மட்டுமே ஆனது; அந்தக் குணங்களைக்கொண்டே அப்பொருளை அறிகிறோம் என்று நாம் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், ஒவ்வொரு பொருளும் தன்னிடத்தில் இருக்கின்ற குணங்களால் மட்டுமின்றித் தன்னிடத்தில் இல்லாத தன்மைகளாலும் ஆனது. அதாவது, ஒரு பொருளை அறிவதற்கு அதனிடத்தில் இருக்கின்ற தன்மைகளோடு, அதனிடத்தில் இல்லாத தன்மைகளும் சேர்ந்து துணைபுரிகின்றன என்பது சமணர் துணிபு. சான்றாக ஒரு மனிதன் ஐந்து அடி உயரம் என்றால், நான்கு அடி உயரம் இல்லாமை, ஆறடி உயரம் இல்லாமையே அவனை ஐந்தடி உயரமுள்ள மனிதாக்கியுள்ளது. அது போலவே, அவன் சிவந்த நிற முடையவன் என்றால், அவனிடம் கருநிறம் நீலநிறம், வெண்மை நிறம் முதலிய நிறங்கள் இல்லாமையே அவனைச் சிவந்த நிறமுடையவனாக்குகிறது என்பதே, அநேகாந்தவாதம். இந்த வாதப்படி, ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நமக்கிருப்பது அரைகுறை அறிவே. 'ஒரு கற்சிலை உருவாக, அதனிடத்தில் இருக்கின்ற கல் மட்டுமே காரணமல்ல. அச்சிலை உருவாகின்றபொழுது சிற்பியின் உளியால் செதுக்கி நீக்கப்பட்ட கற்சில்லிகளும் காரணம் என்று, மேலுமொரு சான்றினை இவ்வாதத்திற்கென வழங்குவர்.

ஒவ்வொரு பொருளைப் பற்றியும் தனித்தும் பிறபொருள்களோடு தொடர்புபடுத்தியும் அறிய வேண்டும். ஏதாவது ஒருசில கோணங்களிலிருந்து ஒன்றை அறிவது நமது அன்றாட வாழ்க்கைக்குப் போதுமானது ஆகலாம். ஆனால் அந்த அறிவே முற்றறிவு எனக் கொள்வது தவறு. எப்பொருளைப் பற்றியும் எந்த ஒரு முடிவும் முடிந்த முடிவாகாது. முடிவுகள் பல ஆகலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையிலிருந்து நோக்கச் சரியானதாகும். இங்ஙனம் பல முடிவுகளை—அநேகாந்தங்களை (அநேக-அந்தங்கள்) ஏற்கும்கொள்கையே ''அநேகாந்த வாதம்'' எனப்படும்.

சீவன் அல்லது உயிருக்குப் பருமனும் அளவும் குறிக்கின்றது, சமணரது தத்துவம். உயிர் எந்த உடலைத் தனக்கு உறைவிடமாகக்

கொள்கின்றதோ அந்த உடலின் பருமனுக்கு ஏற்பத் தன்னைக் கூட்டவும் குறைக்கவும் விரிக்கவும் சுருக்கவும்வல்லது, சான்றாக 'ஓர் எறும்பின் உடலில் குடியிருந்த உயிர் ஒரு யானையின் உடலில் புகும்பொழுது தன்னைப் பெருக்கிக் கொள்கிறது; ஒரு யானையின் உயிர் ஓர் எறும்பினுள் புகும்பொழுது தன்னைச் சுருக்கிக் கொள்கிறது' என்பர் சமணர்.

சமணர் சொல்வது போல் 'உயிர் உடல் எங்கணும் பரவி நிற்கும் எனக் கொண்டால், உடலில் முறிவு, வெட்டு, உறுப்பிழப்பு ஆகியன ஏற்படின் அங்கங்குள்ள உயிர்க்கும் பாதகம் ஏற்பட்டாக வேண்டும்' என்பர், இக்கருத்தினை மறுக்கும் சித்தாந்திகள்.

### (3) கணபங்க வாதம் :

காணல் கருதல் இவை இரண்டைமட்டுமே அறிவிற்குரிய வாயில்களாக ஏற்றுக் கொள்வது பௌத்தம். உரையாகிய ஆப்த வாக்கியத்தை அதாவது வேத வாக்கை அது ஏற்பதில்லை. கடவுள் காட்சிப் பொருள் அல்ல; அநுமானத்தால் கடவுள் உண்டென நிறுவுவதும் எளிதல்ல. எனவே பௌத்தர்கட்குக் கடவுள் இல்லை. ஆனால் சமணர் புத்தர்க்கு இந்துக்களைப்போல மறுபிறப்பு நம்பிக்கை உண்டு. பெருந்திரளான பசுக்கள் நிற்கும் தொழுவத்தில் ஒரு கன்றை ஓடவிட்டால், அதுஎங்ஙனம் ஏனையபசுக்களையெல்லாம் தவிர்த்துத் தன் தாயின் மடியை மட்டுமே சுவைக்குமோ, அதுபோலவே, பழ வினையும் தனக்குரியவனை அடையவல்லது என்ற சமணர் கருத்தே, பௌத்தர் கருத்துமாகும். ''கன்ம வினையை வினைக்குரியவனோடு சேர்க்க ஓர் இறைவன் வேண்டாம். வினை தானாகவே தனக்குரியானை அடையவல்லது'' எனக் கன்மத்திற்கு அனைத்து வல்லமையையும்அளிக்கின்றனர் பௌத்தர்.

பௌத்தரைக் 'கணபங்க வாதிகள்' என்பர். எந்தப் பொருளும் ஒரு கணத்துக்கு மேல் நிலைப்பதில்லைஎனஅவர்கள்வாதாடுவதனால், அவர்கட்கு இப்பெயர் ஏற்படலாயிற்று. தம் வாதத்திற்குச் சான்றாகத், தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் விளக்கின் தீக்கொழுந்தைக் காட்டுவர் பௌத்தர். அங்கு முதற் கணத்திலிருந்த கொழுந்து அல்ல இரண்டாம் கணத்தில் இருப்பது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம். என்றாலும், வேற்றுமை தெரிவதில்லை. இருகணத்திலும் உள்ளதுஒருகொழுந்தாகவே தோன்றுகிறது. இதைப்போன்றே ஏனைய எல்லாப் பொருள்களின் நிலையும் என்பர். இரு கணங்களில் எரியும் கொழுந்தும் ஒன்றல்லஎன்பதை எண்ணெய்குறைவதிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம்.

சில பொருள்களில் மாற்றம் விரைவாக நிகழ்வது நமக்குப் புலனாகும். சிலவற்றுள் அங்ஙனம் புலனாகாது. முற்றத்தில் விழுந்த பசிய இலை இரண்டு நாள்களுள் ஒரு சருகாகி, இன்னுஞ் சில நாள்களில் மண்ணாக மாறிவிடுகின்றது. ஆனால் ஒரு பலகை மக்கி மண்ணாக மாறுவதற்குப் பல ஆண்டுகள் ஆகும். இதைக் கொண்டு இலையில் மட்டுமேமாற்றம் நிகழ்கின்றது, பலகைகளில் மாற்றம் இல்லை என எவரும் கூற இயலாது.

நம் உடலிலேயே, ஒவ்வொரு கணமும் கண்ணுக்குத் தெரியாத மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையை, நம் விரல்களில் வளரும் நகமும், தலையில் வளரும் முடியுமே தெளிவாக்குகின்றன. ஒரு காய் ஒவ்வொரு கணமும் பங்கப்படுவதாலேயே கனியாக மாறுகின்றது. அந்தக் கனியும் பின்னர் அழுகிவிடுகின்றது.

கணத்துக்குக் கணம் பொருள்கள் மாறிவிடுகின்றன; உயிர்கள் மாறிவிடுகின்றன; மக்கள் மாறிவிடுகின்றனர் என்ற பௌத்தர் கொள்கையை ஏற்பதனால் சில இடர்ப்பாடுகளும் ஏற்படுகின்றன. 'கடன்கொடுத்தவன் ஒருவன். அதனைத் திரும்பப் பெறுபவன் இன்னொருவன். குற்றஞ் செய்தவன் ஒருவன். தண்டனையைப் பெறுபவன் இன்னொருவன்' என்றுதான் கருத வேண்டியுள்ளது.

இந்தக் கேள்விக்குப் பௌத்தர்கள் மிக நுட்பமாக விடை சொல்ல முயல்கின்றனர். குற்றம் செய்தவன் வேறு. தண்டனை பெறுபவன் வேறுதான். எனினும் இருவரும் ஒருவருக்கொருவர்முற்றாகவேறுபட்டவர் அல்லர். தண்டனையைப் பெற வேண்டிய அளவு தொடர்பு, பின்னவனுக்கு முன்னவனோடு உண்டு என்பதே அவர்கள் கொள்கை.

### (4) ஏகான்ம வாதம் :

இந்து மதத்தின் புகழ்பெற்ற வேதாந்திகள் சங்கரர், இராமானுசர். இருவரும் தமிழகத்தில் தோன்றியவர்கள். சங்கரர் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், இராமானுசர் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியையும் சார்ந்தவர்கள். இருவரும் வேத, உபநிடதங்களைப் பிரமாணமாக ஏற்றுக் கொண்டவர்கள். பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் கொடுத்தவர்கள். அவ்விளக்கத்தில் பெரிதும் மாறுபட்டு வேதாந்தத்தையே இரண்டாக்கி விட்டனர்.

சங்கரரது கொள்கைகளைக் கூறும் வேதாந்தத்தைச் சங்கர வேதாந்தம்-அத்வைதம் என்றும், இராமானுசரது கொள்கைகளைக் கூறும் வேதாந்தத்தை இராமானுச வேதாந்தம்-விசிட்டாத்வைதம் என்றும் கூறுவர். இதனை விளக்க இம்மதத்தினர் இருவகை அரிய உவமைகளைக் கையாளுகின்றனர்; அவை 'பிரதிபிம்ப வாதம், அவச்சேத வாதம்' எனப்படும்.

#### (அ) பிரதிபிம்ப வாதம் :

நிலாவின் பிரதி பிம்பம் நிலத்திலுள்ள கிணறுகள் குளங்கள், குட்டைகள் ஆகிய நீர் நிலைகளிலெல்லாம் தோன்றுகின்றது. நீர் நிலைகள் எத்துணையோ, அத்துணை நிலவுகளைக் காணலாம். ஆனால், அவற்றுள் எதுவுமே உண்மையான நிலவு அல்ல. வானத்தில்

இருப்பது ஒன்று மட்டுமே உண்மையான நிலவு ஆகும்.

அதுபோல, பரமாத்மாவாகிய பிரம்மம் மட்டுமே இருக்கின்ற பொருள் ஆகும். பிரம மத்தின் பிரதிபிம்பம், அவித்தையிலே (அறியா மையிலே) படுகின்றது; பட்டதும், பல சீவாத் மாக்களாகத் தோன்றுகின்றது. தெளிந்த நீரில் வாழும் சந்திரனின் பிரதிபிம்பம் தெளிவாக இருக்கும். கலங்கிய நீரில் விழும் சந்திரனின் பிரதி பிம்பம் கலங்கியதாகும். நீர் அசைந்தாற் பிரதிபிம்பமும் அசையும். நீரில் அசைவு இன் றேல், பிரதிபிம்பத்திலும் அசைவு இராது. இது போலவே, ஒவ்வொரு சிற்றுயிரையும் பற்றி நிற்கும் அவித்தை (அறியாமை)யின் இயல்புக் குத் தக, அந்த உயிரின் இயல்புகளும் மாறு படும்.

நீர்நிலைகள் அனைத்தையும் அழித்தால் சந்திரன் ஒன்றுதான் என்பது புலனாகும். அதே போல அறியாமையை அழித்தால் ஆன்மா (உயிர்) ஒன்றுதான் என்பது புலனாகும்.

### (ஆ) அவச்சேத வாதம் :

இந்த நிலவுலகம் முழுவதும் பரந்திருப்பது ஒரே வெளிதான். ஆயினும் இவ்வெளி உலகி லுள்ள எத்துணையோ அடைப்புக்களாலும், தடுப்புக்களாலும் தனித்தனியாகப் பிரிந்திருக் கின்றது. ஓர் அறையையும் குடத்தையும் நிரப் பும் வெளி, அவற்றின் வடிவத்திற்கேற்பத் தற் காலிகமாகப் பிரிந்து நிற்கின்றது. இந்தத் தற்காலிகத் தடுப்புகள் நீங்கிவிடுமானால், அனைத்தும் ஒரேவெளியென்பது தெளிவாகி றது.

இதைப் போன்றதுதான், ஒரு பிரம்மம் பல ஆன்மாக்களாகத் தோன்றுவதும் ஆகும். எங்கனம் ஒரு வெளியே, பல அடைப்புக்களாலும் தடுக்கப்பட்டுப் பல வெளிகளாகின்றதோ அங் ஙனமே ஓர் ஆன்மாவே பலர் வடிவத்தில் பல ஆன்மாக்களாகக் காணப்படுகின்றது. இதுவே, 'அவச் சேத வாதம்' எனப்படும். அதாவது அவச்சேதம்—பிரித்தல்—ஆகிய வாதம் என்று பொருள்படும்.

### (5) 'சத்காரிய வாதம்' !

வேத உபநிடதக் கருத்துக்களை ஒப்புக் கொள்கின்ற யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம், சித்தாந்தம், போன்ற பிரிவுகளுள் சாங்கியமும் ஒன்று. இம்மதம் மாற்றம்; நிலைபேறு இரண்டும் உண்மைஎனக் கொண்ட போதிலும், எது மாற்றம்அடைகின்ற தோ அது அறிவுள்ள பொருள் ஆகாது; அதே சமயம், அறிவே உருவான பொருள் எதுவோ, அது மாற்றம் அடையாது என்ற அடிப்படை யைக் கொண்டது.

'இந்த உலகம் ஒரேயொரு மூலப் பொருளி லிருந்துதான் தோன்றுகின்றது. அப்பொருள் அறிவே உருவானது' எனும் கருத்து உபநிடதங் களில் பல படப் பேசப்படுகின்றது. ஆனால் சாங்கியம் இதனை மறுக்கின்றது. இம்மதத் தின்படி, உலகம் தோன்றுவதற்குத் தேவை யான மூலப் பொருள் ஒன்றல்ல; இரண்டு ஆகும். அவற்றுள் ஒன்று அறிவே உருவானது; அதற்குப் 'புருடன்' என்று பெயர். மற்றது அறிவற்றது. அதற்குப் 'பிரகிருதி' என்று பெயர்.

இப்பிரகிருதிதான் உலகம் தோன்ற மூலப் பொருள் ஆகின்றது: உலகம் தோன்றுவதும், பின் போய் ஒடுங்குவதும் இதில் தான். புருடன் மாற்றம் அடையாத பொருள். பிரகிருதி மாற் றம் அடையும் பொருள்.

மூலப் பொருளாகிய பிரகிருதி, சத்துவம் ராசசம், தாமசம் ஆகிய மூன்று குணங்களால் ஆனது. இங்குக் குணம் எனப்படுவது தன் இயல்பு என்ற கருத்தில் அல்ல. குணம்என்பது மூலப் பொருளின் ஒரு பகுதி. இப்பண்பினை அடிப்படையாக வைத்துச் சாங்கியர் விளக்க வரும் உண்மைக்குச் 'சத்காரிய வாதம்' என்று பெயர்.

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு காரணம் இருந்தே ஆக வேண்டும் என்பது பொதுவான கருத்து. ஆனால் 'காரண நிலை யிலும் காரியம் உண்டு. காரியம் எங்கிருந்தோ புதிதாகத் தோன்றுவது அல்ல' என்பது சத் காரிய வாதத்தின் கருத்து ஆகும். சான்றாக, எள் காரணம், அதிலிருந்து தோன்றும் எண் ணெய் காரியம். ஆனால் சத்காரிய வாதப்படி எள்ளில் எண்ணெய் ஏற்கனவே உள்ளது. அது போலவே நூல் காரணம், புடவை காரியம். மண் காரணம், பானை காரியம். புடவை நூலிலும் பானை மண்ணிலும் ஏற்கனவே இருக் கின்றன. இல்லையானால் மண்ணிலிருந்து பானையும் நூலிலிருந்து புடவையும் தயாரிக்க முடியாது. 'உள்ளதுதான் வரும் இல்லது வாராது' என்பது சத்காரிய வாதம்.

சாங்கியரின் இவ்வாதத்தைப் பௌத்தம் மறுக்கின்ற திறமும், இங்குக் குறிக்கற்பாலதே. காரணத்திலேயே காரியம்—அதாவது மண்ணி லேயே பானை இருக்கிறது என்றால் குயவனு டைய தொழில் எதற்கு? மண்தான் பானை என்றால் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்கள் தேவையில்லையே! மண்ணை எடுத்து, அதில் நீரை விட்டு, உலையில் ஏற்றிச் சமையல் செய் யத் தொடங்கலாமா? என்பது பௌத்தரின் எதிர்வாதம். மண்ணுக்கும் பானைக்கும் வடி வத்தில் வேற்றுமை உண்டு எனச் சாங்கியர் சொன்னால், அந்த வடிவம் காரணத்தில் இல் லாத ஒன்று—அதாவது காரியம் என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டவராகின்றனர்.

இதுகாறும் இந்தியத் தத்துவ ஞான உலகில் எழுப்பப்படும் வாதங்கள் பலவற்றுள், ஐந்தினை ஆராய்ந்தோம். இந்த வாதங்களின் தொடர் பால் நம் சிந்தனையில் எழும் வினாக்களும், விடைகளும் வெறும் கற்பனை உலகிற்கு உரி யன அல்ல; உண்மை உலகிற்கு உரியனவே : விடைகள் மனநிறைவாக இல்லாவிடினும், இவற்றைப் பற்றி நாம் அறிந்து வைத்திருப் பதே பயனுடையதாகும்.

***

# மாமல்லேச்சுரம்

'தொண்டர்சீர் பரவுவார்'
திரு. ரா. ப. தங்கவேலனார், ஈரோடு.

கோவை மாவட்டத்திலே பவானி, அவிநாசி, திருமுருகன்பூண்டி, கொடுமுடி ஆகிய நான்கு பாடல்பெற்ற சிவத்தலங்களும், பேரூர், பெரியபாளையம் என்னும் குரக்குத்தளி; சேவூர், மொக்கணீச்சரம் முதலிய வைப்புத் தலங்களும், சொன்னிமலை, சிவன்மலை, பட்டாளியூர், காங்கேயம் என்னும் சிங்கை, ஓதிமலை, ஊதிமலை, கீரனூர், பழநி முதலிய தலங்களில் அருணகிரியாரால் பாடல்பெற்ற முருகன் ஆலயங்களும் உள்ளன. இவைபோன்று இம் மாவட்டத்தில் பழமையான ஊர்களில் சிவன் ,விஷ்ணு, முருகன் ஆலயங்கள் சிறிதும் பெரிதுமாக ஊர்கள் தோறும் உள்ளன.

இவையாவும் தலைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கொங்கு அரசர்களாலும், சேர, சோழ, பாண்டிய ,நாயக்க மன்னர்களாலும், இவர்களுக்கு உட்பட்ட குறுநில மன்னர்களாலும் கட்டப்பட்டவைகளே. ஆனால் இம்மாவட்டத்தில் காவிரிக்கரையில் இயற்கை அரணாக இரண்டு ஓடைகளுக்கு இடையில், பழமையான சரித்திரத் தொடர்புடைய நகரம் ஈரோடை என்னும் ஈரோடு. இந்நகரில் பாண்டியர்களுக்கும் மைசூர் மன்னர்களுக்கும் நடந்த சண்டையில், தோற்ற பாண்டிய வீரர்களின் மூக்குகளை மைசூர் வீரர்கள் அறுத்துச் சென்ற ''மூக்கறுசண்டை''யைப் பற்றிச் சீரங்கப்பட்டணக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. மூன்றாவது கர்நாடக யுத்தத்திற்குப் பிறகு, இந்நகரம் மைசூர் ஆட்சியிலிருந்து ஆங்கிலேயர் கைக்கு மாறியது. இந்நகரில் கோட்டைகளும், அகழிகளும் இருந்த சின்னங்கள், சமீபகாலம் வரையிலும் இருந்தன. தற்போது கோட்டை, அகழிமேடு என்ற பெயர்களே எஞ்சியுள்ளன.

இந்நகரின் மத்தியில் கோட்டை என்ற பகுதியில் ''மகாமல்லேச்சுரம்'' என்னும் சிவாலயம் விளங்குகிறது. இது பல்லவ அரசர்களால் கட்டப்பட்டது என்று அதன் வானளாவிய விமானம் நமக்குப் பறைசாற்றுகிறது. இவ் விமானத்தைப் பார்த்த சாதாரண அறிவுடையவர்களுக்குக்கூட காஞ்சியில் இராசசிம்மப் பல்லவனால் எடுக்கப்பட்ட கைலாசநாதர் கோயில் நினைவுக்குவரும். பல்லவப் பேரரசனாகிய நரசிம்மப்பல்லவனுக்கு ''மகாமல்லன்'' என்ற பட்டப்பெயர் உண்டு. அப்பெயரைக் கொண்டு ''மகாமல் லேச்சுரம்''' என்னும் இக் கோயில், அம்மன்னனாலோ, அவன் வழிவந்த பல்லவர்களாலோ எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது துணிபு. இதன் கடைகால் முதல் கலசம் வரையிலும் சுதையினாலேயே கட்டப்பட்டுள்ளது. சிவலிங்கம், ஆறடி உயரமும் ஐந்தடிச் சுற்றளவும், 22 அடிக்குமேற்பட்ட வட்டமான ஆவுடையாரும் கொண்டு, கம்பீரத் தோற்றத்தை அளிக்கிறது. பிற்கால சிவாலயங்களில் வாயிற்காவலர்கள் நான்கு கரங்கள், மான், மழு, சடாதரம், திரிநேத்திரம் முதலிய வற்றுடன் விளங்குகின்றனர். இக்கோயிலிலுள்ள வாயிற்காவலர்கள் திருவுருவங்கள் இரண்டு கரங்களோடு, ஒரு பக்கமே சிற்ப வேலைப் பாடமைந்த உப்பன் உருவங்கள் இதன் தொன்மையைக் காட்டுகின்றன. மகாமல்லேசுவரர் என்ற இக்கோயிலிலுள்ள பெருமானின் பெயர் ''மகிமாலீசுவரர்'' என்று திரிந்து வழங்கிவருகின்றது.

சைவசமயக் குரவர் நால்வரில், எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் ஒருவரே, தாம் பாடிய தேவாரப் பாக்களில் பல்லவ அரசர்களைக் குறிப்பிடுகின்றார். தாம் பாடிய ''திருதொண்டத்தொகையில்''யில், பல்லவ அரசர்களாகிய ஐயடிகள் காடவர்கோன் நாயனாரையும், கழற்சிங்க நாயனாரையும் குறிப்பிடுகின்றார். கழற்சிங்க நாயனாரைக் ''கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்'' என்று நிகழ்காலத்தில் குறிப்பிடுகின்றார். அன்றியும் கோவை மாவட்டத்தில் கோயமுத்தூரை அடுத்த பேரூரை வழிபட்டுத் தில்லையை அடைந்த சுந்தரர், பேரூர்ப் பெருமான் காட்சி, தன் மனதை விட்டு நீங்காததால், 'பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே' என்று குறிப்பிடுவதோடு, அப்பதிகத்தின் நான்காவது பாடலில் ''பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கம் (தண்டிக்கச்) செய்யும் பெருமையார்'' என்று தில்லைக் கூத்தனைக் குறிப்பிடுகின்றார்.

ஈரோட்டிலுள்ள இம் மகாமல்லேச்சுரத்தின் மகாமண்டபத்தில் உள்ள தூண் ஒன்றில், சுந்தரர்கூப்பிய கரத்துடன் இருமனைவியரும் இருமருங்கிலும் நிற்க, அரசர் ஒருவர் சுந்தரருக்கு விசிறியால் வீசும் சிற்பம் ஒன்று உள்ளது. இச்சிற்பம் பல்லவ அரசரும் தமக்குப் பணி செய்ய வாழ்ந்த சுந்தரர்தம் பெருமித வாழ்வையும், பல்லவருக்கும் சுந்தரருக்கும் உள்ள தொடர்பையும் நினைவூட்டுகிறது. இக்கோயில் ஒன்றைத் தவிரப் பல்லவர் பாணியில் கட்டப்பட்ட கோயில், இம்மாவட்டத்தில் வேறு ஒன்றுமில்லை.

இராவணனுடைய பாட்டன்மார்கள் மாலி, சுமாலி, மாலியவான் என்ற மூன்று அரக்கர்கள் இமயமலையிற் சென்று தவம் இயற்றி, தெற்கே இலங்கை நோக்கிச் செல்லும் வழியில், இத் தலத்தில் வில்வவனத்தில் சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டுச் சென்றார்கள் என்று புராணம் இயம்புகிறது.

''மாலிமுதற் குலவரக்கர் மறவாத
பேரன்பர் மலையின் வந்த
நீலவிழி உமைநங்கை நீங்காத
பேரருளே நிலவ, உன்தாள்
மாலிமயத் திருந்துவரும் வழிப்பூசை
சிறப்புடனே மகிழ்ந்து செய்தார்
சாலிநிறை ஈரோட்டில் மகிமாலி
ஈசன்எனச் சார்ந்தாய் தேவே''
—மகிமாலீசுவரர் பதிகம்.

# இந்து மதத்தில் சமத்துவம்

''நல்லிசைக் கவிஞர்''
திரு. புலவர் நடேச நாராயணன், பி. லிட்.,

## 1. இந்து மதமும் சமத்துவமும்

வெண்ணிலவு குளிர்ச்சியினை நல்குவதைப் போலே
விரிகதிரோன் வெம்மையினை அளிப்பதனைப் போலே
வண்ணமலர் நன்மணத்தைக் கொடுத்திடுமாப் போலே,
வையகத்தே இந்துமதம் சமத்துவத்தை நாளும்
திண்மையுடன் பரப்பிவரும் செய்திகளை, நந்தம்
தீந்தமிழின் திருமுறையும், பிரபந்தம், மற்றும்
உண்மையொளி வீசுகின்ற சாத்திரங்கள் தாமும்,
உரைப்பதனை, இங்கேயான் விளக்கிடுவேன் நன்றே!

## 2. சாதியில் சமத்துவம்

வணிகரையும் அரசரையும் அந்தணர்கள் தமையும்
வரம்தந்தே ஏற்றிட்ட இந்துமதத் தெய்வம்
துணிவெளுத்த திருக்குறிப்புத் தொண்டர்க்கும், நீரில்
துள்ளும்மீன் பிடித்திட்ட அதிபத்த ருக்கும்,
அணிகின்ற உடைநெய்த நேசநாய னார்க்கும்,
ஆனிரையை மேய்த்திட்ட ஆனாய ருக்கும்,
தணிவுடனே அருள்பாலித் (து) ஏற்றதெனச் சொன்னால்,
சமத்துவத்தைப் போற்றுவ(து), இங்(கு) இந்துமதம் அன்றோ?

## 3. தீட்டில்லை

அந்தணராம் நமிநந்தி யடிகள்தாம், ஓர்நாள்
ஆண்டவனார் வீதியுலா வந்துற்ற காலை,
சிந்தையெலாம் மகிழ்வுற்றுச் சேவித்தார், அங்கே
திரண்டிருந்த பலசாதி மக்களுடன் சேர்ந்தே!
இந்தவிதச் செய்கையினால் தீட்டுவந்த தென்றே
எண்ணிநொந்தார்; அப்போது இறையவர்தாம் தோன்றி,
'பந்தமுறும் மக்களிலே தீண்டாதார் இல்லை ;
பக்தரெலாம் நம்மவரே பேதமில்லை' என்றார்!

## 4. தீண்டாமை இல்லை

திருப்பாணாழ் வார்என்னும் இசைமேதை தன்னைத்,
தீண்டாதார் எனமக்கள் கருதிட்ட போது,
பெருமாள்தான் லோகசார்ங்க அர்ச்சகரை ஏவிப்,
பிற்பட்ட குலத்தவராம் பாணாழ்வார் தம்மைத்,
திருத்தோளில் சுமந்துவரப் பணித்திட்டார் என்றால்;
தீண்டாமைக்(கு) இடமிங்கே சிறிதேனும் உண்டோ?
ஒருத்தரையும் ஒதுக்காமல் இந்துமதம் என்றும்
ஒப்பற்ற சமத்துவத்தை நிலைநாட்டும் நன்றே!

## 5. ஆண் பெண் சமத்துவம்

[illegible]வர்க்கே முக்தியுண்டு, மாதர்க்கில்லை என்றே,
அர்த்தமுள்ள இந்துமதம் சொன்னதில்லை என்றும்;
சேடுயரும் திலகவதி அம்மையார், மற்றும்
சீர்ப்பரவை நாச்சியார், சிறந்தநற்சங் கிலியார்,
நீடுலகில் ஆண்டாளும், இசைஞானி யாரும்,
நிகரற்ற புகழ்மங்கை யர்க்கரசி யாரும்,
பீடுடைய காரைக்கால் அம்மையரும், வீடு
பேறடைந்த செய்தியெல்லாம், சமத்துவமே யன்றோ?

## 6. எவ்வுயிரும் சரிநிகரே

எருதுமயில் பெருச்சாளி கருடன்அன்னம் சிங்கம்
 எழிற்கிளிபோல் அஃறிணையாம் உயிர்களினை ஏற்றே.
அருளுடனே ஆதரிக்கும் இந்துமதத் தெய்வம்,
 ஆறறிவு மனிதரிலே தீண்டாதார் என்னும்
ஒருகுலத்தை உலகத்தில் உருவாக்கிற் றென்றே,
 உரைப்பதுவும் நினைப்பதுவும், ஒழிவில்பெரும் பாவம்!
பெருமைமிகும் இந்துமதம் தீண்டாமை என்னும்
 பேச்சுக்கே எவ்விடத்தும் இடமளித்த தில்லை.

## 7. ஆலயப் பிரவேசம்

கோயிலினுள் அரிசனரும் செல்லவேண்டும் என்றே;
 கோரிக்கை எழுப்பிடுவார் இந்நாளில்; ஆனால்
தாயகத்தில் அன்றேதான் தாழ்குலத்தில் வந்த
 தனிநந்தர், கண்ணப்பர், பாணாழ்வார் தமையும்,
கோயிலினுள் அச்சமின்றி வருமாறு செய்து,
 குழைவுடனே அருள்தந்து பாலித்த தெய்வம்,
தூயதாம் இந்துமதத் தெய்வமென்று சொன்னால்,
 தொல்லுலகில் இம்மதத்தின் சமத்துவம்தான் என்னே!

## 8. சமபந்திபோசனம்

சமபந்தி போசனந்தான் புதுக்கொள்கை என்றே
 சாற்றிடுவோர், திருத்தொண்டர் எழிற்புராணந் தன்னை
அமைதியுடன் ஒருமுறைதான் கற்றாலே போதும்,
 அதில்இந்தச் சாதனையைக் கண்டிடலாம் நன்றே;
உமைபங்கன் அருளாலே துதிபாடக் கற்ற,
 உயர்ஞான சம்பந்த அந்தணர்தாம் அன்றே,
சமமாக யாழ்ப்பாணர் தம்மோடு சேர்ந்தே,
 சாப்பிட்ட சமத்துவத்தை இந்துமதம் காட்டும் !

## 9. தொழிலில் சமத்துவம்

மண்சுமக்கும் கூலித்தொழில் என்றாலும், அன்றி
 மரம்பிளந்து விறகுவிற்கும் செயல்தான்என் றாலும்,
பெண்சுமந்த பாகத்தன் தயங்காமல் செய்தான்;
 பேருலகில் சமத்துவத்தை இதுகாட்டும் அன்றோ?
மண்ணுண்டு விண்ணளந்த திருமாலும், இங்கே
 மாடுகளை மேய்க்கின்ற சிறுதொழில்என் றாலும்,
பண்போடு தயங்காமல், குறையின்றிச் செய்தான்;
 பலதொழிலும் சமமென்றே, இதுகாட்டும் அன்றோ?

## 10. குலத்தில் சமத்துவம்

அரசகுலத் தவதரித்த இராமபிரான், அந்நாள்
 அணிகங்கைக் கரையினிலே குகவேடன் தன்னைச்,
சரிநிகராய்த் தன்னோடு பிறந்தாரைப் போலே,
 சகோதரனாய் ஏற்றதுவும் சமத்துவமே யன்றோ?
குறக்குடியில் வளர்ந்திட்ட வள்ளியம்மை தன்னைக்,
 குன்றுதொறும் விளையாடும் குமரவேள் வந்தே
அறத்தோடு மணம்கொண்ட அரியசெயல் தானும்
 அகிலத்தே நிகழ்ந்திட்ட சமத்துவமே அன்றோ?

## 11. கலப்புமணச் சமத்துவம்

அந்தணராம் சுந்தரர்தான், தம்குலத்தைச் சாரா
 அரிவையராம் பரவையெனும் கணிகையார் தம்மைச்
சிந்தையெலாம் மகிழ்ந்திடவே காதல்மிகச் செய்து,
 சீர்திருத்தக் கலப்புமணம் புரிந்துகொண்டார்; அன்றே
எந்தவிதப் பேதமுமே இல்லைஎனக் காட்டி,
 இவ்வுலகில் சமத்துவத்தை நிலைநாட்டிச் சென்றார்;
இந்தவிதம் எந்நூலில் படித்துப்பார்த் தாலும்,
 இந்துமதம் இயம்புவது சமத்துவமே யாகும்!